# TNPSC தேர்வுப் பெட்டகம்

# நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2024

**www.tnpscthervupettagam.com**

























SHANKAR IAS ACADEMY™
Best Academy for Civil Services Exam Coaching
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ...... 10

தமிழ்நாடு செய்திகள் ...... 22

தமிழ்நாட்டில் தனியார் சமபங்கு முதலீடு - துணிகர முதலீடுகள் 2023 ...... 22

2023 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் தமிழ்நாடு மாநில அரசு பெறும் கடன் ...... 22

சமணப் பள்ளி ...... 23

ஆளில்லா வான்வழி வாகனங்களுக்கான காப்புரிமை ...... 24

தமிழ்நாடு தென்னை நார் கொள்கை 2024 ...... 24

தமிழகத்தில் ABPS ...... 25

புதிய அகழ்வாராய்ச்சி தளங்கள் – தமிழ்நாடு ...... 25

காற்றாலைத் திட்டங்களுக்கான மீளுருவாக்கக் கொள்கை ...... 26

2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பினை எட்டும் பொருளாதாரம் ...... 26

தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு - முதல் நாள் ...... 27

2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு மூலம் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடுகள் ...... 29

2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ...... 30

2023 ஆம் ஆண்டில் பெண்களுக்கான சிறந்த இந்திய நகரம் ...... 30

STEPS கணக்கெடுப்பு ...... 31

10வது தமிழ் உலகப் பொருளாதார மாநாடு ...... 31

புதிய பல்லுயிர்ப்பெருக்கப் பாரம்பரிய தளங்கள் ...... 32

தமிழ்நாடு கடலோரப் பகுதிகள் மறுசீரமைப்பு பணி ...... 32

உலகப் புலம்பெயர் தமிழர் தினம் ...... 33

TEALS திட்டம் ...... 34

தமிழ்நாட்டில் யானைகளுக்கான மீட்பு, சிகிச்சையளிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ...... 35

ஆரோக்கியம் பரமம் தானம் ...... 35

தமிழ்நாடு அரசு விருதுகள் 2023 ...... 36

நெல் கொள்முதல் இலக்கு ...... 36

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள உள்நாட்டு மர இனங்கள் ...... 37

'Beyond Basics' கணக்கெடுப்பு - பெரம்பலூர் ...... 38

வரலாற்றுக்கு முந்தைய காலப் பாறை ஓவியங்கள் ...... 39

தமிழ்நாட்டில் இருந்து இலங்கை கடவுச்சீட்டு ...... 39

2024 ஆம் ஆண்டில் தமிழக வாக்காளர்கள் ...... 40

மருது சகோதரர்களுக்கு சிலை ...... 41

தமிழ்நாடு பெண்களுக்கான கொள்கை ...... 41

தமிழ்நாட்டில் சடல எலும்புகள் தானம் ...... 42

கிரந்தம் கல்வெட்டுகள் – காங்கேயம் ...... 42

கழுகுமலை குடைவரைக் கோவில்கள் ...... 43

இதயம் காப்போம் முன்னெடுப்பு ..... 43
தேசியச் செய்திகள் ..... 44
PM-KISAN திட்டத்தின் பயனாளிகள் ..... 44
ஆயுஷ்மான் பாரத் யோஜனாவில் பெண்கள் ..... 45
இந்தியாவில் லிச்சி சாகுபடி ..... 45
IRDAI வருடாந்திர அறிக்கை 2022-23 ..... 46
NTPS – ஒரு நாடு ஒரு அனுமதிச் சீட்டு ..... 47
பாரத் தயாரிப்பு பெயரில் அரிசி விற்பனை ..... 47
கடற்படைத் தலைவர்களுக்கான புதிய தோள்பட்டை குறியீடுகள் ..... 47
அம்ரித் பாரத் இரயில் ..... 48
66வது DRDO உருவாக்க தினம் ..... 48
இந்தியாவின் முதல் நீர்மூழ்கிக் கப்பல் சுற்றுலா ..... 49
மத்தியப் பொதுச் சேவைகள் (ஓய்வூதியம்) விதிகள், 2021 திருத்தம் ..... 49
அணுசக்தி நிறுவல் தகவல் பரிமாற்றம் 2024 ..... 50
MGNREGS திட்டத்திற்கு ஆதார் அடிப்படையிலான ஊதிய வழங்கீட்டு முறை ..... 50
சாலை விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு தப்பி ஓடும் வழக்குகளுக்கு BNS ..... 51
ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளியியல் ஆணையத்தின் உறுப்பினர் பதவி ..... 52
SMART 2.0 ..... 53
இந்திய நிலச்சரிவுப் பாதிப்பு வரைபடம் ..... 53
இராஷ்ட்ரிய கேல் ப்ரோத்சாஹன் புருஸ்கார் 2023 ..... 54
C-130J விமானத்தின் இரவு நேரத் தரையிறக்கம் ..... 55
PRERANA திட்டம் ..... 55
துவரை கொள்முதல் இணைய தளம் ..... 56
PRITHVI VIGYAN திட்டம் ..... 56
உச்ச நீதிமன்றச் சட்ட சேவைகள் குழு ..... 57
அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கான சின்ன ஒதுக்கீடு ..... 57
'Work4Food: படிமுறை ..... 58
சுறா இறைச்சி நுகர்வு ..... 58
இந்தியாவில் குழந்தை திருமணம் பற்றிய லான்செட் இதழின் ஆய்வறிக்கை ..... 58
வாகனங்களுக்கான புதிய மாசு உமிழ்வு சோதனை விதிகள் ..... 59
மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களுக்கான மேம்படுத்தப்பட்ட உற்பத்தி நடைமுறைகள் ..... 60
அதிமுக்கியத்துவம் வாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள் ..... 61
திருஷ்டி 10 'ஸ்டார்லைனர்' ..... 62
அணிவகுப்புக் காட்சி வாகனம் குறித்த புதிய குடியரசு தின ஒப்பந்தம் ..... 62
மீன்களில் ஏற்படும் நோய் குறித்து தகவலளித்தலுக்கான செயலி ..... 63
இந்தியப் புத்தாக்க வாரம் 2024 ..... 64
விங்ஸ் இந்தியா 2024 ..... 64
ஸ்வச் சர்வேக்சன் விருதுகள் 2023 ..... 65
இந்தியாவில் பருப்பு உற்பத்தி 2023 ..... 66

அனுபவ் விருதுகள் திட்டம் – 2024 ........ 66
மூல்ய பிரவாஹ் 2.0 ........ 67
கங்கா சாகர் மேளா 2024 ........ 68
இந்திய உணவுக் கழகம் - 60வது ஆண்டு விழா ........ 69
பல்பரிமாண வறுமை பற்றிய நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை ........ 69
பாரசீக மொழி – செம்மொழிகள் ........ 70
BSI ISO 27001:2022 சான்றிதழ் ........ 71
MSCI EM குறியீடு ........ 71
சர்வசக்தி நடவடிக்கை ........ 72
2023 ஆம் ஆண்டு வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை கணக்கெடுப்பு - முக்கியத் தகவல்கள் ........ 72
INS சீட்டா, குல்தார் மற்றும் கும்பீர் ........ 73
இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 150வது ஆண்டு நிறைவு ........ 74
வாட்நகர் அகழ்வாராய்ச்சி ........ 74
தேசியப் புத்தொழில் நிறுவன விருதுகள் 2023 ........ 75
கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான தடுப்பூசி பிரச்சாரம் ........ 76
அஸ்த்ரா ஏவுகணை ........ 76
சமவேஷா திட்டம் ........ 77
தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியல் – முதல் மறுமதிப்பீடு ........ 78
தோட்டக்கலை உற்பத்தி மதிப்பீடு 2022/23 ........ 78
பயிற்சி மையங்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள் ........ 79
இடர் குறித்த முன்னெச்சரிக்கை அனுப்பும் கருவி ........ 80
இந்திய சர்வதேச அறிவியல் விழா 2023 ........ 80
ஆதிவாசி வாழ்வாதார நிலை (SAL) அறிக்கை, 2022 ........ 81
பிரதான் மந்திரி சூர்யோதயா யோஜனா ........ 82
நகரா கட்டிடக் கலை பாணியில் கட்டமைக்கப்பட்ட இராமர் கோவில் ........ 83
75வது குடியரசு தின சிறப்பம்சங்கள் ........ 84
பத்ம விருதுகள் 2024 ........ 84
வீரதீர விருது வென்றவர்கள் 2024 ........ 85
AISHE கணக்கெடுப்பு 2021-2022 ........ 86
தொழுநோய்க்கான புதிய மும்மருந்து வழங்கீடு ........ 87
விஜய் ராகவன் குழு அறிக்கை ........ 88
TISS நிறுவனத்தின் SOTTTER அறிக்கை ........ 89
மூங்கில் கூட்டுப்பொருள் தொழில்நுட்பம் ........ 90
பசுமை சார் உரிமைகோரல்களுக்கான வழிகாட்டுதல்கள் ........ 91
அனைத்து மகளிர் படைப்பிரிவு அணிவகுப்பு ........ 91
ஐடேட் ஆணைய அறிக்கை ........ 92
போயிங் சுகன்யா திட்டம் ........ 93
VAIBHAV புத்தாய்வு மாணவர் திட்டம் ........ 94
ஆதார் அட்டையின் நிலை ........ 94

PM YASASVI திட்டம் ..... 95
பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் நிதிநிலை ..... 96
ஞானவாபி மசூதி ஆய்வறிக்கை ..... 97
சர்வதேசச் செய்திகள் ..... 97
கொழும்பு பாதுகாப்பு மன்றம் ..... 97
வெனிசுலா மற்றும் கயானா இடையேயான எல்லை தகராறு ..... 98
BRICS அமைப்பில் அர்ஜென்டினா ..... 98
ஜப்பான் நிலநடுக்கம் ..... 99
சீனாவின் மெங்சியாங் கப்பல் ..... 100
வாடிகனில் பெண்களுக்கான வாக்குரிமை ..... 100
சர்வதேச விண்வெளி நிலையத்தில் ரஷ்யா ..... 101
BRICS அமைப்பின் விரிவாக்கம் 2024 ..... 102
இஸ்ரேலுக்கு எதிரான இனப்படுகொலை வழக்கு ..... 102
சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகத்தில் இந்தியா ..... 103
டென்மார்க் நாட்டின் அரசி இரண்டாம் மார்கிரேத் ..... 104
பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டுக்கள் ..... 104
வங்காளதேச தேர்தல் 2024 ..... 105
பனிச்சிறுத்தை - தேசிய சின்னம் ..... 105
ஐகை அரண்மனை ..... 106
குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் ..... 106
அல்வாரோ புயல் ..... 107
உலகளாவியப் பொருளாதாரத் தாங்குதிறன் ..... 107
உலக ஆயுத ஆற்றல் தரவரிசை 2024 ..... 108
கபோ வெர்டே - மலேரியா பாதிப்பற்ற நகரம் ..... 109
பசுமை எரிபொருள் கூட்டணி இந்தியா (GFAI) ..... 110
மனிதர்களில் நிபா நோய்க்கு எதிரான முதல் தடுப்பூசி பரிசோதனை ..... 110
உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டம் 2024 ..... 111
சீனாவின் மக்கள் தொகை 2023 ஆம் ஆண்டில் மீண்டும் சரிவு ..... 111
உலகளாவிய ஒத்துழைப்பு மாற்ற மதிப்பீட்டுமானி 2024 ..... 112
உக்ரைனில் “பசுமை அறைகள்” ..... 113
டென்மார்க் நாட்டின் புதிய மன்னர் ..... 113
சுகாதார நலன் சார் செயற்கை நுண்ணறிவு நெறிமுறைகள் பற்றிய வழிகாட்டுதல் ..... 114
பெருவின் சான்கே துறைமுகம் ..... 115
ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு மாலத்தியான் ஏற்றுமதி ..... 116
X நோய் பற்றிய விவாதம் ..... 116
அணிசேரா இயக்கத்தின் 19வது உச்சி மாநாடு ..... 117
ஸ்டெட்ஃபாஸ்ட் டிஃபென்டர் 2024 பயிற்சி ..... 118
காசா மீதான சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு ..... 118
நைட்ரஜன் வாயு செலுத்தி மரண தண்டனை ..... 119

பொருளாதாரச் செய்திகள் ........ 120
சீனாவிற்கு மேற்கொள்ளப்படும் இரும்பு தாது ஏற்றுமதி ........ 120
இந்தியாவில் வங்கிகளின் போக்கு மற்றும் முன்னேற்றம் ........ 120
ஆவணப்படுத்தப்படும் அட்டை விவரங்களின் குறியாக்கம் ........ 121
தேசியப் பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் தரவு ........ 122
உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் 2023 ........ 122
UPI பரிவர்த்தனைகள் 2023 ........ 123
உற்பத்தி ஊக்குவிப்பு திட்டம் நீட்டிப்பு ........ 124
ஓலா நிறுவனத்திற்கு உற்பத்தி ஊக்குவிப்பு திட்டம் ........ 124
எஃகு தொழில்துறை உற்பத்தி ........ 125
இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள்: அறிக்கை ........ 125
2023-24 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகள் ........ 126
இந்திய ரிசர்வ் வங்கியின் பொருளாதார நிலை அறிக்கை ........ 127
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 128
SLIM ஆய்வுத் திட்டம் - ஜப்பான் ........ 128
ஒரு வினாடிக்கும் குறைவான பிரகாசமான ஊடுகதிர் வெடிப்பு நிகழ்வுகள் ........ 128
இஸ்ரோவின் PSLV-C58 ........ 129
தீங்கு விளைவிக்கக் கூடிய (பேய்) வால் நட்சத்திரம் ........ 130
மின்னணு மண்: புதிய உருவாக்கம் ........ 131
ஹேமிலியன் ட்ரோஜன் ........ 131
சுற்றுச்சூழலுக்கு உகந்த சூரிய மின்கல பொருள் ........ 132
இரட்டை ஈர்ப்பு துணை புரியும் கருவி ........ 133
பிரபஞ்சத்தின் வளர் நிலையில் "பதின்ம நிலையில் உள்ள" அண்டங்கள் ........ 133
பிரபஞ்சத்தின் விரிவாக்கம் 2023 ........ 134
ஜோசுரபால்பின் ஆண்டிபயாடிக் நுண்ணுயிர் எதிர்ப்பி ........ 134
புற்றுநோய் மருந்து உற்பத்திக்கு தாவர செல்களின் பயன்பாடு ........ 135
ஆதித்யா-L1 ஆய்வுத் திட்டம் ........ 136
PSLV-C58 கலத்தின் POEM3 இயங்குதளம் ........ 136
ANEEL எரிபொருள் ........ 137
XPoSat ஆய்வுக் கலத்தின் கண்டுபிடிப்பு ........ 138
ஐன்ஸ்டீன் ஆய்வுக் கருவி – சீனா ........ 139
X-59 சப்தமற்ற மீயொலி விமானம் ........ 139
புதிய அணு சக்தி மின்கலன் ........ 140
SLIM ஆய்வுத் திட்டம் ........ 140
ஹேவிஷூர் தடுப்பூசி ........ 141
மண்ணில் இருந்து ஆற்றலைப் பெற்று இயங்கும் எரிபொருள் கலம் ........ 142
நிலவில் தரையிறங்கிய ஜப்பான் விண்கலம் ........ 143

சுற்றுச்சூழல் செய்திகள் ..... 143
தொலைதூரக் கடல் வாழ் பறவை ஆய்வு ..... 143
நியோரா பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில் புலி ..... 144
புதிய கடல் வாழ் பன்முகக் காலிகள் ..... 145
பெருவில் உள்ள சிலா மலை ..... 145
புதிய “வெள்ளிக் கம்பிக்காரி” வண்ணத்துப் பூச்சிகள் ..... 146
புதிய தவளை வகை ..... 146
அரிதான அலையாத்தி பறவை - கோணமூக்கு உள்ளான் ..... 147
ஈரநில நகரக் குறியீடு ..... 147
வடகிழக்கு ஆப்பிரிக்க சிவிங்கிப் புலிகளின் நிலை ..... 148
குடுவையிடப்பட்ட தண்ணீரில் குறுகிய அளவிலான மற்றும் நுண்ணிய நெகிழிகள் ..... 148
அதிவெப்பமான ஆண்டு 2023 ..... 149
பறவைக் காய்ச்சலால் துருவக் கரடி மரணம் ..... 150
இயற்கை நோய்க்கிருமி - பூஞ்சை ..... 151
நாரிழைத் தாழை இலைகள் ..... 151
பனிச்சிறுத்தைகள் வளங்காப்பு இனப்பெருக்கத் திட்டம் ..... 152
இமயமலை ஓநாய் பற்றிய IUCN அமைப்பின் மதிப்பீடு ..... 153
இரட்டை வெள்ளிக் கம்பிக் காரி ..... 153
பித்ரகனிகாவில் உப்பு நீர் வாழ் முதலைகள் ..... 154
இரட்டை சில்வண்டு பெருக்கம் ..... 154
அண்டார்டிக் கண்டத்திட்டு சுற்றுச்சூழல் அமைப்புகள் ..... 155
திபெத்திய பழுப்புக் கரடி ..... 156
நஞ்சராயன் சரணாலயத்தில் அரியவகை புலம்பெயர் பறவைகள் ..... 157
இந்தியாவின் தென்கோடி பகுதியில் உள்ள கழுகுகளின் கணக்கெடுப்பு ..... 157
ஆண்ட்ரோகிராஃபிஸ் தெனியென்சிஸ் ..... 158
தங்கநிறப் புலி ..... 159
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ..... 159
சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த லான்செட் கணிப்பு ..... 159
பருவநிலை நெருக்கடி: சமத்துவமின்மை மிகுந்த பகுதி குறித்த ஆய்வு ..... 160
2023 ஆம் ஆண்டு செலவின மதிப்பாய்வு: ஓராண்டில் ஏற்பட்ட பருவநிலை தாக்க சேதங்கள் குறித்த அறிக்கை ..... 161
ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2024 ..... 162
உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்: போக்குகள் 2024 ..... 163
உலகளாவிய இடர் அறிக்கை 2024 ..... 163
உலகளாவிய ஹைட்ரஜன் விலைக் குறியீடு ..... 164
ஆக்ஸ்பாம் நிறுவனத்தின் சமத்துவமின்மை அறிக்கை 2024 ..... 164
உலக தண்ணீர் கண்காணிப்பு அறிக்கை 2023 ..... 165
எடெல்மேன் நம்பிக்கை மதிப்பீட்டுமானி 2024 ..... 166
சர்வதேச எரிசக்தி முகமையின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் குறித்த அறிக்கை 2023 ..... 167

உலகளாவிய கார்பன் திட்ட அறிக்கை ... 168
**மாநிலச் செய்திகள் ... 169**
புதிய வந்தே பாரத் விரைவு இரயில் ... 169
குற்றவியல் நீதி தரவு தளத்தின் பயன்பாடு ... 169
ULFA அமைதி ஒப்பந்தம் ... 170
ஜம்மு காஷ்மீர் பஞ்சாயத்து ராஜ் சட்டம் ... 170
ஜம்மு மற்றும் காஷ்மீரில் விஸ்வகர்மா யோஜனா ... 171
சுதந்திரமான (தடையற்ற) போக்குவரத்து அனுமதி முறையின் முடிவு ... 171
ஹட்டீ சமூகத்திற்குப் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அந்தஸ்து ... 172
17க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடுகள் ... 173
REJUPAVE தொழில்நுட்பம் ... 173
அனைத்து விபத்து நேரும் இடங்களையும் வரைபடமாக்குதல் ... 174
மேற்கு வங்காளம் - மாநிலப் பாடல் மற்றும் மாநில நாள் ... 174
அட்பாடி வளங்காப்பகம் ... 175
வங்காள மொழிக்கு செம்மொழி அந்தஸ்து ... 175
புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசை 2022 ... 177
AMRITH நடவடிக்கை – கேரளா ... 177
இந்தியாவின் முதல் இரவு வான்வெளிப் பூங்கா ... 178
மிக உயரமான அம்பேத்கர் சிலை ... 178
எருமைச் சண்டை – அசாம் ... 179
9வது பாக்கே பாகா இருவாட்சி திருவிழா ... 180
கழுகுகளின் உணவகம் – ஜார்க்கண்ட் ... 180
புத்தொழில் நிறுவனங்களின் சூழலமைவு ... 181
மீளுருவாக்க சுற்றுலா மாதிரி ... 181
பூரி ஜெகநாதர் கோயிலின் பாரம்பரிய வழித்தடம் ... 182
மாநில ஸ்தாபன தினம் 2024 ... 182
C4IR – ஹைதராபாத் ... 183
கோலம் பழங்குடியினர் ... 183
கொரிய இராணியுடன் அயோத்தி நகர் கொண்டுள்ள தொடர்பு ... 184
ஒடிசாவிற்கான கும்கி யானைகள் ... 185
நிதிஷ் குமார் - பீகார் முதல்வர் ... 185
அருணாச்சலப் பிரதேசத் தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு- 2024 ... 186
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ... 187**
தேசிய இளையோர் விருது 2024 ... 187
M. S. சுவாமிநாதன் விருது ... 187
NIAC திட்டத்தின் கீழ் பரிசு ... 187
படைப்பாக்கமிக்க கலைகளுக்கான எம்மி விருதுகள் ... 187
81வது கோல்டன் குளோப் விருதுகள் ... 188
சவிதா கன்ஸ்வால் ... 188

விங்ஸ் இந்தியா 2024 ..... 188
PM இராஷ்ட்ரிய பால் புரஸ்கார் விருது 2024 ..... 189
பாரத ரத்னா - கர்பூரி தாகூர் ..... 189
விளையாட்டுச் செய்திகள் ..... 190
டேவிட் வார்னர் ஓய்வு ..... 190
9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் ..... 191
டையூ கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் 2024 ..... 191
FIFA கால்பந்து விருதுகள் 2023 ..... 191
BCCI விருதுகள் 2024 ..... 191
முக்கிய தினங்கள் ..... 192
உலக குடும்ப தினம் – ஜனவரி 01 ..... 192
உலக பிரெய்லி தினம் - ஜனவரி 04 ..... 193
ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் உருவாக்க தினம் - ஜனவரி 08 ..... 193
புவி சுழற்சி தினம் - ஜனவரி 08 ..... 193
போர் காரணமாக ஆதரவிழந்த குழந்தைகளுக்கான உலக தினம் - ஜனவரி 06 ..... 194
பிரவாசி பாரதிய திவாஸ் - ஜனவரி 09 ..... 195
உலக இந்தி மொழி தினம் - ஜனவரி 10 ..... 195
தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் – ஜனவரி 11 முதல் 17 வரை ..... 196
தேசிய இளையோர் தினம் – ஜனவரி 12 ..... 196
கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் – ஜனவரி ..... 196
தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் நிறுவன தினம் - ஜனவரி 19 ..... 197
கோக்போரோக் தினம் - ஜனவரி 19 ..... 197
பராக்ரம் திவாஸ் - ஜனவரி 23 ..... 198
சர்வதேச கல்வி தினம் - ஜனவரி 24 ..... 198
தேசியப் பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24 ..... 199
தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25 ..... 199
தேசியச் சுற்றுலா தினம் - ஜனவரி 25 ..... 199
சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26 ..... 200
சர்வதேச தூய்மையான ஆற்றல் தினம் - ஜனவரி 26 ..... 200
சர்வதேச இன அழிப்பு நிகழ்வின் நினைவு தினம் - ஜனவரி 27 ..... 201
உலக தொழுநோய் தினம் - ஜனவரி 28 ..... 201
இந்திய செய்தித்தாள் தினம் - ஜனவரி 29 ..... 202
தியாகிகள் தினம் – ஜனவரி 30 ..... 202
இதரச் செய்திகள் ..... 203
லீப் ஆண்டு 2024 ..... 203
புதிய டைனோசர் இனங்கள் ..... 203
சரியான நேரத்தில் செயல்படும் விமான நிலையங்களின் மதிப்பாய்வு 2023 ..... 204
பொதிகளுக்கு நெகிழி போன்ற படலங்கள் ..... 205
10 ஆம் நூற்றாண்டு கடம்பர் கால கல்வெட்டு ..... 205

16 ஆம் நூற்றாண்டு தெலுங்கு கல்வெட்டுகள் ........ 206
தெலுங்கானாவில் பழங்கற்காலக் கருவிகள் ........ 206
மௌரி ஹாக்கா ........ 207
சுண்ணாம்பு அடிப்படையிலான டிரைக்கோடெர்மா உயிரிப் பூச்சிக்கொல்லி ........ 208
சைடர்சௌரா மரே - டைனோசரின் புதிய இனங்கள் ........ 208
3000 ஆண்டுகள் பழமையான நகரம் ........ 209
2024 ஆம் ஆண்டின் வலுவான நிறுவனம் ........ 209
சோலிகாக்கள் மற்றும் எரவா பழங்குடியினரின் உணவுமுறை ........ 210
சூர்ய திலகம் ........ 211

# TNPSC துளிகள்

- வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு மற்றும் கேரள முதல்வர்கள் இணைந்து அதன் நினைவுச் சின்னத்தினைச் சென்னையில் வெளியிட்டனர்.
- மத்திய அரசானது, நினா சிங்கை மத்தியத் தொழில்துறை பாதுகாப்பு படையின் தலைமை இயக்குனராக நியமித்துள்ளது.
  - இந்த உயர் நிலை படைக்குத் தலைமை தாங்கும் முதல் பெண்மணி என்ற ஒரு பெருமையை அவர் பெற்றுள்ளார்.
- தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (NALSA) நிர்வாகத் தலைவராக உச்ச நீதிமன்ற நீதிபதி சஞ்சீவ் கண்ணாவை இந்தியக் குடியரசுத் தலைவர் பரிந்துரைத்துள்ளார்.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள குவாலியர் நகரில் 99வது சர்வதேச தான்சென் சமரோ நிகழ்வில் சுமார் 1,300 தபேலா கலைஞர்கள் "மிகப்பெரிய தபேலா குழுமத்தில்" பங்கேற்றனர்.
  - இதில் திரட்டப் பட்ட சாதனைக்காக இது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றனர்.
- விளையாட்டுத் துறை தொழிலதிபர் விடா டானி, சர்வதேச மேசைப் பந்தாட்டக் கூட்டமைப்பின் (ITTF) அறக்கட்டளையின் நிர்வாகக் குழு உறுப்பினராக சேர்க்கப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- கேரள விவசாயப் பல்கலைக்கழகத்தில் (KAU) பணிபுரியும் இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் ஓய்வு பெற்ற பேராசிரியை P. இந்திரா தேவிக்கு, 2023 ஆம் ஆண்டிற்கான இந்திய வேளாண் பொருளாதாரச் சமூகத்தின் (ISAE) அங்கத்தினர் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் வர்த்தக சபையில் புதிதாக நியமிக்கப்பட்ட இயக்குநரான திரு. L.P. ஹேமந்த் K. ஸ்ரீநிவாசுலு என்பவருக்கு, மதிப்புமிக்க "2023 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர்" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- அயோத்தி இரயில் சந்திப்புக்கு அயோத்தி தாம் எனப் புதிய பெயர் வழங்கப் பட்டு உள்ளது.
- ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தின் முன்னாள் தலைவரும், யூரோ நாணயத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்கினை அளித்த நபருமான ஜாகுவெஸ் டெளோர்ஸ் சமீபத்தில் காலமானார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து பெறப்பட்ட கச்சா எண்ணெய்க்கு இந்திய அரசு முதன்முறையாக ரூபாய் மதிப்பில் பணம் செலுத்தியுள்ளது.
  - இது இந்திய நாணயத்தின் உலகளாவியப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நாட்டின் முன்னெடுப்பில் ஒரு குறிப்பிடத் தக்கப் படி நிலையைக் குறிக்கிறது.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தச்சங்குறிச்சி கிராமத்தில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு நடைபெற உள்ளது.
- தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அதிகாரியான பிரியா ரவிச் சந்திரன், இந்திய ஆட்சிப் பணியில் சேர்க்கப்படும் முதல் அதிகாரியாக மாறியுள்ளார்.
  - தமிழ்நாட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் சேர்க்கப் பட்ட முதல் பெண் அதிகாரி இவரே ஆவார் என்பதோடு தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் இருந்து இந்திய ஆட்சிப் பணியில் சேர்க்கப்படும் முதல் பெண் அதிகாரியும் இவரே ஆவார்.

- துணை இராணுவப் படைகள் ஆனது, ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து தனது அனைத்து அதிகாரப்பூர்வத் தகவல் தொடர்பு மற்றும் ஆவணங்களைப் பகிர்வு ஆகியவற்றிற்காக முற்றிலும் 'சந்தேஸ் செயலிக்கு' மாற உள்ளது.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது, 'மெட்டெக் மித்ரா (மருத்துவத் தொழில்நுட்ப மித்ரா) என்ற செயலியினைத் தொடங்கியுள்ளது.
  - இது மருத்துவத் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பாளர்களுக்கு அதிகாரமளித்து சுகாதார நலத் தீர்வுகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜாம்நகரில் உள்ள உலகின் மிகப்பெரிய அடிப்படை நிலை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் குஜராத் மாநிலத்தின் பருச் மாவட்டத்தில் உள்ள தஹேஜ் எனுமிடத்தில் உள்ள OPaL பெட்ரோலிய வேதியியல் வளாகம் ஆகியவை தற்போது இந்தியாவின் 'பெட்ரோலியத் தலைநகராக' அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அயோத்தியில் அமைக்கப்பட்டுள்ள மிகவும் புதிய விமான நிலையத்திற்கு முனிவரும் கவிஞருமான வால்மீகியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
  - முன்னதாக மரியாதை புருஷோத்தம் ஸ்ரீ ராம் சர்வதேச விமான நிலையம் என பெயர் சூட்ட முடிவு செய்யப்பட்டிருந்தது.
- நிதி ஆயோக் அமைப்பின் முன்னாள் துணைத் தலைவர் அரவிந்த் பனகாரியா 16வது நிதி ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- உத்தரப் பிரதேச மாநிலம் மதுரா மாவட்டத்தில் உள்ள விருந்தாவனம் எனுமிடத்தில் நாட்டின் முதல் அனைத்துப் பெண்கள் சைனிக் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது.
- உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் நகரில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு உலக சதுரங்க விரைவுச் சுற்று சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் கோனேரு ஹம்பி, மகளிருக்கான தனிநபர் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.
- ஜியோ நிறுவனமானது, மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்து பாரத் GPT என்ற செயற்கை நுண்ணறிவு திட்டத்தில் செயலாற்றி வருகிறது.
- உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட எட்டு முன்னாள் இந்தியக் கடற்படை அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை கத்தாரில் உள்ள மேல் முறையீட்டு (உச்ச) நீதிமன்றம் மாற்றியமைத்துள்ளது.
- அரசின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்பும் சாகர் பரிக்ரமா என்ற 10வது கடலோர யாத்திரை சென்னை துறைமுகத்தில் இருந்து தொடங்கியது.
  - இந்த யாத்திரையானது ஆந்திரப் பிரதேசம் மற்றும் புதுச்சேரி முழுவதும் உள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- 12வது 'திவ்ய கலா மேளா' நிகழ்வானது குஜராத் மாநிலத்தின் சூரத் நகரில் நடைபெற்றது.
  - மாற்றுத் திறனாளி நபர்களின் (PwD)/திவ்யாங்ஜன்களின் மிகவும் பொருளாதார வலுவூட்டலுக்கு பங்களிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கத்தோலிக்கத் திருச்சபையானது 1968 ஆம் ஆண்டு முதல் தேவனின் தாய் அன்னை மரியாவின் பவித்திரத் திருநாளான ஜனவரி 01 ஆம் தேதியினை உலக அமைதி தினமாக அனுசரிக்கிறது.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான 'டெசெர்ட் சைக்லோன் 2024' என்ற கூட்டு இராணுவப் பயிற்சியானது ராஜஸ்தானில் நடத்தப்படுகிறது.

- குஜராத் மாநிலமானது, மோதேரா சூரியக் கோவில் உள்ளிட்ட 108 இடங்களில் 4000க்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன் ஒரே நேரத்தில் மாபெரும் சூரிய நமஸ்கார நிகழ்ச்சியினை நிகழ்த்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளது.
- சமீபத்தில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கல்பாக்கத்தில் அமைந்துள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் சோதனை விரைவு உலை எரிபொருள் மறுசுழற்சி ஆலை (DFRP) நாட்டிற்குப் பிரதமர் மோடியால் அர்ப்பணிக்கப்பட்டது.
  - உலகிலேயே முதல் முறையாக விரைவு அணு உலைகளில் இருந்து எரிக்கப் பட்ட இரண்டு வகை எரிபொருள்களான கார்பைடு மற்றும் ஆக்சைடு ஆகிய இரண்டு வகையினையும் கையாளும் தொழிற்சாலை வகை உபகரணம் இதுவே ஆகும்.
- புளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, 100 பில்லியன் டாலர்களுக்கு மேல் சொத்து மதிப்பு கொண்ட உலகின் முதல் பெண்மணி என்ற பெருமையை பிரான்சுவா பெட்டன்கோர்ட் மேயர்ஸ் பெற்றுள்ளார்.
- உத்தரப் பிரதேச மாநிலப் போக்குவரத்துக் கழகத்தினால் (UPSDTC) நடத்தப்படுகின்ற உத்தரப் பிரதேசத்தின் முதல் குளிரூட்டப்பட்ட மிதவை உணவகம் ஆனது யமுனை ஆற்றின் மீது தனது சேவைகளைத் தொடங்கியது.
- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் (KMUT) உள்ள அதிகபட்ச பணி சுமை அளவைக் கையாளுவதற்காக 109 கூடுதல் வருவாய்த்துறை அதிகாரிகள் பணியிடங்களை உருவாக்க தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) வணிகப் பிரிவு ஆனது, முதன் முறையாக ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஏவுகலம் மூலமாக GSAT-20 என்ற தகவல் தொடர்பு செயற்கைக்கோளை விண்ணில் ஏவவுள்ளது.
- கொச்சி-லட்சத்தீவுகள் நீர்மூழ்கி ஒளியிழை கம்பிவட இணைப்பு (KLI-SOFC) திட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
  - இந்தத் திட்டம் ஆனது லட்சத்தீவு மக்களுக்கு 100 மடங்கு வேகமான இணைய சேவையை உறுதி செய்யும்.
- ஒடிசா மாநிலத்தில் மயூர்பஞ்ச் என்கின்ற மாவட்டத்தைச் சேர்ந்தப் பழங்குடியின மக்களால் சிஞ்சிருக்கான் அல்லது தையற்கார எறும்புகள் கொண்டு செய்யப்பட்ட சிமிலிபால் காய் சட்னி புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.
- இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (NHAI) ஆனது, இந்திய நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகளின் விரிவான வலையமைப்பிற்காக "பசுமை பரவல் குறியீட்டை" உருவாக்குவதற்காக தேசியத் தொலை உணர்வு மையத்துடன் (NRSC) மூன்று ஆண்டு கால புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது, நெகிழிக் கழிவு அடிப்படையிலான பைரோலிசிஸ் எண்ணெயை, சர்வதேச நிலைத்தன்மை மற்றும் கார்பன் சான்றிதழ் (ISCC)-பிளஸ் திட்டத்தின் சான்றளிக்கப்பட்ட சுழற்சி முறை மீச்சேர்மம் ஆக இரசாயன முறையில் மறுசுழற்சி செய்யும் முதல் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- கென்யாவின் பீட்ரைஸ் செபெட், ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெற்ற புகழ் பெற்ற கர்சா டெல்ஸ் நாசோஸ் சாலை ஓட்டப் பந்தயத்தில் மகளிருக்கான 5 கி.மீ உலக சாதனையை 14:13* என்ற நேரக் கணக்கில் நிறைவு செய்தார்.
  - 2021 ஆம் ஆண்டில் எத்தியோப்பியாவின் சென்பெரே டெஃபெரி 14:29 என்ற நேரக் கணக்கிலானச் சாதனையானது, மகளிருக்கான போட்டியில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய உலகச் சாதனையாக இருந்தது.

- 2024 ஆம் ஆண்டு உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பு நிகழ்வில், ஆக்கப்பூர்வமான பொருளாதாரப் பிரிவில், தனது கிராமப்புறத் திறமைகளை வெளிப்படுத்துவதற்காக, தமிழ்நாடு கிராமப்புற சமையல் யூடியூப் பக்கக் குழுவினைச் சேர்த்திருந்தது.
- அடிடாஸ் நிறுவனம் ஆனது, ஆசியாவில் சீன நாட்டிற்கு வெளியே தனது முதல் மற்றும் ஒரே உலகளாவிய சேவை மையத்தை (GCC) சென்னையில் அமைக்க உள்ளது.
- விமானப் போக்குவரத்து நிறுவனமான போயிங் நிறுவனம், சென்னையில் உள்ள அதன் உலகளாவியப் பொறியியல் சேவை வழங்கீட்டு மையத்தில் 300 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- வட இந்தியாவின் முதல் தொழில்துறை உயிரி தொழில்நுட்ப பூங்காவானது ஜம்முவில் உள்ள கதுவா எனுமிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- மனம் மற்றும் உடல் ஆகியவை இடையே உள்ள தொடர்பைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்துதல், மக்கள் மத்தியில் சுய-கவனிப்பு, மனம் தெளிந்த நிலை மற்றும் ஆரோக்கியமான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக ஜனவரி 03 ஆம் தேதியன்று சர்வதேச மனம்-உடல் ஆரோக்கிய தினம் அனுசரிக்கப் படுகிறது.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, பலபடி சேர்மக் கலவைகளைத் தயாரிப்பதற்காக தேவையற்ற வெந்நெகிழி (வெப்பத்தினால் இளகக் கூடிய) பலபடி சேர்மங்கள் மற்றும் கனிம துகள்மப் பிணைப்பிகளை உருக்கிக் கலப்பதற்கு GolDN (கோல்டன்) என்ற கருவியை உருவாக்கியுள்ளது.
- குளோபல்ஸ்பேஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனமானது 'GoRoga' எனும் மன அழுத்தத்தினைக் குறைப்பதற்கான ஒரு அணிகலச் சாதனத்தினை அறிமுகம் செய்து உள்ளது.
  - இது இந்தியாவில் இம்மாதிரியிலான முதல் வகையாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான காவல்துறை தலைமை இயக்குநர்கள் மற்றும் காவல்துறை தலைமை அதிகாரிகளின் அகில இந்திய மாநாடு ஆனது ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் நகரில் நடைபெற்றது.
- 2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பில், 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழக மாநிலத்தினை 1 டிரில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதாரமாக மாற்றச் செய்வதற்கான செயல் திட்டத்தினையும், 2024 ஆம் ஆண்டு குறைகடத்திகள் மற்றும் மேம்பட்ட மின்னணு கொள்கையினையும் தமிழக முதல்வர் வெளியிட்டார்.
- நான்கு முறை உலகக் கோப்பை வென்ற வீரரும் பயிற்சியாளருமான பிரேசிலிய கால்பந்து ஜாம்பவான் மரியோ ஜகாலோ சமீபத்தில் காலமானார்.
- அணிசேரா இயக்கத்தின் 19வது உச்சிமாநாடானது, உகாண்டாவின் தலைநகர் கம்பாலாவில் நடைபெற உள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளடக்கம் மற்றும் அதிகாரமளிப்பினை வெளிப் படுத்தும் வகையில், 2024 ஆம் ஆண்டு சர்வதேச ஊதா திருவிழா கோவாவில் தொடங்கியுள்ளது.
- பூந்தமல்லியில் 140 ஏக்கர் நிலப் பரப்பில் 500 கோடி ரூபாய் செலவில் நவீன திரைப்பட நகரம் கட்டமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் M.M. நரவனே, "Four Stars of Destiny" என்றப் புத்தகத்தை எழுதியுள்ளார்.

- அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவிற்கு 10,000 மெகாவாட் புனல் மின்சாரம் வழங்கச் செய்வதற்காக நேபாளம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் மின்னாற்றல் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- புகழ்பெற்ற வங்காள மொழி எழுத்தாளர் ஷிர்ஷேந்து முகோபாத்யாய்க்கு 2023 ஆம் ஆண்டு குவெம்பு இராஷ்ட்ரிய புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியக் கடற்படை உயர் அதிகாரியான தினேஷ் K. திரிபாதி கடற்படையின் புதிய துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பர்மிங்காம் பல்கலைக்கழகப் பேராசிரியர் அட்ரியன் மைக்கேல் குரூஸ், விண்வெளி அறிவியலுக்கான அவரது சேவைகளுக்காக பிரிட்டிஷ் பேரரசின் அதிகாரிகளுக்கான சிறந்த விருது (OBE) என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- குருகிராமில் உள்ள ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனத்தின் உற்பத்தி நிலையம் ஆனது, 'Within the Fence' பிரிவில் முதல் இடத்தைப் பெற்று நீர் மேலாண்மையில் சிறந்து விளங்குவதற்காக இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பின் தேசிய விருதைப் பெற்று உள்ளது.
- இந்திய உள்நாட்டு நீர்வழிகள் ஆணையம் (IWAI) ஆனது, சமீபத்தில் அமைக்கப்பட்ட உள்நாட்டு நீர்வழிகள் மேம்பாட்டு சபையின் (IWDC) முதல் கூட்டத்தை கொல்கத்தாவில் நடத்துகிறது.
- SVAMITVA திட்டமானது, 2023 ஆம் ஆண்டு மின் ஆளுகைக்கான தேசிய விருது விழாவில் "குடிமக்களை மையமாகக் கொண்ட சேவைகளை வழங்குவதற்காக வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்" என்ற பிரிவில் மிகவும் மதிப்புமிக்க தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
- ‘பிரசாதம்’ எனப்படும் இந்தியாவின் முதல் ஆரோக்கியமான & சுகாதாரமான உணவு விற்பனைத் தெரு மத்தியப் பிரதேசத்தின் உஜ்ஜைன் நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- அசாம் மாநில அரசாங்கம் ஆனது, முழுவதும் மின்சார இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்தும் 'பாயு' என்ற செயலி அடிப்படையிலான வாடகை வாகனச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கேரளாவைச் சேர்ந்த சுசேதா சதீஷ் என்பவர் ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் நடைபெற்ற பருவநிலைக்கான இசை நிகழ்ச்சி என்ற நிகழ்வின் போது மொத்தம் 140 மொழிகளில் பாடல்கள் பாடினார்.
  - இதற்காக அவர் கின்னஸ் உலக சாதனை விருதினைப் பெற்றுள்ளார்.
- இந்தியாவின் மூத்த அரசு முறை அதிகாரியான இந்திராமணி பாண்டே BIMSTEC அமைப்பின் பொதுச் செயலாளராக (SG) பொறுப்பேற்றுள்ளார்.
- AI Odyssey என்ற புதியதொரு முன்னெடுப்பினை மைக்ரோசாப்ட் நிறுவனம் தொடங்கி உள்ளது.
  - இந்தியாவில் 1,00,000 நிரலாக்க வல்லுநர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்காக இது வடிவமைக்கப்பட்டது.
- ONGC நிறுவனம் ஆனது, வங்காள விரிகுடாவின் காக்கிநாடா கடற்கரையில் அமைந்த கிருஷ்ணா கோதாவரி நதிப்படுகை சார்ந்த கடல்சார் KG-DWN 98/2 தொகுதியில் தனது ‘முதல் எண்ணெய் உற்பத்தியை’ தொடங்கியுள்ளது.
- கேப்ரியல் அட்டல் பிரான்சு நாட்டின் இளம் மற்றும் முதல் தன்பாலினச்சேர்க்கை வழக்கம் கொண்ட பிரதமரானார்.

- அவர் பிரான்ஸ் நாட்டின் இரண்டாம் பெண் பிரதமரான எலிசபெத் போர்னே என்பவருக்கு மாற்றாக நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ 2024 ஆம் ஆண்டு டென்னிஸ் ஐக்கிய கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டியில் போலந்து அணியைத் தோற்கடித்து ஜெர்மனி அணி கோப்பையினை வென்றது.

❖ தமிழகத்தின் அடுத்த தலைமை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் P.S. இராமன் நியமிக்கப்பட உள்ளார்.

- 2009 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தலைமை வழக்கறிஞராகப் பதவியில் இருந்த, இவர் இந்தப் பதவியினை ஏற்பது இது இரண்டாவது முறை ஆகும்.

❖ இந்தியாவின் துடிப்பு மிக்க மற்றும் பல்விதமான உணவு சூழலமைப்பினை வெளிப்படுத்தும் 'சிந்து உணவு 2024' என்ற கண்காட்சி உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டா நகரில் நடைபெற்றது.

❖ பிரபல இசைக்கலைஞர் உஸ்தாத் ரஷித் கான் சமீபத்தில் கொல்கத்தாவில் காலமானார்.

❖ உலக சுகாதார அமைப்பானது, 11வது சர்வதேச நோய்கள் வகைப்பாட்டுத் (ICD) தொடரின் 2 வது பாரம்பரிய மருத்துவத் தொகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி மருத்துவத்தில் கூறப்படும் நோய்கள் தொடர்பான தரவு மற்றும் சொற்கூறுகள் உலக சுகாதார அமைப்பின் ICD-11 வகைப்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

❖ இந்திய அரசானது, யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியக் குழுவின் 46வது அமர்வினை முதன்முறையாக புது டெல்லியில் நடத்தி அதற்கு தலைமை தாங்க உள்ளது.

❖ மத்திய அரசானது, ஜெனீவாவில் அமைந்துள்ள உலக வர்த்தக அமைப்பின் (WTO) அரசுத் தூதராக இந்தியக் குடிமைப் பணி அதிகாரி C. செந்தில் பாண்டியன் அவர்களை நியமித்துள்ளது.

❖ ஜெய்ப்பூர் நகரைச் சேர்ந்த திவ்யகிருதி சிங் குதிரையேற்றப் போட்டி விளையாட்டுகளில் அர்ஜுனா விருது பெற்ற முதல் இந்தியப் பெண்மணி ஆனார்.

❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது, இலங்கையின் கண்டியில் ஒரு புதிய வளாகத்தைத் திறக்க உள்ளது.

❖ கோவாவில் உள்ள தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையத்தின் தலைமையில் மேற்கொள்ளப்படும் இந்தியாவின் 43வது அண்டார்டிக் ஆய்வுப் பயணத்தில் மொரிஷியஸைச் சேர்ந்த இரண்டு அறிவியலாளர்களும், வங்காள தேசத்தினைச் சேர்ந்த ஒருவரும் இணைந்துள்ளனர்.

❖ இந்தியா, ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடற்படைகள் சீ டிராகன்-24 என்ற பன்னாட்டுக் கடல்சார் பயிற்சியில் பங்கேற்கின்றன.

❖ அமெரிக்காவில் ஜனவரி 11 ஆம் தேதியன்று தேசிய மனிதக் கடத்தல் விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

❖ பிளாக்ஃபீட் மற்றும் நெஸ் பெர்ஸ் எனப்படும் பழங்குடியினத்தினைச் சேர்ந்த லில்லி கிளாட்ஸ்டோன், கில்லர்ஸ் ஆஃப் தி ஃப்ளவர் மூன் திரைப்படத்திற்காக சிறந்த நடிகை பிரிவில் கோல்டன் குளோப் விருதை வென்ற முதல் பழங்குடியினர் என்ற மிகப் பெரும் பெருமையினைப் பெற்றுள்ளார்.

❖ தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) புள்ளி விவரப்படி, நாட்டிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான நகரமாக சென்னை உள்ளது.

- ஸ்வச் சர்வேக்சன் மதிப்பீட்டில் இடம் பெற்ற 446 இந்திய நகரங்களில் சென்னைப்\ பெருநகர மாநகராட்சி 199வது இடத்தைப் பெற்றுள்ளது.
- சென்னை சங்கமம் 'நம்ம ஊரு திருவிழா'வைத் தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
  - இந்த விழாவில் நகரம் முழுவதும் 18 இடங்களில் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்களின் நிகழ்ச்சிகள் காட்சிப்படுத்தப் படுகின்றன.
- கடல் மீது கட்டமைக்கப்பட்டுள்ள மும்பை மற்றும் துறைமுகம் இடையிலான 22 கி.மீ. நீள அடல் சேது நவா ஷேவா கடல்சார் போக்குவரத்து இணைப்பு என அதிகாரப்பூர்வ பெயர் கொண்ட நாட்டின் மிக நீளமான கடல் மேல் அமைந்த பாலம் ஆனது சமீபத்தில் திறக்கப்பட்டது.
- இந்திய இராணுவம் ஆனது, 2024 ஆம் ஆண்டினை 'தொழில்நுட்ப உட்சார்தல் ஆண்டாக' அனுசரிக்க உள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (IIT-M) மற்றும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் (HMIL) ஆகியவை ஹைட்ரஜன் தொடர்பான புத்தாக்க மையத்தினை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- தீபா பண்டாரே, வசந்ததாதா சர்க்கரை உற்பத்தி நிறுவனத்தின் சிறந்த சுற்றுச்சூழல் அதிகாரி விருதை வென்று, மகாராஷ்டிராவின் சர்க்கரை உற்பத்தித் துறையில் இந்தப் பெருமையைப் பெற்ற ஒரே பெண்மணி என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது, 'ஒரு வாகனம், ஒரு FASTag' முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
  - எந்தவொரு வாகனமும் பல FASTag குறியீடுகளைப் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- 27வது தேசிய இளையோர் விழா (NYF) ஆனது, மகாராஷ்டிர மாநிலம் நாசிக் நகரில் நடைபெற்றது.
  - இதில் நாடு முழுவதிலுமிருந்து பதினைந்து இளைஞர்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கான தேசிய இளையோர் விருது வழங்கப்பட்டது.
- திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மேஜர் A. ரஞ்சித் குமார், தனது இரண்டாவது சேனா பதக்கம் (வீர தீர விருது) பெற்றார்.
  - காஷ்மீர் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையில் அவர் முக்கியப் பங்கு வகித்ததற்காக 2020 ஆம் ஆண்டில் அவருக்கு முதல் சேனா பதக்கம் (வீரதீர விருது) வழங்கப்பட்டது.
- எதிரி நாட்டு விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் ஆளில்லா விமானங்களை 30 கி.மீ தொலைவில் இடைமறித்துத் தாக்கும் திறன் கொண்ட புதிய தலைமுறை தொழில் நுட்பம் சார்ந்த கண்டம் விட்டு வானில் உள்ள இலக்குகளை தாக்கும் ஆகாஷ் ஏவுகணை அமைப்பு ஆனது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- புகழ்பெற்ற எழுத்தாளர் M.J. அக்பர், இணை ஆசிரியர் K. நட்வர் சிங்குடன் இணைந்து "Gandhi: A Life in Three Campaigns " என்ற புதிய புத்தகத்தை வெளியிட்டார்.
- ரோஹித் சர்மா, 150 சர்வதேச டி20 போட்டிகளில் பங்கேற்ற முதல் ஆண் கிரிக்கெட் வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

- ராஜஸ்தானின் பிகானேர் நகரில் மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச ஒட்டகத் திருவிழா நடைபெற்றது.
- இந்திய மற்றும் ஜப்பானியக் கடலோரக் காவல்படையினர் 'சஹ்யோக் கைஜின்' என்ற கூட்டுப் பயிற்சியை சமீபத்தில் சென்னையின் கடற்கரையில் வெற்றிகரமாக மேற் கொண்டன.
- இந்தியக் கடற்படை மற்றும் தாய்லாந்து நாட்டுக் கடற்படை (RTN) ஆகியவை இணைந்து 'எக்ஸ்-ஆயுத்தயா' என்ற முதலாவது இருதரப்புப் பயிற்சியை மேற் கொண்டன.
  - இந்தப் பெயர் இந்தியாவில் உள்ள 'அயோத்தி', தாய்லாந்தில் உள்ள ஆயுத்தயா ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.
- உக்ரைன் அதிபர் விலாடிமிர் ஜெலென்ஸ்கியின் வேண்டுகோளுக்கு இணங்க உக்ரைன் நாட்டில் உலகளாவிய அமைதி மாநாட்டை நடத்த சுவிட்சர்லாந்து அரசு ஒப்புக் கொண்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீ சத்ய சாய் மாவட்டத்தில் உள்ள பாலசமுத்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய சுங்கம், மறைமுக வரிகள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு கழகத்தின் (NACIN) புதிய வளாகம் ஆனது திறக்கப்பட்டுள்ளது.
- கட்ச் பகுதியின் பூர்வீகப் பேரீச்சம்பழ வகையான கச்சி காரேக், குஜராத் மாநிலத்தில் புவிசார் குறியீடு பெற்ற இரண்டாவது பழ வகையாக மாறியுள்ளது.
  - 2011 ஆம் ஆண்டில், கிர் கேசர் மாம்பழத்திற்கு புவிசார் குறியீடு வழங்கப் பட்டது.
- ஜனவரி 14 ஆம் தேதியன்று, உலக நாடுகள் உலக தர்க்க தினத்தைக் கொண்டாடியது.
  - இத்தினமானது காரணம், பகுத்தறிவு மற்றும் திறனாய்வுச் சிந்தனையின் மூலக் கல்லாக தர்க்கம் விளங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக ஒரு கௌரவ வழங்கீட்டுத் தினமாக 2019 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் நிறுவப் பட்டது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது, மின்சார வாகனம் குறித்த ஆராய்ச்சி மற்றும் உருவாக்கச் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஒரு ஆய்வகத்தினைத் தொடங்குவதற்காக அல்டேர் நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.
- திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள 42 மீனவக் கிராமங்கள் அமைந்த கடற்கரையில் செயற்கைப் பவளப் பாறைகள் அமைக்கும் பணி சமீபத்தில் தொடங்கியது.
  - இந்தத் திட்டமானது மீன் வளத்தைப் பெருக்கச் செய்வதற்கும் நிலையான மேலாண்மையினை மேம்படுத்துவதற்காகவும் தொடங்கப்பட்டுள்ளது.
- ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது, பிறந்த தேதிக்கான (DOB) ஆதாரமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்களின் பட்டியலில் இருந்து ஆதார் அட்டையை நீக்கியுள்ளது.
- டி20 கிரிக்கெட் சர்வதேசப் போட்டிகளில் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் கிளென் மேக்ஸ்வெல் மற்றும் சூர்யகுமார் யாதவ் ஆகியோரை ரோஹித் சர்மா (5) விஞ்சி உள்ளார்.
- ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையில் நடைபெற உள்ள WT20I போட்டியின் போதான இருதரப்புத் தொடரில் இடம் பெற உள்ள, சர்வதேச கிரிக்கெட் சபையினால் நியமிக்கப் பட்ட முதல் பெண் நடுநிலை (மூன்றாம் நாட்டைச் சேர்ந்த) நடுவர் என்ற பெருமையினை இங்கிலாந்தின் சூயு ரெட்ஃபெர்ன் பெற்று உள்ளார்.
- தென்னிந்தியாவில் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் முதல் முறையாக நடத்தப்படுகிறது.

- சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை ஆகிய தமிழ்நாட்டின் நான்கு நகரங்களில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

❖ தேசிய லிக்னைட் கழக இந்தியா லிமிடெட் நிறுவனம் ஆனது, எண்ணிமப் பரிமாற்றப் பிரிவில் பொது நிறுவனங்களிளுக்கான நிலையான மாநாடு (SCOPE) என்ற அமைப்பின் உயர்நிலை விருதைப் பெற்றுள்ளது.

- SCOPE எனப்படும் பொதுத்துறை நிறுவனங்களின் உச்ச அமைப்பினால் இந்த விருது நிறுவப் பட்டது.

❖ அயோத்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள இராமர் கோவில் திறப்பு விழாவை முன்னிட்டு, உலகின் மிகப்பெரியதாக அறிவிக்கப்பட்ட 300 அடி விளக்கு, நகரில் ஒளிரச் செய்யப் பட உள்ளது.

❖ MPLAD திட்டத்தின் கீழ் திருத்தியமைக்கப்பட்ட நிதி வழங்கீட்டு நடைமுறைக்காக e-SAKSHI என்ற கைபேசிச் செயலி சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

❖ டாடா ஆலோசனை வழங்கீட்டு நிறுவனம் ஆனது பிராண்ட் ஃபைனான்ஸ் என்ற நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு உலகளாவிய 500 தகவல் தொழில்நுட்பச் சேவைகள் தர வரிசையின்படி, இரண்டாவது மதிப்புமிக்க தகவல் தொழில்நுட்பச் சேவை வழங்கீட்டு நிறுவனமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- 40.5 பில்லியன் டாலர் நிறுவன மதிப்புடன், அசென்சர் நிறுவனமானது உலகின் மிக மதிப்பு மிக்க தகவல் தொழில்நுட்ப சேவை வழங்கீட்டு நிறுவனமாக தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.

❖ இந்தியாவின் முதல் கிராபீன் புத்தாக்க மையம் IICG ஆனது கொச்சியில் அமைந்துள்ள உற்பத்தி ஊக்குவிப்பு மையத்தில் (மேக்கர்ஸ் வில்லேஜ்) நிறுவப்பட்டுள்ளது.

❖ ஆப்பிள் நிறுவனம் ஆனது, சாம்சங் நிறுவனத்தினை முந்தி இந்தத் தொழில்துறையில் முன்னணியில் இருந்து வந்த கொரியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் 12 ஆண்டுகால முன்னணித்துவத்தினை முடிவுக்குக் கொண்டு வந்து உலகின் முன்னணி திறன் பேசி விற்பனையாளராகத் திகழ்கிறது.

❖ NH- 66 மும்பை-கோவா தேசிய நெடுஞ்சாலையில், எஃகு உருக்கு கசடினைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் தேசிய நெடுஞ்சாலைப் பகுதி சமீபத்தில் திறக்கப்பட்டது.

❖ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆனது, சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் பாரத் ஸ்டேட் வங்கியை விஞ்சி நாட்டின் மிகவும் மதிப்புமிக்க பொதுத்துறை நிறுவனமாக மாறியுள்ளது.

❖ இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதியும், மாநிலங்களவை உறுப்பினருமான ரஞ்சன் கோகாய் 'அசாம் பைபவ்' எனப்படும் அசாமின் உயரியக் குடிமை விருதினைப் பெற உள்ளார்.

❖ கிராண்ட்மாஸ்டர் R. பிரக்ஞானந்தா, விஸ்வநாதன் ஆனந்த் அவர்களை விஞ்சி இந்தியாவின் முன்னணி சதுரங்க வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

❖ இந்திய இராணுவத்தின் முதல் தலைமைப் படைத் தளபதியான பீல்ட் மார்ஷல் K.M. கரியப்பா அவர்கள் 1953 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றதை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 14 ஆம் தேதியன்று ஆயுதப் படை வீரர்கள் தினமாக கொண்டாடப்படுகிறது.

❖ தூர்தர்ஷன் ஒளியலை வரிசையின் புதுப்பிக்கப்பட்ட தமிழ் மொழி சார் ஒளியலை வரிசை சமீபத்தில் தொடங்கப்பட்டது.

  - முன்பு DD பொதிகை என்று அழைக்கப்பட்ட இந்த ஒளியலை வரிசைக்கு DD தமிழ் என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- தமிழ் எழுத்தாளர் சாரு நிவேதிதா எழுதிய ஔரங்கசீப்புடனான உரையாடல்கள் என்ற புத்தகம் ஆனது, நந்தினி கிருஷ்ணனால் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப் பட்டு உள்ளது.
- அமைதிக்கான ஆசிய பௌத்த மாநாட்டின் (ABCP) 12வது பொதுச் சபையானது புது டெல்லியில் நடைபெற்றது.
- லீக் போட்டிகள் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக விளம்பர ஆதரவு தொகையுடன் அடுத்த 5 ஆண்டுகளுக்கு IPL போட்டிகளின் விளம்பர ஆதரவு உரிமையை டாடா குழுமம் பெற்றுள்ளது.
  - TATA குழுமம் இதற்கு முன்னர் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் IPL போட்டிக்கான விளம்பர ஆதரவு உரிமைகளை பெற்றிருந்ததோடு, அது மகளிர் பிரீமியர் லீக் போட்டியின் விளம்பர ஆதரவு உரிமையையும் கொண்டிருந்தது.
- REC லிமிடெட் நிறுவனமானது, 2022-23 ஆம் நிதியாண்டிற்கான நிதி அறிக்கையிடலில் சிறந்து விளங்குவதற்கான ICAI விருதை வென்றுள்ளது.
- அயோத்தி இராமர் கோவிலுக்கு 400 கிலோ எடையுள்ள உலகின் மிகப்பெரிய பூட்டு காணிக்கையாக வழங்கப் பட்டுள்ளது.
- REC லிமிடெட் நிறுவனமானது, 61.1 பில்லியன் ஜப்பானிய யென் மதிப்பிலான பசுமைப் பத்திரங்களை வெற்றிகரமாக வெளியிட்டது.
  - இது இதுவரையில் ஓர் இந்திய நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட மிக அதிக யென் மதிப்பிலான வெளியீடாகும்.
- இந்திய அரசானது, பெண்களின் அதிகாரம் மற்றும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக "உலகளாவிய நன்மைக்கான உலகளாவியக் கூட்டணி - பாலின சமத்துவம் மற்றும் சமத்துவம்" என்ற கூட்டணியினை வெற்றிகரமாக நிறுவியுள்ளது.
  - பெண்களின் ஆரோக்கியம், கல்வி மற்றும் நிறுவனங்களின் அடையாளம் காணப் பட்ட சில பகுதிகளில் உலக நாடுகளின் சிறந்த நடைமுறைகள், தகவல் பகிர்வு மற்றும் முதலீடுகளை ஒன்றிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையத்தில் உள்ள பவானியம்மன் கோயில், விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் உள்ள அங்காள பரமேஸ்வரி கோயில் மற்றும் கோவை மாவட்டம் ஆனைமலையில் உள்ள மாசானியம்மன் கோயில் ஆகிய 3 கோயில்களில் பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- பிரதமர் அவர்கள் சமீபத்தில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதசுவாமி கோயிலுக்கு வருகை புரிந்த நிகழ்வானது முதல் முறையாக பதவியில் உள்ள ஒரு பிரதமர் அக்கோவிலுக்கு மேற்கொண்ட வருகை ஆக குறிக்கப்பட்டது.
- FIFA கூட்டமைப்பின் தலைவர், கியான்னி இன்ஃபான்டினோ, இந்த ஆண்டின் மதிப்பு மிக்க சர்வதேச விளையாட்டுத் துறை நபர் என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது, துருக்கியின் முதல் விண்வெளிப் பயணியை உள்ளடக்கிய, ஆக்ஸியம் ஆய்வுத் திட்டம் 3 என்ற சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஒரு தனியார் துறையினால் அனுப்பப்படும் விண்வெளி ஆய்வுப் பயணத்தை (Ax3) தொடங்கியுள்ளது.

- மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூரில் அமைக்கப்பட்டுள்ள ஜல்லிக்கட்டு அரங்க மைதானத்தினைத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
    - உலகிலேயே முதல் முறையாக மற்றும் தமிழகத்திலேயே இத்தகைய முதல் வகையான மைதானம் இதுவாகும்.
- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், Alt News நிறுவனத்தின் இணை நிறுவனர் முகமது சுபைருக்கு 2024 ஆம் ஆண்டு கோட்டை அமீர் வகுப்புவாத நல்லிணக்க விருதினை வழங்கினார்.
- மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூரில் கீழக்கரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு விழா ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்ற முதலாவது ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகளை அடக்கும் சிறந்த வீரராக திருப்புவனம் அபி சித்தர் தேர்வு செய்யப் பட்டார்.
- ஒடிசாவின் நாயகர் மாவட்டத்தில் பரவலாகப் பயிரிடப்படும் கந்தேமுண்டி கத்தரி புவிசார் குறியீடு பெற்றுள்ளது.
- வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசியப் பங்குச் சந்தை உலகின் மிகப்பெரிய முதலீட்டு ஏற்பாட்டு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
    - இது மேற்கொள்ளப்பட்ட வர்த்தகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் (மின்னணு பதிவேடு) பங்குப் பிரிவில் உலகளவில் 3வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஜீ என்டெர்டெய்ன்மெண்ட் என்டெர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனமானது, தனது இந்திய அலகு மற்றும் ஊடக வலையமைப்பிற்கு இடையேயான 10 பில்லியன் டாலர் மதிப்பிலான இணைப்பை நிறுத்தத் திட்டமிட்டுள்ளதாக சோனி குழுமம் அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு இந்திய ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவில் சீன நாட்டின் தைபே நகரைச் சேர்ந்த தை சூ யிங், சீனாவின் சென் யூ ஃபேயை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- பிரான்சில் நடைபெற்ற கிராண்ட் பிரிக்ஸ் டி பிரான்ஸ் ஹென்றி டெக்லேன் மல்யுத்தப் போட்டியில் இந்திய வீரர் ரவிக்குமார் தஹியா வெண்கலப் பதக்கத்தினை வென்று உள்ளார்.
- சைக்ளோன் எனப்படும் 2வது இந்தியா-எகிப்து கூட்டு சிறப்புப் படைப் பயிற்சி ஆனது எகிப்தின் அன்ஷாஸ் என்னுமிடத்தில் நடைபெற்று வருகிறது.
- கஞ்சர் எனப்படும் 11வது இந்தியா-கிர்கிஸ்தான் கூட்டு சிறப்புப் படை பயிற்சியானது, இமாச்சலப் பிரதேசத்தின் பக்லோ என்னுமிடத்தில் தொடங்கியுள்ளது.
- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், ஐந்தாண்டு நிதிநிலை அறிக்கைகள் மற்றும் ஒரு இடைக்கால நிதிநிலை அறிக்கை உட்பட தொடர்ந்து ஆறாவது நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்து வரலாறு படைக்க உள்ளார்.
    - முன்னதாக இந்தச் சாதனையினை முன்னாள் பிரதமரான மொரார்ஜி தேசாய் மட்டுமே எட்டியுள்ளார்.
- தென் கொரியாவில், மெத்தனால் மூலம் இயக்கப்படும் உலகின் முதல் பெரிய கொள்கலன் கப்பலுக்கு "அனே மேர்ஸ்க்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- சவூதி அரேபியா நாடானது, தனது தலைநகர் ரியாத்தில் முஸ்லீம் அல்லாத அரசுமுறை அதிகாரிகளுக்கு மட்டும் பிரத்தியேகமாக சேவை வழங்கும் தனது முதல் மதுபானக் கடையைத் திறக்கத் தயாராகி வருகிறது.

- ஆர்மடோ எனப்படுகின்ற இந்தியாவின் முதல் கவசமிடப்பட்ட மிதரக சிறப்புப் பயன்பாட்டு வாகனம் (ALSV) ஆனது 2024 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் அறிமுகப் படுத்தப்பட்டது.
    - இது இந்திய ஆயுதப் படைகளுக்காக மஹிந்திரா பாதுகாப்பு அமைப்புகள் நிறுவனத்தினால், முழுவதும் உள்நாட்டிலேயே வடிவமைத்துக் கட்டமைக்கப்பட்ட வாகனமாகும்.
- சந்தை மூலதனத்தின் அடிப்படையில் உலகளாவியப் பங்குச் சந்தைத் தரவரிசையில் ஹாங்காங்கை முந்தி இந்தியா நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.
    - ஹாங்காங்கின் 4.29 டிரில்லியன் டாலர் மதிப்பிலான சந்தை மூலதனத்தை விஞ்சி, இந்தியாவின் சந்தை மூலதன மதிப்பு 4.33 டிரில்லியன் டாலரை எட்டியுள்ளது.
- மீன்வள மேலாண்மை மீதான உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் FAO COFI (மீன்வளம் குறித்த குழு) துணைக் குழுவின் முதல் துணைத் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - 57 ஆண்டுகளில் முதன்முறையாக 'மீன் பிடிப்பு' குறித்த உணவு மற்றும் வேளாண் அமைப்பின் மீன்வள வாரியத்தின் உறுப்பினராக இந்தியா பணியாற்ற உள்ளது.
- இயங்கலை தனியுரிமை, தரவுப் பாதுகாப்பு மற்றும் எண்ணிம உலகில் நமது தனிப் பட்டத் தகவல்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றிய முக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்காக ஜனவரி 28 ஆம் தேதியன்று தரவு தனியுரிமை தினம் அனுசரிக்கப் படுகிறது.
- 2021-22 ஆம் ஆண்டு AISHE கணக்கெடுப்பின்படி, உத்தரப் பிரதேச மாநிலம் ஆனது, நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான (8375) கல்லூரிகளைக் கொண்டுள்ள நிலையில், அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (4692) கர்நாடகா (4430), ராஜஸ்தான் (3934), மற்றும் தமிழ்நாடு (2829) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
    - நாட்டிலேயே அதிக கல்லூரிகளைக் கொண்டதாக பெங்களூரு நகர மாவட்டம் (1106) உள்ளதோடு, நாட்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு அதிக கல்லூரிகள் என்ற எண்ணிக்கையில் கர்நாடக மாநிலமும் (66) அதனைத் தொடர்ந்து தெலங்கானா (52), ஆந்திரப் பிரதேசம் (49), இமாச்சலப் பிரதேசம் (47), புதுச்சேரி (53) மற்றும் கேரளா (46) ஆகியனவும் உள்ளன.
- 3வது வீர் கதா திட்டத்தில் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து 1.36 கோடிக்கும் அதிகமான பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.
    - ஆயுதப்படைகளின் அதிகாரிகள்/படைப்பிரிவினரின் வீரம் மற்றும் தியாகத்தைப் போற்றும் வகையில் மாணவர்கள் கவிதைகள், ஓவியங்கள், கட்டுரைகள், ஒளிப் படங்கள் போன்றவற்றை அனுப்பினர்.
- ஓலா நிறுவனத்தின் க்ருத்ரிம் எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனமானது, 50 மில்லியன் டாலர் நிதியினைப் பெற்று இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப யூனிகார்ன் நிறுவனமாக உருவெடுத்து உள்ளது.
- சமீபத்தில் ATP ஆடவர் இரட்டையர் போட்டிக்கான தரவரிசையில் உலகளவில் முதலிடத்தினைப் பெற்ற, 43 வயதான ரோஹன் போபண்ணா, தற்போது கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற மிக வயதான நபர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 31 ஆம் தேதியன்று சர்வதேச வரிக்குதிரை தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் தனியார் சமபங்கு முதலீடு - துணிகர முதலீடுகள் 2023

- தனியார் சமபங்கு முதலீடு - துணிகர முதலீடு (PE-VC) நிறுவனங்கள் 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களில் 61 ஒப்பந்தங்கள் மூலம் 1,378 மில்லியன் டாலர் முதலீடு செய்துள்ளன.
- 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 49.65% குறைவாகும்.
- 2022 ஆம் ஆண்டில், PE-VC நிறுவனங்கள் 75 ஒப்பந்தங்கள் மூலம் 2,737 மில்லியன் டாலர் முதலீடு செய்தன.
- இந்த ஆண்டு மட்டும் தமிழக மாநிலத்தில் 61 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் முந்தைய ஆண்டில் 81 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.



Dip in deals

Investments by Private Equity and Venture Capital (PE-VC) firms in Tamil Nadu-based companies have remained rather dull this year. Here is a look at some investment trends in the State


PE-VC investments in T.N.-based firms (up to December 26, 2023)

| Quarter | Number of deals | Amount ($ million) |
|---|---|---|
| Q4 2023 | 12 | 221 |
| Q3 2023 | 10 | 334 |
| Q2 2023 | 19 | 467 |
| Q1 2023 | 20 | 356 |
| Q4 2022 | 15 | 560 |
| Q3 2022 | 11 | 115 |
| Q2 2022 | 23 | 703 |
| Q1 2022 | 26 | 1,359 |
| Q4 2021 | 20 | 755 |
| Q3 2021 | 21 | 404 |
| Q2 2021 | 14 | 344 |
| Q1 2021 | 15 | 537 |

Angel investments in T.N.-based companies (as on December 26, 2023)

| Quarter | No. of deals |
|---|---|
| Q4 2023 | 6 |
| Q3 2023 | 6 |
| Q2 2023 | 22 |
| Q1 2023 | 27 |
| Q4 2022 | 26 |
| Q3 2022 | 14 |
| Q2 2022 | 18 |
| Q1 2022 | 23 |
| Q4 2021 | 15 |
| Q3 2021 | 13 |
| Q2 2021 | 14 |
| Q1 2021 | 4 |


## 2023 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் தமிழ்நாடு மாநில அரசு பெறும் கடன்



- 2023-24 ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டில் 37,000 கோடி ரூபாய் கடன் வாங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- வருவாய்-செலவின இடைவெளியை (நிதிப் பற்றாக்குறை) குறைப்பதற்கு, மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDLs) எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் மாநில அரசு சந்தையில் இருந்து கடன் பெற உள்ளது.
- இது மாநில அரசின் மொத்த நிலுவைக் கடன்களில் பெரும்பகுதியை உருவாக்குகிறது.
- 2023-24 ஆம் நிதியாண்டில் இதுவரையில் (டிசம்பர் மாதம் வரை), மாநில அரசு 76,000 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது.

## சமணப் பள்ளி

- விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டிக்கு அருகில் உள்ள புல்லூர் என்ற இடத்தில், கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டு வரை சமணர் பள்ளி இருந்ததாக நம்பப் படுகிறது.
- இத்தளத்தில் குறைந்தது நான்கு கல்வெட்டுகள் கண்டுபிடிக்க ப்பட்டுள்ளன.
- மாறன் சடையன் என்ற பாண்டிய மன்னனால் நான்காம் ஆட்சியாண்டில் 50 ஆடுகள் தானமாக வழங்கப்பட்டதாக கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.
- வட்டெழுத்து எழுத்து வடிவில் உள்ள மற்றொரு கல்வெட்டு, கி.பி. 997 ஆம் ஆண்டு இராஜ இராஜ சோழனின் 12வது ஆட்சியாண்டில் பாலத்துறைக்குடி கோபாலன் என்பவரால் 25 ஆடுகள் தானம் வழங்கப் பட்டதாக குறிப்பு உள்ளது.



## ஆளில்லா வான்வழி வாகனங்களுக்கான காப்புரிமை

- அண்ணா பல்கலைக்கழகத்தின் கண்டுபிடிப்பான, கம்பிவழி இணைக்கப்பட்ட வான் வழி வாகனத்திற்கு இந்தியக் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.
- கம்பிவழியில் இணைக்கப்பட்ட வான்வழி வாகனம் என்பது தரையில் உள்ள ஓர் அமைப்புடன் இணைக்கப்பட்ட ஆளில்லா பறக்கும் வாகனமாகும்.
- கெவ்லர் முலாம் பூசப்பட்ட கண்ணாடி இழை கம்பிவடம் மூலம் தரையில் உள்ள அமைப்பில் இருந்து இதற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.
- இந்தப் புதுமையான கண்டுபிடிப்பானது, அதிகபட்ச உறுதித்தன்மையை வழங்கச் செய்வதோடு, மின்கலம் சார்ந்த வரம்புகள் போன்ற எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் ஆளில்லா வான்வழி வாகனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது.
- இந்த வாகனம் ஆனது ஆளில்லா வான்வழி வாகனத்தினைக் கம்பிவட இணைப்பின்றி இயக்கும் வகையில் ஒரு கலப்பின அமைப்பாகவும் செயல்பட கூடியது.
- இந்தக் காப்புரிமை ஆனது 2018 ஆம் ஆண்டு நவம்பர் 08 முதல் 20 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.




## தமிழ்நாடு தென்னை நார் கொள்கை 2024

- இந்தக் கொள்கையானது, 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தத் துறையில் 3,000 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்து 60,000 வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- தென்னை நார் உற்பத்தித் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சியினை ஆதரிக்கும் ஒரு மூலோபாய கட்டமைப்பை வழங்குவதையும் இந்தக் கொள்கை இலக்காகக் கொண்டுள்ளது.
- இது புதிய, புதுமையான தேங்காய் நார் தயாரிப்புகளுக்கு வேண்டிய பிரத்தியேகமாக தொழில்துறை-கல்வித்துறை-தனியார் ஆராய்ச்சி அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் சிறப்பு மையங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழகத்தில் 4.46 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை பயிரிடப்படுகிறது.

- நமது மாநிலத்தின் தென்னை உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 10,484 காய்களாக உள்ளது.
- தென்னை நார் உற்பத்தித் துறையில் மேற்கொள்ளப்படும் மொத்த முதலீடு 5,331 கோடி ரூபாய் ஆகும்.
- தமிழ்நாட்டில் தென்னை நார் பொருட்களின் மொத்த விற்பனை 5,368 கோடி ரூபாய் ஆகும்.
- தென்னை நார் பொருட்களின் ஏற்றுமதி மதிப்பு 2,186 கோடி ரூபாய் ஆகும்.

## தமிழகத்தில் ABPS




- MGNREGA திட்டத்தின் கீழ் ஊதியம் வழங்குவதற்கு ஆதார் அடிப்படையிலான ஊதியம் வழங்கும் முறையை (ABPS) கட்டாயமாக்கும் மத்திய அரசின் நடவடிக்கையால் தமிழகம் பெரிதாக பாதிக்கப்படுவதாகத் தெரியவில்லை.
- 76.62 லட்சம் பணியில் உள்ள வேலைவாய்ப்பு அட்டைகளுடன் சுமார் 92.13 லட்சம் பணியாளர்கள் தற்போது அத்திட்டத்தின் கீழ் இணைந்துள்ளனர்.
- 90.3 லட்சம் செயல்பாட்டில் உள்ள பணியாளர்கள் (கணக்கின்படி 98%) “ABPS முறையின் கீழ் ஊதியம் பெற தகுதி பெற்ற” பணியாளர்கள் என்ற பிரிவின் கீழ் உள்ளனர்.
- மாநிலத்தில் 1.25 கோடி பணியாளர்களுடன் மொத்தம் 91.17 லட்சம் வேலைவாய்ப்பு அட்டைகள் உள்ளன.
- ஆனால், செயல்பாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அட்டைகளின் எண்ணிக்கை 76.62 லட்சம் மட்டுமே ஆகும்.
- மனித உழைப்புத் தினங்களை உருவாக்கிய மாநிலத்தின் திறனைப் பொறுத்த வரையில், அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

## புதிய அகழ்வாராய்ச்சி தளங்கள் – தமிழ்நாடு

- தமிழ்நாடு அரசானது, இந்த ஆண்டு நான்கு புதிய இடங்களில் அகழாய்வு மேற் கொள்வதற்கு இந்தியத் தொல்லியல் துறையிடம் அனுமதி கோரியுள்ளது.
- அந்த நான்கு தலங்கள்: கடலூரில் உள்ள மருங்கூர்; திருப்பூரில் கொங்கல்நகரம்; தென்காசியில் திருமலாபுரம்; மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சென்னனூர்.

- கடந்த ஆண்டு வரையில் குறிப்பிடத்தக்க வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள துலுக்கர்பட்டியில் இருந்து சுமார் 2,030 சுவர் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அதில் நான்கு தமிழ்-பிராமி கல்வெட்டுகளைக் கொண்டுள்ளன.




| Site name | District | Reason for excavation |
|---|---|---|
| Thirumalapuram | Tenkasi | In search of evidence of **origin of high tin bronze** |
| Kongalnagaram | Tiruppur | Sangam age **artefacts and Tamil Brahmi script** |
| Marungur | Cuddalore | Evidence of **dating in Iron age** |
| Chennanur | Krishnagiri | **Neolithic period** |

## காற்றாலைத் திட்டங்களுக்கான மீளுருவாக்கக் கொள்கை

- தமிழக மாநில அரசானது, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 'காற்றாலை மின் ஆற்றல் உற்பத்தி திட்டங்களுக்கான தமிழ்நாடு மீளுருவாக்க மற்றும் செயல்பாட்டுக் கால நீட்டிப்புக் கொள்கையை' வெளியிட்டது.
- இந்தப் புதிய கொள்கை அறிமுகப் படுத்தப்பட்டதன் மூலம், காற்றாலை ஆற்றல் உற்பத்தித் துறையில், குஜராத்திடம் இழந்த தனது முன்னணி நிலையை தமிழக மாநிலம் மீண்டும் பெற உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி நிலவரப்படி குஜராத்தில் உள்ள நிறுவப்பட்ட காற்றாலை ஆற்றல் திறன் 11,176.12 மெகாவாட் ஆகும்.
- தமிழ்நாட்டில் உள்ள நிறுவப்பட்ட காற்றாலை ஆற்றல் திறன் 10,377.97 மெகாவாட்டாக இருந்தது.
- மீளுருவாக்கத் திட்டத்தின் கீழ், காற்றாலை ஆற்றல் உற்பத்தி நிறுவனங்கள் பழைய காற்றாலைகளுக்குப் பதிலாக புதியவற்றை நிறுவ உள்ளன.
- இந்தியாவின் மொத்த காற்றாலை ஆற்றல் மீளுருவாக்கத் திறன் ஆனது 25,406 மெகா வாட்டாக உள்ள நிலையில் இதில் அதிகபட்சமாக தமிழகத்தின் பங்கு 7,387 மெகா வாட்டாக உள்ளது.

## 2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பினை எட்டும் பொருளாதாரம்

- தமிழ்நாடு முதலமைச்சரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களான பொருளாதார நிபுணர்கள் ரகுராம் ராஜன் மற்றும் அரவிந்த் சுப்ரமணியன் ஆகியோர் 2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பில், 'தமிழகத்தின் டிரில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதாரம் என்ற இலக்கினை அடைவதற்கான மாபெரும் முயற்சி' என்ற தலைப்பில் உரையாற்றினர்.

- இந்த இலக்கை அடைய, அடுத்த ஏழு முதல் எட்டு ஆண்டுகளுக்கு தமிழக மாநிலம் 18% வளர்ச்சியை அடைய வேண்டும்.
- இதுவரை எந்த நாடும் 18% வளர்ச்சியை அடைந்ததில்லை.
- சீனா கடந்த 40 ஆண்டுகளில் 10 முதல் 11% வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- மனித உழைப்பு அதிகம் தேவைப்படும் தொழில் துறைகளின் உலகளாவிய ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 40% என்ற நிலையில், இந்தியாவின் பங்கு 35% ஆகும்.
- இதில் சீனாவின் பங்கு 35% ஆகக் குறைந்தால், இந்தியா தனது வளர்ச்சிப் பங்கினை 12% ஆக முன்னேற்ற முடியும்.
- இந்த மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் குறைந்த செலவினத்திலான உற்பத்தி செயல் முறை, திறன் சாராத தொழிலாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.
- தமிழ்நாட்டின் கடன் அளவு அதிகமாக இருந்தாலும், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது அது பெரிதும் கவலைக்குரிய விவகாரம் அல்ல.

## தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு - முதல் நாள்




- தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு ஆனது சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.
- முந்தைய இரண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்புகள் ஆனது 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அப்போதைய அ.தி.மு.க ஆட்சியில் நடைபெற்றது.

- ❖ உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு ஆனது, பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு ஊக்கியாக செயல்படும்.
- ❖ இந்நிகழ்வு ஊக்கமளிக்கும் வகையில் வரவேற்பை பெற்றுள்ளதுடன் தமிழகத்திற்குப் பெருமையையும் அதிக முதலீட்டையும் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ இந்த நிகழ்வில் தமிழக அரசால் பல கொள்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- ❖ ஸ்ரீபெரும்புதூரில் அமைக்கப்பட்டுள்ள முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட சூரிய சக்தி உற்பத்தி ஆலையை முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- ❖ இந்த நிகழ்வு முழுவதும் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ❖ தூத்துக்குடியில் ஓர் ஆலையை அமைப்பதற்காக, வின்ஃபாஸ்ட் எனப்படும் வியட்நாம் நாட்டின் மின்சார வாகனத் தயாரிப்பு நிறுவனத்துடன் மாநில அரசு ஒப்பந்தம் மேற் கொண்டுள்ளது.
- ❖ டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ஆனது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாதனக் கவச மூடுறைகள் உற்பத்தி மற்றும் கைபேசி செயலி பாக ஒருங்குசேர்ப்பு அலகு ஒன்றை அமைப்பதற்காக 12,082 கோடி ரூபாய் அளவு முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளக எரிப்பு என்ஜின் (ICE) மற்றும் மின்சார வாகன பயணியர் பயன்பாட்டு மகிழுந்துகள் மற்றும் மின்சார வாகன மின் கலங்கள் தயாரிக்கும் ஓர் உற்பத்தி அலகினை அமைப்பதற்காக ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் ஆனது, 6,180 கோடி ரூபாய் கூடுதல் முதலீடுகளைச் செய்துள்ளது.
- ❖ இது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, "ஹைட்ரஜன் தொடர்பான புத்தாக்கம்" (ஹைட்ரஜன் சார்ந்த திட்டங்கள் மீது கவனம் செலுத்தும் பகுதி) தொடர்பாக ஒத்துழைப்பினை மேற்கொள்ள உள்ளது.
- ❖ குவால்காம் நிறுவனமானது அதன் வடிவமைப்பு மையத்திற்கான புதிய மையத்தினைச் சென்னையில் நிறுவ உள்ளதாக அறிவித்ததன் மூலம் அதன் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினை அறிவித்துள்ளது.
- ❖ ஆப்பிள் நிறுவனத்தின் விநியோக நிறுவனமான பெகாட்ரான், செங்கல்பட்டில் உள்ள கணினி மையம், தகவல் தொடர்பு மற்றும் நுகர்வோர் பயன்பாட்டு மின்னணு சாதன உற்பத்தி அலகினை நிறுவதற்காக 1,000 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ JSW எனர்ஜி நிறுவனமானது, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதன் விரிவாக்கத் திட்டங்களுக்காக சுமார் 10,000 கோடி ரூபாய் முதலீட்டினை மேற்கொள்ள உள்ளது.
- ❖ கோத்ரேஜ் நுகர்வோர் பயன்பாட்டு தயாரிப்புகள் லிமிடெட் நிறுவனம் ஆனது, சுமார் 515 கோடி ரூபாயும், TVS குழுமம் 5,000 கோடி ரூபாயும் முதலீடு செய்வதன் மூலம் சுமார் 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க உள்ளது.
- ❖ சென்னைக்கு அருகிலுள்ள கும்மிடிப்பூண்டியில் ஓர் ஆலையினை அமைப்பதற்காக மிட்சுபிஷி நிறுவனம் 200 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- ❖ AP மோல்லேர் மேயேர்ஸ்க் நிறுவனம் ஆனது, தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்து மற்றும் தளவாட தீர்வுகள் மற்றும் உலக திறன் சார் ஆதரவு வழங்கீட்டு மையங்களை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் ஆனது, அந்நிறுவனம் தமிழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் தொழில்துறைகளில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள உள்ளதாக உறுதி பூண்டுள்ளது.
- ஜியோ நிறுவனம் ஆனது தமிழ்நாட்டில் 35,000 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்ததன் மூலம், எண்ணிமப் புரட்சியின் பலன்களை மாநிலத்தின் ஒவ்வொரு நகரம் மற்றும் கிராமத்தில் 35 மில்லியன் சந்தாதாரர்களுக்கு கொண்டு சேர்த்துள்ளது.
- கோத்ரேஜ் நுகர்வோர் பயன்பாட்டுத் தயாரிப்புகள் லிமிடெட் என்ற நிறுவனம் ஆனது, செங்கல்பட்டு மையத்தினை "ஒரு வழிகாட்டும் தொழிற்சாலையாக" மேம்படுத்த விரும்புவதாக கூறுகிறது.
- இங்கு "நிலைத்தன்மை, பாதுகாப்பு மற்றும் தானியங்கு வாகன உற்பத்தி ஆகியவற்றில் சிறந்த நடைமுறைகள் உள்ளார்ந்த மற்றும் பாலினச் சமநிலையுடன் கூடிய பணியாளர் வளங்களுடன் மேற்கொள்ளப்படுகிறது".
- மகளிர் பிரிவில் இருந்து குறைந்தபட்சம் 50% ஊழியர்களையும், LGBTQI சமூகம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பிரிவிலிருந்து 5% ஊழியர்களையும் பணியமர்த்துவதற்கான அதன் உறுதிப்பாட்டின் அடிப்படையில் அரசாங்கம் ஊக்கத் திட்டங்களை வழங்கி உள்ளது.

## 2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு மூலம் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடுகள்




- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 6.64 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்துள்ளது.
- இது எதிர்பார்க்கப்பட்ட சுமார் 5 லட்சம் கோடி ரூபாயை விட அதிகமாகும் என்பதோடு, 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற முந்தைய உலக முதலீட்டாளர்கள் சந்திப்பில் ஈர்க்கப் பட்ட முதலீட்டு மதிப்பை விட இது இரண்டு மடங்கு அதிகமாகும்.

- இந்த முதலீடானது பல்வேறு தொழில்துறைகளில் சுமார் 27 லட்சம் அளவிற்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க உள்ள 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) மூலம் எட்டப் பட்டது.
- டாடா பவர் நிறுவனம் (70,800 கோடி ரூபாய்), அதானி குழுமம் (42,768 கோடி ரூபாய்), செம்ப்கார்ப் (36,238 கோடி ரூபாய்), லீப் கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் (17,400 கோடி ரூபாய்) மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (17,000 கோடி ரூபாய்) ஆகியவற்றால் சில பெரிய முதலீட்டு முன்மொழிதல்கள் மேற் கொள்ளப் பட்டன.
- தொழில் துறை வாரியான முதலீடுகள்,
  - தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மூலம் 3,79,809 கோடி ரூபாய் திரட்டப்பட்டது;
  - எரிசக்தி துறை மூலம் 1,35,157 கோடி ரூபாய்;
  - வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை மூலம் 62,939 கோடி ரூபாய் மற்றும்
  - தகவல் தொழில்நுட்பம் மற்றும் எண்ணிம சேவைகள் துறை மூலம் 22,130 கோடி ரூபாய்.
  - அதோடு, MSME துறை மூலம் 63,573 கோடி ரூபாய் முதலீடு ஈட்டப்பட்டுள்ளது.

## 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

- 54 மண்டலங்களுடன், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (SEZs) கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.
- இது மாநிலத்தின் ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.
- 2002 ஆம் ஆண்டில் ஒரு கொள்கையாக தொடங்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், 2005 ஆம் ஆண்டில் ஒரு சட்டமாக மாறியது.

## 2023 ஆம் ஆண்டில் பெண்களுக்கான சிறந்த இந்திய நகரம்

- 2023 ஆம் ஆண்டில், பணி புரியும் பெண்களுக்கான உள்ளடக்கம் மற்றும் சாதக நிலை ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்த இந்திய நகரமாக சென்னை மாறியுள்ளது.
- இந்த ஆய்வில் மதிப்பிடப்பட்ட இரண்டு பிரிவுகளிலும், தமிழ்நாடு நகரங்கள் முதல் இடத்தைப் பெற்றுள்ளதோடு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் பிரிவில் 49 நகரங்கள் மற்றும் ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட பிரிவில் 64 நகரங்களும் முன்னணி இடங்களைப் பெற்றுள்ளன.
- மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் பிரிவில் சென்னை முதலிடத்திலும், ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் பிரிவில் திருச்சிராப்பள்ளி முதலிடத்திலும் உள்ளது.
- கோயம்புத்தூர் (மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள்), திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், ஈரோடு, மற்றும் திருப்பூர் (ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள்) என மொத்தம் ஏழு நகரங்களும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.
- சென்னை மாநகரம், தனது சமூக உள்ளடக்க மதிப்பெண் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.

- ❖ அதன் தொழில்துறை உள்ளடக்க மதிப்பெண் விகிதம் ஆனது 1 இடம் சரிந்து இந்த அளவில் பெங்களூருக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது.

**CHENNAI TOPS AMONG MILLION+ POPULATION CITIES**

| Rank | City | State | City Inclusion Score |
|---|---|---|---|
| 1 | Chennai | Tamil Nadu | 48.42 |
| 2 | Bengaluru | Karnataka | 43.53 |
| 3 | Pune | Maharashtra | 43.5 |
| 4 | Mumbai | Maharashtra | 40.64 |
| 5 | Hyderabad | Telangana | 39.58 |
| 6 | Kolkata | West Bengal | 36.09 |
| 7 | Ahmedabad | Gujarat | 35.49 |
| 8 | Delhi | Delhi | 31.46 |
| 9 | Coimbatore | Tamil Nadu | 28.66 |
| 10 | Jaipur | Rajasthan | 24.32 |

**TIRUCHIRAPPALLI TOPS AMONG LESS THAN MILLION POPULATION CITIES**

| Rank | City | State | City Inclusion Score |
|---|---|---|---|
| 1 | Tiruchirappalli | Tamil Nadu | 40.39 |
| 2 | Vellore | Tamil Nadu | 38.22 |
| 3 | Kochi | Kerala | 37.62 |
| 4 | Thiruvananthapuram | Kerala | 37.46 |
| 5 | Shimla | Himachal Pradesh | 37.41 |
| 6 | Salem | Tamil Nadu | 36.69 |
| 7 | Erode | Tamil Nadu | 36.02 |
| 8 | Tiruppur | Tamil Nadu | 36.01 |
| 9 | Gurugram | Haryana | 35.02 |
| 10 | Puducherry | Puducherry | 34.41 |

## STEPS கணக்கெடுப்பு

- ❖ தொற்றாத நோய்களின் (NCD) ஆபத்து காரணிகளின் பரவலை மதிப்பிடுவதற்கான தமிழ்நாடு STEPS ஆய்வு-2 தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இது NCD ஆபத்துக் காரணிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கைகளை உருவாக்க மாநில அரசிற்கு உதவும்.
- ❖ 2020 ஆம் ஆண்டு STEPS கணக்கெடுப்பு ஆனது, தமிழ்நாட்டில் சிகிச்சை பெறும் நோயாளிகளிடையே உயர் இரத்த அழுத்த பாதிப்பில் 33.9 சதவீதமும், நீரிழிவு நோயில் 17.6 சதவீத சமூக அளவிலானப் பாதிப்பு மற்றும் உயர் இரத்த அழுத்தம் (7.3%) மற்றும் நீரிழிவு நோய் (10.8%) ஆகியவற்றிற்கான கட்டுப்பாடு விகிதத்தினையும் பதிவு செய்து உள்ளது.
- ❖ இதற்கு முந்தைய மதிப்பீட்டில் நீரிழிவு நோய்க்கான கட்டுப்பாட்டு விகிதம் 10.8% ஆக கண்டறியப்பட்டது.
- ❖ நீரிழிவு நோயின் கட்டுப்பாட்டு விகிதத்தை 10.8 சதவீதத்திலிருந்து 16.8% ஆகவும், உயர் இரத்த அழுத்தத்தின் கட்டுப்பாட்டு விகிதத்தினை 7.3 சதவீதத்திலிருந்து 10.3% ஆகவும் அதிகரிப்பதே அரசின் இலக்காக இருந்தது.

## 10வது தமிழ் உலகப் பொருளாதார மாநாடு


- ❖ 10வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலகப் பொருளாதார உச்சி மாநாடு சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது.
- ❖ இந்த உச்சி மாநாடு ஆனது, பல்வேறு நாடுகளில் செழிப்பான வணிகங்களைச் மேற் கொள்ளும் தொழிலதிபர்கள் தங்கள் தொழில்துறை அறிவுப் புலனையும் நுட்பத்தினையும் ஒரே தளத்தின் கீழ் பகிர்ந்து கொள்ள வழிவகுக்கும் தளத்தை வழங்குகிறது.
- ❖ இந்த உச்சி மாநாடு ஆனது, திருவள்ளுவரின் தொன்மையான கலாச்சாரம் மற்றும் செழுமையான இலக்கியங்களை உலகிற்கு எடுத்துரைக்க உதவியது.

## புதிய பல்லுயிர்ப்பெருக்கப் பாரம்பரிய தளங்கள்

- மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டிக்குப் பிறகு, தமிழகத்தில் மேலும் நான்கு இடங்கள் இந்த ஆண்டு பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரிய தளங்களாக அறிவிக்கப்படலாம்.
- தற்போது, காசம்பட்டி (திண்டுக்கல்), செந்திரக்கிளை புனித தோட்டங்கள் (கடலூர்), இடையப்பட்டி (மதுரை) மற்றும் குரியனப்பள்ளி வனத் தொகுதி (கிருஷ்ணகிரி) ஆகியவற்றை பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரிய தளங்களாக (BHS) அங்கீகரித்து அறிவிக்கும் முன்மொழிதலை மாநில அரசு முன் வைத்துள்ளது.
- அரிட்டாப்பட்டி பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரிய தளம் (மதுரை மாவட்டம்) ஆனது, 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழகத்தின் முதல் பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டது.



## தமிழ்நாடு கடலோரப் பகுதிகள் மறுசீரமைப்பு பணி




- தமிழ்நாடு கடலோரப் பகுதிகள் மறுசீரமைப்புப் பணியை அடுத்த ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்துவதற்கு மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- உலக வங்கியினால் நிதியளிக்கப்படும் இந்தத் திட்டத்திற்கான செலவினம் சுமார் 1,675 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.


- இது கடலோரங்களில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கத்தை வலுப்படுத்துதல், நிலையான நடவடிக்கை வழியான சுற்றுலா மூலம் கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கடல் சூழல்களில் காணப்படும் நெகிழிக் கழிவுகளை குறைத்தல் போன்றவற்றை உள்ளடக்கியது.
- இந்தப் பணியானது முக்கிய கவனம் செலுத்த வேண்டிய நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது:
  - கடலோரங்களில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்துதல்;
  - கடலோரப் பாதுகாப்பு;
  - நீலக் கொடி அங்கீகாரம் பெற்ற கடற்கரைகள் மற்றும் நிலையான நடவடிக்கை வழியான சுற்றுலா வசதியை உருவாக்குவதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்; மற்றும்
  - மாசு குறைப்பு.
- பின்வரும் பணிகளுக்காக தமிழ்நாடு நீல (கடல் சார்) கரிம முகமை என்ற சிறப்பு நோக்க முகமையானது நிறுவப்பட உள்ளது:
  - சதுப்புநிலங்கள் மற்றும் கடற்புல் ஆகியவற்றைப் புத்துயிர் பெறச் செய்வதற்கான நடவடிக்கையினை கண்காணித்தல்;
  - கடல் அலை அரிப்பினைக் கட்டுப்படுத்துதல்; மன்னார் வளைகுடா சுற்றுச்சூழல் அமைப்பின் கரியாச்சல்லி தீவுகளில் உள்ள பவளப்பாறைகளை புத்துயிர் பெறச் செய்தல் மற்றும்
  - கடலோர மேலாண்மை அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- இந்தப் பணியானது முன்னதாக தொடங்கப்பட்ட பின்வரும் திட்டங்களையும் உள்ளடக்கியது
  - செங்கல்பட்டில் உள்ள கடம்பூரில் பல்லுயிர் மற்றும் வளங்காப்புப் பூங்காவினை அமைத்தல்;
  - நாகப்பட்டினம் மற்றும் சென்னையில் கடல் ஆமை வளங்காப்பு மையங்கள்; மற்றும்
  - தஞ்சாவூர் மனோரா எனுமிடத்தில் உள்ள சர்வதேச துகோங் வளங்காப்பு மையம்.

## உலகப் புலம்பெயர் தமிழர் தினம்

- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 12 ஆம் தேதியன்று உலகப் புலம்பெயர் தமிழர் தினமாகக் கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 58 இளைஞர்கள் 'நமது பூர்வீக இடத்தினை அடைதல்' என்ற திட்டத்தின் கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுலா மேற்கொண்டது சிறப்பு வாய்ந்தது ஆகும்.
- இந்த விழாவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த 13 பேருக்கு முதல்வர் அவர்களே விருதுகளை வழங்கினார்.
- தமிழ்நாடு அரசானது முன்னதாக, புலம்பெயர்ந்த (வெளிநாடு வாழ்) தமிழர்கள் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையினை உருவாக்கியது.

❖ வெளிநாடுகளில் உள்ள தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர்களுக்கு சட்ட நெருக்கடிகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இது இலவச சட்ட உதவிகளை வழங்கி வருவதோடு, உடல் நலக் குறைபாடுகள் அல்லது மோதல்கள் அல்லது போர் சூழ்நிலைகளில் சிக்கித் தவிக்கும் தமிழர்களைத் தாயகம் திரும்பச் செய்வதற்கும் உதவுகிறது.

## TEALS திட்டம்




❖ தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித் துறையானது, தொழில்நுட்பக் கல்வி மற்றும் கற்றல் ஆதரவுத் (TEALS) திட்டத்தினை மேலும் சில பள்ளிகளுக்கு விரிவுபடுத்துவதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.

❖ 10 அரசுப் பள்ளிகள், இரண்டு அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் இரண்டு தனியார் பள்ளிகள் உள்ளிட்ட மூன்று மாவட்டங்களில் உள்ள 14 பள்ளிகளில் இந்தத் திட்டம் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டது.

❖ தற்போது இத்திட்டம் ஆனது, 100 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது.

❖ மாணவர்களுக்கு தற்போது HTML, C++, Python, விளையாட்டு நிரல் உருவாக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்றவற்றைக் கற்பிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ தற்போது, மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதற்காக ஆசிரியர்களுக்கு அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இதற்கான பாடத்திட்டத்தை மைக்ரோசாப்ட் நிறுவனம் வடிவமைத்துள்ளதோடு, அவை ஆசிரியர்களுக்கு இதற்கான இயங்கலை வழியான வகுப்புகளை நடத்தவும் உள்ளது.

## தமிழ்நாட்டில் யானைகளுக்கான மீட்பு, சிகிச்சையளிப்பு மற்றும் மறுவாழ்வு மையம்



- கோவை மாவட்டத்தின் சிறுமுகை அருகே அமைந்த பெத்திகுட்டையில் வனவிலங்குகளுக்கான மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையத்தினை அமைப்பதற்காக 19.5 கோடி ரூபாய் நிதி அளிக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- 53 ஹெக்டேர் நிலப்பரப்பில் இந்த அதிநவீன மையம் அமைக்கப்பட உள்ளது.
- இது பயிற்சி பெற்ற நிபுணர்களுடன், நவீன அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் நோய்க் கண்டறியும் கருவிகளைக் கொண்டிருக்கும்.
- மறுவாழ்வு மண்டலம் என்பது நான்கு மண்டலங்களில் மிகப் பெரிய அளவில் ஆனதாகும் என்பதோடு அங்கு தற்காலிகமாக உடல்நலம் பாதிக்கப்பட்ட விலங்குகள் அனைத்தும் வைக்கப்பட்டு அதற்கான மறுவாழ்வு சிகிச்சைகளும் அளிக்கப்படும்.
- இது சிகிச்சை அளிக்கப்பட உள்ள அனைத்து முக்கிய இனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான ஐந்து பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

## ஆரோக்கியம் பரமம் தானம்




- இந்திய அரசின் உத்தரவிற்கிணங்க 'ஆரோக்யம் பரமம் தானம்' என்ற முழக்கத்தினை தக்க வைத்து, மறுபெயரிடுதல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

- மாநிலத்தில் உள்ள அனைத்து AB-HWC மையங்களும் தற்போது ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் 'மருத்துவ நல்வாழ்வு நிலையம்' என மறு பெயரிடப் பட உள்ளது.
- இது ஆங்கிலத்தில் 'ஆரோக்யம் பரமம் தானம்' என்றும் தமிழில் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றும் குறிக்கப்படும்.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஆனது, ஆயுஷ்மான் பாரத்-சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய நல மையங்களை (AB-HWC) 'ஆயுஷ்மான் ஆரோக்ய மந்திர்' என ஆங்கிலம் மற்றும் இந்தி மொழியில் 'ஆரோக்யம் பரமம் தானம்' என்ற முழக்கத்துடன் மறுபெயரிடுமாறு மாநில அரசுகளைக் கோரியுள்ளது.

## தமிழ்நாடு அரசு விருதுகள் 2023

- தமிழ் மொழி மற்றும் சமூக நீதிக்கானப் பங்களிப்புக்காக என்று ஒன்பது நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் விருது வழங்கினார்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் நிறுவப்பட்ட பின்வரும் விருதுகள் இதில் அடங்கும்:
  - 2024 ஆம் ஆண்டிற்கான அய்யன் திருவள்ளுவர் விருது - தவத்திரு பால முருகனடிமை சுவாமிகள்;
  - 'பத்தமடை' பரமசிவம் - பேரறிஞர் அண்ணா விருது (2023);
  - பெருந்தலைவர் காமராஜர் விருது- U.பலராமன் (2023);
  - பழனி பாரதி - மகாகவி பாரதியார் விருது (2023);
  - பாவேந்தர் பாரதிதாசன் விருது- M. முத்தரசு(2023);
  - தமிழ்த் தென்றல் திரு.வி.க விருது S. ஜெயசீலா ஸ்டீபன் (2023); மற்றும்
  - R. கருணாநிதிக்கு முத்தமிழ் காவலர் K.A.P. விஸ்வநாதம் விருது (2023).
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையால் ஏற்படுத்தப்பட்ட தந்தை பெரியார் விருது சுப. வீரபாண்டியன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நிறுவப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான அம்பேத்கர் விருது ஆனது, தமிழ்நாடு பழங்குடியினர் சங்கத்தைச் சேர்ந்த P. சண்முகம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.


## நெல் கொள்முதல் இலக்கு

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (TNCSC) ஆனது, இந்த முறை 20 லட்சம் டன்களுக்கு மேல் பயிர்களைக் கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது.
- ஜனவரி 11 ஆம் தேதி வரை, செப்டம்பர் மாதத்தில் கொள்முதல் ஆண்டு தொடங்கியதில் இருந்து இந்தக் கழகம் சுமார் 5.46 லட்சம் டன்களை கொள்முதல் செய்துள்ளது.
- இந்தக் கழகம் ஆனது படிப்படியாக 3,000 நேரடிக் கொள்முதல் மையங்களை (DPCs) திறக்கத் திட்டமிட்டுள்ளது.

- 2022-23 ஆம் ஆண்டில், சுமார் 5.22 லட்சம் விவசாயிகளிடம் இருந்து 44.22 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டது.
- கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் மொத்த அளவில், டெல்டா பிராந்தியத்தின் பங்கு மூன்றில் இரண்டு பங்கு ஆகும்.





## ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள உள்நாட்டு மர இனங்கள்




- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தின் மையப் பகுதியில் உள்ள உலாண்டி வனச் சரகத்தில் உள்ள அயல்நாட்டு ஆக்கிரமிப்பு இனங்களை அகற்றும் பணியை தமிழ்நாடு வனத் துறை மேற்கொண்டுள்ளது.
- மேலும் அது உள்நாட்டு மரக்கன்றுகளை நடவும் திட்டமிட்டுள்ளது.

- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன் தரமிழந்த காடுகளின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் செயல்படுத்தப் படுகின்றன.
- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி 457 கோடி ரூபாய் கடனாக வழங்கிய இத்திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்தாண்டுகளில் மாநிலத்தில் உள்ள 33,290 ஹெக்டேர் தரமிழந்த வன நிலங்களை மீட்டெடுப்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தின் அனைத்து வனச் சரகங்களிலும் மொத்தம் 270 ஹெக்டேர் நிலம் மறுசீரமைக்கப்பட உள்ளது.

## 'Beyond Basics' கணக்கெடுப்பு - பெரம்பலூர்




- 2023 ஆம் ஆண்டு வருடாந்திர கல்வி நிலை அறிக்கையின் 'Beyond Basics' கணக்கெடுப்பு ஆனது, 26 மாநிலங்களில் உள்ள 28 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- 14 முதல் 18 வயதுக்குட்பட்ட 97.2% இளையோர்கள் ஏதேனும் ஒரு முறைசார் கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளதாக கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டுள்ளது.
- அதில் 70.3% இளையோர்கள் அரசு நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர்.
- தமிழ்நாடு மாநிலத்தில் கணக்கெடுக்கப்பட்ட பதின்ம வயதினரில் நான்கில் ஒரு பகுதியினர், இரண்டாம் வகுப்பு நிலையிலான உரையைப் படிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்பதை இந்த அறிக்கைக் காட்டுகிறது.
- அனைத்து மாவட்ட சராசரியுடன் பெரம்பலூர் மாவட்டத்தில் 25% பதின்ம வயதினரால் இரண்டாம் வகுப்பு நிலையிலான உரையைப் படிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்று குறிப்பிடுகிறது.
- 2.8% இளையோர்கள் எந்த கல்வி நிறுவனத்திலும் சேரவில்லை என்பதோடு,மேலும் இது 14 முதல் 16 வயதிற்குட்பட்ட குழுவினருடன் ஒப்பிடும் போது 17 முதல் 18 வயதிற்கு உட்பட்ட குழுவினர் மத்தியில் அதிகமாக இருப்பது கண்டறியப் பட்டது.
- 17 முதல் 18 வயதிற்குட்பட்ட பிரிவில், 12.4% ஆண்கள் எந்தவொரு முறைசார் கல்வி நிறுவனங்களிலும் சேரவில்லை என்ற நிலையில் இது பெண்களில் 4% ஆக உள்ளது.
- கூடுதலாக, 16.4% பேர் சில வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

- பெரம்பலூரில் 14 முதல் 18 வயதுடைய அனைத்து பதின்ம வயதினரிடையே, 52.1% பேர் குறைந்த பட்சம் வகுத்தல் கணக்கினைச் செய்யக் கூடிய நிலையிலும், 78.3% பேர் குறைந்த பட்சம் ஆங்கில வாக்கியங்களைப் படிக்கக் கூடியவர்களாக உள்ளனர்.
- டிஜிட்டல் சார்ந்த செயல்களைச் செய்யக்கூடிய நபர்கள் எண்ணிக்கை 63% என்ற என்ற அளவில் தேசிய சராசரி உள்ள அதே வேளையில், தமிழ்நாடு 68.3 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

## வரலாற்றுக்கு முந்தைய காலப் பாறை ஓவியங்கள்

- தொல்லியல் துறையானது, விழுப்புரத்தில் உள்ள ஆலம்பாடி, மேல்வாலை, செத்தவரை கிராமங்களில் உள்ள வரலாற்றுக்கு முந்தைய காலப் பாறை ஓவியங்கள் கொண்ட மலைகள் முழுவதையும் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக அறிவித்துள்ளது.
- விழுப்புரத்தில் இருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ள மேல்வாலை எனும் கிராமம், வரலாற்றுக்கு முந்தைய பாறைக் கலையின் பொக்கிஷம் ஆகும்.
- ரத்தப்பாறை என்ற சொல் செங்கற்காவி கொண்டு வரையப்பட்ட பாறைக் கலையை ஒத்ததாக உள்ளது.
- மேல்வாலையில் உள்ள ஓவியங்கள் கி.மு. 3000 ஆண்டிற்கு முந்தையவையாகும்.
- இதில் உள்ள ஓவியங்கள் மனித உருவங்கள், விலங்குகள் மற்றும் குறியீடுகள் ஆகும்.
- மேல்வாலை மற்றும் செத்தவரை தளங்கள் முறையே 4.26 மற்றும் 110.79 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ளது.
- ஆலம்பாடியில், செத்தவரையில் காணப்படும் செங்கற்காவி மற்றும் வெண்கற்காவி நிறத்தில் உள்ள வரலாற்றுக்கு முந்தைய காலத்தியப் பாறை ஓவியங்களின் கலவை கொண்ட ஓவியங்கள் உள்ளன.




## தமிழ்நாட்டில் இருந்து இலங்கை கடவுச்சீட்டு

- தமிழ்நாட்டில் வசிக்கும் 200 இலங்கை புலம்பெயர் நபர்கள் கொண்ட குழு ஒன்று, சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தில் இலங்கை கடவுச்சீட்டுகளைப் பெற்றுள்ளது.
- இந்தியாவில் புலம்பெயர் சமூகத்தினருக்கு இவ்வாறு அளிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.

- முன்னதாக, தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கை புலம்பெயர் மக்கள் வேறொரு மூன்றாவது நாட்டிற்குச் செல்ல விரும்பினால், அவர்கள் முதலில் புலம்பெயர் மக்கள் திருப்பி அனுப்பும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடவுச்சீட்டில் இலங்கைக்குச் சென்று, பின்னர் அங்கு இலங்கை கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- இந்தப் புதிய முன்னெடுப்பின் கீழ், கடவுச் சீட்டை பெற அவர்கள் இலங்கைக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை, அதற்கு மாறாக இந்தியாவில் உள்ள தூதரகத் திட்டங்கள் மூலம் கடவுச் சீட்டிற்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம்.
- பிறகு அவர்கள் இந்தியாவில் இருந்து வெளிநாட்டிற்குச் செல்லலாம்.

## 2024 ஆம் ஆண்டில் தமிழக வாக்காளர்கள்




- தமிழ்நாட்டின் வாக்காளர்கள் எண்ணிக்கையானது சுமார் ஏழு லட்சம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.
- தற்போது தமிழ்நாட்டின் வாக்காளர்கள் எண்ணிக்கையானது, 3.14 கோடி பெண்கள், 3.03 கோடி ஆண்கள் மற்றும் 8,200 மூன்றாம் பாலினத்தவர் உட்பட 6.18 கோடியாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் தேதியன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டின் வாக்காளர்கள் எண்ணிக்கை 6.11 கோடியாக இருந்தது.
- அன்றிலிருந்து பட்டியல் திருத்த காலத்தில், 13,61,888 புதிய பெயர்கள் சேர்க்கப்பட்டது, அதே நேரத்தில் புலம் பெயர்வு, இறப்பு மற்றும் போலி உள்ளீடுகள் காரணமாக 6,02,737 பெயர்கள் நீக்கப் பட்டன.
- 3,23,997 வாக்காளர்களின் உள்ளீடுகளில் திருத்தம் செய்யப்பட்டது.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழிங்க நல்லூர் சட்டமன்றத் தொகுதி 6,60,419 என்ற எண்ணிக்கையுடன் அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது.
- நாகப் பட்டினம் மாவட்டத்தில் உள்ள கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி 1,72,419 என்ற எண்ணிக்கையுடன் குறைந்த வாக்காளர்களைக் கொண்டுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி 4,62,612 என்ற எண்ணிக்கையுடன் அதிக வாக்காளர்களைக் கொண்ட இரண்டாவது தொகுதியாக உள்ளது.
- சென்னை மாவட்டத்தில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி 1,72,624 என்ற அளவில் வாக்காளர்களைக் கொண்டுள்ளது.

## மருது சகோதரர்களுக்கு சிலை


- ஆந்திரப் பிரதேசத்தின் சித்தூர் மாநகராட்சியில் கங்கினேனி செருவு ஏரிப் பகுதியில் "மருது பாண்டியர் சகோதரர்கள்" சிலைகளை நிறுவ பூமி பூஜை செய்யப்பட்டது.
- 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பெரிய மருது மற்றும் சின்ன மருது எனப்படும் மருது சகோதரர்கள் சிவகங்கை மண்டலத்தினை ஆட்சி செய்தனர்.
- மருது சகோதரர்கள், பிரித்தானிய அரசிற்கு எதிராக, தமிழ்நாட்டிலிருந்து மேற்கு வங்காளம் வரையிலான கடலோரப் பகுதிகளைச் சேர்ந்த பிரித்தானிய எதிர்ப்புப் படைகளை ஒன்றிணைக்கும் முயற்சியைத் தொடங்கி, சுதந்திரப் போராட்டத்தினை நடத்துவதற்காக ஆயுதப் படையை எழுப்பினர்.
- தொடர் போராட்டங்களுக்குப் பிறகு, மருது சகோதரர்கள் 1801 ஆம் ஆண்டில் சிறை பிடிக்கப் பட்டு சிவகங்கை அருகே ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர்.

## தமிழ்நாடு பெண்களுக்கான கொள்கை




- தமிழ்நாடு அமைச்சரவையானது, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியிடப் பட்ட பெண்களுக்கான கொள்கை வரைவிற்கு ஒப்புதல் அளித்தது.
- இக்கொள்கையானது கல்வி, பொருளாதார சுதந்திரம் மற்றும் அதிகாரப் பகிர்வு மூலம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் பெண்களின் முழுமையான மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்தக் கொள்கையை செயல்படுத்துவதைக் கண்காணிக்கவும், பாகுபாடுகள் தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அதனைத் தீர்க்கவும் தலைமைச் செயலாளர்கள் தலைமையில் மாநில அளவிலான குழுவும், ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட அளவிலான குழுக்களும் அமைக்கப்படும்.
- சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையும் இந்தக் கொள்கையின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கும்.
- இந்த தேசிய அளவிலான கொள்கையானது 2001 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

## தமிழ்நாட்டில் சடல எலும்புகள் தானம்




- சடல எலும்பு தானம் ஆனது தமிழகத்தில் இன்றும் குறைவான அளவே மேற்கொள்ளப் படுகிறது.
- மக்கள் மத்தியில் சடல உறுப்பு தானம் பற்றிய ஒட்டு மொத்தப் புரிதல் பெருமளவில் மேம்பட்டிருந்தாலும், எலும்பு தானத்தில் இத்தகைய நிலை இல்லை.
- 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் 248 எலும்பு தானங்கள் பதிவாகியுள்ளன.
- முக்கிய எலும்பு வங்கிகளானது, இந்த காலகட்டத்தில் குறைந்த எண்ணிக்கையிலான எலும்பு தானங்களேப் பதிவாகியுள்ளன.
- அடையாறு புற்றுநோய் நிறுவனத்தில் (WIA) உள்ள எலும்பு வங்கி ஆனது, 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும், கோயம்புத்தூரில் உள்ள கங்கா மருத்துவமனையின் எலும்பு வங்கியில் 25க்கும் குறைவான சடல எலும்பு தானங்களேப் பதிவாகின்றன.

## கிரந்தம் கல்வெட்டுகள் – காங்கேயம்



- 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'கிரந்தம்' மற்றும் 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் மொழிக் கல்வெட்டுகள் ஆகியவை காங்கேயம் அருகே அமைந்த பழஞ்சேர்வழி கிராமத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

- இது வட இந்திய மொழியை எழுதுவதற்காக தமிழர்களால் உருவாக்கப்பட்ட 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'கிரந்த வகை' எழுத்து கல்வெட்டுகளைக் கொண்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட சொற்கள், இந்த 'மந்திரக்' கல்லை முற்காலத்தில் மக்கள் நோய்களைக் குணப்படுத்துவதற்காக வழிபட்டனர் என்பதைக் குறிக்கிறது.
- விஷ்ணு கோவிலில் நந்தா (நிரந்தர) விளக்கு ஏற்றுவதற்கு நான்கு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டதை 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் கல்வெட்டு விவரிக்கிறது.
- இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், ஒரு குயவர் வேயும் ஒவ்வொரு சக்கரத்திற்கும் நான்கு ரூபாய் வரியாக விதிக்கப்படும்.
- மேலும் சந்திரன் இருக்கும் வரை விளக்கு ஏற்றுவது தொடரப்படும் என இந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## கழுகுமலை குடைவரைக் கோவில்கள்




- கழுகுமலையில் உள்ள புகழ்பெற்ற வெட்டுவான் கோயில் மற்றும் சமணர் சரணாலயப் பகுதியினை உள்ளடக்கிய முழு மலைப்பகுதியும் தொல்லியல் துறையின் கீழ் 'பாதுகாக்கப்பட்ட தொல்லியல் நினைவுச் சின்னமாக' அறிவிக்கப்பட உள்ளது.
- இது 'தென்னிந்தியாவின் எல்லோரா' என்று அழைக்கப் படுகிறது.
- 'சிற்பிகளின் சொர்க்கம்' என்று அழைக்கப்படும் தூத்துக்குடியின் வெட்டுவான் கோயில், 8 மற்றும் 9 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் கட்டமைக்கப்பட்ட பாண்டியர் காலத்தின் முழுமையடையாத இந்து குகைக் கோயிலாகும்.
- இந்தப் பாறை வேலைப்பாடுகள் பாண்டியர் காலத்தின் தெற்கத்தியக் கோவில் பாணியைப் பிரதிபலிக்கின்றன.
- இந்தக் குடைவரைக் கோயிலில் 122 சிற்பங்கள் உள்ளன.
- கழுகுமலை சமணப் பாறைகள் 8 அல்லது 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, பாறையில் செதுக்கப்பட்ட 'தீர்த்தங்கரர்களின்' உருவங்களுடன் கூடிய பாறை சிற்பங்களாகும்.

## இதயம் காப்போம் முன்னெடுப்பு

- தமிழ்நாட்டின் இதயம் காப்போம் முன்னெடுப்பு ஆனது, ஆறு மாதங்களை நிறைவு செய்து 5,000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பயன் அளித்துள்ளது.


- இது மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இதய சுகாதாரநலத் திட்டமாகும்.
- மாரடைப்பு காரணமாக ஏற்படும் மரணங்களைத் தடுப்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவசரகாலப் பயன்பாட்டுத் தொகுப்பு மருந்துகள் கிடைக்கப் பெற்றன.
- 5,827 நபர்களில் 5,145 பேர், அறிகுறிகள் / சந்தேகத்திற்கிடமான மாரடைப்பு நோய்களுடன் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (PHCs) வருகை தந்துள்ளனர்.
- சுகாதார துணை மையங்களுக்குச் சிகிச்சைக்காகச் சென்ற 544 நோயாளிகளில் 386 பேர் அவசரகாலப் பயன்பாட்டுத் தொகுப்பு மருந்துகளைப் பெற்றுள்ளனர்.
- இத்திட்டம் ஆனது 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கப்பட்டது.




# தேசியச் செய்திகள்

## PM-KISAN திட்டத்தின் பயனாளிகள்

- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூலை மாதங்களில் 10.47 கோடியாக இருந்த PM-KISAN திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கையானது, சுமார் 20 சதவீதம் குறைந்து 8.12 கோடியாகக் குறைந்துள்ளது.
- "நிறைவு நிலை இயக்கத்தின்" கீழ் அரசாங்கம் 34 லட்சம் விவசாயிகளை மீண்டும் சேர்த்துள்ளது.
- இந்த 34 லட்சம் பேரில், உத்தரப் பிரதேச மாநிலம் அதிகபட்சமாக 8.50 லட்சம் என்ற பங்கினைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் 2.39 லட்சம், மணிப்பூர் 2.27 லட்சம், ஜார்க்கண்ட் 2.2 லட்சம், மகாராஷ்டிரா 1.89 லட்சம் என்ற பங்கினைக் கொண்டுள்ளன.




## ஆயுஷ்மான் பாரத் யோஜனாவில் பெண்கள்

- வழங்கப்பட்ட மொத்த ஆயுஷ்மான் அட்டைகளில் தோராயமாக 49% பேர் மற்றும் அங்கீகரிக்கப் பட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப் படுபவர்களில் சுமார் 48% பேர் பெண்கள் ஆவர்.
- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி – ஜன் ஆரோக்கிய யோஜனாவின் (AB PM-JAY) கீழ் ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப்படுகின்றன.
- தற்போது அரசாங்க புள்ளி விபரங்களின்படி, 12 கோடி குடும்பங்களைச் சேர்ந்த 55 கோடி தனிநபர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைந்துள்ளனர்.
- இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து தோராயமாக 28.45 கோடி ஆயுஷ்மான் அட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- அதில், 2023 ஆம் ஆண்டில் தோராயமாக சுமார் 9.38 கோடி ஆயுஷ்மான் அட்டைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

## இந்தியாவில் லிச்சி சாகுபடி

- லிச்சிப் பழம் (விழுதிப் பழம்) தற்போது 19 இந்திய மாநிலங்களில் பயிரிடப்படுகிறது.
- இந்த இனிப்பு சுவை பழச்சாறு மிக்க பழம் ஆனது முன்னதாக பீகாரில் உள்ள முசாபர்பூர் நகரில் மட்டுமே விளைவிக்கப் பட்டது.
- இந்தப் பழம் முக்கியமாக உத்தரக்காண்ட், பீகார், மேற்கு வங்காளம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் அமைந்த இமயமலை அடிவாரப் பகுதிகளில் வளர்க்கப் படுகிறது.
- பீகாரில் மட்டும் 32,000 ஹெக்டேருக்கு மேலான பரப்பளவில் லிச்சி சாகுபடி செய்யப் படுகின்றது.
- இது இந்தியாவின் லிச்சி உற்பத்தியில் சுமார் 40 சதவிகிதம் ஆகும்.
- பீகாரைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் (மொத்தத்தில் 12 சதவீதம்) மற்றும் ஜார்க்கண்ட் (10 சதவீதம்) ஆகியவை பங்கினை கொண்டுள்ளன.

- பீகாரின் முசாபர்பூர் நகரம் அதன் அபரிதமான லிச்சி பழங்களின் உற்பத்தி காரணமாக இந்தியாவின் இனிப்பு நகரம் என்று அழைக்கப் படுகிறது.
- முசாபர்பூர் நகரம் இந்தியாவில் லிச்சி பழங்களின் உற்பத்தியில் ஒரு முன்னணி நகரமாகும்.




## IRDAI வருடாந்திர அறிக்கை 2022-23




- இந்தியாவில் 2021-22 ஆம் ஆண்டில் 34.7 சதவீதமாக இருந்த பெண்களுக்கு வழங்கப் படும் ஆயுள் காப்பீட்டுகளின் பங்கு 2022-23 ஆம் ஆண்டில் 34.2 சதவீதமாக குறைந்து உள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில், பெண்களுக்கு வழங்கப்பட்ட ஆயுள் காப்பீட்டுகளின் எண்ணிக்கையானது 97.38 லட்சத்தை எட்டியது.
- இதே காலக் கட்டத்தில் மொத்தம் 2.84 கோடி காப்பீடுகள் விற்பனையாகியுள்ளன.
- தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் 30.13 சதவீதப் பங்குடன் ஒப்பிடும் போது, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினால் பெண்களுக்கு வழங்கப்படும் காப்பீடுகளின் பங்கு ஆனது 35.81% என்ற விகிதத்தில் அதிகமாக உள்ளது.
- பெண்களுக்கு வழங்கப்படும் ஆயுள் காப்பீடுகளின் பங்கின் அடிப்படையில் கர்நாடகா (44.23 சதவீதம்), கேரளா (43.96 சதவீதம்), மிசோரம் (42.97 சதவீதம்), சிக்கிம் (42.6 சதவீதம்), மற்றும் மேகாலயா (41.81 சதவீதம்) ஆகியவை முன்னணியில் உள்ளன.
- லடாக் (23.1 சதவீதம்), ஹரியானா (27.16 சதவீதம்), ஜம்மு & காஷ்மீர் (28.07 சதவீதம்), உத்தரப் பிரதேசம் (29.53 சதவீதம்), மற்றும் குஜராத் (29.59 சதவீதம்) ஆகியவை குறைவான சதவீதங்களைக் கொண்ட மாநிலங்களாகும்.


## NTPS – ஒரு நாடு ஒரு அனுமதிச் சீட்டு

- சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது, “ஒரு நாடு ஒரு அனுமதிச் சீட்டு” என்ற வகையிலான தேசிய சரக்குப் போக்குவரத்து அனுமதி அமைப்பை (NTPS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது நாடு முழுவதும் மரம், மூங்கில் மற்றும் இதர வனப் பொருட்களின் தடையற்ற போக்குவரத்தை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது அந்தந்த மாநிலங்களின் போக்குவரத்து விதிகளின் அடிப்படையில் மாநில அரசுகளால் சரக்குப் போக்குவரத்து அனுமதிகள் வழங்கப் படுகின்றன.
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்கென சொந்த விதிமுறைகள் இருப்பதால், ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனி போக்குவரத்து அனுமதிச் சீட்டை ஒருவர் பெற வேண்டும்.
- இந்த முழு செயல்முறையும் மிகவும் நேர விரயம் ஏற்படுத்தக் கூடியது என்பதால் மரம் மற்றும் வனப் பொருட்களை கொண்டு செல்வதில் தடைகள் ஏற்படுகின்றன.

## பாரத் தயாரிப்பு பெயரில் அரிசி விற்பனை

- இந்திய உணவுக் கழகத்தின் அரிசியை ‘பாரத்’ என்ற தயாரிப்பு பெயரின் கீழ் விற்பனை செய்வதற்கான திட்டத்தை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.
- ‘பாரத் அரிசியை’ சில்லறை விற்பனையில் விற்க முன்மொழிதல் மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில் அதற்கான விலை இன்னும் முடிவு செய்யப்படவில்லை.
- திறந்தநிலை சந்தை விற்பனை திட்டத்தின் கீழ், இந்திய உணவுக் கழகமானது (FCI) ஒரு கிலோவுக்கு 29 ரூபாய் என்ற குறைந்த விலையில் தரமான அரிசியை வழங்குகிறது.
- அரசாங்கம் ஆனது, ஏற்கனவே கோதுமை மாவு (ஆட்டா) மற்றும் பருப்பு வகைகளை பாரத் என்ற தயாரிப்பு பெயரின் கீழ் விற்பனை செய்து வருகிறது.
- அரிசி விலையின் பணவீக்கம் ஆனது ஆண்டிற்கு 13% ஆக உள்ளது.

## கடற்படைத் தலைவர்களுக்கான புதிய தோள்பட்டை குறியீடுகள்




- கடற்படையானது, எண்கோண வடிவுடன் கூடிய தோள்பட்டை குறியீடுகளின் புதிய வடிவமைப்பை வெளியிட்டுள்ளது.

- இது சத்ரபதி சிவாஜியின் ராஜமுத்திரையின் வடிவமைப்பில் இருந்து ஈர்க்கப்பட்ட, கடற்படைக் கொடியிலிருந்த வடிவினைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது.
- மேலும், கடற்படை ஆனது தற்போது இந்திய மரபுகளுக்கு ஏற்ப அதன் அணிகளுக்குப் பெயரிட உள்ளது.

## அம்ரித் பாரத் இரயில்

- அம்ரித் பாரத் என்பது சாமானிய மக்களின் வசதி மற்றும் பயணத் தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்திய இரயில்வே சேவையில் ஒரு புதிய இரயில் சேர்க்கப் பட்டு உள்ளது.
- இந்த இரயில்கள் குளிரூட்டப்படாத இரண்டாம் வகுப்பு முன்பதிவு செய்யப்படாத பெட்டிகள் மற்றும் படுக்கை வசதி கொண்ட பெட்டிகளைக் கொண்டிருக்கும்.
- புதிதாக தொடங்கப்பட்ட அம்ரித் பாரத் விரைவு இரயில் வழித்தடங்கள்:
    - தர்பங்கா முதல் (அயோத்தி வழியாக) டெல்லியில் உள்ள ஆனந்த் விஹார் முனையம் வரை
    - மால்டா நகர் முதல் பெங்களூரு வரை



## 66வது DRDO உருவாக்க தினம்


- இந்த அமைப்பு ஆனது 1958 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இந்த அமைப்பானது பாதுகாப்பு அறிவியல் அமைப்புடன் (DSO), இந்திய ராணுவத்தில் செயல்பாட்டில் இருந்த அப்போதையத் தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனம் (TDEs) மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி இயக்குநரகம் (DTDP) ஆகியவற்றினை இணைத்து உருவாக்கப்பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஆனது 10 ஆய்வகங்களில் தொடங்கி, தற்போது 52க்கும் மேற்பட்ட ஆய்வகங்களைக் கொண்ட வலையமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது.

## இந்தியாவின் முதல் நீர்மூழ்கிக் கப்பல் சுற்றுலா



- இந்தியாவின் முதல் நீர்மூழ்கிக் கப்பல் சுற்றுலாவைக் குஜராத் அரசு அறிமுகப்படுத்த உள்ளது.
- இது துவாரகா நகரின் கடற்கரையின் அருகே அமைந்த பெட் துவாரகா என்ற சிறிய தீவினைச் சுற்றியுள்ள கடல்வாழ் உயிரினங்களை காண இது உதவும்.
- இத்திட்டம் ஆனது டைட்டானிக் கப்பல் மூழ்கிய இடத்திற்கான சுற்றுலா திட்டத்தினை போன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- சுற்றுலாப் பயணிகள், இந்தத் தீவைச் சுற்றியுள்ள கடல்வாழ் உயிரினங்களை கண்டு களிப்பதற்காக ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் கடலுக்கு அடியில் 100 மீட்டர் ஆழம் வரை கொண்டு செல்லப்படுவர்.
- புராண நூல்களின் கூற்றுப்படி, கிருஷ்ண பகவானால் உருவாக்கப்பட்ட துவாரகா நகரம் இங்கு நீரில் மூழ்கி இருப்பதாக நம்பப் படுகிறது.

## மத்தியப் பொதுச் சேவைகள் (ஓய்வூதியம்) விதிகள், 2021 திருத்தம்



Amendment to CCS (Pension) Rules, 2021

Allowing female Government servants/female Pensioner to nominate her child/children for family pension in precedence to her husband in the event of marital discord leading to filing of divorce proceedings in a Court of Law or filing of a case under Protection of Women from Domestic Violence Act or Dowry Prohibition Act or Indian Penal Code

- 2021 ஆம் ஆண்டு மத்தியப் பொதுச் சேவைகள் (ஓய்வூதியம்) விதிகளின் விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளதாக இந்தியப் பணியாளர், பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் அறிவித்துள்ளது.
- விவாகரத்து வழக்குகள் நிலுவையில் இருந்தாலோ அல்லது தங்கள் கணவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டாலோ அரசுப் பெண் ஊழியர்கள் தங்கள் கணவருக்குப்

பதிலாக தங்கள் குழந்தை அல்லது குழந்தைகளை குடும்ப ஓய்வூதியத்திற்கான வாரிசாக பரிந்துரைக்க வழி வகுக்கும்.

- தற்போது வரை, குடும்ப ஓய்வூதியமானது முதலில் உயிருடன் இருக்கும் கணவருக்குச் செல்ல வேண்டும் என்ற விதிகள் வழங்கப்பட்டு, வாழ்க்கைத் துணையின் (கணவரின்) மரணத்திற்குப் பிறகு தான் குழந்தைகள் அதைப் பெறத் தகுதி பெறுகிறார்கள்.

## அணுசக்தி நிறுவல் தகவல் பரிமாற்றம் 2024


- இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஜனவரி 01 ஆம் தேதியன்று ஓர் இரு தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் தங்களது அணுமின் நிலையங்களின் பட்டியலைப் பரிமாறிக் கொண்டன.
- இந்த ஒப்பந்தமானது இரு தரப்பினரும் தங்களது அணுசக்தி ஆலைகள் மீது தாக்குதல் மேற்கொள்வதை தடுக்கிறது.
- இதற்கான ஒப்பந்தம் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று கையெழுத்திடப் பட்டு, 1991 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- இதன்படி, ஒவ்வோர் ஆண்டிலும் ஜனவரி மாதத்தின் முதல் தேதியன்று இந்த ஒப்பந்தத்தின் கீழ் உட்படக்கூடிய அணுசக்தி உலைகள் மற்றும் மையங்கள் பற்றி இரு நாடுகளும் பரஸ்பரமாக தகவல் பரிமாறிக் கொள்ள வேண்டும்.
- இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் 33வது பட்டியல் பரிமாற்றம் இது ஆகும்.
- முதல் பரிமாற்றம் ஆனது 1992 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- மேலும், இருநாடுகளிடமும் சிறையில் உள்ள கைதிகளின் பட்டியல்களும் பரிமாறப் பட்டன.
- 47 பொதுமக்கள் மற்றும் 184 மீனவர்கள் உட்பட மொத்தம் 231 இந்தியக் கைதிகள் பாகிஸ்தானில் உள்ளனர்.
- 337 பொதுமக்கள் மற்றும் 81 மீனவர்கள் உட்பட மொத்தம் 418 பாகிஸ்தானியர்கள் இந்தியச் சிறைகளில் உள்ளனர்.




## MGNREGS திட்டத்திற்கு ஆதார் அடிப்படையிலான ஊதிய வழங்கீட்டு முறை

- இது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கான ஊதியங்களை அவர்களது 12 இலக்க ஆதார் எண்ணை அவர்களது நிதியியல் முகவரியாக பயன்படுத்திச் செலுத்தப் படும் ஒரு முறையாகும்.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) ஆதார் அடிப்படையிலான ஊதிய வழங்கீட்டு முறையிலிருந்துத் தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட அமைப்பின் அடிப்படையில் மட்டுமே விலக்கு பெறுவார்கள்.
- பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களில் 34.8% மற்றும் தற்போது அத்திட்டத்தின் கீழ் செயல்பாட்டில் உள்ள (பணிபுரிந்து வரும்) தொழிலாளர்களில் 12.7% பேர் இந்த கட்டாயக் கட்டண முறைக்குத் தகுதியற்றவர்களாகவே உள்ளனர்.
- இதில் பதிவு செய்யப்பட்ட வேலைவாய்ப்பு அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 14.32 கோடியாகும் என்பதோடு இதில் 9.77 கோடி (68.22%) மட்டுமே அந்தத் திட்டத்தின் கீழ் செயல்பாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அட்டைகள் ஆகும்.
- மொத்தம் 25.25 கோடி பணியாளர்கள் உள்ள நிலையில் அவர்களில் வெறும் 14.32 கோடி (56.83%) பேர் அத்திட்டத்தின் கீழ் தற்போது பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் ஆவர்.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இன்று வரையில், மாநிலங்களின் உரிய நடைமுறையைப் பின்பற்றி சுமார் 2.85 கோடி வேலைவாய்ப்பு அட்டைகள் ரத்து செய்யப் பட்டுள்ளன.




## சாலை விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு தப்பி ஓடும் வழக்குகளுக்கு BNS

- புதிய பாரதிய நியாய சன்ஹிதா (BNS) – பாரதிய நீதி விதித் தொகுப்பானது சாலை விபத்துக்களை ஏற்படுத்தி விட்டு அவர்கள்தப்பி ஓடும் வழக்குகளில், மரணத்தை ஏற்படுத்தியதற்காக கடுமையான தண்டனையை விதிக்கப் பரிந்துரைக்கிறது.
- இது சாலை விபத்துக்களை ஏற்படுத்தி விட்டு தப்பி ஓடும் வழக்குகளை, அவசரம் அல்லது அலட்சியம் காரணமாக மரணத்தை ஏற்படுத்தும் மோசமான குற்ற வடிவமாக கருதுகிறது.
- பாரதிய நீதி விதித் தொகுப்பின் 106வது பிரிவு ஆனது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 304A என்ற பிரிவினை மாற்ற உள்ளது.

- இது மரணம் விளைவிக்கும் குற்றத்திற்குச் சமம் இல்லாத, அவசர மற்றும் கவனக் குறைவான செயலால் மரணத்திற்கு இட்டுச் செல்லக் காரணமானவர்களை தண்டித்தது.
- தற்போதுள்ள சட்டப் பிரிவு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையை வழங்குகிறது.
- முதலாவதாக, 106வது சட்டப்பிரிவு ஆனது, அவசரமான அல்லது அலட்சியமான செயல்களால் மரணத்தை ஏற்படுத்தியதற்காக அபராதத்தோடு, ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கிறது;
- இரண்டாவதாக, மருத்துவ நடைமுறையின் போது மரணம் ஏற்பட்டால், பதிவு செய்யப் பட்ட மருத்துவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்ற மருத்துவர்களுக்கான தண்டனையைக் குறைக்கிறது.
- அதிவிரைவாகவும், அலட்சியமாகவும் வாகனம் ஓட்டிய நபர், "சம்பவம் நடந்தவுடன் காவல் துறை அதிகாரியிடமோ அல்லது நீதிபதியிடமோ புகாரளிக்காமல் தப்பிச் சென்றால்" 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.




## ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளியியல் ஆணையத்தின் உறுப்பினர் பதவி

- ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளியியல் ஆணையத்தின் உறுப்பினர் அந்தஸ்தினை நான்கு ஆண்டு காலத்திற்கு இந்தியா பெற்றது.
- ஏறக்குறைய இருபது ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு ஏப்ரல் மாதம் நடைபெற்ற உலகளாவிய புள்ளியியல் அமைப்புக்கான தேர்தலில் இந்தியா வெற்றி பெற்றது.
- இது 1947 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது உலகளாவிய புள்ளியியல் அமைப்பின் மிக உயர்ந்த அமைப்பாகும்.
- இந்த ஆணையம் ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் 24 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- அவை ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபையின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுபவையாகும்.





## SMART 2.0

- மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சி சபையானது (CCRAS), இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையத்துடன் (NCISM) இணைந்து 'SMART 2.0' திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- SMART என்பது கற்பித்தல் வல்லுநர்களிடையே ஆயுர்வேத ஆராய்ச்சியை முதன்மைப் படுத்துவதற்கான நோக்கம் என்பதைக் குறிக்கிறது.
- பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் நாடு முழுவதும் உள்ள ஆயுர்வேத கல்வி நிறுவனங்கள் / மருத்துவமனைகளுடன் ஆயுர்வேதத்தின் முன்னுரிமைப் பகுதிகளில் வலுவான சில மருத்துவ ஆய்வுகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## இந்திய நிலச்சரிவுப் பாதிப்பு வரைபடம்

- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் குழுவானது, இந்தியாவிற்கான முதல் உயர் தெளிவுத் திறன் கொண்ட நிலச்சரிவுப் பாதிப்பு அபாய வரைபடத்தை உருவாக்குகிறது.
- இந்தியாவில் உள்ள எந்தவொரு இடமும் விடுபடாமல், உள்ளடக்கிய தேசிய அளவிலான பாதிப்பு வரைபடமாக இருப்பதன் மூலம் இது இவ்வகையிலான முதல் வரைபடமாகும்.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசாவின் வடக்கே உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலையின் சில பகுதிகள் போன்ற நிலச்சரிவு ஆபத்துகள் அதிகம் உள்ள முன்பின் பதிவாகாத சில இடங்களையும் இது வெளிப்படுத்தியது.
- இது அதிகளவில் நிலச்சரிவினால் பாதிப்படையும் பகுதிகளை அடையாளம் காணவும், இடர் தணிப்பு உத்திகளுக்கு அங்குள்ள வளங்களை சிறப்பான முறையில் ஒதுக்கிப் பயன்படுத்தவும் உதவும்.
- இந்தியாவில் நிலச்சரிவு என்பது ஒரு தனித்துவமான மற்றும் மோசமானப் பிரச்சனை ஆகும்.
- வெள்ளப் பாதிப்பு போலல்லாமல், நிலச்சரிவு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் ஏற்படக் கூடியவை என்பதால், செயற்கைக் கோள்களின் உதவியுடன் கண்காணிப்பது மற்றும் ஆய்வு செய்வது கடினம் ஆகும்.

- நிலச்சரிவுகள் மிகவும் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே நிகழ்கின்றன என்பதோடு நாட்டின் 1-2% பகுதிகள் மட்டுமே இதனால் பாதிக்கப்படுகின்றன.




## இராஷ்ட்ரிய கேல் ப்ரோத்சாஹன் புருஸ்கார் 2023

- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ஆனது, ‘2023 ஆம் ஆண்டு இராஷ்ட்ரிய கேல் ப்ரோத்சாஹன் புருஸ்கார்’ விருதினை அறிவித்துள்ளது.
- இது விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டில் வெளிப்படையானப் பங்கினை ஆற்றிய மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு அமைப்புகள் உட்பட, பெரு நிறுவனங்கள் (தனியார் மற்றும் பொது), விளையாட்டுத் துறை கட்டுப்பாட்டு வாரியங்கள், தன்னார்வ நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.
- இதில் விருது பெற்றவர்கள்
    - வளர்ந்து வரும்/ திறம் வாய்ந்த இளம் வீரர்களை அடையாளம் கண்டு ஊக்குவித்தல் - ஜெயின் பல்கலைக்கழகம், பெங்களூரு,
    - பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பின் மூலம் விளையாட்டுத்துறைக்கான ஊக்கம் - ஒடிசா சுரங்கத் தொழில்துறை பெரு நிறுவனம்.



## C-130J விமானத்தின் இரவு நேரத் தரையிறக்கம்



- இந்திய விமானப்படையானது, கார்கில் விமான ஓடுதளத்தில் C130-J போக்குவரத்து விமானத்தை இரவு நேரத்தில் வெற்றிகரமாக தரையிறக்கியது.
- லடாக் பகுதியில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் அமைந்துள்ள விமான ஓடுதளத்தில் இரவு நேரத்தில் தரையிறக்கம் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- C130-J என்பது இந்திய விமானப் படையால் சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடி சூழல்களில் பயன்படுத்தப்படும் ஒரு மேம்பட்ட உத்திசார் விமானம் ஆகும்.

## PRERANA திட்டம்




- கல்வி அமைச்சகம் ஆனது, 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக 'PRERANA: ஓர் அனுபவ கற்றல் திட்டத்தினை' தொடங்கியுள்ளது.
- வாரந்தோறும் நடத்தப்படுகின்ற இந்த உறைவிடப் பள்ளி முன்னெடுப்பு ஆனது, தேர்ந்தெடுக்கப்பட்ட 20 மாணவர்களுக்கு இத்தகையக் கல்வி வசதியை வழங்குகிறது


மற்றும் குஜராத்தின் மெஹ்சானாவில் உள்ள ஒரு வட்டார மொழிப் பள்ளியில் மேற் கொள்ளப்படுகிறது.

- PRERANA பள்ளியானது காந்திநகரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பு அடிப்படையிலான ஒன்பது தலைப்புகளின் அடிப்படையிலான ஒரு பாடத்திட்டத்தைப் பின்பற்றுகிறது.

## துவரை கொள்முதல் இணைய தளம்

- விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை NAFED மற்றும் NCCF அமைப்புகளிடம் குறைந்தபட்ச ஆதரவு விலை அல்லது சந்தை விலையில் விற்க உதவுவதற்காக துவரம் பருப்பு கொள்முதல் இணைய தளம் தொடங்கப்பட்டுள்ளது.
- உளுந்து மற்றும் மசூர் (மைசூர்) பருப்பு விவசாயிகளுக்கும் மக்காச்சோள விவசாயிகளுக்கும் இதே போன்ற வசதி எதிர்காலத்தில் தொடங்கப்படும்.
- பதிவு செய்யப்பட்ட துவரை விவசாயிகள் NAFED/NCCF அல்லது திறந்தச் சந்தையில் விற்பனை மேற்கொள்ளவும் விருப்பத் தெரிவு இருக்கும்.
- 2013-14 ஆம் பயிர் விளை ஆண்டில் (ஜூலை-ஜூன்) இருந்த 19.2 மில்லியன் டன் ஆக இருந்த பருப்பு உற்பத்தியானது (கடந்த பத்து ஆண்டுகளில்) 2022-23 ஆம் ஆண்டில் 26.05 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.

## PRITHVI VIGYAN திட்டம்




- புவி அறிவியல் அமைச்சகத்திற்கான "பிரித்வி விக்யான்" (PRITHVI VIGYAN) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2021-26 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டம் ACROSS, O-SMART, PACER, SAGE மற்றும் REACHOUT ஆகிய ஐந்து துணைத் திட்டங்களை உள்ளடக்கி உள்ளது.

- மேலும், இந்தத் திட்டமானது புதிய நிகழ்வுகள் மற்றும் வளங்களை கண்டறிவதற்காக பூமியின் துருவப் பகுதிகள் மற்றும் எந்தவொரு நாட்டின் கட்டுப்பாட்டிலும் இல்லாத பெருங்கடல் பகுதிகளை ஆய்வு செய்வதை ஊக்குவிக்க முயல்கிறது.

## உச்ச நீதிமன்றச் சட்ட சேவைகள் குழு

- உச்ச நீதிமன்ற நீதிபதி B.R. கவாய், உச்ச நீதிமன்ற சட்ட சேவைகள் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த குழுவானது 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரசபை சட்டத்தின் 3A என்ற பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இது உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட வழக்குகளில், "சமூகத்தின் நலிவடைந்த பிரிவினருக்கு இலவச மற்றும் திறம் மிக்க சட்ட சேவைகளை" வழங்கும்.
- இந்தச் சட்டத்தின் 3A என்ற பிரிவு ஆனது, மத்திய ஆணையம் (தேசிய சட்ட சேவைகள் ஆணையம் அல்லது NALSA) ஆனது இக்குழுவை அமைக்க வேண்டும் என்று கூறுகிறது.
- இக்குழுவானது, தற்போது பதவியில் இருக்கும் உச்சமன்ற நீதிபதியை அதன் தலைவராகக் கொண்டு, மத்திய அரசினால் பரிந்துரைக்கப்பட்ட அனுபவம் மற்றும் தகுதிகள் கொண்ட மற்ற உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.
- தலைவர் மற்றும் மற்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்தியத் தலைமை நீதிபதியால் பரிந்துரைக்கப்படுவார்கள்.

## அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கான சின்ன ஒதுக்கீடு

- இந்திய தேர்தல் ஆணையம் ஆனது, பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள், பொதுவான தேர்தல் சின்னத்தைப் பெறுவதற்கு கூடுதல் நிதி ஆவணங்கள் மற்றும் தேர்தல் செலவின அறிக்கைகளை வழங்க வேண்டும் என்பதை கட்டாயம் ஆக்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னதாக சின்ன ஒதுக்கீட்டு செயல்பாட்டில் உள்ள வெளிப்படைத்தன்மையை நன்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் என்பது இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட, ஆனால் மாநில அல்லது தேசியக் கட்சிகளாகத் தகுதி பெறாத அரசியல் கட்சிகளைக் குறிக்கும்.
- இதில்,
  - இன்னும் தங்களை முழுமையாக நிறுவிக்கொள்ளாத புதிதாக பதிவு செய்யப்பட்ட கட்சிகள்
  - பதிவுக்குப் பிறகு தேர்தலில் போட்டியிடாத கட்சிகள்
  - அங்கீகரிக்கப்படுவதற்குத் தேவையான அளவிற்குச் சமீபத்திய மாநில அல்லது தேசிய தேர்தல்களில் போதுமான வாக்குகளைப் பெறாத கட்சிகள், ஆகியவை அடங்கும்.

## 'Work4Food: படிமுறை

- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது, உணவு விநியோக முகவர்களுக்கான நியாயமான ஈடு தொகையினை உறுதி செய்வதற்கும் இணைய தள செலவினங்களைக் குறைப்பதற்குமான ஒரு தீர்வை முன்வைத்துள்ளது.
- 'Work4Food' என்ற இந்த தீர்வு முறையானது, செயற்கை நுண்ணறிவு தொடர்பான சர்வதேச கூட்டு மாநாட்டில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப் பட்டது.
- ஒவ்வொரு உணவு விநியோக நபரும் அவர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை விட அதிகமாக ஊதியம் பெறுவதை உறுதி செய்வதற்காக, உணவு விநியோக ஒதுக்கீடு படிமுறை (எந்த முகவர் எந்த உணவு விநியோக அழைப்பைப் பெறுவார் என்பதைத் தீர்மானிக்கிற முறை) உருவாக்கியுள்ளனர்.


## சுறா இறைச்சி நுகர்வு

- இந்தியாவில் பழங்குடியினர் மற்றும் கடலோர மக்கள் நீண்ட காலமாக சுறாக்கள் மற்றும் திருக்கை மீன் இறைச்சிகளை உட்கொண்டு வருகின்றனர்.
- சுறா மீன்களின் துடுப்புகளை நீக்கி விட்டு மீண்டும் அவற்றை கடலில் தூக்கி எறிதல், அனைத்து வகையான சுறா மற்றும் திருக்கை மீன் இனங்களின் துடுப்புகளை ஏற்றுமதி செய்தல் ஆகிய அனைத்தையும் இந்தியா தடை செய்துள்ளது.
- எந்தவொரு மீன்பிடி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தும் பத்து இனங்கள் முற்றிலும் பாதுகாக்கப் படுகின்றன.
- ஆனால் சட்டப்பூர்வ உள்ளூர் இறைச்சி நுகர்வினால் சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்களுக்கான மீன்பிடித்தல் நடவடிக்கை தொடர்கிறது.
- கோவாவில் சுறா மற்றும் திருக்கை மீன் இறைச்சி விற்பனை செய்யும் உணவகங்கள் அதிகளவில் (35.8 சதவீதம்) உள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு (34.6 சதவீதம்) மற்றும் மகாராஷ்டிரா (4.6 சதவீதம்) ஆகியவை உள்ளன.
- இந்தியாவில் சுறா இறைச்சியை விற்பனை செய்யும் அனைத்து உணவகங்களில் 70 சதவிகிதம் ஆனது கோவா மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களில் உள்ளன.
- இந்தியாவின் உணவகங்களில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 251.6 டன் சுறா இறைச்சி விற்கப்படுகிறது.

## இந்தியாவில் குழந்தை திருமணம் பற்றிய லான்செட் இதழின் ஆய்வறிக்கை

- இந்தியாவில் குழந்தைத் திருமணம் குறித்து லான்செட் இதழில் வெளியிடப்பட்ட சமீபத்திய ஆய்வறிக்கை, நாடு முழுவதும் குழந்தைத் திருமணம் குறைந்து வருவதைக் குறிப்பிடுகிறது.
- ஆனால் முக்கியமாக பெண் குழந்தைகள் மத்தியில் நிகழும் குழந்தைத் திருமணங்களின் மொத்த எண்ணிக்கையில் பாதிக்கும் மேற்பட்டவை நான்கு மாநிலங்களில் பதிவானதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
- அவை பீகார் (16.7%), மேற்கு வங்காளம் (15.2%), உத்தரப் பிரதேசம் (12.5%), மற்றும் மகாராஷ்டிரா (8.2%) ஆகும்.


- ஆண் குழந்தைகள் மத்தியில், குஜராத் (29%), பீகார் (16·5%), மேற்கு வங்காளம் (12.9%) மற்றும் உத்தரப் பிரதேசம் (8.2%) ஆகிய மாநிலங்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமான எண்ணிக்கைகளைக் கொண்டுள்ளன.
- இந்தியாவில் இன்றுவரையில் ஐந்தில் ஒரு பெண் குழந்தைகளுக்கும், ஆறில் ஒரு ஆண் குழந்தைகளுக்கும் சட்டப்பூர்வ திருமண வயதுக்கு முன்னதாகவே திருமணம் செய்து வைக்கப் படுகிறார்கள்.
- பெண் குழந்தைகளின் மத்தியில் நிகழும் குழந்தை திருமணங்களின் எண்ணிக்கையில் 32.3% அதிகரிப்புடன், மிகப்பெரிய அதிகரிப்பு ஆனது மேற்கு வங்காளத்தில் பதிவானது.
- மேற்கு வங்காளத்தில் 5,00,000க்கும் மேற்பட்ட பெண்கள் குழந்தைகளாக இருக்கும் போதே திருமணம் செய்து வைக்கபடுவதால் அங்கு மிகப்பெரிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது.
- மேற்கு வங்காளத்தில் 18 வயதுக்கு முன் திருமணம் செய்து கொண்ட 20 முதல் 24 வரையான வயதுடைய பெண்களின் எண்ணிக்கையானது 41.6% என்ற அளவில் இந்தியாவிலேயே அதிகபட்ச நிலையில் உள்ளது என்று 5 வது தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு எடுத்துரைக்கிறது.
- இந்த சதவீதம் ஆனது, 4 வது தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின் போது அதே அளவில் இருந்தது.
- அகில இந்திய அளவில், 18 வயது எட்டுவதற்கு முன்னதாகவே திருமணம் செய்து வைக்கப் பட்ட 20 முதல் 24 வயதுடைய பெண்களின் எண்ணிக்கையானது 23.3% ஆக உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், 2006 ஆம் ஆண்டு குழந்தை திருமணத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்கு வங்காளத்தில் 105 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.
- இதே காலகட்டத்தில் தமிழ்நாடு மாநிலத்தில் 169 வழக்குகளும், கர்நாடகாவில் 273 வழக்குகளும், அசாமில் 155 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.





## வாகனங்களுக்கான புதிய மாசு உமிழ்வு சோதனை விதிகள்

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் (MoRTH) ஆனது BS-VI மாசு உமிழ்வு விதிமுறைகளின் கீழ் அனுமதி கோரும் வாகனங்களுக்கான புதிய மாசு உமிழ்வு சோதனை தரநிலைகளை அறிவித்துள்ளது.

- கலவை எரிபொருள் விருப்பத் தெரிவுகளைக் கொண்ட அனைத்து இருவகை எரிபொருள் வாகனங்களும் வாயு மாசுபடுத்திகள் மற்றும் நுண்மத் துகள்கள் சார்ந்த மாசுபடுத்திகளுக்கான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- இருப்பினும், ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் வாகனங்கள், நைட்ரஜன் ஆக்சைடு சோதனைகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.
- நுண்மத் துகள்களின் நிறை மற்றும் எண்ணிக்கை வரம்புகள் ஆனது, நேரடி எரிபொருள் உட்செலுத்துதல் இயந்திரங்களைக் கொண்ட மகிழுந்துகளுக்கு மட்டுமே பொருந்தும்.
- CO2 உமிழ்வு மற்றும் எரிபொருள் நுகர்வு ஆனது 137வது வாகன தொழில்துறை தரநிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்டபடி மதிப்பிடப்படும்.




## மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களுக்கான மேம்படுத்தப்பட்ட உற்பத்தி நடைமுறைகள்



- மத்திய சுகாதார அமைச்சகம் ஆனது, ஜனவரி 06 ஆம் தேதியன்று 1945 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதன விதிகளின் கீழான M அட்டவணையின் கீழ் திருத்தப் பட்ட விதிகளை அறிவித்துள்ளது.
- இது மருந்து மற்றும் உயிரி மருந்து தயாரிப்புகளுக்கு வலுவான தரக் கட்டுப்பாட்டினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அட்டவணை M ஆனது மருந்துப் பொருட்களுக்கான தரமான உற்பத்தி நடைமுறைகளை (GMP) நிர்ணயிக்கிறது.
- திருத்தப்பட்ட M அட்டவணை ஆனது GMP கடைபிடிக்கப் படுவதையும், மருந்துப் பொருட்கள் உற்பத்திக்கான உற்பத்தி வளாகம், ஆலை மற்றும் உபகரணத் தேவைகளையும் உறுதி செய்வதற்கான விதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- GMP ஆனது முதன்முதலில் 1945 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகளின் M அட்டவணையில் 1988 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டதோடு இதில் கடைசியாக 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருத்தம் ஒன்றும் மேற் கொள்ளப் பட்டது.

## அதிமுக்கியத்துவம் வாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள்

- தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தின் (NCDC) புதிய ஆய்வில் கண்டறியப்பட்ட தகவல்கள் ஆனது, நுண்ணுயிர்க் கொல்லிப் பயன்பாட்டு நடைமுறைகளில் பொருத்தமான கண்காணிப்பு முயற்சிகளை அதிகமாக்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- இது குறிப்பிட்ட அளவில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளை (CIAs) உருவாக்குதல் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்புத் திறனைக் குறைத்தல் ஆகியவற்றின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.
- ஒட்டுமொத்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளில், மூன்றாம் தலைமுறை நுட்பம் சார்ந்த செஃபாலோஸ்போரின்கள் பொதுவாக பரிந்துரைக்கப்படும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (33.1 சதவீதம்) வகை ஆகும்.
- மூன்றாம் தலைமுறை நுட்பம் சார்ந்த செஃபாலோஸ்போரின்கள் உலக சுகாதார அமைப்பின் அதிக முன்னுரிமை அளிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (HPCIA) என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- செஃப்ட்ரியாக்சோன் உள்ளிட்ட மூன்றாம் தலைமுறை நுட்பம் சார்ந்த செஃபாலோஸ்போரின்கள் இந்திய பால் உற்பத்தித் துறையில் பயன்படுத்தப் படுகின்றன.
- அமிகாசின் உள்ளிட்ட அமினோகிளைகோசைடுகள் இந்திய கோழி வளர்ப்புத் துறையில் பயன்படுத்தப்படுகின்றன.
- இந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள் நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் அல்லது சிகிச்சையளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன என்று இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.
- இந்த முக்கிய நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பரவலான பயன்பாடு ஆனது, உணவுப் பயன்பாட்டிற்கான விலங்குகளின் உற்பத்தி மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டிலும் ஏற்படக்கூடிய சாத்தியமான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது.

| Antibiotics used in current study | Class of Critically Important Antibiotics | Prioritization of Critically Important Antibiotics* |
|---|---|---|
| Azithromycin | Macrolides and ketolides | Highest priority |
| Levofloxacin | Quinolones | |
| Ciprofloxacin | | |
| Cefotaxime | Third-, fourth- and fifth-generation cephalosporins | |
| Ceftriaxone | | |
| Amikacin | Aminoglycosides | High priority |
| Gentamicin | | |
| Meropenem | Carbapenems | |
| Linezolid | Oxazolidinones | |

## திருஷ்டி 10 ‘ஸ்டார்லைனர்’

- இந்திய நாட்டின் கடற்படையானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் திருஷ்டி 10 ‘ஸ்டார்லைனர்’ எனப்படுகின்ற ஆளில்லா வான்வழி வாகனத்தினை (UAV) ஹைதராபாத்தில் அறிமுகப்படுத்தியது.
- திருஷ்டி 10 ‘ஸ்டார்லைனர்’ என்பது ஒரு மேம்பட்ட உளவு, கண்காணிப்பு மற்றும் தடங்காணல் (ISR) வாகனமாகும்.
- இது 36 மணிநேரம் இயங்கும் திறன் மற்றும் 450 கிலோ எடைவரை சுமக்கும் திறன் கொண்டது.
- ஆளில்லா வான்வெளி வாகன அமைப்பின் தகுதி பெறலுக்கான நேட்டோ அமைப்பின் STANAG 4671 சான்றிதழைக் கொண்ட அனைத்து வகையான வானிலையிலும் இயங்கக் கூடிய ஒரே இராணுவப் பயன்பாட்டு வாகனம் இதுவாகும்.



## அணிவகுப்புக் காட்சி வாகனம் குறித்த புதிய குடியரசு தின ஒப்பந்தம்

- பாதுகாப்பு அமைச்சகம் ஆனது, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு (UT) தங்கள் அணிவகுப்புக் காட்சி வாகனங்களைக் காட்சிப்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

- ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தின அணிவகுப்பிற்காக மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து தோராயமாக 15 அணிவகுப்புக் காட்சி வாகனங்கள் தேர்ந்து எடுக்கப் படுகின்றன.
- எனவே ஒவ்வோர் ஆண்டும் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு வாய்ப்பளிக்க முடியாது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஒவ்வொரு மாநிலம் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களும் மூன்று ஆண்டுகளுக்குள் ஒரு வாய்ப்பைப் பெறும்.
- இதுவரை கர்நாடகா உட்பட 28 மாநிலங்கள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- 2015 முதல் 2023 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தின அணிவகுப்பில் கர்நாடகா தனது அணிவகுப்புக் காட்சி வாகனத்தினைக் காட்சிப்படுத்தி வருகிறது.

## மீன்களில் ஏற்படும் நோய் குறித்து தகவலளித்தலுக்கான செயலி




- நீர்வாழ் விலங்குகளில் ஏற்படும் நோய்களுக்கான தேசியக் கண்காணிப்புத் திட்டம் (NSPAAD) ஆனது, 'மீன்களில் ஏற்படும் நோய் குறித்து தகவலளித்தல்' என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நாடு முழுவதும் பதிவாகியுள்ள மீன் நோய்களைக் கண்காணித்துப் புகாரளிக்க இது உதவுகிறது.
- இது மீன் வளர்ப்பாளர்களுக்கு அவர்களின் பண்ணைகளில் நிலவும் நோய்கள் குறித்து புகாரளிக்க ஏதுவான மற்றும் செயல்திறன் மிக்க தளத்தினை வழங்கி அவர்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியப் புத்தாக்க வாரம் 2024




- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது, ஜனவரி 10 முதல் 18 ஆம் தேதி வரை இந்தியப் புத்தொழில் நிறுவனங்கள் புத்தாக்க வாரத்தை நடத்துகிறது.
- இது புத்தொழில் நிறுவனங்கள், தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களை ஒன்றிணைப்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.
- இந்த வாரக் கொண்டாட்டத்தில், பத்தாவது துடிப்புமிகு குஜராத் உலக உச்சிமாநாட்டில் நடக்கும் 'எண்ணற்ற திறன்களை வெளிக்கொணரும் புத்தொழில் நிறுவனங்கள்' என்ற புத்தொழில் நிறுவனங்கள் குறித்தக் கருத்தரங்குகளும் அடங்கும்.
- இது 2023 ஆம் ஆண்டு தேசியப் புத்தாக்க விருதுகள் மற்றும் மாநிலங்களின் 4வது புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசைக் கட்டமைப்பின் முடிவு அறிவிப்பு மற்றும் பாராட்டு விழா ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இணையம் வாயிலான Ask Me Anything (AMA) என்ற நேரடி அமர்வுகள் மற்றும் 'How to Start Up' (புத்தொழில் நிறுவனங்களை எவ்வாறு தொடங்குவது) என்பது குறித்து கவனம் செலுத்தும் பிரத்தியேக வழிகாட்டுதல் அமர்வுகள் நடத்தப்படும்.

## விங்ஸ் இந்தியா 2024

- ஹைதராபாத் பேகம்பேட் விமான நிலையம் ஆனது, விங்ஸ் இந்தியா 2024 என்ற விமானக் காட்சியை நடத்த உள்ளது.
- இது பொது விமான போக்குவரத்து அமைச்சகம் (MOCA) மற்றும் இந்திய வர்த்தகம் மற்றும் இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பு (FICCI) ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த நான்கு நாட்கள் அளவிலான இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் காட்சியானது அதிநவீன விமானத் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களின் காட்சி நிகழ்வாகத் திகழும்.
- போயிங் நிறுவனத்தின் புதிய பெரிய 777-9 ஜெட் விமானமானது, இந்த நிகழ்விற்காக முதல்முறையாக இந்தியா வர உள்ளது.
- ஏர் இந்தியா நிறுவனமானது, 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விமானக் "கொள் முதலின்" ஒரு பகுதியாக, பத்து 777-9 விமானங்களைப் பெற உள்ளது.

## ஸ்வச் சர்வேக்சன் விருதுகள் 2023

- ❖ குஜராத்தில் உள்ள சூரத் நகரம் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூர் நகரம் ஆகிய இரண்டும் நாட்டின் தூய்மையான நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- ❖ இந்தூர் நகரம் தொடர்ந்து ஏழாவது முறையாக தூய்மையான நகரமாக தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- ❖ ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்கள் பிரிவில் விசாகப் பட்டினம், போபால், விஜயவாடா, புது டெல்லி, திருப்பதி, ஹைதராபாத் மற்றும் புனே ஆகியவை முதல் 10 தூய்மையான நகரங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- ❖ மாநிலங்கள் பிரிவில், மகாராஷ்டிரா முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ❖ ஒடிசா மாநிலம் நான்காவது இடத்தையும், அதனைத் தொடர்ந்து தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், பஞ்சாப், குஜராத், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, சிக்கிம், கர்நாடகா, கோவா, ஹரியானா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- ❖ ஒரு லட்சத்துக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்களின் பிரிவில், மகாராஷ்டிராவின் சாஸ்வத் & லோனாவாலா மற்றும் சத்தீஸ்கரின் படான் ஆகியவை முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.
- ❖ மத்தியப் பிரதேசத்தில் உள்ள மோவ் இராணுவக் குடியிருப்பு வாரியம் ஆனது தூய்மையான இராணுவக் குடியிருப்பு வாரியமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ உத்தரப் பிரதேச மாநிலத்தின் வாரணாசி மற்றும் பிரயாக்ராஜ், தூய்மையான கங்கை நகரங்கள் பிரிவில் முதல் இரண்டு விருதுகளைப் பெற்றன.
- ❖ சண்டிகர் சிறந்த சஃபைமித்ரா சுரக்சித் ஷெஹர் (துப்புரவுத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பான நகரம்) விருதை வென்றது.



ZONAL CLEAN CITY AWARDS


| Zonal (North) | Zonal (East) | Zonal (North East) | Zonal (South) | Zonal (West) |
|---|---|---|---|---|
| Clean City (North Zone) (Population < 15,000)<br>Winner: **Barwar** | Clean City (East Zone) (Population < 15,000) Clean City within State (Population < 1,00,000)<br>Winner: **Chikiti** | Clean City (North East Zone) (Population < 15,000)<br>Winner: **Jiribam** | Clean City (South Zone) (Population < 15,000)<br>Winner: **Kilvelur** | Clean City (West Zone) (Population < 15,000)<br>Winner: **Panchgani** |
| Clean City (North Zone) (Population between 15,000 - 25,000) Clean City within State (Population < 1,00,000)<br>Winner: **Mullanpur Dakha** | Clean City (East Zone) (Population between 15,000 - 25,000)<br>Winner: **Arang** | Clean City (North East Zone) (Population between 15,000 - 25,000) Clean City within State (Population < 1,00,000)<br>Winner: **Mohanpur** | Clean City (South Zone) (Population between 15,000 - 25,000) Clean City within State (Population < 1,00,000)<br>Winner: **Gundlapochampally** | Clean City (West Zone) (Population between 15,000 - 25,000) Clean City within State (Population < 1,00,000)<br>Winner: **Budni** |
| Clean City (North Zone) (Population between 25,000 - 50,000)<br>Winner: **Anupshahr** | Clean City (East Zone) (Population between 25,000 - 50,000)<br>Winner: **Kumhari** | Clean City (North East Zone) (Population between 25,000 - 50,000)<br>Winner: **Golaghat** | Clean City (South Zone) (Population between 25,000 - 50,000)<br>Winner: **Nizampet** | Clean City (West Zone) (Population between 25,000 - 50,000)<br>Winner: **Gadhinglaj** |
| Clean City (North Zone) (Population between 50,000-1,00,000) Clean City withinState (Population < 1,00,000)<br>Winner: **Gajraula** | Clean City (East Zone) (Population between 50,000-1,00,000)<br>Winner: **Mahasamund** | Clean City (North East Zone) (Population between 50,000-1,00,000) Clean City within State (Population < 1,00,000)<br>Winner: **Lunglei** | Clean City (South Zone) (Population between 50,000-1,00,000)<br>Winner: **Siddipet** | Clean City (West Zone) (Population between 50,000-1,00,000)<br>Winner: **Karhad** |

- ❖ 2023 ஆம் ஆண்டிற்கான ஸ்வச் சர்வேக்சன் மதிப்பீட்டில் தூய்மையான உள்ளாட்சி அமைப்புப் பிரிவில், தமிழ்நாடு மாநிலத்தின் நாகப்பட்டினத்தில் உள்ள கீழ்வேளூர் நகரப் பஞ்சாயத்து முதலிடம் பிடித்துள்ளது.

- தென் மாநிலங்களுக்கான பட்டியலிலும் (தென் மண்டலம்) கீழ்வேளூர் தூய்மையான உள்ளாட்சி அமைப்பாக இடம் பெற்றுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு தூய்மைக் கணக்கெடுப்பின் கருத்துரு, "கழிவிலிருந்து வளத்தினை உருவாக்குதல்" என்றும், 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி" என்பதாகும்.

## இந்தியாவில் பருப்பு உற்பத்தி 2023

- இந்தியாவின் மசூர் (பருப்பு) உற்பத்தியானது, 2023-24 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் அதிகப் பரப்பளவில் 1.6 மில்லியன் டன் அளவினை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் மசூர் உற்பத்தி 1.55 மில்லியன் டன்னாக இருந்தது.
- நடப்பு ராபி பருவத்தில், அதிக நிலப்பரப்பில் மசூர் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
- நடப்பு ராபி பருவத்தில் ஜனவரி 12 ஆம் தேதி நிலவரப்படி மொத்த மசூர் சாகுபடி பரப்பு 1.94 மில்லியன் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.
- இது முந்தைய ஆண்டின் பயிர்ப் பருவ காலத்தில் 83 மில்லியன் ஹெக்டேராக இருந்தது.




## அனுபவ் விருதுகள் திட்டம் – 2024

- ஓய்வூதிய துறை மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் நலத் துறை ஆகியவை 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 'அனுபவ் இணைய தளம்' என்ற இணைய தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

- அரசுப் பணியில் பணியாற்றும் போது, ஓய்வு பெறும்/ஓய்வு பெற்ற மத்திய அரசு ஊழியர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இது பயன்படுகிறது.
- ஓய்வு பெற்றவர்கள் தங்களது குறிப்புகளை விட்டுச் செல்லும் இந்தக் கலாச்சாரம் ஆனது, எதிர்காலத்தில் நல்லாட்சி மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களுக்கு அடித்தளமாக மாறும் என்று கருதப்படுகிறது.
- அரசானது சமீபத்தில் 2024 ஆம் ஆண்டு அனுபவ் விருதுகள் திட்டத்தினை அறிவித்து உள்ளது.
- இத்திட்டத்தில் பங்கேற்க, ஓய்வு பெறும் மத்திய அரசு ஊழியர்கள்/ஓய்வூதியம் பெறுவோர், ஓய்வு பெறுவதற்கு 8 மாதங்களுக்கு முன்பும், ஓய்வு பெற்ற ஓராண்டு வரையிலும் தங்களின் அனுபவக் குறிப்புகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## மூல்ய பிரவாஹ் 2.0




- பல்கலைக்கழக மானியக் குழுவானது, 2019 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மூல்யா பிரவாஹ்வின் மாற்றியமைக்கப்பட்ட மூல்யா பிரவாஹ் 2.0 என்ற விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.
- இது உயர்கல்வி நிறுவனங்களில் மனித விழுமியங்களையும் தொழில்முறை நெறிமுறைகளையும் புகுத்த முயல்கிறது.
- அடிப்படைக் கடமைகள் மற்றும் அரசியலமைப்பு விழுமியங்கள் மற்றும் நாட்டுடன் பிணைப்பு ஆகியவற்றிற்கான ஆழ்ந்த மரியாதையை உருவாக்குவதற்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை நோக்குநிலைப்படுத்துவதன் மூலம் மதிப்பு அடிப்படையிலான நிறுவனங்களை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- மனித வள மேலாளர்களின் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளபடி, உயர்கல்வி நிறுவனங்களுக்குள் உள்ள பரவலான நெறிமுறையற்ற நடைமுறைகளை இது நிவர்த்தி செய்கிறது.
- பாரபட்சம், பாலியல் துன்புறுத்தல், பாலினப் பாகுபாடு, சீரற்ற ஒழுக்கம், இரகசியத் தன்மை இல்லாமை மற்றும் தனிப்பட்ட இலாபத்திற்காக விற்பனையாளர்களுடனான பேரம் ஆகியவை இதில் அடங்கும்.




## கங்கா சாகர் மேளா 2024





- கங்கா சாகர் கண்காட்சி ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 14 அல்லது 15 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
- இந்த கண்காட்சியானது வங்காளக் கடற்கரையில் அமைந்துள்ள சாகர்த்வீப்பில் கொண்டாடப்படுகிறது.

- பக்தர்கள் தங்கள் ஆன்மாவைத் தூய்மைப்படுத்த கங்கை நதியின் புனித நீரில் நீராடுகின்றனர்.
- சாகர்த்வீப் என்பது கங்கை நதி வங்காள விரிகுடாவில் கலக்கும் இடம் ஆகும்.
- கங்காசாகர் மேளா, கும்பமேளாவுக்கு அடுத்தப்படியாக இரண்டாவது பெரிய இந்து திருவிழாவாகும்.

## இந்திய உணவுக் கழகம் - 60வது ஆண்டு விழா


- இந்திய உணவுக் கழகம் ஆனது ஜனவரி 14 ஆம் தேதியன்று தனது 60வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- இந்திய உணவுக் கழகம் (FCI) என்பது 1964 ஆம் ஆண்டு உணவுக் கழகச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இந்திய உணவுக் கழகம் ஆனது 1965 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதியன்று அதன் முதல் மாவட்ட அலுவலகம் தஞ்சாவூரிலும், அதன் தலைமையகம் சென்னையிலும் அமைக்கப் பட்டது.
- தற்போது, இது ஆசியாவின் மிகப்பெரிய விநியோகச் சங்கிலி மேலாண்மை நிறுவனங்களில் ஒன்றாகும்.
- 2022-23 ஆம் ஆண்டில், இந்த நிறுவனம் 76.56 மில்லியன் டன் நெல் மற்றும் 26.2 மில்லியன் டன் கோதுமையைக் கொள்முதல் செய்தது.




## பல்பரிமாண வறுமை பற்றிய நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, "2005-06 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் இருந்த பல் பரிமாண வறுமை" என்ற தலைப்பில் ஒரு விவாதக் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

- 2013-14 ஆம் ஆண்டில் 29.17% ஆக இருந்த இந்தியாவில் பல் பரிமாண வறுமையானது, 2022-23 ஆம் ஆண்டில் 11.28% ஆகக் குறைந்துள்ளது.
- கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்தியாவில் மொத்தம் 24.82 கோடி தனிநபர்கள் பல்பரிமாண வறுமை நிலையிலிருந்து விடுபட்டுள்ளனர்.
- கடந்த ஒன்பது ஆண்டுகளில் 5.94 கோடி மக்கள் பல் பரிமாண வறுமைநிலையிலிருந்து விடுபட்டதுடன், உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஏழை மக்களின் எண்ணிக்கையில் மிகப்பெரிய சரிவு பதிவாகியுள்ளது.
- அதைத் தொடர்ந்து பீகார் 3.77 கோடி, மத்தியப் பிரதேசம் 2.30 கோடி மற்றும் ராஜஸ்தான் 1.87 கோடி ஆகியவற்றை பதிவு செய்துள்ளன.
- அடுக்குக்குறி சார்பு முறையைப் பயன்படுத்திக் கணக்கிடப்பட்ட வறுமை விகிதம் ஆனது 2005-06 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரையிலான (7.69%) காலக் கட்டத்துடன் ஒப்பிடும் போது, 2015-16 முதல் 2019-21 வரையிலான காலக் கட்டத்தில் (10.66% வருடாந்திர வீழ்ச்சி விகிதம்) அது குறையும் வேகம் மிக விரைவாக இருந்தது.
- பல்பரிமாண வறுமை என்பது சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் பதிவாகும் முன்னேற்றத்தின் அடிப்படையில் அளவிடப் படுகிறது.





## பாரசீக மொழி – செம்மொழிகள்




- புதிய கல்விக் கொள்கையின் கீழ் இந்தியாவில் உள்ள ஒன்பது செம்மொழிகளில் ஒன்றாக ஃபார்சி (பாரசீக மொழி) மொழியை சேர்க்க இந்திய அரசு முடிவு செய்து உள்ளது.
- 2004 ஆம் ஆண்டில் செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற முதல் மொழி தமிழ் ஆகும்.
- சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய மொழிகள் மத்திய அரசால் இந்தியாவில் செம்மொழிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன.

## BSI ISO 27001:2022 சான்றிதழ்





- ஹால்டியா பெட்ரோலிய வேதியியல் உற்பத்தி நிறுவனமானது, இந்தியாவின் முதல் BSI சான்றளிக்கப்பட்ட ISO 27001:2022 பெட்ரோலிய வேதியியல் உற்பத்தி நிறுவனமாக மாறுகிறது.
- இது ஐக்கியப் பேரரசில் அமைந்த ஒரு சான்றிதழ் வழங்கீட்டு அமைப்பினால் வழங்கப் பட்டது.
- ISO/IEC 27001:2022 என்பது 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட தகவல் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு (ISMS) திட்டத்தின் சமீபத்திய பல் செயலாக்க தொகையமைப்பு ஆகும்.

## MSCI EM குறியீடு



- இந்தியாவின் மதிப்பானது, MSCI EM குறியீட்டில் தாய்வான் நாட்டினை விஞ்சி, தற்போது சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இது வளர்ந்து வரும் முதலீட்டுச் சந்தைகளில் ஒரு நம்பிக்கைக்குரிய முதலீட்டுத் தேர்வாக இந்தியா திகழ்வதை உறுதிப்படுத்துகிறது.
- 7 சதவீதத்தில் இருந்த இந்தியாவின் MSCI வளர்ந்து வரும் சந்தைக் குறியீடானது, எட்டு ஆண்டுகளில் உயர்ந்து 17.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## சர்வசக்தி நடவடிக்கை





- இந்திய இராணுவம் ஆனது, சர்வசக்தி நடவடிக்கை எனப்படும் பெரிய அளவிலான தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையை தொடங்கி உள்ளது.
- இந்த நடவடிக்கையானது, வனப் பகுதியில் மறைந்திருந்து தீவிரவாத நடவடிக்கைகளைப் பரப்பி வரும் தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்காக பூஞ்ச் -ரஜோரி பகுதியில் மேற்கொள்ளப் பட்டது.
- 2003-04 ஆம் ஆண்டு இதே பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சர்ப் வினாஷ் என்ற ஒரு நடவடிக்கையினை மாதிரியாக கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

## 2023 ஆம் ஆண்டு வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை கணக்கெடுப்பு - முக்கியத் தகவல்கள்

- இந்த ஆண்டு கணக்கெடுப்பு ஆனது, கிராமப்புற இந்தியாவில் உள்ள 14 முதல் 18 வயதுடைய சிறார்கள் மீது கவனம் செலுத்துவதோடு இந்த வயதினர் குழு குறித்து கடைசியாக 2017 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் ஆய்வு ஒன்றும் செய்யப்பட்டது.
- சுமார் 30% பேர் அவ்வப்போது தங்கள் பெற்றோருக்காக வேலை செய்கிறார்கள்.
- 14 முதல் 18 வயதுக்குட்பட்ட நான்கு குழந்தைகளில் ஒருவரால் இன்னும் இரண்டாம் வகுப்பு நிலையிலான உரையை தங்களது பிராந்திய மொழியில் சரளமாக படிக்க முடியாத நிலை உள்ளது.

- இந்த வகையில் கல்விச் சேர்க்கை பிரிவுகள் அனைத்திலும் சிறுவர்களை விட சிறுமிகள் சிறப்பான செயல் திறனைக் கொண்டுள்ளனர்.
- சிறுவர்களை விட, அதிக எண்ணிக்கையிலான சிறுமிகள் 12 ஆம் வகுப்புக்குப் பிறகும் தொடர்ந்து படிக்க விரும்புகிறார்கள்.
- பாதிக்கும் மேற்பட்டவர்கள், 8 ஆம் வகுப்பு அல்லது 9 ஆம் வகுப்பில் பொதுவாக எதிர் பார்க்கப்படும் திறன் ஆன வகுத்தல் திறனறிவு இன்றி (3 இலக்க எண்ணை ஒரு இலக்க எண்ணால் வகுத்தல்) உள்ளனர்.
- சுமார் 57% பேர் ஆங்கில மொழி வாக்கியங்களைப் படிக்கக் கூடியவர்களாகவும்; அவர்களில் 73 சதவீதத்திற்கும் அதிகமானோர் அவற்றின் பொருளை சொல்லக் கூடியவர்களாகவும் உள்ளனர்.
- எண்கணிதம் மற்றும் ஆங்கில மொழி வாசிப்பு ஆகிய இரண்டிலும் சிறுமிகளை விட சிறுவர்கள் சிறப்பான செயல்திறன் கொண்டுள்ளனர்.
- கணக்கெடுக்கப்பட்ட 90% வீடுகளில் திறன் பேசிகள் இருந்தன.
- கணக்கெடுக்கப்பட்ட குழந்தைகளில், சுமார் 95% சிறுவர்கள் மற்றும் 90% பெண்கள் திறன் பேசிகளைப் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளனர்.
- 'அடிப்படை' ASER கணக்கெடுப்பு ஆனது முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டதோடு மேலும் 2014 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் நடத்தப் பட்டது.
- 2014 ஆம் ஆண்டு முதல் இது 2016 ஆம் ஆண்டில் மாற்று (மாறுநிலை) ஆண்டு சுழற்சி முறைக்கு மாற்றப் பட்டது.




## INS சீட்டா, குல்தார் மற்றும் கும்பீர்

- 40 ஆண்டுகளாக நாட்டிற்காக மகத்தானச் சேவையை வழங்கி வந்த இந்தியக் கடற்படைக் கப்பல்களான சீட்டா, குல்தார் மற்றும் கும்பீர் ஆகியவை 2024 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதியன்று படையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

- சீட்டா, குல்தார் மற்றும் கும்பீர் ஆகியவை போலந்தின் க்டினியா கப்பல் கட்டும் தளத்தில் போல்னோக்னி ரக தரையிறங்கும் வகை கப்பல்களாக கட்டமைக்கப்பட்டன.
- அவை முறையே 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் இந்தியக் கடற்படையில் இணைக்கப் பட்டன.



## இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 150வது ஆண்டு நிறைவு

- இந்திய வானிலை ஆய்வுத் துறை நிறுவப்பட்டதன் 150வது ஆண்டு நிறைவினை முன்னிட்டுப் பல்வேறு முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.
- பருவநிலைக் கண்காணிப்பு மூலம் முக்கியமான துறைகளைப் பாதுகாப்பதற்காக தேசியப் பருவநிலை சேவைகள் (NFCS) கட்டமைப்பை IMD அறிமுகப்படுத்தியுள்ளது.
- பஞ்சாயத்து அளவில் வானிலை குறித்த முன்னறிவிப்புகளை வழங்குவதற்காக நாடு தழுவிய பஞ்சாயத்து மௌசம் சேவா எனப்படும் சேவையை இது அறிமுகப் படுத்தி உள்ளது.
- கைபேசி செயலி மற்றும் முடிவெடுத்தலுக்கான தகவல் வழங்கீட்டு அமைப்பு (DSS) போன்ற முன்னெடுப்புகள் மூலம் வானிலைத் தகவல்களை ஒவ்வொரு வீட்டையும் சென்றடைவதை IMD நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வாட்நகர் அகழ்வாராய்ச்சி

- குஜராத்தின் வாட்நகரில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில், பல நூற்றாண்டுகளாக வெளிக் கொணரப்படாத கலாச்சார தொடர்ச்சிக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
- ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பிந்தைய இதன் தொடர்ச்சியானது, "இருண்ட காலம்" என்பது ஒரு பொய்யாக இருக்கலாம் என்று வெளிபடுத்துகிறது.
- பிற்கால வேதகால/பௌத்தத்திற்கு முந்தைய மகாஜனபதாக்கள் அல்லது பிரபுத்துவ குடியரசுகளுக்குச் சமகாலமான கி.மு. 800 ஆம் ஆண்டு வரை பழமையான மனித குடியேற்றத்தின் சான்றுகளை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சிந்து சமவெளி நாகரிகத்தின் சரிவுக்கும் இரும்புக் காலம் தோன்றுவதற்கும் கந்தர், கோஷல், அவந்தி போன்ற நகரங்கள் தோன்றுவதற்கும் இடைப்பட்ட காலக்கட்டம் ஆனது பெரும்பாலும் இருண்ட காலமாகவே சித்தரிக்கப்படுகிறது.




## தேசியப் புத்தொழில் நிறுவன விருதுகள் 2023

- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) ஆனது, 2023 ஆம் ஆண்டு தேசியப் புத்தொழில் நிறுவன விருதுகளை வென்ற வெற்றியாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- 15 பிரிவுகளில் 20 புத்தொழில் நிறுவனங்களுக்கு அரசாங்கம் விருது வழங்கியுள்ளது.
- இதில் 'பெண்கள் தலைமையிலான புத்தாக்கம்', 'அடுத்த தலைமுறை நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்பாளர்கள்', 'கலாச்சார பாரம்பரியத்தின் வாகையர்கள்', 'மைய ஆதார நபர் விருது' போன்றவை அடங்கும்.

| Startups | Sector | State |
|---|---|---|
| Axial Aero | Defence | Telangana |
| Country Clay (OPC) | Handicrafts | Delhi |
| Blackfrog Technologies | Healthtech | Karnataka |
| Atsuya Technologies | Climate Tech | Tamil Nadu |
| SNL Innovations | Agritech | Rajasthan |
| Aumsat Technologies | Agritech | Maharashtra |
| Nanosafe Solutions | Biotech | Delhi |
| Aum Paper Products | Sustainability | Karnataka |
| Atypical Platform | HRTech | Jharkhand |
| Saif Automations Services | Robotics | Andhra Pradesh |
| Krishigati Electric Bull | Agritech | Maharashtra |
| Avinya Infinity Solutions | Healthtech | Kerala |
| Jiva Business Ventures | Insurtech | Telangana |
| Canectar Foods | Foodtech | Maharashtra |
| VVP Healthcare Evolution | Healthtech | Maharashtra |
| Vividminds Technologies | Deeptech | Telangana |
| Eeki Automation | Agritech | Rajasthan |
| Breathe Applied Sciences | Climate Tech | Karnataka |
| Greenviro Global | Climate Tech | Tamil Nadu |
| Autocracy Machinery | Agritech | Telangana |

## கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான தடுப்பூசி பிரச்சாரம்




- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் தாக்கத்தைக் குறைப்பதற்கான ஒரு குறிப்பிடத் தக்க படிநிலையாக, 9 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுமிகளுக்கு மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி வழங்கும் பிரச்சாரத்தினை அரசாங்கம் மேற்கொள்ள உள்ளது.
- இந்த நோய்த்தடுப்பு பிரச்சாரமானது, மூன்று ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- உலகில் உள்ள கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பாதிப்புகளில் ஐந்தில் ஒரு பங்கை இந்தியா கொண்டுள்ளது.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.25 லட்சம் புதிய பாதிப்புகள் மற்றும் 75,000 உயிரிழப்புகள் பதிவாகின்றன.
- மார்பகப் புற்றுநோய்க்கு அடுத்தப்படியாக, இந்தியாவில் பெண்கள் மத்தியில் அதிக அளவில் ஏற்படக் கூடியப் புற்றுநோயாக கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் உள்ளது.
- இந்தியாவில் காணப்படும் 83 சதவீத பரவக் கூடிய கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பாதிப்புகளுக்கு HPV 16 அல்லது 18 காரணமாக உள்ளன.

## அஸ்த்ரா ஏவுகணை

- இந்திய விமானப்படைக்கு வழங்குவதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அஸ்த்ரா ஏவுகணைகளை பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- அஸ்த்ரா என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட காட்சிப்புல வரம்பிற்கு அப்பாற்பட்ட வானிலிருந்த படியே வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை ஆகும்.
- அஸ்த்ரா ஆயுத அமைப்பானது வானிலிருந்தபடியே வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் பிரிவில் உலகின் அத்தகைய ஆயுத அமைப்புகளின் வகுப்புகளில் மிகச் சிறந்தது ஆகும்.

- இந்த ஏவுகணை 100 கிலோமீட்டருக்கும் மேற்பட்ட தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்க வல்லது.




## சமவேஷா திட்டம்

- I-STEM (இந்திய அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் முனையங்கள் செயல் திட்டங்கள்) 'சமவேஷா' என்ற ஒரு மாபெரும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- முனையங்கள் மற்றும் ஆய்வகங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் இந்தியாவில் ஆராய்ச்சி சார்ந்த ஒத்துழைப்பில் புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாடு முழுவதும் வளங்களின் உகந்த முறையில் பயன்படுத்தச் செய்வதன் நோக்கில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.
- மேம்பட்ட அறிவியல் உபகரணங்களைப் பெற விரும்பும் ஆராய்ச்சியாளர் அல்லது தொழில் நிறுவனங்கள் தாங்கள் தேடும் உபகரணங்களை வைத்திருக்கும் அந்த நிறுவனத்துடன் இணைந்து, I-STEM தளம் மூலம் தங்களது சோதனைகளை நடத்துவதற்கு அவற்றை வாடகைக்குப் பெறலாம்.



## தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியல் – முதல் மறுமதிப்பீடு





- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபை (ICMR) ஆனது, தற்போதைய தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியலை (NEDL) திருத்தியமைக்கும் ஒரு செயல்முறையைத் தொடங்கி உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இது போன்ற முதல் பட்டியல் வெளியிடப்பட்டதிலிருந்து முதல் முறையாக இந்த செயல்முறை மேற்கொள்ளப்பட உள்ளது.
- பிப்ரவரி மாத இறுதிக்குள் தற்போதையப் பட்டியலில், நோய் கண்டறிதல் சோதனைகளைச் சேர்ப்பது அல்லது நீக்குவது தொடர்பான ஆலோசனைகளை வழங்க சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு அச்சபை அழைப்பு விடுத்துள்ளது.
- இந்தப் பட்டியல் ஆனது, நாட்டில் உள்ள பல்வேறு நிலையிலான சுகாதார மையங்களில் இருக்க வேண்டிய அத்தியாவசிய மற்றும் மிக அடிப்படையான சோதனைகளைப் பட்டியலிடுகிறது.
- இது கிராமப்புற அளவில், துணை சுகாதார நிலையங்கள், சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய நல மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## தோட்டக்கலை உற்பத்தி மதிப்பீடு 2022/23

- வேளாண் அமைச்சகம் ஆனது, 2022-23 ஆம் ஆண்டின் பயிர் பருவத்தின் (ஜூலை 2022- ஜூன் 2023) தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி மதிப்பீட்டை மேலும் இரண்டு சதவீதம் உயர்த்தியுள்ளது.
- இந்த மதிப்பீட்டில் 2021-22 ஆம் ஆண்டில் 347 மில்லியன் டன்களாக கணிக்கப்பட்ட இந்த மதிப்பு ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 355 மில்லியன் டன்களுக்கு மேல் (mt) இருக்கும் கணித்துள்ளது.

- சமீபத்திய திருத்தமானது இரண்டாவது மதிப்பீட்டான 351.92 மில்லியன் டன்களை விட சற்று அதிகமாக உள்ளது.
- முந்தைய ஆண்டில் 107.51 மில்லியன் டன்களாக இருந்த பழங்கள் உற்பத்தியானது, 2022-23 ஆம் ஆண்டில் 109.53 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளதாக மதிப்பிடப் பட்டு உள்ளது.
- காய்கறி உற்பத்தி 209.14 மில்லியன் டன்னிலிருந்து 213.88 டன்னாக அதிகரித்துள்ளது.
- முந்தைய ஆண்டில் 56.18 மில்லியன் டன் ஆக இருந்த உருளைக்கிழங்கு உற்பத்தி 60.22 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- தக்காளி உற்பத்தி 20.69 டன்னிலிருந்து 20.37 டன்னாக குறைந்துள்ளது.




## பயிற்சி மையங்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள்



- கல்வி அமைச்சகம் ஆனது தனது வழிகாட்டுதல்கள் வழியாக, பொருத்தமான சட்ட கட்டமைப்பின் மூலமாக பயிற்சி மையங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விதிகள் மீறப்படுவது கண்டறியப்பட்டால் பயிற்சி நிறுவனங்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட இந்த விதி முன்மொழிகிறது.
- அனைத்துப் பயிற்சி மையங்களும் தற்போதைய வழிகாட்டுதல்களின்படி தங்களது மையங்களைப் பதிவு செய்ய வேண்டும்.
- பல கிளைகளைக் கொண்ட பயிற்சி மையங்களுக்கு, ஒவ்வொரு கிளையும் தனித்தனி பயிற்சி மையமாகக் கருதப்படும்.
- போட்டித் தேர்வுகளில் தரவரிசை அல்லது மதிப்பெண்கள் குறித்து தவறான உரிமைக் கோரல்களை வெளியிடவும் மையங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- தற்போது 16 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பயிற்சி நிறுவனங்களில் சேர அனுமதி வழங்கப்பட மாட்டாது.
- இந்த வழிகாட்டுதல்களின் நிபந்தனைகளுக்கேற்ப பயிற்சி மையங்களில் ஆலோசனை வழங்கீட்டு அமைப்பு இருப்பதை அவை உறுதி செய்ய வேண்டும்.
- ஒரு மாணவர் ஒரு படிப்பை முடிப்பதற்கு முன் அதிலிருந்து விலகினால், அவர்களுக்கு 10 நாட்களுக்குள் விகிதாச்சார அடிப்படையில் அதற்கான கட்டணத்தின் பகுதியானது திருப்பித் தரப்பட வேண்டும்.

## இடர் குறித்த முன்னெச்சரிக்கை அனுப்பும் கருவி

- இஸ்ரோ நிறுவனமானது, மேம்படுத்தப்பட்ட இடர் குறித்த முன்னெச்சரிக்கை அனுப்பும் கருவியை (DAT) உருவாக்கியுள்ளது.
- கடலில் உள்ள மீனவர்கள் மீன்பிடி படகுகளில் இருந்த படி அவசரச் செய்திகளை அனுப்பும் மேம்பட்ட திறன்களையும் அம்சங்களையும் கொண்டுள்ளது.
- இந்தக் கருவியின் முதல் வடிவம் ஆனது, 2010 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- இதனைப் பயன்படுத்தி தகவல் தொடர்பு செயற்கைக்கோள் மூலம் அனுப்பப்படும் தகவல், மத்தியக் கட்டுப்பாட்டு நிலையத்தில் (INMCC : இந்தியச் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையம்) பெறப்படுகிறது.
- இங்கு மீன்பிடி படகின் அடையாளம் மற்றும் இருப்பிடம் குறித்த முக்கிய எச்சரிக்கை சமிக்ஞைகள் கண்டறியப் படுகின்றன.
- இந்தத் தகவலைப் பயன்படுத்தி, இடர்பாட்டில் உள்ள மீனவர்களைக் காப்பாற்றச் செய்வதற்காக வேண்டி, தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு MRCC ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்கிறது.
- தற்போது வரை, 20,000க்கும் மேற்பட்ட DAT கருவிகள் பயன்பாட்டில் உள்ளன.


## இந்திய சர்வதேச அறிவியல் விழா 2023

- 4 நாட்கள் அளவிலான 9வது இந்திய சர்வதேச அறிவியல் விழா (IISF-2023) ஹரியானா மாநிலத்தில் நடைபெற்றது.


- அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் இந்தியாவின் முக்கிய சாதனைகளைக் கொண்டாடவதே இந்த அறிவியல் திருவிழாவின் நோக்கமாகும்.
- அறிவியல் ஆர்வலர்களின் சாதனைகளை அங்கீகரிப்பதும், இளம் மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதும், இந்தியக் குடிமக்கள் மத்தியில் அதைப் பரப்புவதும் இந்த விழாவின் நோக்கமாகும்.
- 2023 ஆம் ஆண்டு இந்திய சர்வதேச அறிவியல் விழாவின் மையக் கருத்துரு, "அமிர்த காலத்தில் பொதுமக்களை சென்றடையும் வகையிலான அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்" என்பதாகும்.

## ஆதிவாசி வாழ்வாதார நிலை (SAL) அறிக்கை, 2022

- 2022 ஆம் ஆண்டு ஆதிவாசி வாழ்வாதார அறிக்கை என்ற தலைப்பிலான அறிக்கை PRADAN எனப்படும் இலாப நோக்கற்ற அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- SAL அறிக்கைகளின் நோக்கம் ஆனது, இந்தியாவின் மத்திய மண்டலத்தில் உள்ள பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் வாழ்வாதாரத்தின் நிலையைப் புரிந்து கொள்வது ஆகும்.
- மத்தியப் பிரதேசத்தில், 51 சதவீதம் ஆதிவாசிகள், 63 சதவீதம் ஆதிவாசிகள் அல்லாதோர், மற்றும் 50 சதவீதம் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுக்கள் (PVTG) உள்ள கிராமங்கள் பொது விநியோகத் திட்ட விற்பனை நிலைய மையங்களைக் கொண்டுள்ளன.
- சத்தீஸ்கரில், இது 63 சதவீதம், 88 சதவீதம் மற்றும் 36 சதவீதம் ஆக உள்ளது.
- சாலை இணைப்பைப் பொறுத்தவரை, 78 சதவீத ஆதிவாசிகள், 79 சதவீத ஆதிவாசிகள் அல்லாதோர், மற்றும் 80 சதவீத PVTG கிராமங்கள் ஆனது, மத்தியப் பிரதேசத்தில் உள்ள அனைத்து வானிலைகளிலும் செயல்படும் வகையிலான சாலைகள் மூலம் மண்டல தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
- சத்தீஸ்கரில், இது 80 சதவீதம், 100 சதவீதம் மற்றும் 82 சதவீதம் ஆக உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள 42 சதவீத ஆதிவாசிகள், 63 சதவீதம் ஆதிவாசிகள் அல்லாதோர் மற்றும் 80 சதவீத PVTG கிராமங்கள் பொதுப் போக்குவரத்து மூலம் மண்டல தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
- சத்தீஸ்கர் மாநிலத்தில் இவை முறையே 30 சதவீதம், 40 சதவீதம் மற்றும் 9 சதவீதம் ஆக உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில், 32 சதவீத ஆதிவாசி குடும்பங்களும், 27 சதவீத ஆதிவாசிகள் அல்லாதோர் குடும்பங்களும், 61 சதவீத PVTG குடும்பங்களும் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சத்தீஸ்கரில், 27 சதவீத ஆதிவாசி குடும்பங்கள், 42 சதவீத ஆதிவாசிகள் அல்லாதோர் குடும்பங்கள், மற்றும் 29 சதவீத PVTG குடும்பங்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.





## பிரதான் மந்திரி சூர்யோதயா யோஜனா




- 'பிரதான் மந்திரி சூர்யோதயா யோஜனா' திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள ஒரு கோடி வீடுகளுக்கு மேற்கூரையில் அமைக்கப்பட்ட சூரியசக்தி மின் உற்பத்தி வசதியினைப் பெற உள்ளன.
- இது இந்தியா நாட்டினை எரிசக்தித் துறையில் தன்னிறைவு பெற்றதாக மாற்றும்.

- ❖ மேற்கூரையில் நிறுவப்படும் சூரியசக்தி மின் தகடுகள் ஆனது, பிரதான மின் விநியோக அலகுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு கட்டிடத்தின் மேற்கூரையில் அமைக்கப் பட்ட ஒளிமின்னழுத்த தகடுகள் ஆகும்.
- ❖ இதனால், தொடரமைப்பு மின்சாரத்தின் நுகர்வு குறைவதோடு, நுகர்வோருக்கான மின்சாரச் செலவினத்தினையும் மிச்சப்படுத்துகிறது.
- ❖ 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி இந்தியாவில் நிறுவப்பட்ட சூரிய சக்தியின் திறன் சுமார் 73.31 GW என்ற அளவை எட்டியுள்ளது.
- ❖ அதேவேளையில், 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, மேற்கூரையில் நிறுவப் பட்ட சூரிய சக்தி மின் உற்பத்தி திறன் சுமார் 11.08 ஜிகாவாட் ஆகும்.
- ❖ 2022 ஆம் ஆண்டிற்குள் 40,000 மெகாவாட் அல்லது 40 ஜிகாவாட் என்ற ஒட்டு மொத்த நிறுவப் பட்ட திறனை அடைவதை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசானது 2014 ஆம் ஆண்டில், மேற்கூரையில் நிறுவப்பட்ட சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டத்தை அறிமுகப் படுத்தியது.

## நகரா கட்டிடக் கலை பாணியில் கட்டமைக்கப்பட்ட இராமர் கோவில்




- ❖ அயோத்தியில் கட்டமைக்கப்பட்டுள்ள இராமர் கோவில் சமீபத்தில் திறக்கப்பட்டது.
- ❖ சந்திரகாந்த் சோம்புரா மற்றும் அவரது மகன் ஆஷிஷ் ஆகியோர் நகரா கட்டிடக்கலை பாணியில் இந்தக் கோயிலை வடிவமைத்துள்ளனர்.
- ❖ நகரா பாணி கோயில் கட்டிடக்கலை ஆனது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில், குப்தர் காலத்தின் பிற்பகுதியில், வட இந்தியாவில் தோன்றியது.
- ❖ நகரா பாணியிலான கோயில்கள் ஓர் உயரமான பீடத்தின் மீது கர்ப்பக் கிரகத்துடன் கூடிய (சன்னதி) வடிவமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளன.
- ❖ கர்ப்பக் கிரகத்தின் மேல் உயர்ந்து காணப்படும் ஷிகாரா ('மலை சிகரம்' எனப் பொருள் படும்) என்பது நகரா பாணிக் கோவில்களின் மிகவும் தனித்துவம் வாய்ந்த அம்சமாகும்.
- ❖ ராஜஸ்தானின் பரத்பூர் மாவட்டத்தில் உள்ள மிர்சாபூர் மற்றும் பன்சி-பாஹர்பூர் பகுதியில் உள்ள மலைகளில் இருந்து வரும் மணற்கற்களைப் பயன்படுத்தி இந்தக் கோயில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- இந்தக் கோயில் கட்டுமானத்தில் எஃகு அல்லது இரும்பின் பயன்பாடு தவிர்க்கப் பட்டு உள்ளது.
- அதற்கு மாறாக, இது நாட்டின் உள்நாட்டுத் தொழில்நுட்பம் மற்றும் பாரம்பரியக் கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்திக் கட்டப் பட்டுள்ளது.

## 75வது குடியரசு தின சிறப்பம்சங்கள்

- இந்த ஆண்டு குடியரசு தின அணிவகுப்பு ஆனது, பல்வேறு துறைகளில் பெண்கள் ஆற்றியப் பங்கைக் குறிக்கும் வகையில் 'பெண்களை மையமாகக் கொண்டதாக" இருந்தது.
- இதன் பிரதம விருந்தினராக பிரான்சு நாட்டு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் பங்கேற்றார்.
- முதன்முறையாக, அணிவகுப்பில் இந்திய இசைக்கருவிகளை வாசித்த படி 100 பெண் கலைஞர்கள் பங்கு பெற்றனர்.
- இந்த ஆண்டு குடியரசு தினத்திற்கான கருத்துரு, 'விக்சித் பாரத்' மற்றும் 'பாரத்: லோக்தந்த்ரா கி மாத்ருகா' என்பதாகும்.
- கலாச்சார அமைச்சகத்தின் குடியரசு தின அணிவகுப்பு காட்சி வாகனத்தில் B.R. அம்பேத்கர் அவர்கள் அரசியலமைப்பு சட்டத்தினை நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களிடம் ஒப்படைத்த நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகளும், ஜனநாயக நெறிமுறைகளை வலியுறுத்தும் புராதன சின்னங்களும் இடம் பெற்றிருந்தன.
- தமிழ்நாட்டு அணிவகுப்பு காட்சி வாகனமானது, மக்களாட்சி முறையின் தாய் எனப் படும் பண்டைய தமிழ்நாட்டில் இருந்த குடவோலை முறையைக் காட்சிப் படுத்தியது.




## பத்ம விருதுகள் 2024

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 30 பெண்கள் மற்றும் வெளிநாட்டினர் /வெளிநாடு வாழ் இந்தியர்/இந்திய வம்சாவளி நபர்/இந்திய வெளிநாட்டுக் குடியுரிமை பிரிவில் இருந்து எட்டு நபர்கள் மற்றும் மரணத்திற்குப் பின் இந்த விருது பெற்றவர்களாக அறிவிக்கப்பட்ட ஒன்பது நபர்கள் உட்பட 132 பத்ம விருதுகளை வழங்க ஒப்புதல் அளித்தார்.

- இரண்டு முறை பீகார் முதல்வராக இருந்த கர்பூரி தாகூருக்கு பாரத ரத்னா விருது (மறைவிற்கு பின்) வழங்கப்பட்டது.
- மகத்தான மற்றும் சிறப்பான சேவைக்காக 'பத்ம விபூஷன்' விருது வழங்கப்படுகிறது.
- உயர் மதிப்பு மிக்க சிறப்பான சேவைக்காக 'பத்ம பூஷன்' விருதும், ஒரு துறையில் ஆற்றிய சிறந்த சேவைக்காக 'பத்ம ஸ்ரீ' விருதும் வழங்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று இந்த விருதுகள் அறிவிக்கப் படுகின்றன.
- 5 பேருக்கு பத்ம விபூஷன் விருதுகளும், 17 பேருக்கு பத்ம பூஷன் விருதுகளும் மற்றும் 110 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகளும் வழங்கப்பட்டன.




## வீரதீர விருது வென்றவர்கள் 2024





- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், இந்தியாவின் ஆயுதப் படை வீரர்களுக்கு ஆறு கீர்த்தி சக்ரா மற்றும் 16 சௌரிய சக்ரா உட்பட 80 வீரதீர விருதுகளை அறிவித்துள்ளார்.
- அசோக் சக்ராவுக்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது மிக உயரிய அமைதி கால வீரதீர விருது கீர்த்தி சக்ரா ஆகும்.

- ❖ சௌர்ய சக்ரா அமைதிக்கான மூன்றாவது மிக உயரிய விருது ஆகும்.
- ❖ அறிவிக்கப்பட்ட ஆறு கீர்த்தி சக்ரா விருதுகளில், மூன்று விருதுகள் மறைவிற்குப் பிந்தைய விருதுகள் பிரிவில் வழங்கப்பட்டன.
- ❖ வழங்கப்பட்ட மொத்த 16 சௌர்ய சக்ரா விருதுகளில் இரண்டு மறைவிற்குப் பிந்தைய விருதுகள் பிரிவில் வழங்கப்பட்டன.
- ❖ இந்த விருதுகளில் 53 சேனா பதக்கம் (மறைவிற்குப் பிந்தைய விருதுகள் பிரிவில் ஏழு), ஒரு நாவோ சேனா பதக்கம் (வீரதீர செயல்) மற்றும் நான்கு வாயு சேனா பதக்கங்கள் (வீரதீர செயல்) ஆகியவை அடங்கும்.
- ❖ இது தவிர, குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள் ஆயுதப்படைகள் மற்றும் பிற பணியாளர்களுக்கு 311 பாதுகாப்பு துறை சார் விருதுகளை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்தார்.

## AISHE கணக்கெடுப்பு 2021-2022

Figure 33: Social Category-wise Teachers in Top 10 States





| | Tamil Nadu | Uttar Pradesh | Maharashtra | Karnataka | Andhra Pradesh | Telangana | Rajasthan | Madhya Pradesh | West Bengal | Kerala |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| All | 208736 | 178193 | 167692 | 150885 | 106538 | 84086 | 83192 | 82461 | 73817 | 62855 |
| OBC | 147003 | 51802 | 37498 | 56427 | 38690 | 35963 | 26357 | 19865 | 7560 | 24673 |
| SC | 23993 | 16207 | 19552 | 13092 | 15568 | 9549 | 6668 | 6135 | 8306 | 2501 |
| ST | 553 | 457 | 2889 | 3415 | 1807 | 3026 | 2702 | 2236 | 1169 | 205 |

- ❖ கல்வி அமைச்சகம் ஆனது, 2021-2022 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வி குறித்த அகில இந்தியக் கணக்கெடுப்பை (AISHE) வெளியிட்டுள்ளது.
- ❖ 2014-15 ஆம் ஆண்டில் 1.57 கோடியாக இருந்த உயர்கல்வியில் பெண்களின் சேர்க்கை எண்ணிக்கை ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 2.07 கோடியாக அதிகரித்துள்ளது.
- ❖ இது 50 லட்சம் மாணவர்களின் அதிகரிப்பு (32 சதவீதம்) ஆகும்.
- ❖ 2014-15 ஆம் ஆண்டில் 46.07 லட்சமாக இருந்த பட்டியலின மாணவர்கள் சேர்க்கை ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 66.23 லட்சமாக இருந்தது (44 சதவீதம் அதிகரிப்பு).
- ❖ 2020-21 ஆம் ஆண்டில் 4.14 கோடியாக இருந்த உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை ஆனது 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 4.33 கோடியாக அதிகரித்துள்ளது.
- ❖ 2014-15 ஆம் ஆண்டில் 3.42 கோடியாக (26.5 சதவீதம்) இருந்த மாணவர் சேர்க்கையானது, சுமார் 91 லட்சம் அதிகரித்துள்ளது.

- 2020-21 ஆம் ஆண்டில் 29.01 லட்சமாகவும், 2014-15 ஆம் ஆண்டில் 21.02 லட்சமாகவும் இருந்த பட்டியலின சாதியினர் பிரிவினைச் சேர்ந்த மாணவிகளின் சேர்க்கையானது, 2021-22 ஆம் ஆண்டில் 31.71 லட்சமாக அதிகரித்துள்ளது.
- இது 2014-15 ஆம் ஆண்டில் இருந்து 51 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் 16.41 லட்சமாக இருந்த பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை ஆனது, 2021-22 ஆம் ஆண்டில் 27.1 லட்சமாக அதிகரித்துள்ளது (65.2 சதவீதம் அதிகரிப்பு).
- 2014-15 ஆம் ஆண்டில் 1.13 கோடியாக இருந்த இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 1.63 கோடியாக அதிகரித்துள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் 50.8 லட்சம் ஆக இருந்த இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினைச் சேர்ந்த மாணவர் சேர்க்கையில் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும்.
- மொத்த மாணவர்களில் சுமார் 78.9 சதவீதம் பேர் இளங்கலை நிலைப் படிப்புகளிலும், 12.1 சதவீதம் பேர் முதுகலை நிலைப் படிப்புகளிலும் சேர்ந்துள்ளனர்.
- மொத்தப் பல்கலைக்கழகங்களில் 58.6 சதவீதப் பங்கினைக் கொண்ட அரசுப் பல்கலைக் கழகங்கள், மொத்த சேர்க்கையில் 73.7 சதவீதப் பங்கினையும், மேலும் தனியார் பல்கலைக் கழகங்கள் 26.3 சதவீதப் பங்கினையும் கொண்டுள்ளன.
- பதிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்கள் / பல்கலைக்கழக அளவிலான கல்வி நிறுவனங்கள் 1,168, கல்லூரிகள் 45,473 மற்றும் எந்தவொரு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படாத நிறுவனங்கள் 12,002 ஆகும்.

## தொழுநோய்க்கான புதிய மும்மருந்து வழங்கீடு



- 2027 ஆம் ஆண்டிற்குள் உள் தேசிய அளவில் (நிர்வாகப் பிரிவுகள்) தொழுநோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட தொழுநோய்க்கான புதிய சிகிச்சை முறைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தொழுநோய் பரவுவதைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் மேற்கொண்டு வருகிறது.
- ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் இரண்டு மருந்து வழங்கீட்டு முறைக்கு பதிலாக பாசி-பேசிலரி (PB) பாதிப்புகளுக்கு மும்மருந்து வழங்கீட்டு விதிமுறைகளை அறிமுகப் படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் இந்த திருத்தியமைக்கப்பட்ட மருந்து வழங்கீட்டு முறைகளை பின்பற்ற உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- எனவே, அனைத்து மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் தொழுநோய் எதிர்ப்பு மருந்துகளைப் பெறுவதற்கான கோரிக்கைகளை 12 மாதங்களுக்கு முன்பே அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.
- இந்தியாவில் தொழுநோயின் திருத்தப்பட்ட வகைப்பாடு மற்றும் பாசி பேசிலரி மற்றும் மல்டி-பேசிலரி (MB) பாதிப்புகளுக்கான சிகிச்சை முறை ஆகியவை அதே தேதியில் இருந்து செயல்படுத்தப்படும்.
- உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கும் சிகிச்சை முறையானது டாப்சோன், ரிஃபாம்பிசின் மற்றும் க்ளோஃபாசிமைன் ஆகிய மூன்று மருந்துகளைக் கொண்டு உள்ளது.
- இந்த மருந்து கலவை MDT என குறிப்பிடப்படுகிறது.
- தொழுநோய் என்பது மைக்கோபாக்டீரியம் லெப்ரே பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு நாள்பட்ட தொற்று நோயாகும்.
- இலவசமாக வழங்கப்படும் MDT மருந்து ஆனது நிப்பான் அறக்கட்டளையினால் 2000 ஆம் ஆண்டு முதல் நிதியளிக்கப்பட்டு வருகிறது.

## விஜய் ராகவன் குழு அறிக்கை

- இந்த ஒன்பது பேர் கொண்ட குழுவானது, சமீபத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் செயல்பாடு குறித்த குறைகளை நிவர்த்தி செய்யும் விரிவான அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் பங்கு ஆனது, முன்மாதிரிகள் அல்லது தொழில்நுட்ப செயல்விளக்கங்களை உருவாக்குவது சாராமல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை மட்டுமே மேற்கொள்வதாகும்.
- மேலும், எந்தவொரு நுட்பத்தினை உருவாக்குதல் மற்றும் அதனை மேற்கொண்டு மேம்படுத்துதல் போன்ற பணியானது சில தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- நாடு முழுவதும் தற்போதுள்ள 40 அல்லது அதற்கு மேற்பட்ட பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் ஆய்வகங்களுக்குப் பதிலாக, 10 தேசிய அளவிலான ஆய்வக மையங்களை அமைக்க இக்குழு பரிந்துரைத்துள்ளது.
- இது தவிர, தனியார் துறை நிறுவனங்கள் தங்களது ஆயுத அமைப்புகளை பரிசோதித்துப் பார்ப்பதற்காக ஐந்து தேசிய சோதனை மையங்களை அமைக்கவும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் தொடர்பான வரையறுக்கப்பட்ட பொது விழிப்புணர்வு மற்றும் வெளிப்படைத் தன்மை ஆனது எதிர்மறையான கருத்து மற்றும் விமர்சனத்திற்கு வழி வகுக்கிறது.
- மாபெரும் அளவிலான உற்பத்திக்காக, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பிலிருந்து தனியார் துறை தொழிற்சாலைகளுக்கு புதிதாக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்களைத் திறன் மிக்க முறையில் பரிமாற்றவும் பரிந்துரைக்கப் பட்டு உள்ளது.
- பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் பாதுகாப்பு அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையை உருவாக்கவும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.

## TISS நிறுவனத்தின் SOTTTER அறிக்கை


**National average number of Schools (*), Teachers and Enrollment (**)**

| | Schools | Teachers | Students |
|---|---|---|---|
| Total | 1,489,115 | 9,507,123 | 265,235,830 |
| % rural of total | 82.92% | 70.09% | 69.71% |
| Government | 65.70% | 49.25% | 51.68% |
| % of govt in rural | 91.97% | 85.44% | 84.53% |
| Government (other) | 3.31% | 2.11% | 2.33% |
| Government Aided (***) | 5.54% | 8.38% | 10.19% |
| Private | 22.55% | 37.24% | 33.28% |
| % of private in rural | 60.70% | 52.22% | 50.92% |
| Madarsa (recognized) | 1.34% | 0.99% | 1.01% |
| Unrecognized | 1.91% | 2.03% | 1.51% |

- டாடா சமூக அறிவியல் கல்வி நிறுவனமானது (TISS), "ஒவ்வொரு குழந்தைக்குமான முறையான ஆசிரியர்: ஆசிரியர்கள், கற்பித்தல் மற்றும் ஆசிரியர் கல்வியின் நிலை குறித்த அறிக்கை 2023" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மகாராஷ்டிரா, பீகார், அசாம், சத்தீஸ்கர், கர்நாடகா, பஞ்சாப், மிசோரம் மற்றும் தெலுங்கானாவில் இருந்து தற்போது கிடைக்கப் பெறக் கூடிய தரவுகள் மற்றும் கணக்கெடுப்பு முடிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில், பிராந்திய மொழியில் குறைந்த அளவிலான திறன் உள்ளதாகக் குறிப்பிடுகிறது.
- 90% ஆசிரியர்கள் சில வகையான தொழில்முறை தகுதி சான்றிதழைக் கொண்டு உள்ளனர்.

- ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களில் 46% பேர் மட்டுமே தேவையான தகுதிச் சான்றிதழைக் கொண்டுள்ளனர்.
- பல மாநிலங்களில், தனியார் துறையானது ஆசிரியர் பணியாளர் வளத்தில் உள்ள 40% அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களை பணிக்கு அமர்த்தியுள்ளது.
- இந்தப் பள்ளிகளில் நூலகங்கள், கணினி ஆய்வகங்கள் மற்றும் இணைய அணுகல் போன்ற சிறந்த வசதிகள் உள்ள நிலையில், இது தனியார் பள்ளிகளில் 76% ஆகவும், அரசுப் பள்ளிகளில் 38% ஆகவும் உள்ளது.
- தனியார் அல்லது அரசு சாரா பள்ளிகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள் எழுத்துப் பூர்வ ஒப்பந்தங்கள் இல்லாமல் பணி புரிவதாகக் கூறினர்.
- அரசுப் பள்ளிகளிலும், தங்கள் குழந்தைகளுக்கு கல்விக்கான போதிய வசதிகள் வழங்க முடியாத பெற்றோர்கள் அதிக விகிதத்தில் (41%) இருப்பதாகப் பதிவாகி உள்ளது.
- அரசுப் பள்ளிகளில் 36 சதவீதம் மற்றும் தனியார் பள்ளிகளில் 65 சதவீதம் என ஒட்டு மொத்த உடற்கல்வி ஆசிரியர்கள் பணியமர்த்தல் குறைவாகவே உள்ளது.
- 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமைச் சட்டம் ஆனது, மாணவர்-ஆசிரியர் விகிதமானது பள்ளி அளவில் 1 முதல் 5 ஆம் வகுப்புகளுக்கு 30:1 ஆகவும் மற்றும் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு 35:1 ஆகவும் இருக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கியுள்ளது.

## மூங்கில் கூட்டுப்பொருள் தொழில்நுட்பம்




- இந்திய சர்வதேச அறிவியல் விழாவின் (IISF 2023) இரண்டாவது நாளின் போது, "மூங்கில் கூட்டுப்பொருட்கள்" பற்றிய செய் நுட்ப நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆனது மூங்கில் சார்ந்த பொருட்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.
- மூங்கில் கூட்டுப்பொருள் என்பது மூங்கில் இழைகளை மற்ற பொருட்களுடன் கலந்து ஒரு கூட்டுப் பொருட்களை உருவாக்கும் பொருட்கள் ஆகும்.
- இந்த மூங்கில் கூட்டுப்பொருள் தயாரிப்பு ஆனது, நீடித்து உழைக்கும் திறன் மற்றும் பரிமாண அடிப்படையிலான நிலைப்புத் தன்மை, அதிக வலிமை, அடர்த்தி, இயந்திர வலிமை, தீ தடுப்பு, ஈரப்பத எதிர்ப்புத் திறன் மற்றும் இயற்கை மற்றும் அழகியல் தோற்றத்துடன் கூடிய தேக்கு மரத்தை ஒத்திருக்கிறது.
- வளர்வதற்கு 30-40 ஆண்டுகள் எடுக்கும் தேக்கு மரத்தைப் போலல்லாமல், 3 முதல் 4 ஆண்டுகளுக்குள் வளர்ந்து விடும் மூங்கில்களை சிறந்த மூங்கில் கூட்டுப்பொருட்கள் உருவாக்கப் பயன்படுத்தலாம்.

- மூங்கில் சிறந்த $CO_2$ உறிஞ்சி ஆகும் என்பதோடு, இது அதிக அளவில் ஆக்ஸிஜனை வெளியிடுவதால் (தோராயமாக 35%) புவி வெப்பமடைதலைத் தணிக்கவும் இது உதவுகிறது.

## பசுமை சார் உரிமைகோரல்களுக்கான வழிகாட்டுதல்கள்

- இந்திய விளம்பர தர நிர்ணய சபை (ASCI) ஆனது, போலியான சுற்றுச்சூழலுக்கு உகந்தவை என்ற தவறான உரிமை கோரல்களைத் தடுப்பதற்காக வேண்டி வழி காட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இந்த வரைவு வழிகாட்டுதல்கள் ஆனது, பசுமைக் கண்துடைப்பு - சுற்றுச்சூழலுக்கு உகந்தவை என்ற தவறான உரிமை கோரல்களை முன்வைத்து ஏமாற்றும் நடைமுறை - செய்வதை ஒழிப்பதை இலக்காகக் கொண்டுள்ளன.
- இது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளதால் விளம்பரங்களில் குறிக்கப்படும் பசுமை உரிமை கோரல்கள் நம்பகமானவை, மெய்ப்பிக்கத் தக்கவை மற்றும் வெளிப்படையானவையாக இருக்க வேண்டும் என்பதை இது கட்டாயமாக்குகிறது.
- "பசுமை" அல்லது "சுற்றுச்சூழலுக்கு உகந்தவை" போன்ற உரிமை கோரல்களை உருவாக்கும் விளம்பரங்கள் அதற்கான ஆதாரங்களை வழங்க வேண்டும்.
- விளம்பரங்கள் தனது சட்ட இணக்கத்தையே சுற்றுச்சூழல் சாதனையாக சந்தைப் படுத்த முடியாது.
- தனது போட்டி நிறுவனத்திடம் சுற்றுச்சூழலுக்கு நன்மையளிக்கும் ஓர் அம்சத்தினைக் கொண்டிராத பட்சத்தில், தன்னிடம் சுற்றுச்சூழலை சேதப்படுத்திடும் அத்தகையக் கூறுகள் இல்லை என்று அந்த நிறுவனம் குறிப்பாக முன்னிலைப் படுத்த முடியாது.




## அனைத்து மகளிர் படைப்பிரிவு அணிவகுப்பு

- ஆயுதப் படைகள், எல்லைப் பாதுகாப்புப் படை, டெல்லி காவல் துறை மற்றும் அக்னி வீரர்கள் ஆகியப் படைப் பிரிவுகளைச் சேர்ந்த மகளிர் டெல்லியின் கர்தவ்யா வழித் தடத்தில் அணிவகுப்பினை நடத்தினர்.

- துணைப் படைத்தலைவர் ஆஷு யாதவ், விமானப்படைத் தலைவர் ஷ்ரிஷ்டி வர்மா மற்றும் தலைவர் சரண்யா ராவ் ஆகியோருடன் இணைந்து கேப்டன் சந்தியா மஹ்லா முப்படைகளின் அனைத்து மகளிர் படைப்பிரிவின் அணிவகுப்பினை வழிநடத்திச் சென்றார்.
- இந்தப் படைப்பிரிவு ஆனது, மூன்று படைப்பிரிவுகளையும் சேர்ந்த மகளிர் அக்னி வீரர்களைக் கொண்ட குழுவாகும்.
- முதன்முறையாக, மேஜர் சிருஷ்டி குல்லர் தலைமையில், ஆயுதப்படை மருத்துவப் பணியைச் சேர்ந்த அனைத்து மகளிர் குழு கர்தவ்யா வழித்தடத்தில் அணிவகுப்பினை மேற்கொண்டது.
- இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அணிவகுப்பினை மேற்கொண்ட 149 பேர் கொண்ட பாம்பே சப்பர்ஸ் குழுவின் அணிவகுப்பினை பெண் அதிகாரி மேஜர் திவ்யா தியாகி வழிநடத்திச் சென்றார்.
- டெல்லி காவல் படையின் வரலாற்றில் முதல்முறையாக இந்தியக் காவல் பணி அதிகாரி ஸ்வேதா K. சுகதன் அவர்கள், மகளிர் பணியாளர்களை மட்டும் உள்ளடக்கிய படையின் அணிவகுப்பினை வழிநடத்திச் சென்றார்.
- இந்திய விமானப்படையின் (IAF) அணிவகுப்பினைப் படைத் தலைவர் ரஷ்மி தாக்கூர் வழிநடத்திச் சென்றார்.
- இந்தியக் கடலோர காவல்படையின் அணி வகுப்பினை துணைப் படைத்தளபதி சௌநதி ஷர்மா வழிநடத்திச் சென்றார்.
- இரண்டாவது முறையாக, அலங்கரிக்கப்பட்ட ஒட்டகங்களில் மகளிர் ஒட்டகச் சவாரி குழுவினர் இந்த அணி வகுப்பில் பங்கேற்றனர்.




## ஐடேட் ஆணைய அறிக்கை

- தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) ஆனது பிகு ராம்ஜி ஐடேட் ஆணையத்தின் அறிக்கையை அமல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளது.
- ஐடேட் ஆணையம் ஆனது, தனது அறிக்கையை 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சமர்ப்பித்தது.
- இந்தியாவில் நாடோடியாக உள்ள பழங்குடியினர், பகுதியளவு நாடோடியாக உள்ள பழங்குடியினர் மற்றும் சீர் மரபினருக்கான (NTs, SNTs மற்றும் DNTs) ஒரு நிரந்தர ஆணையத்தினை அமைப்பதற்கு இக்குழு பரிந்துரைத்துள்ளது.

- 2008 ஆம் ஆண்டின் ரென்கே ஆணையத்தின் அறிக்கையானது, அவர்களின் மக்கள் தொகை 10-12 கோடிக்கு இடையில் இருக்கும் என்று தோராயமாக மதிப்பிட்டுள்ளது.
- ஆனால் அந்த ஆணையத்தின் பரிந்துரைகள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.
- 1952 ஆம் ஆண்டு தொடர் குற்றவாளிகள் சட்டத்தினை ரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையெனில், அந்தச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள படி ஒரு முதன்மை அதிகாரியின் இடத்தில், சீர் மரபினப் பழங்குடி சமூகத்தினருக்கான ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்றும் அந்த ஆணையம் கூறியது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்/இதரப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் கீழ், சீர் மரபின பழங்குடியினர்/நாடோடியாக உள்ள பழங்குடியினர் /பகுதியளவு நாடோடியாக உள்ள பழங்குடியினர் சேர்க்கப்படாதது மற்றும் இதரப் பிரிவுகளுடன் மேற்கூறியப் பிரிவினருக்குமாக என்று பிரத்தியேக கொள்கைகளை உருவாக்குவது குறித்தும் அந்த ஆணையம் பரிந்துரைத்தது.

## போயிங் சுகன்யா திட்டம்





- கர்நாடகாவின் பெங்களூருவில் புதிய அதிநவீன போயிங் இந்தியா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (BIETC) வளாகம் திறக்கப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்வின் போது போயிங் சுகன்யா திட்டமும் தொடங்கப்பட்டது.
- இந்தியா முழுவதிலும் இருந்து அதிக எண்ணிக்கையில் சிறுமிகளை நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறையில் ஆர்வம் காட்டச் செய்து அத்துறையில் நுழையச் செய்வதை ஆதரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) துறைகளில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு முக்கியமான திறன்களைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை இந்தத் திட்டம் வழங்கும்.
- இளம் பெண்கள் மத்தியில், STEM தொழில் துறைகளில் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக 150 திட்டமிடப்பட்ட இடங்களில் STEM ஆய்வகங்களை இந்தத் திட்டம் உருவாக்க உள்ளது.
- இது விமானியாக பயிற்சி பெறும் பெண்களுக்கு உதவித்தொகையும் வழங்குகிறது.

## VAIBHAV புத்தாய்வு மாணவர் திட்டம்

- இந்திய வம்சாவளி ஆராய்ச்சியாளர்களை ஓராண்டில் அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்கு இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றச் செய்வதற்காக VAIBHAV புத்தாய்வு மாணவர் திட்டத்தினை அரசாங்கம் தொடங்கி உள்ளது.
- இந்தப் புத்தாய்வு மாணவர் திட்டமானது வெளிநாடு வாழ் இந்தியராக உள்ள ஆராய்ச்சியாளர்களை இந்தியாவில் உள்ள ஓர் ஆராய்ச்சி நிறுவனம் அல்லது ஒரு கல்வி நிறுவனத்தில் ஓராண்டிற்கு குறைந்தபட்சமாக ஒரு மாதம் முதல் அதிகபட்சமாக இரண்டு மாதங்கள் வரை பணிபுரிவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.
- இந்தப் புத்தாய்வு மாணவர் திட்டத்தின் காலம் ஆனது, மூன்று ஆண்டுகள் ஆகும். இந்த முழு காலத்திற்கும் அரசாங்கம் ஆராய்ச்சியாளர்களுக்கு 37 லட்சம் ரூபாய் வரை வழங்குகிறது.
- இது 2018 ஆம் ஆண்டின் குறுகிய கால (வருகை) மேம்பட்ட கூட்டு ஆராய்ச்சி ஆசிரியர் (வஜ்ரா) திட்டத்தைப் போன்றது ஆகும்.




## ஆதார் அட்டையின் நிலை



- ஆதார் அட்டைகள் மற்றும் அவற்றின் டிஜிட்டல் பிரதிகள் ஆனது, தற்போது பிரதானமாக, "அடையாளச் சான்று" ஆக மட்டுமே குறிப்பிடப்படுகின்ற நிலையில், அவற்றைக் குடியுரிமை அல்லது பிறப்பு தேதிக்கான சான்றாக குறிப்பிட முடியாது.
- எனவே, இனிமேல் குடியுரிமை அல்லது வயதை உறுதிப்படுத்த ஆதார் அட்டையினைப் பயன்படுத்தக் கூடாது.
- வெளிநாட்டினர் கூட இந்தியாவில் 6 மாதங்கள் தங்கிய பிறகு ஆதார் அட்டையினைப் பெற இயலும்.
- ஆதார் என்பது இந்தியக் குடிமக்களின் தனித்துவமான அடையாளம் மற்றும் அவரது வசிப்பிடத்திற்கான சான்றாக மட்டுமே விளங்குகிறது.


## PM YASASVI திட்டம்

- 2023 ஆம் ஆண்டில் PM YASASVI திட்டத்தின் கீழ் மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கு மேல்நிலைக் கல்வி உதவித் தொகைக்காக மொத்தம் 32.44 கோடி ரூபாயும், உயர் கல்வி உதவித் தொகைக்காக 387.27 கோடி ரூபாயும் வழங்கப் பட்டு உள்ளது.
- இது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBCs), பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் (EBC) மற்றும் சீர் மரபின நாடோடிப் பழங்குடியினர் (DNT) மாணவர்களுக்கான உதவித் தொகை திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் மாணவர் கள் 9 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மேல்நிலைக் கல்வி உதவித்தொகையையும், மெட்ரிகுலேஷன் அல்லது மேல்நிலைக் கல்விக்குப் பிந்தைய உயர்கல்வி பயிலும் மாணவர்கள் போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகையையும் பெறலாம்.
- கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்கள் உயர்தரப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிப்பதற்கான உதவித் தொகை வாய்ப்பைப் பெறுவர்.



## பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் நிதிநிலை

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் நிதி பற்றிய இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) முதல் அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் தனது சொந்த வரி மற்றும் வரி சாரா வருவாய் மூலங்களைப் பெருக்கவும், நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குமான முயற்சிகளை தீவிரப் படுத்த வேண்டும்.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் வருவாயில் சுமார் 95% ஆனது மத்திய மற்றும் மாநிலங்களிடமிருந்துப் பெறப்படும் மானிய வடிவில் உள்ளது.
- மாநில நிதி ஆணையங்களை அமைப்பதில் ஏற்படும் தாமதங்களால் ஏற்கனவே தடை பட்டுள்ள அவற்றின் செலவினத் திறனை இது மேலும் கட்டுப்படுத்துகிறது.
- அனைத்து மூலங்களிலிருந்தும் ஒரு பஞ்சாயத்து பெறும் சராசரி வருவாய் - வரிகள், வரி சாராதவை மற்றும் மானியங்கள் ஆகியவை முறையே 2020-21 ஆம் ஆண்டில் ரூ. 2.12 மில்லியனாகவும், 2021- 22 ஆம் ஆண்டில் ரூ. 2.32 மில்லியனாகவும், 2022-23 ஆம் ஆண்டில் ரூ. 2.12 மில்லியனாகவும் இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் பதிவான சரிவு ஆனது, குறைந்த மானியப் பகிர்வு காரணமாக ஏற்பட்டதாகும்.
- பஞ்சாயத்து அமைப்புகளின் சொந்த வருவாய் ஆனது அவற்றின் மொத்த வருவாயில் 1.1% மட்டுமே ஆகும்.
- இது நில வருவாய், தொழில் முறை மற்றும் வர்த்தக வரிகள் மற்றும் இதர கட்டணங்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளின் மீது உள்ளூர் வரிகள், கட்டணங்கள் மற்றும் சந்தாக்கள் விதிப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது.
- வரி சாரா வருவாய் ஆனது, முதன்மையாக பஞ்சாயத்து ராஜ் திட்டங்களிலிருந்தும், அவற்றின் மொத்த வருவாய் வரவில் 3.3% பங்கினைக் கொண்டிருக்கும் வட்டி வருவாயிலிருந்தும் பெறப்படுகிறது.
- தமிழ்நாடு, இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகள் மற்ற மாநிலங்களை விட அதிக வரி சாரா வருவாயைப் பெற்றுள்ளன.
- 2020-21 ஆம் ஆண்டில் 17.3 லட்சம் ரூபாயாக இருந்த ஒரு பஞ்சாயத்து அமைப்பிற்கான சராசரி செலவினம் ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 12.5 லட்சம் ரூபாயாக குறைந்து உள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டு பெருந்தொற்றுக் காலத்தில் வழக்கத்தை விட அதிகமான அளவில் செலவழித்ததன் காரணமாக இந்தச் சரிவு பதிவாகியுள்ளது.
- கோவா, கர்நாடகா, ஒடிசா, சிக்கிம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் பஞ்சாயத்து அமைப்புகளில் அதிக சராசரி செலவினங்கள் பதிவாகியுள்ளன.
- மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பஞ்சாயத்து அமைப்புகளின் வருவாய் செலவினங்களின் விகிதமானது அனைத்து மாநிலங்களுக்கும் 0.6 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது.
- இது பீகாரில் 0.001 சதவீதமாகவும், ஒடிசாவில் 0.56 சதவீதமாகவும் உள்ளது.




## ஞானவாபி மசூதி ஆய்வறிக்கை

- வாரணாசியில் அமைந்துள்ள ஞானவாபி மசூதி கட்டப்படுவதற்கு முன்பு அங்கு ஒரு பெரிய இந்து கோவில் இருந்ததாக இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) அறிக்கை கூறியுள்ளது.
- "தற்போதையக் கட்டமைப்பில் ஏற்கனவே உள்ள கட்டமைப்பின் தூண்கள் மற்றும் சதுரத் தூண்களின் மறுபயன்பாடு இருப்பதாக அந்த அறிக்கை கூறியுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் ஞானவாபி மசூதி ஆனது, 600 ஆண்டுகளுக்கு முன்பு ஜான்பூரின் ஜமீன்தாரால் (நில உரிமையாளர்) கட்டமைக்கப்பட்டது.
- இது முகலாயப் பேரரசர் அக்பரின் ஆட்சியின் போது புணரமைக்கப் பட்டது.
- பின்னர் ஞானவாபி மசூதியின் விரிவாக்கம் மற்றும் புணரமைப்புப் பணிகள் ஆனது முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பால் மேற்கொள்ளப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## கொழும்பு பாதுகாப்பு மன்றம்

- இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (NSA), அஜித் தோவல், கொழும்பு பாதுகாப்பு மன்றத்தின் (CSC) 6வது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கூட்டத்தில் பங்கேற்றார்.
- இக்கூட்டத்தில் மொரீஷியஸ் மற்றும் இலங்கை ஆகிய உறுப்பினர் நாடுகளும், வங்காள தேசம் மற்றும் செய்ஷெல்ஸ் ஆகிய பார்வையாளர் நாடுகளும் பங்கு பெற்று இருந்தன.
- இலங்கை அரசானது இந்தியா மற்றும் மாலத்தீவுகளுடனான ஒரு முத்தரப்பு கடல் பாதுகாப்பு குழுவில் இணைந்ததையடுத்து, 2011 ஆம் ஆண்டில் இந்த அமைப்பு தாமாக உருவானது.
- 2020 ஆம் ஆண்டில், மொரீஷியஸ், செய்ஷெல்ஸ் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளுக்கு கொழும்பு பாதுகாப்பு மன்றத்தினை விரிவுபடுத்துவதில் இந்தியா விருப்பம் தெரிவித்தது.

## வெனிசுலா மற்றும் கயானா இடையேயான எல்லை தகராறு

- வெனிசுலா மற்றும் கயானா ஆகிய நாடுகள் எல்லைப் பிராந்தியம் தொடர்பான தங்களது நீண்ட கால தகராறில் ஒன்றுக்கொன்று அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது படைகளைப் பயன்படுத்தவோ கூடாது என ஒப்புக் கொண்டு உள்ளன.
- நிலுவையில் பிரச்சனைகள் ஏதேனும் இருந்தால், அடுத்த மூன்று மாதங்களுக்குள் மீண்டும் இரு நாடுகளும் பிரேசிலில் சந்தித்து அவற்றைத் தீர்க்க திட்டமிட்டுள்ளன.
- வெனிசுலா நாடானது, ஸ்பெயினின் காலனித்துவ காலத்தில் எஸ்கியோபோ என்ற பகுதி அதன் எல்லைக்குள் இருந்ததால் அந்தப் பகுதியானது அதன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- ஆனால் கயானா நாடானது, 1899 ஆம் ஆண்டில் சர்வதேச நடுவர்களால் நிர்ணயிக்கப் பட்ட எல்லையானது அது கயானாவின் ஒரு பகுதி என்று கூறுகிறது.
- கயானா நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றம் மூலம் இந்த சர்ச்சையைத் தீர்க்க வேண்டும் என்று வாதிடுகிறது.
- ஆனால் வெனிசுலா நாடானது இந்த விவகாரத்தில் அந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று கூறுகிறது.




## BRICS அமைப்பில் அர்ஜென்டினா

- வளர்ந்து வரும் நாடுகளின் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணையப் போவதில்லை என அர்ஜென்டினா அறிவித்துள்ளது.
- இந்த கூட்டமைப்பு ஆனது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கியது.

- மேற்கத்திய நாடுகள் தலைமையிலான உலகளாவிய அமைப்பினை எதிர்கொள்ளும் முயற்சியில் ஆறு புதிய உறுப்பினர்களை இணைப்பதாக இந்த அமைப்பு அறிவித்தது.
- அர்ஜென்டினா, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, எகிப்து மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் உறுப்பினர் அந்தஸ்து 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர இருந்தது.
- அர்ஜென்டினாவின் புதிய அதிபரின் புவிசார் அரசியல் பெரும்பாலும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நோக்கியதாக உள்ளது.




## ஜப்பான் நிலநடுக்கம்




- 7.6 ரிக்டர் அளவிலான பெரிய நிலநடுக்கம் ஆனது வட-மத்திய ஜப்பானைத் தாக்கியது.
- அதன் பிறகு, ஜப்பான் வானிலை ஆய்வு மையம் ஆனது இஷிகாவா, நிகாடா மற்றும் டோயாமா மாகாணங்களின் கடலோரப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கையை வெளியிட்டது.

- இஷிகாவா பிராந்தியத்தில் உள்ள வாஜிமா நகரின் கடற்கரையை 1 மீட்டருக்கும் அதிகமான உயரத்திலான அலைகள் தாக்கியது.
- கடந்த வாரம் ஜப்பானின் குரில் தீவுகளில் ரிக்டர் அளவுகோலில் 6.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வடகிழக்கு ஜப்பானில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட 9.0 ரிக்டர் அளவிலான மாபெரும் நிலநடுக்கத்தால் ஜப்பான் கடுமையாக பாதிக்கப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில், ஃபுகுஷிமா கடற்கரையில் ஏற்பட்ட 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் கிழக்கு ஜப்பானின் பெரிய பகுதிகளை உலுக்கியது.
- தலைநகர் டோக்கியோ, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு 1923 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தினால் சிதைந்தது.

## சீனாவின் மெங்சியாங் கப்பல்

- சீனா மெங்சியாங் எனப்படும் தனது முதல் கடல்சார் எண்ணெய்க் கிணறுகள் துளையிடும் கப்பலினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பூமியின் கண்ட மேலோட்டினை முழுமையாக ஆராய்ந்து, கவச அடுக்கிலுள்ள (மூடகம்) மர்மங்களை ஆராயும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் வெற்றியடைந்தால், இது புவியின் மேல் மூடகத்தில் மனித குலம் மேற் கொண்ட முதல் ஆய்வினைக் குறிக்கும்.
- மேலும், கடலின் மேற்பரப்பிலிருந்து 11,000 மீட்டர் கீழே வரை துளையிடும் திறனுடன் அதன் துளையிடும் திறன் இந்த ரகத்தில் சிறந்ததாக உள்ளது.



## வாடிகனில் பெண்களுக்கான வாக்குரிமை

- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், போப் பிரான்சிஸ் முதன்முறையாக ஆயர் பேரவையில் பெண்கள் வாக்களிக்க அனுமதித்தார்.
- இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையின் மூலம், வாடிகன் நகரம் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிய உலகின் கடைசி நாடாக மாறியது.

- முன்னதாக 2021 ஆம் ஆண்டில், பிரான்சிஸ் அவர்கள் முதன்முறையாக ஒரு பெண்ணை வாடிகன் நகரத்தின் ஆளுநர் பதவியில் இரண்டாவது பதவி நிலை இடத்திற்கு நியமித்தார்.
- இதன் மூலம் பாதிரியை ரஃபேல்லா பெட்ரினி உலகின் மிகச்சிறிய நாட்டின் மிகவும் உயர்ந்த தர நிலைப் பதவியில் உள்ள பெண்மணி ஆனார்.




## சர்வதேச விண்வெளி நிலையத்தில் ரஷ்யா



- சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) 2025 ஆம் ஆண்டு வரை பணியாளர்களை கொண்டு செல்வதற்காக ரஷ்ய மற்றும் அமெரிக்க விண்வெளி முகமைகள் இணைந்து பணியாற்ற ஒப்புக் கொண்டுள்ளன.
- பனிப்போர் சார்ந்த “விண்வெளி சார் போட்டிக்கு” பிறகு அமெரிக்க-ரஷ்யா ஒத்துழைப்பு அதிகரித்த நேரத்தில் 1998 ஆம் ஆண்டில் சர்வதேச விண்வெளி நிலையம் தொடங்கப்பட்டது.

- சர்வதேச விண்வெளி நிலையத்தில் பங்குதாரர்களாக உள்ள அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா, கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் 2024 ஆம் ஆண்டு வரை மட்டுமே இந்த சுற்றி வரும் ஆய்வகத்தை இயக்குவதற்கு உறுதி பூண்டுள்ளன.
- சர்வதேச விண்வெளி நிலையத்தை 2028 ஆம் ஆண்டு வரை பயன்படுத்த திட்டம் இட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

## BRICS அமைப்பின் விரிவாக்கம் 2024

- சவூதி அரேபியா, எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான் மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகள் ஜனவரி 01 ஆம் தேதியன்று பிரிக்ஸ் குழுவில் இணைந்தன.
- தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற உள்ள 15வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் ஐந்து நாடுகளும் BRICS அமைப்பில் இணைய இருந்தன.
- அர்ஜென்டினா நாட்டிற்கும் இக்குழுவில் இணைய அழைப்பு விடுக்கப்பட்டது, ஆனால் டிசம்பர் மாத இறுதியில் அந்நாடு அந்த முடிவில் இருந்து பின்வாங்கியது.
- வளர்ந்து வரும் நாடுகளின் BRICS அமைப்பு ஆனது 2006 ஆம் ஆண்டில் பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் உருவாக்கப்பட்ட நிலையில் தென் ஆப்பிரிக்கா 2010 ஆம் ஆண்டில் இக்குழுவில் இணைந்தது.




## இஸ்ரேலுக்கு எதிரான இனப்படுகொலை வழக்கு

- 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை உடன்படிக்கையின் கீழ் உள்ள கடமைகளை இஸ்ரேல் மீறுவதாக அறிவிக்கும் வகையிலான ஒரு அவசர உத்தரவினை விடுக்குமாறு சர்வதேச நீதிமன்றத்தை (ICJ) தென்னாப்பிரிக்கா நாடியது.
- ICJ என்பது உலக நாடுகளுக்கு இடையிலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் தளமாகும்.
- ‘இனப்படுகொலை’ என்ற சொல் ஆனது, இனப்படுகொலை குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டனை விதித்தல் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் 1948 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவுருக்களைப் பயன்படுத்தி வரையறுக்கப் பட்டுள்ளது.

- தற்போதைய உடன்படிக்கையில், இனப்படுகொலை என்பது ஒரு தேசிய, இன, பிரிவு அல்லது சமயக் குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் ஒரு நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் பின்வரும் சில செயல்களில் ஏதேனும் ஒன்றைக் குறிக்கிறது:
  - ஒரு குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது;
  - ஒரு குழுவின் உறுப்பினர்களுக்கு கடுமையான உடல் சார்ந்த அல்லது மனம் சார்ந்த பாதிப்பை ஏற்படுத்துதல்;
  - ஒரு குழுவை முழுமையான அல்லது பகுதியளவிலான நேரடி அழிவைக் கொண்டு வருவதற்காக உணர்வுடன் அக்குழுவின் உறுப்பினர்களை துன்புறுத்துதல்;
  - குழுவிற்குள் புதியக் குழந்தை பிறப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;
  - குழுவினைச் சேர்ந்த குழந்தைகளை வலுக்கட்டாயமாக வேறு குழுவிற்கு மாற்றச் செய்தல்.
- 2019 ஆம் ஆண்டில், காம்பியா நாடானது, இஸ்லாமியக் கூட்டாண்மை அமைப்பின் சார்பாக, மியான்மர் ரோஹிங்கியா மக்களுக்கு எதிரான அட்டூழியங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

## சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகத்தில் இந்தியா

- இந்தியா சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகம் (SKAO) என்ற ஒரு மிகப்பெரிய விண்வெளி ஆய்வுத் திட்டத்தில் சேர்ந்துள்ளது.
- SKAO என்பது ஒரே ஒரு தொலைநோக்கி அல்ல, மாறாக தென்னாப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள தொலைதூர ரேடியோ அலைகள் இடையூறு இல்லாத இடங்களில் நிறுவப்படும் ஆயிரக்கணக்கான அலை வாங்கிகளின் தொடரமைப்பு ஆகும்.
- இது வானியல் நிகழ்வுகளைக் கண்காணித்து ஆய்வு செய்வதற்காக ஒரு பெரிய அலகாகச் செயல்படும்.
- ஐக்கியப் பேரரசு, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, கனடா, சீனா, பிரான்ஸ், இந்தியா, இத்தாலி மற்றும் ஜெர்மனி ஆகியவை SKAO கட்டமைப்பில் பங்கேற்கும் சில நாடுகளாகும்.



## டென்மார்க் நாட்டின் அரசி இரண்டாம் மார்கிரேத்

- ❖ டென்மார்க் நாட்டின் அரசி இரண்டாம் மார்கிரேத், 52 ஆண்டு கால ஆட்சிக்குப் பிறகு தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.
- ❖ அவர் அரியணையை தனது மகனும் பட்டத்து இளவரசருமான ஃபிரடெரிக்கிடம் ஒப்படைக்க உள்ளார்.
- ❖ அரசர் ஒன்பதாம் ஃபிரடெரிக் இறந்ததைத் தொடர்ந்து இராணி இரண்டாம் மார்கிரேத் 1972 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதியன்று அரியணை பொறுப்பை ஏற்றார்.
- ❖ கடந்த ஆண்டு பிரிட்டன் அரசி இரண்டாம் எலிசபெத் அவர்களின் மரணத்திற்குப் பிறகு, ஐரோப்பாவில் நீண்ட காலம் பதவியில் இருந்த ஆட்சியாளராக மார்கிரேத் ஆனார்.
- ❖ டென்மார்க் நாட்டின் அரச குடும்பத்தார் நாட்டின் அரசியலமைப்பின் கீழ், வரையறுக்கப் பட்ட பங்கையே கொண்டுள்ள நிலையில் நாட்டின் அதிகாரம் அதன் பாராளுமன்றத்திடம் உள்ளது.
- ❖ அரசர்/அரசிகள் முக்கிய தூதரகப் பங்கினையும் புதிய சட்டத்தில் கையெழுத்திடுதல் போன்ற பங்கினையும் வகிக்கிறார்கள்.



## பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டுக்கள்





- ❖ வரவிருக்கும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் பார்வையாளர்களுக்கு எண்ணிம ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டுக்களை வழங்கும் முதல் ஐரோப்பிய நாடாக பிரான்சு மாற உள்ளது.
- ❖ 70,0000 பிரெஞ்சு ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டுகளுக்காக முற்றிலும் இயங்கலை நடைமுறைகளுக்கு மாறுவதற்கான திட்டங்களை பிரான்சு அறிவித்துள்ளது.

- கடந்த ஆண்டு, ஐரோப்பிய ஒன்றியம் ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டுகளை எண்ணிம மயமாக்கும் திட்டத்தை அறிவித்தது.
- ஷெங்கன் பகுதியில் 27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளில் 23 நாடுகளும், அண்டை நாடுகளான சுவிட்சர்லாந்து, நார்வே, ஐஸ்லாந்து மற்றும் லிச்சென்ஸ்டைன் ஆகியவை அடங்கும்.

## வங்காளதேச தேர்தல் 2024

- தேர்தலில் தனது அவாமி லீக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றதைத் தொடர்ந்து தற்போதையப் பிரதமர் ஷேக் ஹசீனா ஐந்தாவது முறையாக பதவி ஏற்று உள்ளார்.
- அவாமி லீக் மொத்தமுள்ள 224 இடங்களில் 216 இடங்களைக் கைப்பற்றி வாக்கு எண்ணிக்கையின் ஆரம்பத்திலேயே முன்னிலை பெற்றது.
- ஐந்தாவது முறையாகப் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக் ஹசீனா, உலகின் மிக நீண்ட காலம் பதவி வகித்த பெண் அரச தலைவர் என்ற பெருமையினைப் பெற்று உள்ளார்.

## பனிச்சிறுத்தை - தேசிய சின்னம்




- கிர்கிஸ்தான் நாடானது, பனிச்சிறுத்தையை தனது தேசிய சின்னமாக அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- பாந்தெரா அன்சியா / பனிச்சிறுத்தை ஆனது, கிர்கிஸ் மக்களின் புகழ்பெற்ற நாயகனான மனாஸுடன் தொடர்புடைய ஒரு குலமரபு விலங்காக பண்டைய கிர்கிஸ் கலாச்சாரத்தில் முக்கியத்துவம் பெற்றது.


- கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக் நகரில் 2013 ஆம் ஆண்டு உலகளாவிய பனிச் சிறுத்தை மன்றத்தின் தொடக்க விழா நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்வின் போது, பனிச்சிறுத்தைப் பாதுகாப்பு குறித்த பிஷ்கெக் பிரகடனம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- உலகளாவிய பனிச்சிறுத்தை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டம் (GSLEP) ஆனது, பனிச்சிறுத்தைகள் காணப்படும் இந்தியா உள்ளிட்ட 12 நாடுகளின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது.

## ஐகை அரண்மனை



- வடக்கு கிரீசு (கிரேக்கம்) நகரில் உள்ள ஐகை அரண்மனை ஆனது 16 ஆண்டு கால சீரமைப்புப் பணிக்குப் பிறகு முழுமையாக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.
- இது 2,300 ஆண்டுகளுக்கு முன்பு அலெக்சாண்டரின் தந்தை இரண்டாம் பிலிப் அவர்களின் ஆட்சியின் போது கட்டமைக்கப் பட்டது.
- பண்டைய கிரேக்கத்தின் மிகப்பெரிய கட்டிடமாக திகழ்ந்த இந்த அரண்மனையானது 15,000 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.
- கி.மு. 148 ஆம் ஆண்டில் ரோமானியர்களால் ஐகை அரண்மனை அழிக்கப்பட்டது.

## குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள்




- "குறிப்பாக கடுமையான மதச் சுதந்திர மீறல்களில்" ஈடுபடுவதற்காகவும் அவற்றிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததற்காகவும் சில நாடுகளை "குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள்" ஆக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

- அவை பர்மா, சீனா, கியூபா, வட கொரியா, எரித்திரியா, ஈரான், நிகரகுவா, பாகிஸ்தான், ரஷ்யா, சவுதி அரேபியா, தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகள் ஆகும்.
- கூடுதலாக, அல்ஜீரியா, அஜர்பைஜான், மத்திய ஆப்பிரிக்க குடியரசு, கொமொரோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை கடுமையான மதச் சுதந்திர மீறல்களில் ஈடுபடுகின்ற அல்லது அவற்றிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத நாடுகள் அடங்கிய சிறப்பு கண்காணிப்புப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது.

## அல்வாரோ புயல்




- அல்வாரோ எனப்படும் 2024 ஆம் ஆண்டின் முதல் புயலானது மடகாஸ்கரில் மொரோம்பே அருகே கரையைக் கடந்தது.
- 2023-2024 ஆம் ஆண்டின் புயல் உருவாக்கப் பருவத்தில் மடகாஸ்கரை தாக்கிய முதல் புயல் இதுவாகும்.
- மடகாஸ்கர் உள்ளிட்ட தென்னாப்பிரிக்கப் பிராந்தியத்தில் தற்போதுள்ள முன்னெச்சரிக்கை அமைப்புகள் உயிர் இழப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிகளைத் தடுக்கப் போதுமானதாக இல்லை.

## உலகளாவியப் பொருளாதாரத் தாங்குதிறன்

- வீழ்ச்சி நிலையில் இருந்து 2021 ஆம் ஆண்டில் 6.2 சதவீதத்திற்கு உயர்ந்த பிறகு, உலக வங்கியின் உலக வளர்ச்சி மதிப்பீடுகள் 2022 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாகவும், பின்னர் 2023 ஆம் ஆண்டில் 2.6 சதவீதமாகவும் இருக்கும் என்று மதிப்பிடுகிறது.
- 2025 ஆம் ஆண்டில் 2.7 சதவீதமாக உயரும் முன், 2024 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார வளர்ச்சி மேலும் 2.4 சதவீதமாகக் குறையும் என தற்போது கணித்து உள்ளது.

- இது 2010 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட 3.1 சதவீத சராசரி வளர்ச்சியை விட மிகவும் குறைவாக உள்ளது.
- பெரும்பாலான நாடுகள் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் COVID-19 பெருந் தொற்றிற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட மெதுவான வளர்ச்சி விகிதத்தில் வளரும்.
- 2023-24 ஆம் ஆண்டில் 6.3 சதவீதமாக இருந்த இந்தியாவின் வளர்ச்சியானது 2024-25 ஆம் ஆண்டில் 6.4 சதவீதமாகவும், 2025-26 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகவும் உயர்ந்து வருகிறது.

WORLD BANK'S GROWTH FORECASTS

| | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|
| World | 2.6% | 2.4% | 2.7% |
| US | 2.5% | 1.6% | 1.7% |
| Euro area | 0.4% | 0.7% | 1.6% |
| Japan | 1.8% | 0.9% | 0.8% |
| China | 5.2% | 4.5% | 4.3% |
| Russia | 2.6% | 1.3% | 0.9% |
| Brazil | 3.1% | 1.5% | 2.2% |
| South Africa | 0.7% | 1.3% | 1.5% |

## உலக ஆயுத ஆற்றல் தரவரிசை 2024


TOP 10 MILITARY POWERS IN 2024

For the 2024 GFP review, a total of 145 world powers are considered

| Country | PwrIndx |
|---|---|
| UNITED STATES | 0.0699 |
| RUSSIA | 0.0702 |
| CHINA | 0.0706 |
| INDIA | 0.1023 |
| SOUTH KOREA | 0.1416 |
| UNITED KINGDOM | 0.1443 |
| JAPAN | 0.1601 |
| TÜRKIYE | 0.1697 |
| PAKISTAN | 0.1711 |
| ITALY | 0.1863 |

- 2024 ஆம் ஆண்டு உலக ஆயுத ஆற்றல் தரவரிசையின் படி, அமெரிக்க நாடானது உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த இராணுவத்தைக் கொண்ட நாடாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.
- அதைத் தொடர்ந்து ரஷ்யாவும் சீனாவும் இடம் பெற்றுள்ளன.
- இந்தத் தரவரிசையில் மதிப்பிடப்பட்ட 145 நாடுகளில் இந்தியா நான்காவது வலிமையான இராணுவத்தைக் கொண்டுள்ளது.

- தென் கொரிய நாடானது இராணுவ வலிமையின் அடிப்படையில் ஐக்கியப் பேரரசினை முந்தி, உலகின் ஐந்தாவது சக்திவாய்ந்த ஆயுத சக்தியினைக் கொண்ட நாடாக மாறியுள்ளது.
- பூடான் உலகில் மிகவும் குறைவான சக்தி வாய்ந்த இராணுவத்தைக் கொண்டுள்ள அதே வேளையில் பாகிஸ்தான் 9 வது இடத்தில் உள்ளது.
- 831 பில்லியன் டாலர் மதிப்பிலான பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டுடன் அமெரிக்கா தனது இராணுவத்திற்காக அதிகப் பணத்தைச் செலவிடுகிறது.
- அதைத் தொடர்ந்து சீனா (227 பில்லியன் டாலர்), ரஷ்யா (107 பில்லியன் டாலர்) மற்றும் இந்தியா (74 மில்லியன் டாலர்) ஆகியவை அமைந்துள்ளன.
- பாதுகாப்புச் செலவினங்கள் அதிகம் கொண்ட ஐந்து முன்னணி நாடுகளின் மொத்த செலவினப் பங்கில் அமெரிக்க 63.3% பங்கு வகிக்கிறது.

## கபோ வெர்டே - மலேரியா பாதிப்பற்ற நகரம்


- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, மலேரியா பாதிப்பற்ற நாடாக கபோ வெர்டே (கேப் வெர்டே) நாட்டிற்கு சான்றளித்துள்ளது.
- எனவே, உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்க பிராந்தியத்தில் இந்த அந்தஸ்தைப் பெறும் மூன்றாவது நாடாக இது மாறியுள்ளது.
- 1973 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே இந்தச் சான்றிதழ் பெற்ற மொரிஷியஸ் மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளின் பட்டியலில் இந்த நாடு தற்போது இணைந்து உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய மலேரியா பாதிப்புகளில் சுமார் 95 சதவீதப் பங்கு மற்றும் மலேரியா தொடர்புடைய உயிரிழப்புகளில் 96 சதவீதப் பங்குடன் ஆப்பிரிக்காவில் அதிக மலேரியா பாதிப்பு உள்ளது.
- உலக சுகாதார அமைப்பு ஆனது, இதுவரை 43 நாடுகள் மற்றும் 1 பிரதேசத்திற்கு 'மலேரியா பாதிப்பற்ற நாடு' என்ற சான்றிதழை வழங்கியுள்ளது.



## பசுமை எரிபொருள் கூட்டணி இந்தியா (GFAI)

- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் (GIM), இந்தியா பசுமை எரிபொருள் கூட்டணி (GFAI) என்ற ஒரு முன்னெடுப்பினைத் தொடங்க உள்ளதாக டென்மார்க் அரசு அறிவித்துள்ளது.
- நிலையான எரிசக்தி தீர்வுகள் சார்ந்த துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரித்தல் மற்றும் கார்பன் நடுநிலையை நோக்கிய அவற்றின் கூட்டு உலகளாவிய இலக்கை மேம்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வணிகங்கள், அரசு நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் நிதிப் பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் சூழல் அமைப்பை நிறுவுவதன் மூலம் இந்தியாவில் நிலையான எரிசக்தி வளர்ச்சியை மேம்படுத்துவதே GFAI கூட்டணியின் முதன்மை நோக்கமாகும்.
- டென்மார்க் நாட்டின் ஒன்பது முன்னோடியான நிறுவனங்கள் ஆனது, ஸ்தாபன உறுப்பினர்களாக GFAI முன்னெடுப்பில் தங்களை ஈடுபடுத்தியுள்ளன.
- GFAI கூட்டணியின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் இந்திய ஹைட்ரஜன் கூட்டணி, சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் உள்ள எரிசக்தி கூட்டமைப்பு, டென்மார்க் நாட்டின் எரிசக்தி நிறுவனம் மற்றும் ஸ்டேட் ஆஃப் கிரீன் அமைப்பு ஆகியவை அடங்கும்.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வு நிலையை அடைவதை நோக்கி இந்தியா செயல்பட்டு வருகிறது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு இடையே கையெழுத்திடப் பட்ட பசுமை உத்திசார் கூட்டாண்மையின் (GSP) கீழ் மேற்கொள்ளப் பட்ட செயல்பாடுகளை GFAI பறைசாற்றுகிறது.

## மனிதர்களில் நிபா நோய்க்கு எதிரான முதல் தடுப்பூசி பரிசோதனை




- ஐக்கியப் பேரரசின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆனது, கொடிய நிபா வைரஸ் பாதிப்பிற்கு எதிரான முதல் மனிதப் பயன்பாட்டுத் தடுப்பூசி சோதனைகளை தொடங்கி யுள்ளது.

- ChAdOx1 NipahB தடுப்பூசியின் சோதனைகள், 18 முதல் 55 வயதுக்குட்பட்ட 51 நபர்களின் மீது மேற்கொள்ளப்பட்டது.
- ஒரு பேரழிவுகரமான நோயான நிபா வைரஸ் சுமார் 75% பாதிப்புகளில் பெரும் உயிர் பலியினை ஏற்படுத்தக் கூடியது.
- சிங்கப்பூர், மலேசியா, வங்காளதேசம் மற்றும் இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் இந்த நோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
- நிபா வைரஸ் பழ வௌவால்களால் பரவுகிறது என்பதோடு மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட விலங்குகளுடனான தொடர்பு (பன்றிகள் போன்றவை) அல்லது மனிதர்களுக்கு இடையிலான தொடர்பு மூலமும் பரவுகிறது.
- நிபா வைரஸ் முதன்முதலில் 1998 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.


## உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டம் 2024

- 2024 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டம் ஆனது டாவோஸ் நகரில் நடைபெறுகிறது.
- 54வது வருடாந்திரக் கூட்டம் ஆனது, அடிப்படைக் கொள்கைகளுக்குத் திரும்புவதை மையமாகக் கொண்ட கருத்துருவை ஏற்று நடத்தப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு டாவோஸ் கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படும் பகுதிகள்:
  - அதிகரித்து வரும் புவிசார் அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை அடைதல்:
  - புதிய சகாப்தத்திற்கான வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
  - பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கான உந்து சக்தியாக செயற்கை நுண்ணறிவு
  - பருவநிலை, இயற்கை மற்றும் எரிசக்திக்கான நீண்ட கால உத்தி


## சீனாவின் மக்கள் தொகை 2023 ஆம் ஆண்டில் மீண்டும் சரிவு

- சீனாவின் மக்கள்தொகையானது, வீழ்ச்சியடைந்த பிறப்பு விகிதம் மற்றும் COVID-19 பெருந்தொற்று சார்ந்த இறப்புகளின் காரணமாக 2023 ஆம் ஆண்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வீழ்ச்சியடைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் சீனாவில் உள்ள மொத்த மக்கள் எண்ணிக்கை 2.75 மில்லியன் குறைந்து 1.409 பில்லியனாக உள்ள நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் பதிவானதை விட வேகமாக சரிந்துள்ளது.
- மாவோ சேதுங் சகாப்தத்தின் பெரும் பஞ்சத்தின் போது, 1961 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சரிவிற்குப் பிறகு இத்தகைய சரிவு பதிவாவது இது முதல் முறையாகும்.
- 1980 முதல் 2015 ஆம் ஆண்டு வரை அமல்படுத்தப்பட்ட ஒரு குழந்தை கொள்கையின் விளைவாக நாட்டின் பிறப்பு விகிதம் பல தசாப்தங்களாக சரிந்து வருகிறது.
- நீண்ட கால அடிப்படையில், சீனாவின் மக்கள் தொகை 2050 ஆம் ஆண்டில் 109 மில்லியனாக சுருங்கும்.
- இது 2019 ஆம் ஆண்டில் அந்நாட்டு அரசு வெளியிட்ட முந்தைய முன் கணிப்பு சரிவை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

- 2022 ஆம் ஆண்டில் 1,000 பேருக்கு 6.77 ஆக இருந்த சீனாவின் பிறப்பு விகிதம் ஆனது கடந்த ஆண்டு 6.39 ஆக இருந்த நிலையில் இது இதுவரையில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைவான பிறப்பு விகிதம் ஆகும்.
- ஜப்பானின் பிறப்பு விகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 1,000 பேருக்கு 6.3 பிறப்புகள், என்ற நிலையில் தென் கொரியாவின் பிறப்பு விகிதம் 4.9 ஆகும்.
- 2022 ஆம் ஆண்டில் 1,000 பேருக்கு 7.37 ஆக இருந்த சீனாவின் இறப்பு விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 1,000 பேருக்கு 7.87 ஆக அதிகரித்துள்ளது.
- இது 1974 ஆம் ஆண்டு கலாச்சாரப் புரட்சிக்குப் பிறகு ஏற்பட்ட அதிகபட்ச இறப்பு விகிதமாகும்.




## உலகளாவிய ஒத்துழைப்பு மாற்ற மதிப்பீட்டுமானி 2024




- இது மெக்கென்சி & கம்பனி என்ற மேலாண்மை ஆலோசனை வழங்கீட்டு நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

- இதன் கீழான ஐந்து தூண்கள்: வர்த்தகம் மற்றும் மூலதனம்; புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம்; பருவநிலை மற்றும் இயற்கை மூலதனம்; சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம்; மற்றும் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியனவாகும்.
- 2019 ஆம் ஆண்டில் 72.8 ஆக இருந்த உலகில் பிறப்பின் போதான வாழ்நாள் எதிர்பார்ப்பு ஆனது, 2021 ஆம் ஆண்டில் 71 ஆகக் குறைந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உலகளவில் 241 மில்லியன் மலேரியா பாதிப்புகள் மற்றும் 627,000 மலேரியாவினால் ஏற்படும் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- அதாவது 2019 ஆம் ஆண்டை விட 14 மில்லியன் மக்கள் அதிகமாக மலேரியாவால் பாதிக்கப் பட்டுள்ளனர் மற்றும் 69,000 பேர் மலேரியா பாதிப்பினால் உயிரிழந்து உள்ளனர்.
- முப்பது ஆண்டுகளில் முதல் முறையாக பேறுகால இறப்பு விகிதம் அதிகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 100,000 பிறப்புகளுக்கு 151 இறப்புகளாக இருந்த உலகளாவிய பேறுகால இறப்பு விகிதம் ஆனது 2020 ஆம் ஆண்டில் 100,000 பிறப்புகளுக்கு 152 இறப்புகளாக இருந்தது.
- 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 287,000 பேறுகால இறப்புகளில், 70 சதவீதம் (202,000) ஆனது ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் பதிவாகியுள்ளன.

## உக்ரைனில் "பசுமை அறைகள்"

- உக்ரைனில் உள்ள ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது (UNDP), டென்மார்க் அரசாங்கத்துடன் இணைந்து, உக்ரைனில் இரண்டு "பசுமை அறைகளை" (சிறப்புத் தகவல் தொடர்பு வசதிகள் கொண்ட அறை) தொடங்கியுள்ளது.
- "பசுமை அறை" என்பது, காவல்துறை அதிகாரிகள் மற்றும் போரில் தப்பிப்பிழைத்த குழந்தைகள் மற்றும் குற்றச் சாட்சியங்களுக்கு இடையே பயனுள்ள தகவல் தொடர்புகளை மேம்படுத்தும் வகையில், சிறப்பு வசதிகள் மற்றும் உபகரணங்கள் பொருத்தப் பட்ட இடத்தில் உள்ள செயல்பாடுகளின் தொகுப்பை உள்ளடக்கியுள்ளது.
- விசாரணை மற்றும் செயல்முறை நடவடிக்கைகளின் போது குழந்தையின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாக்கும் கொள்கைகளின் அடிப்படையில் இவை செயல்படுகின்றன.
- "பசுமை அறை" ஆனது சிறப்புக் கண்ணாடியால் பிரிக்கப்பட்ட இரண்டு அறைகளைக் கொண்டுள்ளது.
- ஒரு அறையில் குழந்தைகளுடனான தகவல் தொடர்பு கொள்ளவும், மற்றொன்று அந்த உரையாடல்களைக் கண்காணிக்கவும் உதவுகிறது.


## டென்மார்க் நாட்டின் புதிய மன்னர்

- பத்தாம் ஃபிரடெரிக், அவரது தாயார் இராணி இரண்டாம் மார்கிரேத் அவர்களுக்குப் பிறகு டென்மார்க் நாட்டின் அரசராக அரியணை ஏறியுள்ளார்.
- அவர் டென்மார்க், கிரீன்லாந்து மற்றும் பாரோ தீவு ஆகியவற்றின் அரசராக ஆட்சி செய்வார்.
- எனினும், அரசுமுறை அதிகாரம் ஆனது தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் மற்றும் டென்மார்க் அரசாங்கத்திடம் இருக்கும்.

- சுமார் 900 ஆண்டுகளில் தானாக முன்வந்து அரியணையை துறந்த முதல் டென்மார்க் தலைமையாக தான் மாற திட்டமிட்டுள்ளதாக மார்கிரேத் அறிவித்தார்.
- உலகின் பழமையான முடியாட்சிகளில் ஒன்றான டென்மார்க் நாட்டில் முடிசூட்டு விழா நடத்தப் படுவது இல்லை.



## சுகாதார நலன் சார் செயற்கை நுண்ணறிவு நெறிமுறைகள் பற்றிய வழிகாட்டுதல்




- சுகாதார நலன் சார் செயற்கை நுண்ணறிவின், குறிப்பாக ChatGPT போன்ற பன்முக செயற்கை நுண்ணறிவிற்கான நெறிமுறைகள் மற்றும் ஆளுகைக்கான வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்கள், குறிப்பாகச் சுகாதார நலன் சார்ந்த துறைகளில் அவற்றின் பயன்பாடுகளில், ஆக்கப்பூர்வமிக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் விரைவான முன்னேற்றச் சூழலில் ஏற்படும் நெறிமுறை சிக்கல்களை நிவர்த்தி செய்கின்றன.
- உலக சுகாதார அமைப்பின் புதிய வழிகாட்டுதல்கள் ஆனது, சுகாதார நலன் சார்ந்த துறைகளுக்கான பெரிய பன்முக மாதிரிகளின் (LMMs) ஐந்து பரந்த பயன்பாடுகளை குறிப்பிட்டுக் காட்டுகிறது:

- நோயறிதல் மற்றும் நோயாளிகளின் கேள்விகளுக்குப் பதிலளிப்பது போன்ற மருத்துவ நல சேவை
- நோய் அறிகுறிகள் மற்றும் நோய்க்கான சிகிச்சையை ஆராயச் செய்வது போன்றவற்றிற்காக நோயாளிகளுக்கான வழிகாட்டுதலுடன் கூடிய பயன்பாடு
- மின்னணு சுகாதார தகவல் பதிவுகளுக்குள் நோயாளிகளின் வருகைகளை ஆவணப் படுத்துதல் மற்றும் தொகுத்தல் போன்ற எழுத்தர் மற்றும் நிர்வாகப் பணிகள்
- பயிற்சி பெறுபவர்களுக்கு உருவகப்படுத்தப்பட்ட நோயாளிகளின் சந்திப்புகளை வழங்குதல் உள்ளிட்ட மருத்துவ மற்றும் செவிலியர் கல்வி
- புதிய சேர்மங்களை அடையாளம் கண்டறிவது உள்ளிட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மருந்து உருவாக்கம்.

## பெருவின் சான்கே துறைமுகம்




- பெரு நாட்டின் மீன்பிடி நகரமான சான்கேயில் 3.5 பில்லியன் டாலர் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்கடல் துறைமுகம் ஆனது தென் அமெரிக்காவில் உள்ள முதன் முதலில் சீன நாட்டினால் கட்டுப்படுத்தப்பட உள்ள துறைமுகம் ஆகும்.
- சீனாவின் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.
- இது ஆசிய கண்டத்தின் நாடுகளுக்கு வளங்கள் நிறைந்த இந்தப் பிராந்தியத்திற்கு ஒரு நேரடி நுழைவாயிலை வழங்கும்.
- சான்கே பெரும் துறைமுகமானது, தென் அமெரிக்காவிற்கும் ஆசியாவிற்கும் இடையேயான ஒரு மூலோபாய வணிக மற்றும் துறைமுக மையமாக பெரு நாட்டினை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 22 நாடுகள் உட்பட சுமார் 150 நாடுகள் சீனாவுடன் மண்டலம் மற்றும் சாலைகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- உலகின் தாமிர உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள பெரு அமெரிக்காவுடன் சீனாவை விட சற்று அதிகமான அளவிலான வர்த்தகத்தினை மேற்கொண்டுள்ளது.

## ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு மாலத்தியான் ஏற்றுமதி




- ❖ 40,000 லிட்டர் மாலத்தியான் என்ற பூச்சிக்கொல்லி மருந்தை ஈரானின் சாபஹார் துறைமுகம் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா அனுப்பியுள்ளது.
- ❖ வெட்டுக்கிளி தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்காக இந்தப் பூச்சிக் கொல்லி பயன்படுத்தப்படுகிறது.
- ❖ மாலத்தியான் பூச்சிக் கொல்லியானது சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் வறண்ட பகுதிகளில் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான பூச்சிக்கொல்லி ஆகும்.
- ❖ இந்தியாவின் இந்த உதவியானது, ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசியா நாடுகளில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும்.
- ❖ ஆப்கானிஸ்தான் நாட்டிற்குள்ளேயே மேற்கொள்ளப்படும் கோதுமை விநியோகத்திற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்துடன் இந்திய அரசாங்கம் கூட்டு சேர்ந்துள்ளது.
- ❖ இந்தக் கூட்டாண்மையின் கீழ், ஆப்கானிஸ்தானில் உள்ள UNWFP மையங்களுக்கு இந்தியா 47,500 மெட்ரிக் டன் கோதுமையை உதவியாக வழங்கியுள்ளது.

## X நோய் பற்றிய விவாதம்

- ❖ உலகப் பொருளாதார மன்றமானது, X நோய்ப் பாதிப்பிற்கான நடவடிக்கைகளுக்கு தயார்படுத்துதல் என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தியது.
- ❖ 'X நோய்' என்பது ஒரு சாத்தியமான பெருந்தொற்று அல்லது குறிப்பிட்ட இடத்தில் பரவும் பெருந்தொற்றினை ஏற்படுத்தக் கூடிய ஓர் அறியப்படாத நோயைக் குறிக்கிறது.
- ❖ இது சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் உயிரிழப்பு ஆகியவற்றில் எதிர்பாராத தாக்கத்தை ஏற்படுத்தும்.
- ❖ இது கோவிட்-19 பெருந்தொற்றினை விட உயிரிழப்பு விகிதங்களில் மிக மோசமான விளைவைக் கொண்டிருக்கின்ற ரிபோநியூக்ளிக் அமிலம் (RNA) வைரஸுடன் கூடிய விலங்கு வழித் தொற்றுநோயாக இருக்கக் கூடும்.
- ❖ RNA வைரஸ்கள் அதிக பிறழ்வு விகிதத்தைக் கொண்டுள்ளன மற்றும் அதிக தொற்றுத் தன்மையைக் கொண்டுள்ளன.




## அணிசேரா இயக்கத்தின் 19வது உச்சி மாநாடு

- உகாண்டாவின் கம்பாலா நகரத்தில் அணிசேரா இயக்கத்தின் 19வது உச்சி மாநாடு நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "பகிரப்பட்ட உலகளாவிய வளத்திற்கான உள்ளார்ந்த ஒத்துழைப்பு" என்பதாகும்.
- இந்த உச்சி மாநாடு பொதுவாக மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.
- அஜர்பைஜானிடமிருந்து தலைமைப் பொறுப்பினைப் பெற்ற உகாண்டா அரசு 2027 ஆம் ஆண்டு வரை இதன் தலைவராக செயல்படும்.
- இந்த உச்சி மாநாடு கம்பாலா பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த நிகழ்வின் போது, உகாண்டா அதிபர் யோவேரி முசெவேனி, 1970 ஆம் ஆண்டுகளில் இந்தியர்கள் வெளியேற்றப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்தார்.
- 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், உகாண்டாவின் சர்வாதிகாரியான இடி அமீன், உகாண்டாவில் வசிக்கும் மற்றும் வேலை செய்யும் இந்தியர்கள் மற்றும் பிற ஆசியர்களை வெளியேற்ற உத்தரவிட்டார்.
- சுமார் 80,000 இந்தியர்கள் 90 நாட்களுக்குள் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- தற்போது, உகாண்டாவின் மக்கள்தொகையில் 0.1%க்கும் குறைவான பங்கினைக் கொண்டுள்ள இந்தியர்கள்/இந்திய வம்சாவளி மக்கள் உகாண்டாவின் நேரடி வரிகளில் 70% பங்கினை அளிக்கின்றனர்.

- தற்போது, அணிசேரா இயக்கம் ஆனது 120 உறுப்பினர் நாடுகள், 17 பார்வையாளர் நாடுகள் மற்றும் 10 பார்வையாளர் அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- அணிசேரா இயக்கமானது நிரந்தர செயலகம் அல்லது முறையான ஸ்தாபன சாசனம், சட்டம் அல்லது ஒப்பந்தம் என எதையும் கொண்டிருக்கவில்லை.

## ஸ்டெட்ஃபாஸ்ட் டிஃபென்டர் 2024 பயிற்சி


- கடந்த பல தசாப்தங்களில் அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) மிகப்பெரிய பயிற்சியான ஸ்டெட்ஃபாஸ்ட் டிஃபென்டர் 24 பயிற்சியானது, அமெரிக்காவில் தொடங்கியது.
- பல இடங்களில் நடைபெற உள்ள இதனுடன் தொடர்புடைய பயிற்சிகள் 2024 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளன.
- புதிய பாதுகாப்புச் செயல்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ள முதலாவது பெரிய அளவிலான நேட்டோ பயிற்சி இதுவாகும்.
- அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பின் பிற உறுப்பினர் நாடுகளில் இருந்து தோராயமாக 90,000 படைவீரர்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

## காசா மீதான சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு




- தென்னாப்பிரிக்கா கோரிய அவசர நடவடிக்கைகள் குறித்து சர்வதேச நீதிமன்றம் (ICJ) தனது தீர்ப்பை வழங்கியுள்ளது.
- காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய போர் நடவடிக்கை மீது தென்னாப்பிரிக்கா இனப் படுகொலை வழக்கினைப் பதிவு செய்தது.
- காசாவில் இனப்படுகொலைச் செயல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது, ஆனாலும் போர் நிறுத்தத்தினை மேற்கொள்ள அது உத்தரவிடவில்லை.

## நைட்ரஜன் வாயு செலுத்தி மரண தண்டனை





- அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் 165 பேர் மரண தண்டனை விதிக்கப் பட்டு உள்ளதையடுத்து, முதல் முறையாக நைட்ரஜன் வாயு செலுத்தி மரண தண்டனை நிறைவேற்றம் எனப்படும் சோதிக்கப்படாத முறையில் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.
- 1996 ஆம் ஆண்டில் இந்தக் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- நைட்ரஜன் வாயுவினைச் செலுத்தி மரண தண்டனை நிறைவேற்றம் என்பது ஒரு சுவாசக் கருவி வடிவிலான முகமூடியை அக்கைதியின் முகத்தில் வைத்து, சுவாசக் காற்றிற்குப் பதிலாக அவர்களுக்கு தூய நைட்ரஜன் வாயு செலுத்தப்படும் ஒரு முறை ஆகும்.
- இது ஒருவரின் சுவாசத்தில் ஆக்ஸிஜன் இழப்பு ஏற்பட்டு, சில நொடிகளில் அவரது சுய நினைவை இழக்கச் செய்து, அடுத்த சில நிமிடங்களில் மரணத்தை ஏற்படுத்துகிறது.
- விஷ ஊசி என்பது அமெரிக்காவில் பொதுவாக பயன்படுத்தப்படும் மரண தண்டனை ஆகும் என்பதோடு 1982 ஆம் ஆண்டில் ஒரு சோதனை மற்றும் "மிதமான" தண்டனை முறையாகவும் இது அறிமுகப்படுத்தப்பட்டது.
- அமெரிக்காவில் கடைசியாக 1999 ஆம் ஆண்டில் ஹைட்ரஜன் சயனைடு வாயுவைப் பயன்படுத்தி மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## சீனாவிற்கு மேற்கொள்ளப்படும் இரும்பு தாது ஏற்றுமதி

- ஏப்ரல்-நவம்பர் மாத காலங்களில் (எட்டு மாதங்கள்) சுமார் 24.75 மில்லியன் டன்கள் (mt) ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்தியாவில் இருந்து அதிக இரும்புத் தாது வாங்கும் நாடாக சீனா உருவெடுத்துள்ளது.
- இது கடந்த மூன்று ஆண்டுகளில் முழு எண் அளவில் சீனாவிற்கு மேற்கொள்ளப்பட்ட அதிகபட்ச ஏற்றுமதியாகும் என்பதோடு, இது 2020 ஆம் நிதியாண்டிற்குப் பிறகு மேற் கொள்ளப் பட்ட இரண்டாவது அதிகபட்ச ஏற்றுமதியாகும்.
- இதுவரை, இந்த நிதியாண்டில் பதிவான இந்தியாவின் இரும்புத் தாது ஏற்றுமதியில் சுமார் 95 சதவீதம் சீனாவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2020 ஆம் நிதியாண்டின் 8 மாதங்களுக்கான 18.15 மில்லியன் டன் ஏற்றுமதி அல்லது மொத்த ஏற்றுமதியில் 76 சதவீதம் ஆனது, 2021 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட 35.19 மில்லியன் டன்கள் என்ற அளவில் 92 சதவீதமாக உயர்ந்த நிலையில் இது முழு எண்ணிக்கையில் மிக அதிகம் ஆகும்.




## இந்தியாவில் வங்கிகளின் போக்கு மற்றும் முன்னேற்றம்

- இந்திய வங்கிகளின் மொத்த வாராக் கடன் விகிதம் (GNPA) ஆனது, செப்டம்பர் மாத இறுதியில் 3.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கான (SCBs) GNPA விகிதம் ஆனது, 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 3.9% ஆகக் குறைந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் வணிக வங்கிகளின் ஒருங்கிணைந்த இருப்புநிலை சுமார் 12.2% வளர்ச்சியடைந்துள்ளது என்றும், இது ஒன்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகம் என்றும் அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் இடர் உண்டாக்கும் சொத்துகள் மீதான மூலதன விகிதம் (CRAR) 16.8 சதவீதமாக இருந்தது.




## ஆவணப்படுத்தப்படும் அட்டை விவரங்களின் குறியாக்கம்




- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) தற்போது அட்டை வழங்கும் வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் ஆவணப்படுத்தப்படும் அட்டை விவரங்களின் குறியாக்கம் (CoFT) என்ற முறையை செயல்படுத்தியுள்ளது.
- ❖ அட்டைதாரர்கள் குறியீடுகளை உருவாக்கி, பல்வேறு இணைய வர்த்தகப் பயன்பாடுகளுக்காக தற்போதுள்ள கணக்குகளுடன் இணைக்கும் வசதியை நன்கு மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஒரு வணிகத் தளத்தில் சேமிக்கப்படும் அட்டை விவரங்கள் ஆவணப்படுத்தப்படும் அட்டைகள் (CoF) எனப்படும்.
- ❖ தடையின்றிக் கிடைக்கப் பெறும் இந்தத் தகவல் ஆனது, பயனர்களின் நிதித் தரவின் பாதுகாப்பிற்குப் பாதகம் விளைவிக்கப் பயன்படுத்தப்பட கூடும்.
- ❖ 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இந்திய ரிசர்வ் வங்கி குறியாக்கம் விதியை அறிமுகப் படுத்திய நிலையில் இதில் அட்டையின் விவரங்களுக்குப் பதிலாக என்று, பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட குறியாக்கங்கள் வணிகத் தளத்தில் சேமிக்கப் படும்.

## தேசியப் பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் தரவு

**Investors**

- NSE's investor base reached 8.5 crore by December 2023.
- Investor base increased from 7 crore to 8 crore in eight months to September 2023.
- Uttar Pradesh at second position in terms of total registered investors with 90 lakh investors as on December 29th, 2023.
- 99.85% pin codes covered in terms of investor registrations.
- 23 new Investors Services Centres (ISC) in 2023, taking the total to 42 across the country.

- ❖ இந்தியாவில் உள்ள முதலீட்டாளர்களின் எண்ணிக்கையானது, 2023 ஆம் ஆண்டில் 8 கோடியைத் தாண்டியது.
- ❖ இது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியில் இருந்த அளவை விட 22.4% உயர்வைப் பதிவு செய்துள்ளது.
- ❖ உத்தரப் பிரதேச மாநிலத்தில் இருந்து, 2023 ஆம் ஆண்டில் தேசியப் பங்குச் சந்தையில் அதிக எண்ணிக்கையிலான புதிய பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் ஈடுபட்டனர்.
- ❖ அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மற்றும் குஜராத் இடம் பெற்றுள்ளது.
- ❖ சதவீத அடிப்படையில், மிசோரம், 55% என்ற பெரிய அளவில் முன்னேற்றத்தையும், எண்ணிக்கை அடிப்படையில் குறைவாக 9,564 முதலீட்டாளர்களையும் பதிவு செய்து உள்ளது.
- ❖ மகாராஷ்டிராவில் சுமார் 1.5 கோடி முதலீட்டாளர்கள் உள்ள நிலையில் அதையடுத்து உத்தரப் பிரதேச மாநிலமானது 90 லட்சம் முதலீட்டாளர்களுடன் குஜராத் மாநிலத்தினை (77 இலட்சம்) விஞ்சியுள்ளது.
- ❖ மேற்கு வங்காளம், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் சில்லறை முதலீட்டுப் பங்கு அதிகரித்தது.
- ❖ இந்தியத் தேசியப் பங்குச் சந்தை நிறுவனமானது, வர்த்தகம் செய்யப்படும் பங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனமாக உள்ளது.

## உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் 2023

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது, உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த (D-SIBs) வங்கிகளின் சமீபத்திய பட்டியலை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது பாரத் ஸ்டேட் வங்கி, HDFC வங்கி மற்றும் ICICI வங்கி ஆகியவற்றை உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாகத் தக்க வைத்துள்ளது.

- இந்திய ரிசர்வ் வங்கியானது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பாரத் ஸ்டேட் வங்கி மற்றும் ICICI வங்கி ஆகியவற்றினை D-SIB வங்கிகளாக அறிவித்தது.
- D-SIB என்ற கட்டமைப்பின்படி, 2015 ஆம் ஆண்டு முதல் D-SIB வங்கிகளாக நியமிக்கப் பட்ட வங்கிகளின் பெயர்களை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட வேண்டும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, இந்த வங்கிகளை அவற்றின் அமைப்பு ரீதியான முக்கியத்துவ மதிப்பெண்களை (SISs) பொறுத்து அதற்குப் பொருத்தமான பிரிவுகளில் வகையிடும்.

The list of D-SIBs is as follows:

| Bucket | Banks | Additional Common Equity Tier 1 requirement as a percentage of Risk Weighted Assets (RWAs) |
|---|---|---|
| 5 | - | 1% |
| 4 | State Bank of India* | 0.80% |
| 3 | - | 0.60% |
| 2 | HDFC Bank* | 0.40% |
| 1 | ICICI Bank | 0.20% |

* The higher D-SIB surcharge for SBI and HDFC Bank will be applicable from April 1, 2025. Hence, up to March 31, 2025, the D-SIB surcharge applicable to SBI and HDFC Bank will be 0.60% and 0.20% respectively.

## UPI பரிவர்த்தனைகள் 2023




- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் ஆனது, 2023 ஆம் ஆண்டில் உச்சகட்டப் பரிவர்த்தனைகளை எட்டியதோடு பரிவர்த்தனை எண்ணிக்கை மற்றும் மதிப்பு ஆகிய இரண்டின் அடிப்படையிலும் இது புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளது.
- டிசம்பர் மாதத்தில் 1,200 கோடிக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதோடு அவற்றின் மதிப்பு 18 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்கனவே உச்சத்தில் இருந்த 17.4 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பரிவர்த்தனையுடன் ஒப்பிடுகையில் இது ஒரு சிறிய அளவிலான அதிகரிப்பு ஆகும்.

- 2023 ஆம் ஆண்டில் 182.2 லட்சம் கோடி மதிப்பிலான 11,765 UPI பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப் பட்டன.
- 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, இது அளவின் அடிப்படையில் 59 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 45 சதவீதமும் அதிகரித்துள்ளது.

## உற்பத்தி ஊக்குவிப்பு திட்டம் நீட்டிப்பு




- கனரக தொழில்துறை அமைச்சகம் ஆனது தானியங்கு வாகனப் பாகங்களுக்கான உற்பத்தி ஊக்குவிப்பு (PLI) திட்டத்தை "பகுதியளவு திருத்தங்களுடன்" மேலும் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது.
- இது அத்திட்டத்திற்கு தெளிவு மற்றும் நெகிழ்வுத்தன்மையை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஊக்கச் சலுகையானது 2023-24 ஆம் நிதியாண்டிலிருந்து தொடங்கி அடுத்த ஐந்து நிதியாண்டுகளுக்குப் பொருந்தும்.

## ஓலா நிறுவனத்திற்கு உற்பத்தி ஊக்குவிப்பு திட்டம்

- ஓலா எலக்ட்ரிக் நிறுவனம் ஆனது, அரசாங்கத்தின் உற்பத்தி ஊக்குவிப்பு திட்டத்திற்கு தகுதி பெறும் முதல் இந்திய மின்சார இருசக்கர வாகன (e2W) உற்பத்தி நிறுவனமாக மாறியுள்ளது.
- ஓலா எலக்ட்ரிக் ஒரு அலகிற்கு 15,000 முதல் 18,000 ரூபாய் வரையிலான மானியப் பலன்களைப் பெறும்.
- இந்தத் திட்டத்திற்குத் தகுதிபெற, மின்சார ஸ்கூட்டர் உற்பத்தி செய்யும் புத்தொழில் நிறுவனங்கள் குறைந்தபட்சம் ஆக 1,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டும்.




## எஃகு தொழில்துறை உற்பத்தி

- 2023 ஆம் நிதியாண்டில் உலகின் இரண்டாவது பெரிய கச்சா எஃகு உற்பத்தியாளராக இந்தியா மாறியது.
- இந்தியாவில் 125.32 மில்லியன் டன்கள் (MT) கச்சா எஃகினையும், 121.29 மில்லியன் டன்கள் (MT) செயல்முறையாக்கப்பட்ட எஃகினையும் உற்பத்தி செய்யப்பட்டது.
- இந்த உற்பத்தியானது, 2008 ஆம் ஆண்டிலிருந்து 75% அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் தனிநபர் எஃகு நுகர்வு 2023 ஆம் நிதியாண்டில் 86.7 கிலோ கிராமாக இருந்தது.

Global crude steel output and offtake*


| | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|
| Consumption | 1,927 | 1,962 | 1,990 |
| Production | 1,916 | 1,947 | 1,974 |

*in million tonnes Source: Office of the Chief Economist, Australia


## இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள்: அறிக்கை

- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, அரசாங்கத் தரவுகளின்படி, இந்தியாவில் 3 கோடிக்கும் அதிகமான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களில் மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை சுமார் 40 சதவீதப் பங்களிப்பை வழங்குகின்றன.

- தேசிய அளவில் உள்ள மொத்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களில் உத்தரப் பிரதேசம் 9 சதவீத பங்கைக் கொண்டுள்ளது.
- கட்டுமானத் துறையில் இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களுக்கான மூலோபாய வாய்ப்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 8 சதவிகிதப் பங்கினை கொண்டுள்ளது.





## 2023-24 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகள்




- முதல் முன்கூட்டிய மதிப்பீடுகள் (FAEs) ஆனது அரசாங்கத்தால் சமீபத்தில் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 2022-23 ஆம் ஆண்டில் பதிவான 7.2% வளர்ச்சியை விட சற்று வேகமான விதத்தில் நடப்பு நிதியாண்டில் (2023-24) 7.3% ஆக வளரும்.
- 2022-23 ஆம் ஆண்டில் 7% ஆக இருந்த பொருளாதாரத்தின் மொத்த மதிப்பு கூட்டல் (GVA) வளர்ச்சியானது இந்த ஆண்டு 6.9% ஆக சற்று குறையும்.

- நிதிநிலை அறிக்கையின் 10.5% என்ற மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது பெயரளவு GDP வளர்ச்சி 8.9% ஆக இருக்கும்.
- இது ஆண்டின் 5.9% என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இலக்கினை மீறி 6% என்ற அளவு நிதிப்பற்றாக்குறை நிலையை எட்டக் கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.
- ஒரு வருடத்திற்கு முன்பு 4% ஆக இருந்த வேளாண் துறைக்கான மொத்த மதிப்புக் கூட்டல் வளர்ச்சியானது இந்த ஆண்டு 1.8% ஆக பாதியாகக் குறையும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தின் இறுதியில் முன்கூட்டிய மதிப்பீடுகள் வழங்கப்படுகிறது.
- அவை அந்தந்த நிதியாண்டிற்கான வளர்ச்சியின் முதல்கட்ட மதிப்பீடுகள் மட்டுமே ஆகும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் பொருளாதார நிலை அறிக்கை




- இந்தியப் பொருளாதாரம் ஆனது 2024 ஆம் ஆண்டில் அதன் வளர்ச்சி வேகத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2024-25 ஆம் ஆண்டில் நிலையான 7%+ என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இலக்கினைப் பூர்த்தி செய்ய, பணவீக்க நிலையானது 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 4% இலக்குடன் ஒருங்கியிருக்க வேண்டும்.
- 2024 ஆம் ஆண்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் ஆசியா முன்னணியில் உள்ளதுடன் இந்தியா போன்ற வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் உலக நாடுகளை விட சிறப்பாக செயல்படும் என்று இந்த அறிக்கை கணித்துள்ளது.
- அத்தியாவசியம் சாரா செலவினங்களில் வலுவான முறையில் வளர்ச்சி நிலவுவதால் நகர்ப்புற நுகர்வு மீட்சிப் பெற்றுள்ளது, ஆனால் கிராமப்புறச் செலவின வளர்ச்சி முடங்கியுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## SLIM ஆய்வுத் திட்டம் - ஜப்பான்


- ஜப்பானின் நிலவினை ஆய்வு செய்வதற்கான சீரான தரையிறக்க கலம் (SLIM) என்ற விண்கலம் ஆனது, சமீபத்தில் நிலவின் சுற்றுப்பாதையில் நுழைந்தது.
- இந்த தரையிறங்கும் முயற்சி வெற்றியடையும் பட்சத்தில், ஓர் இயற்கையான செயற்கைக் கோளில் தானியக்க கலம் ஒன்று சீரான தரையிறக்கத்தினை மேற் கொள்ளும் ஐந்தாவது நாடாக ஜப்பான் மாறும்.
- சிறிது நேரத்தை அங்கு செலவழிப்பதன் மூலம், SLIM கலம் அதிக எரிபொருள் திறன் கொண்டதாக இருக்கும்.
- SLIM கலம் ஆனது, இந்த ஆண்டு நிலவில் சீரான முறையில் தரையிறங்குவதற்காக ஜப்பான் மேற்கொள்ளும் இரண்டாவது முயற்சியாகும்.
- ஐஸ்பேஸ் எனப்படும் ஜப்பானிய நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட HAKUTO-R M1 தரையிறங்கு கலம் ஆனது ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் சிதைந்தது.





## ஒரு வினாடிக்கும் குறைவான பிரகாசமான ஊடுகதிர் வெடிப்பு நிகழ்வுகள்

- ஆஸ்ட்ரோசாட் ஆய்வகமானது, அதி உயர் காந்தப்புலத்துடன் (காந்த விண்மீன்) கூடிய புதிய மற்றும் தனித்துவமான நியூட்ரான் நட்சத்திரத்திலிருந்து பிரகாசமான ஒரு வினாடிக்கும் குறைவான பிரகாசமான ஊடுகதிர் வெடிப்பு நிகழ்வுகளை கண்டறிந்து உள்ளது.

- இது காந்த விண்மீன்களின் அசாதாரணமான தீவிர வானியற்பியல் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 33 மில்லி விநாடிகள் என்ற சராசரி கால அளவுடன் கூடிய 67 குறுகிய ஊடுகதிர் வெடிப்பு நிகழ்வுகள் கண்டறியப்பட்டது முக்கிய கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும்.
- இந்த வெடிப்புகளில் பிரகாசமான ஒன்று சுமார் 90 மில்லி விநாடிகள் நீடித்தது.
- ஆஸ்ட்ரோசாட் விண்வெளியில் அமைந்த இந்தியாவின் முதலாவது பல அலைநீள ஆய்வகமாகும்.
- காந்த விண்மீன்கள் என்பது நிலப்பரப்பு சார்ந்த காந்தப் புலத்தை விட மிகவும் வலிமையான அதி உயர் காந்தப்புலம் கொண்ட நியூட்ரான் நட்சத்திரங்கள் ஆகும்.



## இஸ்ரோவின் PSLV-C58





- இஸ்ரோவின் PSLV-C58 ஆனது ஊடுகதிர் முனைவாக்க செயற்கைக் கோளை (XPoSat), கிழக்கு நோக்கிய தாழ்மாட்ட சாய்வு சுற்றுப்பாதையில் சமீபத்தில் செலுத்தியது.
- XPoSat என்பது இஸ்ரோவின் முதல் பிரத்தியேக அறிவியல் செயற்கைக்கோள் ஆகும்.
- இது வானியல் மூல அமைப்புகளிலிருந்து வெளிவரும் ஊடுகதிர் வெளியீட்டின் விண்வெளி அடிப்படையிலான முனைவாக்க அளவீடுகள் குறித்த ஆராய்ச்சியை மேற் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது POLIX (ஊடு கதிர்களில் உள்ள முனைவாக்க கருவி) மற்றும் XSPECT (ஊடு கதிர் நிறமாலைமானி மற்றும் நேர மதிப்பீடு) ஆகிய இரண்டு ஆய்வுக் கருவிகளைக் கொண்டுள்ளது.
- புத்தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இஸ்ரோ மையங்களால் உருவாக்கப்பட்ட 10 விண்கலங்களையும் PSLV விண்ணில் செலுத்தியது.


## தீங்கு விளைவிக்கக் கூடிய (பேய்) வால் நட்சத்திரம்

- அதிகாரப்பூர்வமாக 12P என அழைக்கப்படும் "தீங்கு விளைவிக்கக் கூடிய வால் நட்சத்திரம்" ஆனது, தற்போது பூமியை நோக்கி நகர்ந்து வருகிறது. விரைவில் இது ஒரு குறிப்பிடத்தக்கப் பகுதியில் மோதி வெடிப்புக்கு உள்ளாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த வால் நட்சத்திரம் ஆனது, எவரெஸ்ட் சிகரத்தை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு பெரியது.
- ஒரு கிரையோவோல்கானோ (குறை வெப்பநிலையில் உள்ள எரிமலை) என வகைப் படுத்தப் பட்டுள்ள இது, உறைந்த சோடா வெடிப்பது போல் வாயு மற்றும் பனிக்கட்டி திரண்டு பற்றுவதன் காரணமாக வெடிக்கிறது.
- இந்த வால் நட்சத்திரம் ஆனது 18.6 மைல் விட்டத்துடன், ஒரு சிறிய நகரத்தின் அளவுடன் ஒப்பிடக்கூடிய வகையில் மிகப்பெரியது.
- இது நன்கு அறியப்பட்ட ஹாலி வால் நட்சத்திரத்தினைப் போன்று, தோராயமாக 71.2 வருடங்களுக்கும் ஒருமுறை சூரியனைச் சுற்றி அதன் சுற்றுப் பாதையை நிறைவு செய்கின்ற ஒரு குறுகிய கால வால் நட்சத்திரம் ஆகும்.
- 200 ஆண்டுகளுக்கும் குறைவான சுற்றுப்பாதை காலம் கொண்ட இது போன்ற வால் நட்சத்திரங்கள் குறுகிய கால வால் நட்சத்திரங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.



## மின்னணு மண்: புதிய உருவாக்கம்

- "மின்னணு மண்" அல்லது eSoil எனப்படும் மின்சாரம் கடத்தும் திறன் கொண்ட வளர்ப்பு ஊடகத்தைப் பயன்படுத்தி மண்ணற்றத் தோட்டக்கலை அல்லது நீரியல் சார்ந்த தோட்டக் கலையின்புதிய முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- eSoil என்பது தாவரங்களின் வேர் அமைப்பு மற்றும் வளர்ச்சி சூழலை மின்சாரம் மூலம் தூண்டக்கூடிய ஒரு குறையாற்றல் கொண்ட உயிரி மின்னணு வளர்ச்சி தளம் ஆகும்.
- இந்தப் புதிய வளர்ச்சி தளம் ஆனது, சுற்றுச்சூழலுக்கு மிகவும் உகந்தது என்பதோடு செல்லுலோஸ் மற்றும் PEDOT எனப்படும் கடத்தும் திறன் கொண்ட பாலிமரில் (பலபடிச் சேர்மம்) இருந்து பெறப்படுகிறது.
- அதிக மின்னழுத்தம் மற்றும் மக்காதப் பொருட்களின் பயன்பாடு அவசியமாக உள்ள முந்தைய முறைகளுக்கான குறைந்த ஆற்றல் கொண்ட, பாதுகாப்பான மாற்று முறையை இது வழங்குகிறது.
- eSoil குறைந்த ஆற்றலைப் பயன்படுத்துகிறது மற்றும் வளங்களின் நுகர்வினைக் குறைக்கிறது.
- இதன் தூண்டுதல் பொருள் ஒரு கரிம கலப்பு அயனி மின்னணு கடத்தி ஆகும்.
- பார்லி நாற்றுகளின் வேர்களை 15 நாட்களுக்கு மின்னியல் மூலமாக தூண்டிய போது, அவை eSoil ஐப் பயன்படுத்தி 50% வளர்ச்சியைக் கண்டது.





## ஹேமிலியன் ட்ரோஜன்

- பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் 'உருமாறும்(மறைவு) ட்ரோஜன்' என்ற தீநிரலின் புதிய பதிப்பைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இது கைபேசியின் PIN எண்ணைக் கைப்பற்ற கைரேகை மற்றும் முகம் அடையாளம் போன்ற உடல் அங்க அங்கீகார முறைகளை முடக்கக் கூடும்.
- இது திரையில் உள்ள உள்ளடக்கத்தைத் திருடுவதோடு மேலும் பல அனுமதிகளை அளிப்பதோடு மேலும் சாதனச் செயல்பாடுகளில் நுழைய பயனர்கள் உள்ளிடும் PIN எண்கள் மற்றும் கடவுச்சொற்களை கைப்பற்ற திரையில் மேற்கொள்ளப்படும் விசையழுத்த செயல்பாடுகளைப் பயன்படுத்தி கைபேசியின் செயலிகளில் ஊடுருவ முடியும்.





## சுற்றுச்சூழலுக்கு உகந்த சூரிய மின்கல பொருள்





- இந்திய அறிவியலாளர்கள், கரிம-கனிம ஹைலைடு பெரோவ்ஸ்கைட் தன்னாற்றலில் இயங்கும் ஒரு அகலப்பட்டை ஒளி உணர்வுக் கருவியை உள்நாட்டிலேயே உருவாக்கி உள்ளனர்.
- இது காரீயத்தின் அளவில் பகுதியளவு மெக்னீசியம் கொண்டு மாற்றீடு செய்யப் பட்டு உள்ளதோடு இது சூரிய ஆற்றல் உற்பத்திக்குப் பயனுள்ளதாக இருக்கும்.
- பெரோவ்ஸ்கைட் ஒளி மின்னணுவிய சாதனங்களில் நச்சுத்தன்மை மிக்க Pb2+ என்ற கூறினை மாற்றுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படி நிலையை இந்த ஆராய்ச்சி குறிக்கிறது.
- மிக நச்சுத்தன்மை மிக்க காரீயம் (Pb2+) உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது.

## இரட்டை ஈர்ப்பு துணை புரியும் கருவி

- ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) வியாழன் கோளின் பனி நிறைந்த துணைக் கோள் ஆய்வுக் கலம் (JUICE) இரட்டை ஈர்ப்பு துணை புரியும் கருவியைப் பயன்படுத்தச் செய்தது.
- முதன்முறையாக, பூமி மற்றும் நிலவின் விசையைப் பயன்படுத்தி வியாழனை நோக்கி அந்தக் கலம் தன்னை உந்திக் கொண்டது.
- சுமார் 6000 கிலோ எடை கொண்ட JUICE ஆய்வுக் கலத்தின் எடையை கருத்தில் கொள்ளும் போது இது ஒரு முக்கியச் சாதனையாகும்.
- இந்த ஆய்வுத் திட்டமானது வியாழன் கோளினை கேனிமேடு, காலிஸ்டோ மற்றும் யூரோப்பா எனப்படும் அதன் மூன்று புதிரான துணைக் கோளுடன் சேர்த்து ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





## பிரபஞ்சத்தின் வளர் நிலையில் “பதின்ம நிலையில் உள்ள” அண்டங்கள்



- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது பதின்ம (இடை) நிலையில் உள்ள அண்டங்கள் வழக்கத்திற்கு மாறாக அதிக வெப்பமாக இருப்பதைக் காட்டுகிறது.
- புதிய அண்டங்களுடன் ஒப்பிடும்போது அவை சுமார் 24,000 டிகிரி பாரன்ஹீட் (13,350 டிகிரி செல்சியஸ்) வெப்பநிலையைக் கொண்டுள்ளன.

- பதின்ம நிலையில் உள்ள அண்டங்கள், ஏற்கனவே கணிசமான எண்ணிக்கையிலான நட்சத்திரங்களை உருவாக்கினாலும், மிக விரைவான வளர்ச்சிக் கட்டத்தை கொண்டு உள்ளன.
- பெரு வெடிப்பு நிகழ்விற்கு சுமார் 2 முதல் 3 பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வளர் நிலை அண்டங்கள் உருவாகின்றன.
- மேலும், அவை ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் மற்றும் நிக்கல் போன்ற சில எதிர்பாராத இரசாயன கூறுகளைக் கொண்டிருக்கின்றன.

## பிரபஞ்சத்தின் விரிவாக்கம் 2023




- யூக்ளிட் தொலைநோக்கி பெர்சியஸ் விண்மீன் திரள் மற்றும் பிறவற்றைச் சேர்ந்த அண்டங்கள் மேலும் விலகிச் செல்வதைக் கண்டறிந்துள்ளது.
- இது பிரபஞ்சம் விரிவடைவதைக் காட்டுகிறது.
- பிரபஞ்சத்தின் விரிவாக்கம் ஆனது அண்டங்களை ஒன்றிலிருந்து ஒன்று நகர்த்தச் செய்கிறது.
- ஒரு அண்டத்தின் வேகத்திற்கும் தூரத்திற்கும் இடையிலான தொடர்பு “ஹப்பிள் மாறிலி” மூலம் மதிப்பிடப் படுகிற நிலையில் இது 43 மைல்கள் (70 கிமீ) / வினாடி / மெகாபார்செக் ஆகும்.
- பெர்சியஸ் என்பது பிரபஞ்சத்தில் அறியப்பட்ட மிகப் பெரியக் கட்டமைப்புகளில் ஒன்றாகும்.
- இது பூமியிலிருந்து ‘வெறும்’ 240 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து உள்ளதோடு இது ஆயிரக்கணக்கான அண்டங்களைக் கொண்டுள்ளது.

## ஜோசுரபால்பின் ஆண்டிபயாடிக் நுண்ணுயிர் எதிர்ப்பி

- அசினெட்டோபாக்டர் பாமன்னி என்ற மருந்து-எதிர்ப்பு பாக்டீரியத்தை எதிர் கொள்ளும் திறன் கொண்ட ஒரு புதிய வகை நுண்ணுயிர் எதிர்ப்பிகளை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

- ஜோசுரபால்பின் CRABயால் (கார்பபெனெம்-எதிர்ப்பு அசினெட்டோபாக்டர் பாமன்னி) தூண்டப்பட்ட நிமோனியா மற்றும் செப்சிஸ் (எலி மாதிரிகள்) ஆகியவற்றிற்கு எதிராக பயனுள்ள விளைவுகளைக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் நுண்ணுயிர் எதிர்ப்பு "முன்னுரிமை நோய்க்கிருமிகளின்" பட்டியலில் CRAB முதலிடத்தில் இருந்தது.
- இது ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் பொதுவாகக் காணப் படுவதோடு, உலகெங்கிலும் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் 20% வரை நோய்த் தொற்றுகளை ஏற்படுத்துகிறது.





## புற்றுநோய் மருந்து உற்பத்திக்கு தாவர செல்களின் பயன்பாடு

- மண்டி மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்களின் ஆராய்ச்சியாளர்கள், கேம்ப்டோதெசின் (CPT) எனப்படும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக தாவர செல்களில் வளர்சிதை மாற்றக் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை மேற்கொண்டுள்ளனர்.
- இந்த நவீன கால மருத்துவ முறையின் மருந்து ஆனது நாதாபோடைட்ஸ் நிம்மோனியானா என்ற உள்நாட்டு, அழிந்து வரும் தாவரத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப் படுகிறது.
- 1 டன் கேம்ப்டோதெசின் தயாரிக்க சுமார் 1,000 டன் தாவரம் தேவைப்படுகிறது.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் ஆனது, இந்தத் தாவரத்தைச் செந்நிறப் பட்டியலில் சேர்த்துள்ளது.
- கடந்தப் பத்தாண்டுகளில் மட்டும் இந்தத் தாவரங்களின் எண்ணிக்கையில் 20% சரிவு ஏற்பட்டுள்ளது.



## ஆதித்யா-L1 ஆய்வுத் திட்டம்




- இஸ்ரோ நிறுவனம் ஆனது, ஆதித்யா-L1 விண்கலத்தை லாக்ராஞ்சியன் புள்ளியை (L1) சுற்றியமைந்த ஒரு ஹாலோ (முப்பரிமாண) சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று விண்ணில் ஏவப்பட்ட 127 நாட்களுக்குப் பிறகு, இந்தியாவின் முதல் சூரிய ஆய்வுக் கலமான ஆதித்யா-L1 ஜனவரி 06 ஆம் தேதியன்று L1 புள்ளியை அடைந்தது.
- 1.5 மில்லியன் கி.மீ. பயணத்திற்குப் பிறகு, இந்த விண்கலம் L1 புள்ளியைச் சுற்றி அமைந்த ஒரு முப்பரிமாண சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.
- ஆதித்யா-L1 விண்கலத்தின் சுற்றுப்பாதையானது, ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியிலான முப்பரிமாண சுற்றுவட்டப் பாதையாகும்.
- இது சுமார் 177.86 புவி நாட்கள் அளவிலான சுற்றுப்பாதை காலத்துடன் சூரியன்-பூமி அமைப்பின் வழியில் தொடர்ந்து சுழலும் சுற்றுப்பாதையில் பூமியில் இருந்து சுமார் 1.5 மில்லியன் கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- இந்த முப்பரிமாண சுற்றுவட்டப்பாதையானது சூரியன், பூமி மற்றும் இந்த விண்கலத்தை உள்ளடக்கிய L1 புள்ளியில் அமைந்த ஒரு சீரான குறிப்பிட்ட கால இடைவெளி கொண்ட முப்பரிமாண சுற்றுவட்டப்பாதையாகும்.
- பூமியிலிருந்து L1 புள்ளி அமைந்துள்ள தூரம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரத்தில் தோராயமாக 1% ஆகும்.
- WIND, சூரியசக்தி மற்றும் சூரிய சூழ் மண்டல ஆய்வகம் (SOHO), மேம்பட்ட கட்டமைப்பு ஆய்வுக் கருவி (ACE) மற்றும் விண்வெளிப் பருவநிலை ஆய்வகம் (DSCOVER) என்று தற்போது L1 புள்ளியில் தற்போது நான்கு செயல்பாட்டு விண்கலங்கள் உள்ளன.

## PSLV-C58 கலத்தின் POEM3 இயங்குதளம்

- இஸ்ரோ நிறுவனமானது, POEM3 எனப்படும் அதன் சுற்றுப்பாதை தளத்தில் 100 W ரக பலபடி சேர்ம மின்பகுளி சவ்வு எரிபொருள் மின்கலம் அடிப்படையிலான மின்னாற்றல் வழங்கீட்டு (FCPS) அமைப்பினை நிறுவி வெற்றிகரமாக பரிசோதித்து உள்ளது.
- இது சமீபத்தில் PSLV-C58 ஏவுகலத்தின் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.


- எந்த இடைநிலையிலான படிநிலையும் இல்லாமல் எரிபொருளில் இருந்து நேரடியாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் அவற்றை மிகவும் திறனுள்ள கருவியாக மாற்றுகிறது.
- வினைவிளை பொருளாக தண்ணீர் மட்டுமே வெளிவருவதால், அவை முற்றிலும் உமிழ்வு வெளியிடாத அமைப்பு ஆகும்.



## ANEEL எரிபொருள்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவரால் நிறுவப்பட்ட அணுசக்தித் தொழில்நுட்பம் சார்ந்த அமெரிக்க நிறுவனத்தினால் இது உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த நிறுவனம் ஆனது, ஒரு குறிப்பிட்ட அளவிலான செறிவூட்டல் கொண்ட தோரியம் மற்றும் யுரேனியம் ஆகியவற்றின் கலவையான எரிபொருளை உருவாக்கியுள்ளது. இது HALEU (உயர் மதிப்பீடு குறைந்த செறிவூட்டப்பட்ட யுரேனியம்) என்று அழைக்கப் படுகிறது.
- கிளீன் கோர் நிறுவனம் ஆனது இந்தக் கலவையை ANEEL (செறிவூட்டப்பட்ட செயல்பாட்டுக் காலத்திற்கான மேம்பட்ட அணுசக்தி) என்று அழைக்கிறது.
- ANEEL எரிபொருளை தற்போதுள்ள அழுத்த கனநீர் உலைகளில் (PHWRs) பயன்படுத்தலாம்.
- PHWR என்பது இந்தியாவின் அணுசக்தி நிலையங்களின் ஆற்றல் உற்பத்தி அலகாக இருக்கும் உள்நாட்டு அணு உலை அமைப்பாகும்.
- இந்தியாவில் மொத்தம் 4,460 மெகாவாட் திறன் கொண்ட 18 PHWR அணுஉலைகள் உள்ள நிலையில் இந்தியா 700 மெகாவாட் திறன் கொண்ட பத்துக்கும் மேற்பட்ட உலைகளை உருவாக்கி வருகிறது.
- தற்போதுள்ள அணு உலைகளில் பெரும்பாலானவை 5 சதவீத அளவிலான யுரேனியம்-235 கொண்டு செறிவூட்டப்பட்ட யுரேனியம் எரிபொருளில் இயங்குகின்றன.

- HALEU என்பது 5 சதவீதத்திற்கும் அதிகமாக ஆனால் 20 சதவீதத்திற்கும் குறைவாக செறிவூட்டப்பட்ட யுரேனியம் ஆகும்.
- தற்போது ரஷ்யா மற்றும் சீனாவில் மட்டுமே HALEU உற்பத்தி செய்வதற்கான உள் கட்டமைப்பு உள்ளது.
- இந்தியாவில் உலகின் மிகப்பெரிய அளவிலான தோரியம் இருப்பு உள்ள நிலையில் இது 1.07 மில்லியன் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு இந்த இருப்பானது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீடிக்கும்.
- இந்திய நாடானது, இந்த தோரிய இருப்பினைப் பயன்படுத்தினால், அது போதுமான பசுமை ஆற்றலை உற்பத்தி செய்து, அதன் இலக்கு ஆண்டான 2070 ஆம் ஆண்டிற்குள் எளிதாக நிகர சுழி நிலையை எட்டும்.
- எனினும், தோரியம் ஒரு திடமான பொருள் மற்றும் ஒரு பிளவிற்கு உட்படும் பொருள் அல்ல.
- அதாவது, அணு உலையில் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கு யுரேனியம்-235 அல்லது புளூட்டோனியம்-239 உடன் சேர்த்து அதனைப் பயன்படுத்த வேண்டும்.




## XPoSat ஆய்வுக் கலத்தின் கண்டுபிடிப்பு

- சமீபத்தில் விண்ணில் ஏவப்பட்ட XPoSat ஆய்வுக் கலத்தில் உள்ள விண்கலம் சார்ந்த ஒரு கருவி ஆனது ஒரு மீயொளிர் வீண்முகிலில் இருந்து (ஒரு நட்சத்திரத்தின் வெடிப்பு) வெளிவரும் முதல் ஒளியை வெற்றிகரமாக பதிவு செய்ததாக இஸ்ரோ அறிவித்து உள்ளது.
- XPoSat ஆய்வுக் கலத்தில் உள்ள XSPECT அறிவியல் கருவி, இந்தியாவின் முதல் ஊடுகதிர் முனைவாக்கமானி ஆய்வுத் திட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இது Cassiopeia A (Cas A) மீயொளிர் வீண்முகிலின் எஞ்சிய பகுதியிலிருந்து வெளிவரும் அதன் முதல் ஒளியைப் பதிவு செய்துள்ளது.
- ஒரு நட்சத்திரம் அதன் வாழ்க்கைச் சுழற்சியின் முடிவை அடைந்து, பேரழிவிற்கு உள்ளாகி, பின்னர் மீண்டு இணையும் போது ஏற்படும் நட்சத்திர வெடிப்பு நிகழ்வு தான் மீயொளிர் வீண்முகில் ஆகும்.



## ஐன்ஸ்டீன் ஆய்வுக் கருவி – சீனா




- பேரண்டத்தில் உள்ள மர்மமான நிலையற்ற நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்காக சீனா ஐன்ஸ்டீன் ஆய்வுக் கருவி (EP) என்ற புதிய வானியல் செயற்கைக்கோளை விண்ணில் ஏவியுள்ளது.
- 12 இதழ்களுடன் பூத்த தாமரை போன்ற வடிவிலான செயற்கைக்கோள் ஆனது, பேரண்டத்தில் வானவெடிகள் போல மினுமினுக்கும் மர்மமான நிலையற்ற நிகழ்வுகளைக் கண்காணிக்கிறது.
- இது ஒரு இறால் மீனினுடைய கண்ணின் செயல்பாட்டு நுட்பத்தினால் ஈர்க்கப்பட்ட புதிய ஊடுகதிர் கண்டறிதல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

## X-59 சப்தமற்ற மீயொலி விமானம்



- நாசா மற்றும் லாக்ஹீட் மார்ட்டின் ஆகியவை இணைந்து X-59 விமானத்தை சமீபத்தில் அறிமுகப்படுத்தின.
- இது மீயொலி விமானத்தில் ஏற்படும் முக்கிய சிக்கல்களில் ஒன்றான அதிர்வலைகள் மூலம் ஏற்படும் ஒலியை (சோனிக் பூம்) அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- X-1 ரகத்தினை உள்ளடக்கியச் சோதனை விமானங்களின் தொடரில் X-59 சமீபத்திய ரகமாகும்.
- X-1 ரகமானது, 1947 ஆம் ஆண்டில் ஒலியின் வேகத்தை மிஞ்சி செயல்படும் வகையில் கட்டமைக்கப்பட்ட முதல் ஆளில்லா விமானம் ஆகும்.

- 1967 ஆம் ஆண்டில் மனிதர்களால் மேக் 6.7 வேகத்தில் இயக்கப்பட்ட மிக வேகமான விமானம் என்ற சாதனையை X-15 கொண்டிருக்கிறது.


## புதிய அணு சக்தி மின்கலன்




- பீட்டாவோல்ட் எனப்படும் ஒரு சீன நாட்டின் புத்தொழில் நிறுவனமானது, மீண்டும் மின்னேற்றம் செய்ய வேண்டிய அவசியமற்ற, 50 ஆண்டுகளுக்கு திறன் பேசிகளுக்கான மின்னாற்றலை வழங்கும் திறன் கொண்ட மின்கலத்தினை உருவாக்கியுள்ளது.
- இது உலகின் முதல் சிறுவடிவமயமாக்கப்பட்ட அணுசக்தி அமைப்பு என அழைக்கப் படுகிறது.
- இந்த அணுசக்தி மின்கலமானது ஆற்றல் உருவாக்க, ஒரு நாணயத்தினை விட சிறிய பெட்டகத்தினுள் கச்சிதமாக அமைக்கப்பட்டுள்ள 63 அணுக்கரு ஐசோடோப்புகளை பயன்படுத்துகிறது.
- சிதைவு காலத்திற்குப் பிறகு, 63 ஐசோடோப்புகள் ஒரு நிலையான, கதிரியக்கமற்ற தாமிர ஐசோடோப்பாக மாறுகின்றன என்பதோடு, இதனால் இவை சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத அல்லது மாசுபாட்டை ஏற்படுத்தாத ஒன்றாக கருதப் படுகிறது.

## SLIM ஆய்வுத் திட்டம்

- ஜப்பானிய விண்வெளி நிறுவனமான ஜாக்ஸா, அதன் நிலவினை ஆய்வு செய்வதற்கான திறன் மிகு தரையிறங்கு கலம் (SLIM) நிலவில் தரையிறங்கியதை உறுதிப்படுத்தியுள்ளது.
- எனினும் இந்த கலத்தில் உள்ள சூரிய மின்கலங்கள் இயங்காததால் அந்த விண்கலம் இன்னும் சூரிய சக்தியைப் பெறவில்லை.
- இந்த தரையிறக்கமானது 2023 ஆம் ஆண்டில் நிலவில் சந்திரயான் -3 விண்கலத்தினை நிலவில் தரையிறக்கிய இந்தியாவிற்கு அடுத்தப் படியாக நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கிய ஐந்தாவது நாடாக ஜப்பானை மாற்றியுள்ளது.
- இதர மற்ற நாடுகள் சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகியன ஆகும்.
- தற்போது, இந்தக் கலம் குறிப்பிட்ட நேரம் மட்டுமே இயங்கும் மின் கலத்தின் சக்தியில் இயங்குகிற நிலையில் இது சில மணிநேரங்கள் மட்டுமே நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.





1) The Sea of Tranquility 2) the Apollo 11 landing site 3) the Shioli crater that the SLIM mission is targeting and 4) the Chandrayaan-3 lunar landing site.

## ஹேவிஷூர் தடுப்பூசி

- இந்திய நோய்த் தடுப்பாற்றல் ஆராய்ச்சி லிமிடெட் (IIL) நிறுவனமானது, ஹேவிஷூர் எனும் இந்தியாவின் 'முதல்' ஹெபடைடிஸ் A (கல்லீரல் அழற்சி) தடுப்பூசியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஹெபடைடிஸ் A என்பது மிகவும் தொற்றக்கூடிய கல்லீரல் வைரஸ் தொற்று ஆகும்.
- இது முதன்மையாக அசுத்தமான சூழலுடன் தொடர்பு கொண்ட நபர் உணவு உட்கொள்ளும் போது வாய்வழியாக பரவுவதால், இது ஒரு குறிப்பிடத்தக்கப் பொதுச் சுகாதாரச் சவாலை முன்வைக்கிறது.
- இது அசுத்தமான உணவு அல்லது தண்ணீரை உட்கொள்வதன் மூலம் பரவுகிறது.
- இந்தத் தடுப்பூசி கல்லீரல் அழற்சி நோயைத் தடுப்பதில் பயனுள்ளதாக இருப்பதால், வழக்கமான நோய்த்தடுப்பு மருந்து வழங்கீட்டு திட்டங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்பட பரிந்துரைக்கப்படுகிறது.
- IIL என்பது தேசியப் பால்வள மேம்பாட்டு வாரியத்தின் (NDDB) கீழ் இயங்கும் அதன் துணை நிறுவனமாகும்.





## மண்ணில் இருந்து ஆற்றலைப் பெற்று இயங்கும் எரிபொருள் கலம்



- மண்ணில் வாழும் நுண்ணுயிரிகளில் இருந்து பெரும் ஆற்றலைப் பெறக்கூடிய புதிய எரிபொருள் கலத்தை அமெரிக்காவின் நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழக அறிவியல் நிபுணர்கள் உருவாக்கியுள்ளனர்.
- ஒரு புத்தகத்தின் அளவு கொண்ட இந்த எரிபொருள் ஆனது, பசுமை உள்கட்டமைப்பு மற்றும் துல்லிய வேளாண்மை முறையில் பயன்படுத்தப்படும் நிலத்தடி உணர்விகளுக்கு எரிபொருள் வழங்குவதற்கு பயன்படுத்தக் கூடிய திறன் கொண்டது.
- இது நச்சுத் தன்மை மிக்க மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இரசாயனங்களைப் பயன்படுத்தும் மின்கலங்களுக்குப் பதிலாக ஒரு நிலையான மற்றும் ஒரு புதுப்பிக்கத் தக்க மாற்றாக இது அமையக் கூடும்.
- மண்ணில் வாழும் நுண்ணுயிரிகளில் இருந்து ஆற்றலைப் பெறக்கூடிய எரிபொருள் கலங்கள் (MFC) ஆனது, முதன்முதலில் 1911 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டதோடு அவை மின் கலத்தில் இருந்து வேறுபட்டு இயங்குவதில்லை.
- இவையும் நேர்மின் முனை, எதிர் மின்முனை மற்றும் மின்பகுளி ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
- ஆனால் இரசாயனங்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, அருகிலுள்ள மின்கடத்திகளுக்கு இயற்கையாக எலக்ட்ரான்களை வழங்கும் பாக்டீரியாக்களிலிருந்து மின்சார ஆற்றலைப் பெறுகின்றன.
- இந்த எலக்ட்ரான்களின் ஓட்டமானது, நேர்மின் முனையில் இருந்து எதிர் மின் முனையை நோக்கி நகர்ந்து மின்சுற்றை உருவாக்குகின்றன.

## நிலவில் தரையிறங்கிய ஜப்பான் விண்கலம்

- கடைசி நிமிட எந்திரக் கோளாறுகள் இருந்தபோதிலும், ஜப்பானின் "மூன் ஸ்னைப்பர்" விண்கலம் நிலவில் துல்லியமாக தரையிறங்கியது.
- இதன்மூலம், அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து, நிலவில் மிதமான வேகத்தில் தரையிறங்கிய ஐந்தாவது நாடாக ஜப்பான் மாறியது.
- நிலவை ஆய்வு செய்வதற்கான ஆளில்லாத, திறன் மிக்க தரையிறங்கு கலம் (SLIM) ஆனது "மூன் ஸ்னைப்பர்" என்றும் அழைக்கப்படுகிறது.
- அதன் துல்லியமான தொழில்நுட்பம் காரணமாக, நிலவில் உள்ள ஒரு பள்ளத்தில் நிர்ணயிக்கப் பட்ட ஒரு குறிப்பிட்ட தரையிறங்கும் இடத்தில் இருந்து 100 மீட்டருக்குள் தரையிறங்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- வல்லுநர்கள் பல கிலோமீட்டர்கள் வரை நிர்ணயித்து வைத்திருக்கும் வழக்கமான தரையிறங்கும் மண்டல வரம்பை விட இது மிகவும் துல்லியமானது.
- SLIM ஒரு துல்லியமான மிதவேக தரையிறக்கத்தில் வெற்றி பெற்றது.
- தரையிறங்கிய இடமானது, இலக்குப் பகுதியில் இருந்து சுமார் 55 மீட்டர் தொலைவில் இருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## தொலைதூரக் கடல் வாழ் பறவை ஆய்வு

- 14 ஆய்வுகளில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து 180க்கும் மேற்பட்ட பறவையியல் வல்லுநர்கள் மற்றும் பறவை ஆர்வலர்கள் மிகத் தீவிரமாகப் பங்கேற்று உள்ளனர்.
- கர்நாடக மாநிலப் பறவைகள் பட்டியலில் கரிய குழாய் மூக்கிகள், வரித்தலை குழாய் மூக்கிகள், பழுப்பு நிற கடல் கள்ளன்கள் மற்றும் பழுப்பு நிற அசடன் பறவை ஆகியவை புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.
- ஏப்ரலில் மங்களூருக் கடற்கரையில் தென்பட்ட கரிய குழாய் மூக்கிகள், இந்தியாவில் அப்பறவை தென்பட்ட முதல் பதிவாகும்.

- பழுப்பு நிறக் கடல் கள்ளன்களும் கர்நாடகாவில் முதன்முறையாக தென்பட்டன.



## நியோரா பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில் புலி

- மேற்கு வங்காளத்தின் மலைகளில் அமைந்துள்ள நியோரா பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில் வங்காளப் புலி தென்பட்டுள்ளது.
- இதன் மூலம் கடல் மட்டத்திலிருந்து 10,509 அடி உயரத்தில் இந்த பெரும்பூனை இனங்கள் இருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.
- நியோரா பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவானது, மேற்கு வங்காளத்தின் கலிம்போங் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது வடகிழக்குப் பகுதியில் காணப்படும் வளம் மிக்க உயிரியல் மண்டலங்களில் ஒன்றாகும்.
- இது சிக்கிமில் உள்ள பாங்கோலகா வனவிலங்குச் சரணாலயத்தையும் பூடானின் மிக கடுமையான பாதுகாப்பு விதிமுறைகள் கொண்ட டூர்சா வளம்காப்புப் பகுதியையும் இணைக்கிறது.
- சமீபத்திய கணக்கெடுப்பின் படி, மேற்கு வங்காளத்தில் 101 புலிகள் உள்ளன.
- சுந்தரவனப் புலி வாழ் மண்டலம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் வாழும் அனைத்துப் புலிகளும் கண்காணிக்கப் படுகின்றன.



## புதிய கடல் வாழ் பன்முகக் காலிகள்

- ஒடிசாவின் சிலிகா ஏரியில் டெமோர்செஸ்டியா இனத்தைச் சேர்ந்த இறால் போன்ற ஒரு புதிய வகை கடல் வாழ் பன்முகக் காலிகள் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.
- இது இந்தியக் கடற்கரையோரத்தில் காணப்படும் பிளாட்டோர்செஸ்டினே என்ற துணைக் குடும்பத்தைச் சேர்ந்தது.
- இந்தக் கண்டுபிடிப்பு டெமோர்செஸ்டியா இனத்தில் மேலும் ஒரு இனத்தைச் சேர்த்து, இக்குழுவில் உள்ள உலகளாவிய இனங்களின் எண்ணிக்கையை ஆறாக உயர்த்தி உள்ளது.
- தாலிட்ரிடே குடும்பம் பன்முகக் காலிகள் இனத்தின் மிகவும் பழமையான குழுக்களில் ஒன்றாகக் கருதப்பட்டதோடு இது ஜுராசிக் காலத்திலிருந்து கிரகத்தில் இருந்ததாக நம்பப் படுகிறது.



## பெருவில் உள்ள சிலா மலை



- பெருவில் உள்ள சில மலைத்தொடர்களில் பனிப்பாறைகள் பெரும்பாலும் மறைந்து விட்டன.
- சிலா மலை 1962 ஆண்டிலிருந்து அதன் பனிப்பாறை மேற்பரப்பில் 99 சதவீதத்தை இழந்துள்ளது.
- கடந்த 60 ஆண்டுகளில் பெரு நாடு தனது பனிப்பாறை மேற்பரப்பில் பாதிக்கும் மேற் பட்டவற்றை இழந்துள்ளது.
- 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் நிகழ்ந்த பருவநிலை மாற்றத்தால் சுமார் 175 பனிப்பாறைகள் அழிந்து விட்டன.

- 58 ஆண்டுகளில், 1962 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பனிப்பாறைப் பரப்பில் 56.22% இழக்கப்பட்டுள்ளது.
- இந்த நாட்டில் 1,050 சதுர கிலோமீட்டர் (405 சதுர மைல்) பனிப்பாறைப் பரப்பு எஞ்சி உள்ளது.
- 1962 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பனிப்பாறைப் பட்டியல் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட பனிப்பாறைப் பரவலில் இது 44% ஆகும்.

## புதிய “வெள்ளிக் கம்பிக்காரி” வண்ணத்துப் பூச்சிகள்

- சிகரிடிஸ் மேகமலையென்சிஸ் எனும் இனத்தினைச் சேர்ந்த புதிய வகை “வெள்ளிக் கம்பிக்காரி” வண்ணத்துப் பூச்சிகள் மேகமலை மலைப்பகுதியில் கண்டறியப் பட்டு உள்ளன.
- இந்த இனமானது மேகமலைப் பகுதியின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- கடந்த 33 ஆண்டுகளில் மேற்குத் தொடர்ச்சி மலையில் இருந்து கண்டறியப்பட்டு விவரிக்கப் படும் முதல் வண்ணத்துப்பூச்சி இனம் இதுவாகும்.
- இதுவரை அறிவிக்கப்படாத உயிரினம் ஒன்று கடைசியாக 1990 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் கண்டறியப்பட்டது - அது யூரேமா (டெரியாஸ்) நீலகிரியென்சிஸ் (யாடா, 1990), அல்லது சஹ்யாத்ரி புல் மஞ்சள் (நீலகிரி புல் மஞ்சள்) ஆகும்.



## புதிய தவளை வகை

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள நம்தாபா-கம்லாங் நிலப்பரப்பின் பல்லுயிர் காப்புப் பகுதியில் மூன்று புதிய-அறிவியல் ரீதியான தவளை வகைகளை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கிரேசிக்சலஸ் பட்கெயன்சிஸ் என்ற முதலாவது இனம் என்பது வெளிப்படையான உடலமைப்பு கொண்ட ஒரு பச்சை நிறத் தவளை ஆகும்.
- அல்கலஸ் ஃபோண்டினாலிஸ் எனப் பெயரிடப்பட்ட இரண்டாவது தவளை இனம், பேரினத்தின் கடைசி இனமானது கண்டுபிடிக்கப்பட்டு ஒரு தசாப்தத்திற்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு கண்டறியப்பட்டுள்ளது.
- தற்போது கண்டுபிடிக்கப்பட்ட புதிய மற்றும் மூன்றாவது தவளை இனம் ஆனது சதுப்பு நிலங்களில் காணப்படுகிறது என்பதோடு மேலும் இதற்கு நோவா-டிஹிங் ஆற்றின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.

- இந்த "ஒலி எழுப்பும் தவளை" இனத்திற்கு நிதிரானா நோடிஹிங் என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- இந்தியாவில் ஐந்து இனங்கள் விவரிக்கப் பட்டதுடன் 1799 ஆம் ஆண்டில் தொடங்கிய இருவாழ்வி இனங்களின் அறிவியல் சார் பதிவுகள், தற்போது சுமார் 470 இருவாழ்வி இனங்களைக் கொண்டுள்ளன.



## அரிதான அலையாத்தி பறவை - கோணமூக்கு உள்ளான்


- திருப்பூரில் உள்ள நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயத்தில் உள்ள பறவைகளின் சரிபார்ப்பு பட்டியல் 187 என்ற எண்ணிக்கையினை தொட்டுள்ளது.
- மாநில வனத் துறையின் பறவைக் கண்காணிப்பாளர் சமீபத்தில் கோணமூக்கு உள்ளான் (ரிகர்விரோஸ்ட்ரா அவோசெட்டா) என்ற கடற்கரைப் பறவையைக் கண்டார்.
- இது உள்நாட்டு நீர்நிலைகளில் அரிதாகவே காணப்படும் ஒரு சுற்றித் திரியும் பறவை ஆகும்.
- நல்லதங்கால் அணை மற்றும் நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயம் தவிர தமிழ்நாட்டின் உள்நாட்டு நீர்நிலைகளில் இந்த இனங்கள் பற்றியப் பதிவுகள் ஏதும் இல்லை.



## ஈரநில நகரக் குறியீடு

- ராஜஸ்தானின் உதய்ப்பூருடன் சேர்த்து சிர்பூர் ஈரநிலம் (இந்தூர்), யஷ்வந்த் சாகர் (இந்தூர்), போஜ் ஈரநிலம் (போபால்) ஆகியவை மதிப்புமிக்க தன்னார்வ ஈரநில நகர அங்கீகாரத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

- இந்தத் திட்டம் ஆனது நகர்ப்புற மற்றும் புறநகர் ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு மற்றும் உள்ளூர் மக்களுக்கு நிலையான சமூக-பொருளாதார நன்மைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஈரநில நகர அங்கீகாரம் ஆனது, நகராட்சி அதிகாரிகளின் பாதுகாப்பு முயற்சிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தையும் வழங்குகிறது.




## வடகிழக்கு ஆப்பிரிக்க சிவிங்கிப் புலிகளின் நிலை



- வல்லுநர்கள், வடகிழக்கு ஆப்பிரிக்க சிவிங்கிப் புலிகளின் பாதுகாப்பு வகைப்பாட்டு நிலையை 'எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்' என்ற நிலையில் இருந்து 'அருகி வரும் இனம்' என்ற நிலைக்கு மறுவகைப்படுத்துமாறு சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்திடம் (IUCN) வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
- அவை பெரும்பாலும் ஆப்பிரிக்க முனை எனப்படும் பகுதியில் காணப்படுகின்றன.
- முன்னதாக பதிவான அவற்றின் எண்ணிக்கையானது (வனங்களில்) 260–590 நன்கு வளர்ந்த சிவிங்கிப் புலிகள் ஆகும்.


## குடுவையிடப்பட்ட தண்ணீரில் குறுகிய அளவிலான மற்றும் நுண்ணிய நெகிழிகள்

- ஒவ்வொரு லிட்டர் குடுவை தண்ணீரிலும் 110,000 முதல் 370,000 நெகிழித் துகள்கள் உள்ளன.
- இது முந்தைய அதிகபட்ச மதிப்பீடுகளை விட தோராயமாக மூன்று முதல் பத்து மடங்கு அதிகமாகும்.

- அவற்றில் 90 சதவீதம் ஆனது நுண்ணிய அளவிலானவை ஆகும் (1 மைக்ரோ மீட்டருக்கும் குறைவான அளவு).
- இந்த நுண் நெகிழிகள் குறு நெகிழிகளை விட சிறியவை மற்றும் மனித உடல் ஆரோக்கியத்திற்கு அதிக ஆபத்தை ஏற்படுத்துகின்றன.
- குறு நெகிழிகள் (5 மி.மீ. முதல் 1 மைக்ரோமீட்டர் வரை) போலல்லாமல், நுண் நெகிழிகள், இதயம் மற்றும் மூளையை அடைவதற்கு முன்பு குடல் மற்றும் நுரையீரலில் இருந்து நேரடியாக இரத்த ஓட்டத்தில் நுழையக் கூடியது.





## அதிவெப்பமான ஆண்டு 2023




- ஐரோப்பிய ஒன்றியத்தின் கோப்பர்நிக்கஸ் பருவநிலை மாற்ற சேவை (C3S) நிறுவனம் ஆனது, 2023 ஆம் ஆண்டு புவியின் வெப்பமான ஆண்டு என்றும், கடந்த 100,000 ஆண்டுகளில் இது உலகின் மிக வெப்பமான ஆண்டு என்றும் அறிவித்தது.
- மனிதர்கள் அதிக அளவு புதைபடிவ எரிபொருட்களை எரிக்கத் தொடங்குவதற்கு முன்னதாக பதிவான நீண்ட காலச் சராசரியை விட கடந்த ஆண்டு 1.48C வெப்பம் அதிகமாக இருந்தது.

- கடந்த ஆண்டு ஆனது 2016 ஆம் ஆண்டை - முந்தைய வெப்பமான ஆண்டு - விட 0.17C (0.31F) வெப்பமாக இருந்ததோடு, இது "குறிப்பிடத்தக்க" வித்தியாசத்தில் இந்த அளவை முறியடித்தது.
- முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் உலகிலேயே அதிக வெப்பம் பதிவாகியுள்ளது.
- கடந்த ஆண்டு, வளிமண்டலத்தில் உள்ள கார்பன் டை ஆக்சைடின் செறிவு ஒரு மில்லியனுக்கு 419 பாகங்கள் என்ற மிக உயர்ந்த நிலைக்கு அதிகரித்தது.

## பறவைக் காய்ச்சலால் துருவக் கரடி மரணம்




- அலாஸ்கா நாட்டில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒரு துருவக் கரடி உயிரிழந்துள்ளது.
- துருவக் கரடியானது, மிகவும் தொற்று மிக்க பறவைக் காய்ச்சலால் (HPAI) உயிரிழந்து உள்ளது.
- H5N1 என்ற கொடிய தொற்றினால் பாதிக்கப்பட்டப் பறவைகளின் சடலங்களுடன் அவை தொடர்பு கொண்டதன் மூலம் இத்தொற்று ஏற்பட்டது.
- கருப்பு மற்றும் பழுப்பு நிறக் கரடிகள் முன்னதாகவே இந்தக் கொடிய வைரசினால் பாதிக்கப்பட்டுள்ளன.
- H5N1 முதன்முதலில் 1996 ஆம் ஆண்டில் சீனாவில் கண்டறியப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில் எதிர்பாராத எண்ணிக்கையிலான பறவைகளைக் கொன்ற இந்தக் கொடிய வைரஸின் புதிய மாற்றுரு தோன்றியது.
- பல பாலூட்டி இனங்களைப் பாதித்து, மிகவும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை இந்த வைரஸ் ஏற்படுத்தியுள்ளது.


## இயற்கை நோய்க்கிருமி - பூஞ்சை

- யூகலிப்டஸ் வனத் தோட்டங்களை யூகலிப்டஸ் நீள் அலகு கொண்ட விட்டில் பூச்சி என்ற வண்டுகளில் இருந்து பாதுகாப்பதற்காக அறிவியலாளர்கள் ஓர் இயற்கையான தீர்வைக் கண்டறிந்துள்ளனர்.
- யூகலிப்டஸ் நீள் அலகு கொண்ட விட்டில் பூச்சி (கோனிப்டெரஸ் பிளாடென்சிஸ்) என்பது யூகலிப்ட்ஸ் தாவரத்தின் இலைகளை தாக்கி அளிக்கும் ஒரு இலை-உண்ணும் வண்டு ஆகும்.
- இந்தப் பூச்சி இனமானது, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தது. ஆனால் யூகலிப்ட்ஸ் தாவரம் வளரும் பல்வேறு உலக நாடுகளில் இது காணப்படுகிறது.
- இந்தப் பூச்சி முக்கியமாக மைக்ரோவாஸ்ப்ஸ் அனாபேஸ் spp எனப்படும் விலை உயர்ந்த கலவையின் உதவியுடன் கட்டுப்படுத்தப் படுகிறது.
- 100 சதவீதம் இறப்பு விகிதத்துடன், தொடர்பு மற்றும் உட்கொள்ளல் ஆகிய இரண்டு வகையிலும் பியூவேரியா பாசியானா மிகவும் பயனுள்ளதாக இருந்தது.
- மெட்டார்ஹிசியம் அனிசிபிலியே மற்றும் பேசில்லஸ் கலவை 2.5 முதல் 5 சதவீதம் வரையிலான குறைந்த இறப்புகளை ஏற்படுத்தியது.
- யூகலிப்டஸ் மரம் ஆனது, காகிதக் கூழ் உற்பத்திக்கு ஒரு முக்கியமான மூலப் பொருள் ஆகும்.



## நாரிழைத் தாழை இலைகள்

- நாரிழைத் தாழை (சிசல்) இலைகளிலிருந்து “அதிக உறிஞ்சுத் திறன் கொண்ட மற்றும் தக்க வைப்புத் திறன் கொண்ட பொருள்” உற்பத்தி செய்யும் முறையை அறிவியல் நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது மாதவிடாய் காலப் பயன்பாட்டிற்கான துப்புரவுத் துணிகளில் உள்ள பருத்தி, மரக் கூழ் மற்றும் இரசாயன உறிஞ்சிகளுக்கு ஒரு மாற்றாக அமையும் திறன் கொண்டது.
- இந்தப் பொருளின் உறிஞ்சுதல் திறன் வணிக மாதவிடாய்ப் பயன்பாட்டுத் துணிகளில் இருப்பதை விட அதிகமாக உள்ளது.
- பண்டைய ஆஸ்டெக் மற்றும் மாயன் நாகரிகங்கள் முதன் முதலில் நாரிழைத் தாழை இலைகளிலிருந்து காகிதத்தைத் தயாரிக்கத் தொடங்கின.




## பனிச்சிறுத்தைகள் வளங்காப்பு இனப்பெருக்கத் திட்டம்

- டார்ஜிலிங் உயிரியல் பூங்காவில் தற்போது 7 ஆண் மற்றும் 7 பெண் பனிச் சிறுத்தைகளுடன் மொத்தம் 14 எண்ணிக்கையுடன் உலகிலேயே அதிக அளவிலான எண்ணிக்கையிலான பனிச்சிறுத்தைகள் காத்து வைக்கப்பட்டுள்ளன.
- அவற்றுள் மூன்று தாய்ச் சிறுத்தைகளால் ஆறு குட்டிகள் ஈனப்பட்டன.
- பொதுவாக டார்ஜிலிங் உயிரியல் பூங்கா என்றும் அழைக்கப்படுகின்ற பத்மஜா நாயுடு இமாலய விலங்கியல் பூங்காவில் (PNHZP) இனப்பெருக்கத் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இது அதிகபட்சப் பதிவாகும்.
- பனிச்சிறுத்தைகள் ஆனது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் "எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனங்கள்" அல்லது IUCN அமைப்பின் "அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் செந்நிற பட்டியல்" பிரிவில் உள்ளன.
- உலகளவில் இதன் எண்ணிக்கை 4,000 முதல் 7,500 வரை காணப் படுகிறது.
- இந்தியாவின் முதல் மற்றும் ஒரே பனிச்சிறுத்தைகளுக்கான வளங்காப்பு இனப் பெருக்கத் திட்டமானது 1985 ஆம் ஆண்டில் டார்ஜிலிங் உயிரியல் பூங்காவில் தொடங்கப் பட்டது.




- நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 1989 ஆம் ஆண்டில், தற்போது டாப்கேதாராவில் ஐந்து ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ள வளங்காப்பு இனப்பெருக்க மையத்தில் பனிச் சிறுத்தையின் முதல் பிறப்பு பதிவானது.
- அன்று முதல் அந்த உயிரியல் பூங்காவில் 77 பனிச்சிறுத்தைகள் பிறந்துள்ளன.

## இமயமலை ஓநாய் பற்றிய IUCN அமைப்பின் மதிப்பீடு




- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் இமயமலை ஓநாய் (கேனிஸ் லூபஸ் சான்கோ) முதல் முறையாக மதிப்பிடப்பட்டு உள்ளது.
- இந்த விலங்கானது IUCN செந்நிறப் பட்டியலில் 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனங்கள்' ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- அவற்றின் எண்ணிக்கை மதிப்பீடு ஆனது 2,275 முதல் 3,792 ஆக உள்ளது.
- இந்தியாவின் இமயமலைப் பகுதியில் 227-378 ஓநாய்கள் உள்ளனர்.

## இரட்டை வெள்ளிக் கம்பிக் காரி



- இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்லுயிர் பெருக்கப் பகுதிகளில் புதிய வகை வெள்ளிக் கம்பிக் காரி வண்ணத்துப்பூச்சி இனம் கண்டறியப் பட்டுள்ளது.
- சிகரிடிஸ் கான்ஜுன்க்டா அல்லது "இரட்டை வெள்ளிக்கம்பிக்காரி" என்று பெயரிடப் பட்ட இந்த தனித்துவமான இனமானது, முதன்முதலில் 2008 ஆம் ஆண்டில் தென்பட்டது.
- 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலை பல்லுயிர்ப் பெருக்கத்தில் இது போன்ற முதல் கண்டுபிடிப்பு இதுவாகும்.
- லைக்கேநிடே குடும்பத்தைச் சேர்ந்த 30 இரட்டை வெள்ளிக்கம்பிக்காரி வண்ணத்துப் பூச்சிகளை அறிவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்தியாவில், 16 வகையான வெள்ளிக்கம்பிக்காரி வண்ணத்துப்பூச்சிகள் உள்ள நிலையில் அவற்றில் 11 தீபகற்ப இந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படுகின்றன.

## பித்ரகனிகாவில் உப்பு நீர் வாழ் முதலைகள்




- 2024 ஆம் ஆண்டில் ஒடிசாவின் பித்ரகனிகா தேசியப் பூங்காவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள உப்பு நீர் அல்லது கழிமுக முதலைகளின் (க்ரோக்கோடைலஸ் போரோசஸ்) எண்ணிக்கை ஓரளவு அதிகரித்துள்ளது.
- கேந்திரபாரா மாவட்டத்தில் அமைந்துள்ள பூங்காவில் 1,811 முதலைகள் உள்ளன.
- கடந்த ஆண்டு பதிவான முதலைகளின் எண்ணிக்கை 1,793 ஆகும்.
- பித்ரகனிகா, மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனக் காடுகளுக்கு அடுத்தப்படியாக அமைந்த இந்தியாவின் இரண்டாவது பெரிய சதுப்புநிலக் காடு ஆகும்.
- இந்த இரண்டு பகுதிகளும் இந்தியாவில் உள்ள உலகின் மிகப்பெரிய ஊர்வன இனமான உப்பு நீர் முதலைகள் அதிகம் காணப்படும் மூன்று பகுதிகளில் இரண்டு ஆகும்.
- மூன்றாவது பகுதி அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகும்.

## இரட்டை சில்வண்டு பெருக்கம்


- 221 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் அபூர்வ நிகழ்வாக, இந்த ஆண்டு இரட்டை சில்வண்டு பெருக்க நிகழ்வு நடைபெற்றுள்ளது.
- அடைக்காப்பில் இருந்த சில்வண்டுகளின் இரண்டு குழுக்கள் (ப்ரூட் XIII மற்றும் ப்ரூட் XIX) ஒரே நேரத்தில் நிலப்பரப்பில் இருந்து வெளி வந்துள்ளன.

- பொதுவாக, அடைகாப்பினைப் பொறுத்து ஒவ்வொரு 13 அல்லது 17 ஆண்டுகளுக்கும் ஒருமுறை இந்தப் பூச்சிகள் நிலத்தடிப் பரப்பில் இருந்து வெளிவரும்.
- ஆனால் இந்த ஆண்டு, இந்த இரண்டு குழுக்களும் ஒன்றாக வெளிப்பட்டுள்ளன.
- கடைசியாக லூசியானா பகுதி பெறப்பட்ட 1803 ஆம் ஆண்டில் இந்த அரிய சில்வண்டு இணை வெடிப்பு நிகழ்ந்தது.
- அடுத்ததாக அத்தகைய நிகழ்வு 421 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நடக்கும்.
- சில்வண்டுகள் தங்கள் வாழ்க்கையின் ஆரம்பக் கட்டங்களை நிலத்தடியில் கழிக்கும் பூச்சிகள் ஆகும்.
- முழுமையாக வளர்ந்தவுடன், அவை உணவிற்காகவும் இனச்சேர்க்கைக்காகவும் மில்லியன் கணக்கில் வெளிவருகின்றன.
- ப்ரூட் XIX சில்வண்டுகள் 13 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளிவரும், அதே போல, ப்ரூட் XIII ஒவ்வொரு 17 ஆண்டுகளுக்கும் ஒருமுறை நிலத்தடியில் இருந்து வெளி வருகின்றன.



## அண்டார்டிக் கண்டத்திட்டு சுற்றுச்சூழல் அமைப்புகள்

- அதிக அளவு பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தினால் அண்டார்டிக் கண்டத்தின் கடல் சார்ந்த பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் (MPA) கண்டத்திட்டுகளின் அமிலத்தன்மை அளவுகள் அதிகரித்து வருகின்றன.
- மனித நடவடிக்கைகளில் இருந்து வெளியேறும் கார்பன் உமிழ்வுகள் கடலோரப் பகுதிகளில் உள்ள கடல் நீரில் செங்குத்து மட்டத்தில் கலப்பதன் விளைவாக அனைத்து நீர் மட்டங்களிலும் கடுமையான அமிலத்தன்மை ஏற்படுகிறது.
- இந்த ஆய்விற்கு அண்டார்டிக் கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பதிவான கடுமையான 21 ஆம் நூற்றாண்டின் கடல் அமிலமயமாதல் என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- வளிமண்டலத்தில் வெளியிடப்படும் கார்பன் டை ஆக்சைடு வாயுவை ($CO_2$) உட்கிரகிப்பதன் மூலம் புவி வெப்பமடைதலின் விளைவுகளைத் தணிக்க பெருங் கடல்கள் உதவுகின்றன.
- 2100 ஆம் ஆண்டில், கடலின் 200 மீட்டர் ஆழத்திற்கு pH அளவு 0.36 (மொத்த அளவில்) வரை குறையலாம்.



## திபெத்திய பழுப்புக் கரடி

- அரிய திபெத்திய பழுப்புக் கரடி இந்தியாவில் முதல் முறையாக தென்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.
- வடக்கு சிக்கிமின் உயரமான பகுதிகளில் இந்தக் கரடி தென்பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது நாட்டில் உள்ள பாலூட்டிகளின் பன்முகத்தன்மையில் ஒரு புதிய கிளையினத்தைச் சேர்த்துள்ளது.
- ஓர் அனைத்துண்ணி இனமான இது பொதுவாக கடல் மட்டத்திலிருந்து 4,000 மீட்டர் மற்றும் அதற்கு மேலான உயரத்தில் அமைந்த அல்பைன் காடுகளிலும் பசும் புல்வெளிகளிலும் காணப்படுகிறது.
- திபெத்திய நீலக் கரடி என்றும் அழைக்கப்படுகின்ற திபெத்திய பழுப்புக் கரடி இமயமலைப் பகுதியில் அருகி வரும் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இதுவரை, நேபாளம், பூடான் மற்றும் திபெத்தியப் பீடபூமியின் சில பகுதிகளில் இந்த விலங்கு தென்பட்டுள்ளது.



## நஞ்சராயன் சரணாலயத்தில் அரியவகை புலம்பெயர் பறவைகள்




- இப்பகுதிக்கு வருகை தந்த அரிய நீர்ப்பறவைகள் திருப்பூர் புறநகரில் அமைந்துள்ள நஞ்சராயன் ஏரி பறவைகள் சரணாலயத்தில் குவிந்துள்ளன.
- அவை நாமத்தலை வாத்து (மரேகா பெனிலோப்) மற்றும் செங்கிளுவை (டடோர்னா ஃபெருஜினியா) ஆகும்.
- நீண்ட இடைவெளிக்குப் பிறகு நாமத்தலை வாத்து இந்தக் குளத்தில் தென்பட்டது.
- செங்கிளுவை பறவை ஆனது முன்னதாக 14 பறவைகள் கொண்ட குழுவானது, 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இப்பகுதிக்கு வந்த போது தென்பட்டது.

## இந்தியாவின் தென்கோடி பகுதியில் உள்ள கழுகுகளின் கணக்கெடுப்பு

- நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தில் (NBR), சமீபத்தில் நிறைவு செய்யப்பட்ட ஒத்திசைவு கழுகு கணக்கெடுப்பில் 300க்கும் மேற்பட்ட கழுகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இது கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தக் கணக்கெடுப்பில்;
  - மொத்தம் 217 மிகவும் அருகிய நிலையில் உள்ள வெண்முதுகுக் கழுகுகள் (ஜிப்ஸ் பெங்கலென்சிஸ்),
  - 47 கருங்கழுத்துக் கழுகுகள் (ஜிப்ஸ் இண்டிகஸ்),
  - 50 ஆசிய ராச கழுகுகள் (சர்கோஜிப்ஸ் கால்வஸ்),
  - அருகிய நிலையில் உள்ள நான்கு எகிப்தியக் கழுகுகள் (நெப்போலியன் பெர்க்நோப்டெரஸ்) மற்றும்
  - இரண்டு "அச்சுறுத்தல் நிலையை அண்மித்த" இமயமலை பிணந்திண்ணிக் கழுகுகள் (ஜிப்ஸ் ஹிமாலயென்சிஸ்) பதிவு செய்யப் பட்டுள்ளன.
- இந்தக் கணக்கெடுப்பின் போது பதிவு செய்யப்பட்ட கழுகுகளில் 82 சதவீதத்திற்கும் அதிகமானவை நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தின் முதுமலை-சத்தியமங்கலம் - பந்திப்பூர் - வயநாடு வளாகத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- தமிழகத்தில் முதுமலை மற்றும் சத்தியமங்கலம் புலிகள் வளங்காப்பகங்களில் அதிக எண்ணிக்கையிலான கழுகுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடத்தப்பட்ட கடைசி ஒத்திசைவு கழுகு கணக்கெடுப்பில், 246 கழுகுகள் பதிவு செய்யப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பரி மாதத்தில் நடத்தப்பட்ட அண்மை கணக்கெடுப்பில், பதிவு செய்யப் பட்ட கழுகுகளின் எண்ணிக்கை 320 ஆக அதிகரித்துள்ளது.
- நெல்லை வனப் பிரிவு மற்றும் வயநாடு வனவிலங்கு சரணாலயத்தில் நான்கு எகிப்திய கழுகுகளும், இரண்டு இமயமலைக் கழுகுகளும் தென்பட்டன.

## ஆண்ட்ரோகிராஃபிஸ் தெனியென்சிஸ்




- தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் அமைந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் புதிய தாவர இனம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- அந்தத் தாவரத்தின் இருப்பிடத்தைக் கொண்டு (தேனி) 'ஆண்ட்ரோகிராஃபிஸ் தேனியென்சிஸ்' என்று பெயரிடப் பட்டுள்ளது.
- ஆண்ட்ரோகிராஃபிஸ் என்பது வங்காளதேசம், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் மேற்கு இமயமலையைப் பூர்வீகமாகக் கொண்ட வெப்பமண்டல ஆசிய இனமாகும்.
- இருப்பினும், பெரும்பாலான ஆண்ட்ரோகிராஃபிஸ் வகைகள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் குறிப்பாக மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் பரவிக் காணப் படுகின்றன.
- இந்தியாவில் சுமார் 25 ஆண்ட்ரோகிராஃபிஸ் இனங்கள் உள்ளன.
- இந்தத் தாவர இனமானது சளி, இருமல், காய்ச்சல், மஞ்சள் காமாலை, வயிற்றுப் போக்கு, இருதய நோய் மற்றும் கல்லீரல் நோய்கள் போன்ற பல்வேறு நோய்களுக்கு பாரம்பரியமாக ஆய்வு செய்யப்படாத மற்றும் ஆய்வு செய்யப்பட்ட சில மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

### தங்கநிறப் புலி




- 'அரிய' தங்கநிறப் புலியானது, அசாமின் காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் வளங்காப்பகத்தில் (KNPTR) மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒளிப்படக் கருவியில் படம் பிடிக்கப் பட்டுள்ளது.
- கோயம்புத்தூரைச் சேர்ந்த சுற்றுலாத் துறை நிபுணர் கௌரவ் ராம்நாராயணன் இந்தப் புலியின் புகைப்படத்தை எடுத்தார்.
- முன்னதாக 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், காசிரங்காவில் ஒரு "தங்கநிறப் புலி" தென்பட்டது.
- அசாதாரண நிற மாறுபாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டான இந்த "தங்கநிறப் புலி" என்பது அதிகப்படியான உள் இனவிருத்தியின் காரணமாக இவ்வாறு தோன்றியிருக்கலாம்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த லான்செட் கணிப்பு


- 1986-2005 என்ற அடிப்படை ஆண்டின் சராசரியுடன் ஒப்பிடும்போது 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் கோடை காலத்தின் சராசரி வெப்ப நிலையானது 0.5 டிகிரி செல்சியஸ் அதிகரித்து, பொது மக்களின் சுகாதாரத்திற்கு கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.
- ஒவ்வொரு வினாடிக்கும் 1,337 டன் கார்பன் டை ஆக்சைடு வெளியிடப்படுகிறது.
- 1986-2005 ஆகிய காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 2013-2022 ஆம் காலக் கட்டம் முதல் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் எதிர் கொண்ட மொத்த வெப்ப அலையின் தாக்க நாட்களின் எண்ணிக்கையில் 43% அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- அதே காலக் கட்டத்தில், 65 வயதுக்கு மேற்பட்ட முதிர் வயதினர் வெப்ப அலையால் பாதிப்புக்குள்ளான நாட்களில் 216% அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் மட்டும் 191 பில்லியன் திறன் மிக்க உழைப்பு நேரம் இழக்கப் பட்டுள்ள நிலையில் ,இது 1991-2000 ஆம் ஆண்டிலிருந்த அளவை விட 54% அதிகரித்து உள்ளது.

- இந்த இழப்பு ஆனது 2022 ஆம் ஆண்டில் சுமார் 219 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான வருமான இழப்பிற்கு வழி வகுத்த நிலையில், இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.3 சதவீதத்திற்குச் சமம் ஆகும்.
- வேளாண் தொழிலாளர்கள் பெரும் பாதிப்பைச் சந்தித்ததோடு அவர்கள் 64% உழைப்பு மணி நேரங்களை இழந்ததோடு, 55% வருவாய் இழப்பினையும் எதிர்கொண்டனர்.




## பருவநிலை நெருக்கடி: சமத்துவமின்மை மிகுந்த பகுதி குறித்த ஆய்வு

- இது வேளாண் துறைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பருவநிலை மாற்ற அச்சுறுத்தலின் அளவை அடிப்படையாகக் கொண்டு 87 நாடுகளை வரிசைப் படுத்தி உள்ளது.
- ஆறு நிறுவனங்களைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த இடர் குறியீட்டில் இந்தியா 12வது இடத்தில் உள்ளது.
- மற்ற ஆசிய நாடுகளில் வங்காளதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகியவை முறையே இரண்டாவது, நான்காவது, ஏழாவது மற்றும் எட்டாவது இடங்களைப் பிடித்தன.
- வேளாண் உணவு உற்பத்தி முறைகள் ஆனது உற்பத்தி, அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- ஆப்பிரிக்க மற்றும் ஆசியப் பிராந்தியங்களுக்குள், மத்திய, கிழக்கு மற்றும் தென் ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு மற்றும் தெற்காசியா முக்கியமாக ஆபத்தில் உள்ளன.
- வறட்சி, வெள்ளம் அல்லது குறுகிய பயிர் வளரும் பருவம் போன்ற மிக மோசமான பருவ நிலை அபாயங்களை அந்நாடுகள் எதிர்கொள்கின்றன.



## 2023 ஆம் ஆண்டு செலவின மதிப்பாய்வு: ஓராண்டில் ஏற்பட்ட பருவநிலை தாக்க சேதங்கள் குறித்த அறிக்கை

| Country | Event | Cost per person $ |
|---|---|---|
| Hawaii/ USA | Wildfire | 4,161 |
| Guam | Storm | 1,455 |
| Vanuatu | Storm | 947 |
| New Zealand | Storm | 468 |
| New Zealand | Flood | 371 |
| Italy | Flood | 164 |
| Libya | Flood | 105 |
| Peru | Flood | 66 |
| Spain | Drought | 50 |
| Myanmar | Storm | 41 |
| Chile | Flood | 39 |
| Haiti | Flood | 36 |
| Mexico | Storm | 35 |
| Chile | Wildfire | 30 |
| USA | Storm | 25 |
| China | Flood | 23 |
| Peru | Storm | 20 |
| Malawi | Storm | 17 |
| USA | Storm | 16 |
| Peru | Flood | 9 |

- 2023 ஆம் ஆண்டில் அதிக சேதத்தினை ஏற்படுத்திய பருவநிலை மாற்றத்துடன் தொடர்புடைய உலகின் முதல் 20 பேரழிவுகளில் 85 சதவிகிதம் (17) ஆனது வெள்ளம் மற்றும் புயல்களால் ஏற்பட்டவை ஆகும்.
- இந்த அறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட 20 பேரழிவுகள் ஆறு கண்டங்களில் (அண்டார்டிகாவைத் தவிர்த்து) உள்ள 14 நாடுகளில் நிகழ்ந்துள்ளன.
- ஆய்வாளர்கள் பேரழிவுகளின் பொருளாதாரச் செலவினங்களைக் கணக்கிட்டனர்.

- காட்டுத்தீ, வறட்சி (பருவநிலை சார்ந்த பேரழிவுகள்) முதல் வெள்ளம் மற்றும் புயல்கள் (நீரியல் மற்றும் வானிலை சார்ந்த பேரழிவுகள்) வரையிலான பேரழிவுகளால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- அமெரிக்காவில் 74 சதவீத பொருளாதார இழப்புகள் (76.4 பில்லியன் டாலர் மதிப்பு) காப்பீடு செய்யப்பட்டிருந்தன.
- ஆசிய-பசிபிக் பிராந்தியத்துடன் ஒப்பிடுகையில், இந்தப் பிராந்தியத்தில் வெறும் 13 சதவீத பொருளாதார இழப்புகள் (22.2 பில்லியன் டாலர்) மட்டுமே காப்பீடு செய்யப் பட்டிருந்தன.


## ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2024




- பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஆசியாவின் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை இந்தக் குறியீட்டில் முதலிடத்தைப் பகிர்ந்து கொள்கின்றன.
- அதே சமயம், முந்தைய ஆண்டு 84வது இடத்தில் இருந்த இந்தியா தனது தர நிலையை மேம்படுத்தி 80வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் 62 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணிக்கலாம்.
- இந்தக் குறியீட்டில் பாகிஸ்தான் (101), ஈராக் (102), சிரியா (103) மற்றும் ஆப்கானிஸ்தான் (104) ஆகியவை தரவரிசையில் கடைசியாக உள்ளன.
- இந்தியாவின் மற்ற அண்டை நாடுகளின் தரவரிசைகள்: மாலத்தீவுகள் (#58), சீனா (#62), பூட்டான் (#87), மியான்மர் (#92), இலங்கை (#96), வங்காளதேசம் (#97), மற்றும் நேபாளம் (#98).
- முதல் இடத்தில் உள்ள நாடுகளின் கடவுச் சீட்டினை வைத்திருப்பவர்கள் நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் 194 நாடுகளுக்குப் பயணிக்கலாம்.

- இந்தக் குறியீட்டில் 104வது இடத்தில் உள்ள ஆப்கானிஸ்தான் நாட்டின் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் 28 நாடுகளுக்கு மட்டுமே நுழைவு இசைவுச் சீட்டின்றிப் பயணிக்க இயலும்.
- இந்தக் குறியீடு ஆனது 227 நாடுகளையும், 199 கடவுச் சீட்டுகளையும் மதிப்பிட்டுத் தர வரிசைப்படுத்தியுள்ளது.

## உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்: போக்குகள் 2024





- சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆனது, 2023 ஆம் ஆண்டில் 5.1% ஆக இருந்த உலகளாவிய வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 5.2% ஆக இருக்கும் என்று கணித்துள்ளது.
- அதிக வருமானம் கொண்ட நாடுகளில் 2023 ஆம் ஆண்டில் 8.2% ஆக இருந்த வேலை வாய்ப்பு இடைவெளி விகிதம் ஆனது, குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 20.5% ஆக இருந்தது.
- இதே போல், 2023 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது அதிக வருமானம் உள்ள நாடுகளில் 4.5% ஆக இருந்த போதும், குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் இது 5.7% ஆகவே இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில், கடுமையான வறுமையில் வாழும் தொழிலாளர்களின் எண்ணிக்கை (வாங்கும் திறன் சமநிலை (PPP) அடிப்படையில் ஒரு நபர் ஒரு நாளைக்கு 2.15 டாலருக்கும் குறைவாக ஊதியம் பெறல்) உலகளவில் ஒரு மில்லியன் அதிகரித்துள்ளது.

## உலகளாவிய இடர் அறிக்கை 2024

- 2024 ஆம் ஆண்டு உலகளாவிய இடர் அறிக்கையானது உலகப் பொருளாதார மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- தொழில்நுட்ப முன்னேற்றங்கள், பொருளாதார உறுதித்திறன் இன்மை, பருவநிலை மாற்றம் மற்றும் ஆயுத மோதல்களின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, இனி வரும் ஆண்டுகளில் உலக நாடுகள் மிகக் கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- செயற்கை நுண்ணறிவினால் வழங்கப்படும் தவறான தகவல் மற்றும் தேவையற்ற தகவல்களால் ஏற்படும் அபாயங்களை இந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

- ❖ மாநிலங்களுக்கு இடையேயான ஆயுத மோதலின் அபாயம் ஆனது மிகவும் கவலைக் கொள்ளத் தக்கதாக உள்ளன.
- ❖ ஒரு தொடர்ச்சியான வாழ்க்கைச் செலவின நெருக்கடியானது, உலகப் பொருளாதார உறுதித்திறனில் நிச்சயமற்ற நிலைக்கு வழிவகுக்கும்.
- ❖ பணவீக்கம் மற்றும் பொருளாதாரச் சரிவு ஆகியவை முக்கிய அபாயங்களில் ஒரு குறிப்பிடத் தக்க சேர்க்கையாக சேர்க்கப்பட்டுள்ளன.




## உலகளாவிய ஹைட்ரஜன் விலைக் குறியீடு

- ❖ GIFT நகரில் உள்ள சர்வதேச நிதிச் சேவை மையம் (IFSC) ஆனது, இந்திய எரிவாயு பரிமாற்றம் (IGX) மற்றும் குஜராத் மாநில பெட்ரோலியம் கழகம் (GSPC) ஆகியவற்றுடன் ஒரு மூலோபாயக் கூட்டணியில் இணைந்துள்ளது.
- ❖ இந்த ஒத்துழைப்பு ஒரு முன்னோடியான உலகளாவிய ஹைட்ரஜன் வர்த்தக நெறிமுறையை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது உலக அளவில் மேற்கொள்ளப்படும் இத்தகைய இரண்டாவது வகையாகும்.
- ❖ இது GIFT நகரை உலகளாவியப் பசுமை ஹைட்ரஜன் சந்தையில் முன்னணி இடத்தில் நிறுத்தும்.
- ❖ இந்தக் கூட்டணி உலகளாவிய ஹைட்ரஜன் விலைக் குறியீட்டை அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ இது இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் பசுமை ஹைட்ரஜன் துறையில் விலை நிர்ணயிப்பு மற்றும் சந்தை தகவல்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு அளவுருவாகும்.

## ஆக்ஸ்பாம் நிறுவனத்தின் சமத்துவமின்மை அறிக்கை 2024

- ❖ இந்த அறிக்கையின் படி பில்லியனர்கள் தற்போது உலகின் 10 பெரிய நிறுவனங்களில் ஏழு நிறுவனங்களை இயக்கி வருகின்றனர் அல்லது முக்கியப் பங்குதாரர்களாக உள்ளனர்.


- 2020 ஆம் ஆண்டு முதல் பில்லியனர்கள் 3.3 டிரில்லியன் டாலர் அளவில் மேலும் பணக்காரர்களாகியுள்ளனர்.
- 2020 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து பெரும் பணக்காரர்களின் செல்வம் உண்மை மதிப்பில் 114 சதவீதம் உயர்ந்துள்ளது.
- 148 உயர்நிலை நிறுவனங்கள் 1.8 டிரில்லியன் டாலர் லாபம் ஈட்டியுள்ள நிலையில் இது மூன்றாண்டு சராசரியில் 52 சதவீதம் உயர்ந்துள்ளது.
- பத்தாண்டுகளில் உலக நாடுகள் அதன் முதல் டிரில்லியனரைக் காணக் கூடும், ஆனால் வறுமையை முற்றிலுமாக ஒழிக்க 229 ஆண்டுகள் ஆகும்.
- உலக அளவில் பெண்களை விட ஆண்கள் 105 டிரில்லியன் டாலர்கள் செல்வ வளம் அதிகம் கொண்டுள்ளனர்.
- உலகெங்கிலும் உள்ள 791 மில்லியன் தொழிலாளர்கள் தங்கள் ஊதியமானது பண வீக்கத்தின் வேகத்திற்கு ஏற்ப அமையாததைக் கண்டுள்ளனர்.
- இதன் விளைவாக கடந்த இரண்டு ஆண்டுகளில் 1.5 டிரில்லியன் டாலர் கூட்டு இழப்பு ஏற்பட்டது.
- உலகின் 1,600 பெரிய நிறுவனங்களில், வெறும் 0.4% நிறுவனங்கள் மட்டுமே தொழிலாளர்களுக்கு வாழ்வாதார ஊதியம் வழங்குவதற்கு உறுதியளித்துள்ளன.




## உலக தண்ணீர் கண்காணிப்பு அறிக்கை 2023

- 2023 ஆம் ஆண்டு உலக தண்ணீர் கண்காணிப்பு அறிக்கையின்படி, 77க்கும் மேற்பட்ட நாடுகள் கடந்த 45 ஆண்டுகளில் அதிகபட்ச சராசரி வருடாந்திர வெப்பநிலையை எதிர்கொண்டுள்ளன.
- அனைத்துப் பருவங்களிலும் அதிக சராசரி வெப்பநிலை பதிவானது.
- 2023 ஆம் ஆண்டு ஆனது காற்றின் சார்பு நிலை ஈரப்பதத்தில் இரண்டாவது இடத்தைப் பிடித்ததோடு இது அதிக உலர் சராசரி மற்றும் அதி தீவிர நிலைகளை நோக்கியப் போக்கைத் தொடர்கிறது.
- வெப்பமான மற்றும் வறண்ட நிலை இருந்தபோதிலும், பல பகுதிகளில் அதிக வருடாந்திர ஈர மண் நிலைகள் பதிவாகின.

- ஒரு நிலப்பரப்பில் உள்ள மண்ணில் காணப்படும் நீரின் அளவு ஆனது, 1998-2005 ஆம் ஆண்டுகளின் சராசரியை விட 3.5 சதவீதம் அதிகமாக இருந்தது.
- கடந்த இருபது ஆண்டுகளில் பதிவான மேற்பரப்பு நீர்நிலைகளின் உருவாக்கம் ஆனது (ஏரிகள், ஆறுகள் மற்றும் பிற தற்காலிக வெள்ளம் உட்பட) இரண்டாவது மிகக் குறைவானது ஆகும்.
- உலகளவில் மேற்பரப்பு நீர்நிலைகளின் உருவாக்கம் ஆனது 2003-2006 ஆம் ஆண்டுகளின் சராசரியை விட 7 சதவீதம் குறைவாக இருந்த நிலையில் இது 2011 ஆம் ஆண்டு முதல் பதிவான மிகக் குறைவான அளவாகும்.





## எடெல்மேன் நம்பிக்கை மதிப்பீட்டுமானி 2024




- வணிகங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீதான நம்பிக்கையின் அடிப்படையிலான தரவரிசையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- ஆனால் ஊடகங்கள் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் நான்காவது இடத்திலும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் ஐந்தாவது இடத்திலும் உள்ளது.

- சவூதி அரேபியா அரசாங்கத்தின் மீது மக்கள் காட்டும் நம்பிக்கையின் அடிப்படையில் முதலிடத்திலும், சீனா ஊடகங்கள் மீதான நம்பிக்கை அடிப்படையில் முதலிடத்திலும் உள்ளன.
- ஒருவரின் முதலாளி மீது காட்டப்படும் நம்பிக்கையின் அடிப்படையில், இந்தோனேசியா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன.
- ஐக்கியப் பேரரசு ஆனது, தென் கொரியாவை விஞ்சி மிகக் குறைந்த நம்பிக்கை கொண்ட நாடாக மாறியுள்ளது.
- 61% உலகளவில் அரசாங்கத் தலைவர்கள் வேண்டுமென்றே தவறான தகவல்களைப் பரப்புவதைப் பற்றி கவலை கொள்கின்றனர்.


## சர்வதேச எரிசக்தி முகமையின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் குறித்த அறிக்கை 2023



- புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி திறன் சேர்க்கை ஆனது 2023 ஆம் ஆண்டில் உலகளவில் உயர்ந்து 507 ஜிகாவாட்டை எட்டியுள்ளது.
- இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் சுமார் 50% அதிகரிப்பைக் குறிக்கிறது.
- உலகளாவிய புதுப்பிக்கத்தக்க திறன் ஆனது 2028 ஆம் ஆண்டிற்குள் 7300 GW திறனை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், பல்வேறு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியானது நீர் மின்னாற்றலை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி ஆனது, நிலக்கரி மூலமான மின்சார உற்பத்தியை விஞ்சும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- கூடுதலாக 2025 ஆம் ஆண்டில், காற்றாலை ஆற்றல் உற்பத்தி அணுமின் உற்பத்தியை விஞ்சும்.
- 2026 ஆம் ஆண்டில், சூரிய சக்தி உற்பத்தி ஆனது அணு மின் உற்பத்தியை மிஞ்சும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இறுதியாக, 2028 ஆம் ஆண்டில், சூரிய சக்தி உற்பத்தி ஆனது காற்றாலை மின் உற்பத்தியை விட அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2028 ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வள ஆதாரங்கள் உலகளாவிய மின்சார உற்பத்தியில் 42% ஆக இருக்கும். காற்று ஆற்றல் மற்றும் சூரியசக்தியின் பங்கு 25% ஆக இருக்கும்.

- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு 14% மற்றும் ஜப்பான் 11% பங்குடன், பிராந்தியத்தின் வளர்ச்சியில் பாதியளவு பங்கை இந்தியா கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியா, இந்தப் பங்கில் குறிப்பாக, 2023-2028 ஆம் ஆண்டுகளில் 205 GW திறன் புதுப்பிக்கத் தக்க ஆற்றலைச் சேர்க்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## உலகளாவிய கார்பன் திட்ட அறிக்கை




- புதைபடிவ எரிபொருட்களிலிருந்து வெளிவரும் உலகளாவிய கார்பன் உமிழ்வு ஆனது எப்போதும் இல்லாத உச்ச அளவினை எட்டியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் எண்ணெய்ப் பயன்பாட்டிலிருந்து வெளியான உலகளாவிய உமிழ்வு ஆனது மிகவும் அதிகளவில் உயரும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 36.8 பில்லியன் டன்கள் புதைபடிவ கார்பன் டை ஆக்சைடு (CO2) உமிழ்வு பதிவாகியுள்ளதாகவும், இது 2022 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 1.1 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இந்த வருடாந்திர அறிக்கை குறிப்பிடுகிறது.
- "நிலக்கரி (1.1 சதவிகிதம்), எண்ணெய் (1.5 சதவிகிதம்) மற்றும் எரிவாயு (0.5 சதவிகிதம்) ஆகியவற்றில் இருந்து வெளிவரும் உலகளாவிய உமிழ்வுகள் அனைத்தும் அதிகரிக்கும்" என்று அறிக்கை கூறியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் (2022 ஆம் ஆண்டை விட) இந்தியாவில் எதிர்பார்க்கப்படும் உமிழ்வு அதிகரிப்பானது எட்டு சதவிகிதத்திற்கும் அதிகமாக இருக்கும் என்று இந்த அறிக்கை கூறியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் 8.2 சதவீதமும், சீனாவில் 4.0 சதவீதமும் உமிழ்வு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டது.
- அதே நேரத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தில் 7.4 சதவீதமும், அமெரிக்காவில் 3.0 சதவீதமும் உலகின் பிற பகுதிகளில் 0.4 சதவீதமும் சரிவானது பதிவானது.

# மாநிலச் செய்திகள்

## புதிய வந்தே பாரத் விரைவு இரயில்

- ❖ பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர் இடையே புதிய வந்தே பாரத் இரயில் சேவை சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- ❖ கர்நாடகாவுக்கு புதிதாக இரண்டு வந்தே பாரத் விரைவு இரயில் சேவைகள் தொடங்கப் பட்டுள்ளன.
- ❖ பெங்களூரு – கோயம்புத்தூர் மற்றும் மங்களூரு – மட்காவோன் இடையே வந்தே பாரத் இரயில்கள் சேவைகள் இயக்கப்பட உள்ளன.
- ❖ இந்தப் புதிய சேவைகளுடன் கர்நாடகாவில் தற்போது ஐந்து வந்தே பாரத் இரயில்கள் பல இடங்களை இணைக்கின்றன.



## குற்றவியல் நீதி தரவு தளத்தின் பயன்பாடு




. Conceptual diagram of ICJS implementation

- ❖ உள்ளிடை இயங்கு (பரிமாற்ற) தன்மையிலான நீதி அமைப்பு (ICJS) தளத்தில் அதிக வழக்குகளைப் பதிவு செய்வதில் உத்தரப் பிரதேசம் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ ICJS தளத்தில் உத்தரப் பிரதேச மாநிலம் இதுவரை 1.56 கோடி வழக்குகளைப் பதிவு செய்துள்ளது.

- 35 லட்சம் பதிவுகளுடன் மத்தியப் பிரதேசம் இரண்டாவது இடத்திலும், 16 லட்சம் பதிவுகளுடன் பீகார் மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- ICJS என்பது உச்ச நீதிமன்றத்தின் இணைய குழுவினால் கருத்துருவாக்கம் செய்யப் பட்டு உள்துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.
- இந்த தளம் ஆனது, நாடு முழுவதும் உள்ள குற்றவியல் நீதி அமைப்பின் பல்வேறு அமைப்புகளுக்கு இடையில் தரவு மற்றும் தகவல்களை தடையின்றி இடமாற்றுவதற்கு உதவுகிறது.
- இவற்றில் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தரவுகள் ஒற்றைச் சாளர அமைப்பு மூலம் நீதிமன்றங்கள், காவல்துறை, சிறைச்சாலைகள் மற்றும் தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு இடையே பரிமாற்றம் செய்யப்படுகிறது.

## ULFA அமைதி ஒப்பந்தம்


- அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி (ULFA) அமைப்பானது, இந்திய அரசு மற்றும் அசாம் மாநில அரசுடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முத்தரப்பு அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி அமைப்பானது, 1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற அயலவர்களுக்கு (வெளி மாநிலத்தவர்) எதிரான இயக்கத்தின் போது தொடங்கப் பட்டது.
- "அசாம் மாநிலத்தில் உள்ள அயலவர்களின் பிரச்சனைக்கு முழுமையான தீர்வு காண்பதற்காக" 1985 ஆம் ஆண்டில் அசாம் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- 1990 ஆம் ஆண்டில், மத்திய அரசானது பஜ்ரங் நடவடிக்கையினைத் தொடங்கி அதன் மூலம் 1,221 ULFA கிளர்ச்சியாளர்களைக் கைது செய்ய வழி வகுத்தது.
- அசாம் 'அமைதியற்றப் பகுதி' என அறிவிக்கப்பட்டு, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டு, ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் (AFSPA) செயல்படுத்தப் பட்டது.
- 1992 ஆம் ஆண்டில், பின்னர் சரணடைந்த ULFA (SULFA) எனப் பெயரிடப்பட்ட ஒரு பிரிவினர், சரணடைவதற்கும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவும் முன் வந்தனர்.
- அரபிந்தா ராஜ்கோவா போன்ற சில ULFA பிரிவினர், ராஜ்கோவா தலைமையிலான பேச்சுவார்த்தைக்கு உட்படும் ULFA சார்பு பிரிவு என்று அழைக்கப்படும் பிரிவினர் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்மொழிந்துள்ளனர்.
- பரேஷ் பருவா தலைமையிலான ULFA -I எனப்படும் பிரிவு சமாதான நடவடிக்கையில் இணையவில்லை.

## ஜம்மு காஷ்மீர் பஞ்சாயத்து ராஜ் சட்டம்

- ஜம்மு மற்றும் காஷ்மீர் நிர்வாகச் சபையானது, இதரப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்களுக்கான இடஒதுக்கீட்டைச் சேர்ப்பதற்காக வேண்டி 1989 ஆம் ஆண்டு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தினை திருத்தியமைத்தது.
- பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதன் மூலம் சட்டத்தை மிகவும் பயனுள்ளதாக மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இடஒதுக்கீடு வழங்குவதற்கான இதரப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்களின் வரையறை, உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யும் முறை, சர்பஞ்ச், நாய்ப் சர்பஞ்ச் மற்றும் பஞ்ச் ஆகியோரை இடைநீக்கம் செய்தல் மற்றும் நீக்குதல் ஆகியவை இந்தத் திருத்தத்தில் அடங்கும்.

## ஜம்மு மற்றும் காஷ்மீரில் விஸ்வகர்மா யோஜனா




- ஜம்மு மற்றும் காஷ்மீர் பிரதம மந்திரி விஸ்வகர்மா யோஜனாவை செயல்படுத்தும் முதல் ஒன்றியப் பிரதேசமாக (UT) மாறியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, கைவினைஞர் சமூகத்தின் திறன்களை மேம்படுத்தச் செய்வதையும் அவர்களுக்குத் தேவையான அதிகரமாளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது PM விஸ்வகர்மா சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் மூலம் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களை அங்கீகரிக்கிறது.
- இந்தத் திட்டத்தில் ஐந்து முதல் ஏழு நாட்கள் வரையிலான அடிப்படைப் பயிற்சியும், 15 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் வரையிலான மேம்பட்ட பயிற்சியும், ஒரு நாளைக்கு 500 ரூபாய் உதவித்தொகையும் வழங்கப்படும்.
- பயிற்சி பெற்ற விஸ்வகர்மாக்களுக்கு 15,000 ரூபாய் மதிப்பிலான நவீன கருவித் தொகுப்பும் இத்திட்டத்தில் வழங்கப் படுகிறது.

## சுதந்திரமான (தடையற்ற) போக்குவரத்து அனுமதி முறையின் முடிவு

- மியான்மர் எல்லையில் உள்ள சுதந்திரமான போக்குவரத்து (நடமாட்ட) அனுமதி முறையை (FMR) ரத்து செய்ய மத்திய அரசு தயாராகி வருகிறது.
- இனி, எல்லைப் பகுதிகளில் வசிப்பவர்கள் இந்தியாவைக் கடக்க நுழைவு இசைவுச் சீட்டுத் தேவைப்படும்.
- இந்தியாவும் மியான்மரும் பாதுகாப்பு வேலிகள் இல்லாத எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன என்பதோடு இருபுறமும் உள்ள மக்களுக்கு குடும்ப மற்றும் இனம் சார்ந்த தொடர்புகள் உள்ள நிலையில் 1970 ஆம் ஆண்டுகளில் ஒரு செயல்முறையை அறிமுகம் செய்ய இது தூண்டியது.
- இது கடைசியாக 2016 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது.

- சுதந்திரமான போக்குவரத்து அனுமதி முறையின் கீழ், இந்தியக் குடிமகன் அல்லது மியான்மரின் குடிமகன் மற்றும் எல்லையின் இருபுறமும் 16 கி.மீ தொலைவில் வசிக்கும் மலைவாழ் பழங்குடியினரின் ஒவ்வொரு உறுப்பினரும் எல்லை அனுமதிச் சீட்டினைப் பெறுவதன் மூலம் எல்லையை கடக்கலாம்.
- இந்த கடவுச் சீட்டு வழக்கமாக ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் என்பதோடு மேலும் அவர்கள் ஒரு வருகைக்கு இரண்டு வாரங்கள் வரை அங்கு தங்கலாம்.
- அருணாச்சலப் பிரதேசம் (520 கி.மீ), நாகாலாந்து (215 கி.மீ), மணிப்பூர் (398 கி.மீ), மற்றும் மிசோரம் (510 கிமீ) ஆகிய மாநிலங்கள் வழியாக மியான்மருடன் 1,643 கி.மீ நீள எல்லையை இந்தியா பகிர்ந்து கொள்கிறது.




## ஹட்டீ சமூகத்திற்குப் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அந்தஸ்து




- இமாச்சலப் பிரதேச அரசானது, சிர்மௌர் மாவட்டத்தின் கிரி பகுதியின் எல்லையில் உள்ள ஹட்டீ சமூகத்திற்கு பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்து வழங்கச் செய்வதற்கான அறிவிப்பை வெளியிட்டது.
- இது சிர்மௌர் மாவட்டத்தின் குஜ்ஜார் சமூகத்தினரால் - அப்பகுதியில் உள்ள ஒரே மற்ற பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சமூகம் - வன்முறையில் ஈடுபட மேற்கொள்ள வழிவகுத்தது.
- ஆனால் இமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்றம் இந்த அறிவிப்பை நிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

- மத்திய அரசு ஆனது 1995, 2006 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இந்த கோரிக்கையை ஏற்கனவே மூன்று முறை நிராகரித்துள்ளது.
- 1967 ஆம் ஆண்டிலேயே உத்தரகாண்ட் மாநிலத்தின் ஜான்சர்-பவார் பகுதியின் அடிப்படையில் கிரி பகுதியின் எல்லைப் பகுதியில் வசிப்பவர்கள் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் அந்தஸ்து கோரி வந்தனர்.
- பழைய சிர்மௌர் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்த எல்லை சார் கிரி பகுதி மற்றும் ஜான்சர் பவார் பகுதிகள் அனைத்து அம்சங்களிலும் ஒற்றுமையைக் கொண்டு உள்ளன.

## 17க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடுகள்

- ஒடிசா, அருணாச்சலப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 17க்கும் மேற்பட்ட தயாரிப்புகள் புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளன.
- 2004 ஆம் ஆண்டு முதல் இதுவரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மொத்தம் 504 பொருட்கள் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.
- 2004-05 ஆம் ஆண்டில் புவிசார் குறியீடு பெற்ற இந்தியாவின் முதலாவது தயாரிப்பு டார்ஜிலிங் தேயிலை ஆகும்.

| மாநிலங்கள் | தயாரிப்புகள் |
|---|---|
| **அருணாச்சலப் பிரதேசம்** | வாஞ்சோ மர கைவினை<br>ஆதி கேகிர் (இஞ்சி)<br>கையால் நெய்யப்பட்ட தரைவிரிப்புகள் |
| **மேற்கு வங்காளம்** | தாங்கேய்ல் சேலை<br>கரட் சேலை<br>கோரியல் சேலை<br>கலோனுனியா அரிசி<br>சுந்தர்பன் தேன் |
| **ஒடிசா** | தேன்கனல் மக்ஜி<br>கஜூரி குடா<br>சிமிலிபால் காய் சட்னி<br>நாயகர்ஹ் கண்டேமுண்டி கத்தரிக்காய்<br>டோங்காரியா கோந்த் பூத்தையல் சால்வை<br>கோராபுட் கலஜீரா அரிசி<br>லாஞ்சியா சௌரா ஓவியங்கள் |
| **குஜராத்** | கச்சி கரேக் |
| **ஜம்மு & காஷ்மீர்** | ரம்பன் அனந்தனா |

## REJUPAVE தொழில்நுட்பம்

- எல்லைச் சாலைகள் அமைப்பு ஆனது, அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள இந்திய-சீன எல்லையில் " REJUPAVE " என்ற உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிலக்கீல் சாலைகளை அமைக்க உள்ளது.
- இது முதன்மையான சாலை ஆராய்ச்சி நிறுவனமான அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி சபையின் மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் (CSIR-CRRI) உருவாக்கப்பட்டது.
- REJUPAVE நிலக்கீல் மாற்றமைப்புகள் ஆனது, ஓர் உயிரி எண்ணெய் சார்ந்த தயாரிப்பு ஆகும் என்ற நிலையில் இது போக்குவரத்தின் போது நிலக்கீல் கலவைகளின் வெப்ப நிலையைத் தக்க வைப்பதோடு, அந்தக் கலவையின் வெப்பமாக்கல் தேவையைக் குறைக்கிறது.

- இத்தொழில்நுட்பம் ஆனது, ஏற்கனவே 14,000 அடி மற்றும் 18,000 அடி உயரத்தில் உள்ள சேலா சுரங்கப்பாதை மற்றும் LGG-தாம்டெங்க்-யாங்சே சுரங்கப் பாதைகளின் சாலைகள் அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.



## அனைத்து விபத்து நேரும் இடங்களையும் வரைபடமாக்குதல்

- MapMyIndia நிறுவனம் உருவாக்கிய வழிக்காட்டுதல் அமைப்பான Mappls செயலியில் விபத்துகள் அதிகம் நிகழும் 784 இடங்களையும் வரைபடமாக்கிய இந்தியாவின் முதல் மாநிலமாக பஞ்சாப் மாறியுள்ளது.
- விபத்துகள் அதிகம் நிகழும் பகுதிகள் மற்றும் விபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் சரியாக தென்படாத பகுதிகள் பற்றிய நிகழ்நேர போக்குவரத்து அறிவிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கைகளை Mappls செயலியில் இருந்து பெறுவதற்காக MapmyIndia என்ற நிறுவனத்துடன் பஞ்சாப் காவல்துறை கைகோர்த்துள்ளது.
- விபத்துகள் அதிகம் நிகழும் பகுதிகளுக்கு அருகில் வரும்போது பஞ்சாபி மொழியில் குரல் சார்ந்த எச்சரிக்கைகளை இந்த செயலி வழங்கும் என்பதோடு இந்த நடவடிக்கை சாலைப் பாதுகாப்பின் ஒரு பகுதியாக விபத்துக்கள் அதிகம் உள்ள இடங்களை வரைபடமாக்கும் முதல் மாநிலமாக பஞ்சாப் மாநிலத்தினை மாற்றியுள்ளது.
- விபத்துகள் அதிகம் நிகழும் பகுதிகள் என்பது முன்னதாக சாலைப் போக்குவரத்து விபத்துக்கள் அதிகமாக நிகழ்ந்துள்ள இடமாகும்.

## மேற்கு வங்காளம் - மாநிலப் பாடல் மற்றும் மாநில நாள்

**'RICH GLORY, CULTURE & HERITAGE'**

- **Poila Baisakh** will be state day, **Bangla Divas**
- **'Banglar Mati, Banglar Jal'** will be **state song**
- State govt programmes **to start with state song and end with national anthem**
- During state song, **participants must stand** like during national anthem
- 13 states, including **Gujarat, Maharashtra, Karnataka, Bihar, Odisha and Assam**, have state songs
- Most states have **foundation or formation day**

- மேற்கு வங்காள அரசு ஆனது, பொய்லா போயிசாக் எனப்படும் வங்காள புத்தாண்டின் முதல் நாளை மாநில தினமாக அறிவித்து அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- இது ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் எழுதப்பட்ட பங்ளர் மாட்டி பங்களார் ஜல் என்ற பாடலை மாநிலப் பாடலாக அறிவித்துள்ளது.
- இந்த மாநிலப் பாடலின் மொத்த வாசிப்பு நேரம் 1 நிமிடம் 59 வினாடிகள் ஆகும்.


## அட்பாடி வளங்காப்பகம்




- மஹாராஷ்டிரா அரசானது, சாங்லி மாவட்டத்தின் வனப் பகுதியில் அட்பாடி வளங் காப்பகம் என்ற புதிய வளங்காப்பகத்தை அறிவித்துள்ளது.
- 36 மர வகைகள், 116 மூலிகை வகைகள், 15 புதர் தாவர இனங்கள், 14 கொடி வகைகள் மற்றும் 1 ஒட்டுண்ணித் தாவரங்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன.
- அட்பாடி வளங்காப்பகமானது, அப்பகுதியில் உள்ள ஓநாய்கள், குள்ளநரிகள், மான்கள், நரிகள், புனுகுப் பூனைகள், முயல்கள் மற்றும் பிற பாலூட்டிகளின் வாழ்விடத்தைப் பாதுகாக்க உதவும்.

## வங்காள மொழிக்கு செம்மொழி அந்தஸ்து

- மேற்கு வங்காள மாநில அரசானது, வங்காள மொழியை அதிகாரப்பூர்வமாக "செம்மொழி" ஆகப் பட்டியலிடுமாறு மத்திய அரசிடம் கோரியுள்ளது.
- அம்மாநில அரசின் கோரிக்கைப்படி, வங்காளம் ஒரு மொழியாக, எழுத்துப் பூர்வமாக கி.மு. 3-4 ஆம் ஆண்டிலிருந்தே காணப்படுகிறது.
- வங்காள மொழி இந்தியாவில் அதிகம் பேசப்படும் 2வது மொழியாகும் என்பதோடு இது உலகில் அதிகம் பேசப்படும் 7வது மொழியும் ஆகும்.
- இதுவரை, ஆறு மொழிகளுக்கு மட்டுமே செம்மொழி அந்தஸ்து உள்ளதாக இந்திய அரசு அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்துள்ளது.
- அவை தமிழ் (2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு, கன்னடம் (2008), மலையாளம் (2013), மற்றும் ஒடியா (2014) ஆகியவை ஆகும்.





- ❖ மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, ஒரு மொழியை "செம்மொழி" என்று அறிவிப்பதற்கு அது பின்வரும் நிலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
  - அதன் பண்டைய நூல்களின் அதீதத் தொன்மை;
  - 1500-2000 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்படுவதற்கான வரலாறு;
  - ஒரு மொழி பேசும் குழுவின் தலைமுறைகளால் மதிப்புமிக்க பாரம்பரியமாகக் கருதப் படுகின்ற பண்டைய இலக்கியங்கள்/நூல்களின் தொகுப்பினை கொண்டு இருக்க வேண்டும்;
  - அசலாகவும் மற்றொரு மொழி பேசும் சமூகத்திலிருந்து பெறப்படாத ஒரு இலக்கிய பாரம்பரியத்தினை கொண்டிருக்க வேண்டும்; மற்றும்
  - செம்மொழிக்கும் அதன் பிற்கால வடிவங்களுக்கும் அல்லது அதன் கிளைகளுக்கும் இடையில் எந்தவொரு இடைவெளியும் இல்லாமல், நவீன காலத்திலிருந்து வேறுபட்டு இருப்பது.



## புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசை 2022

- ❖ மாநிலங்களின் 2022 ஆம் ஆண்டு புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசையில், ‘சிறந்த செயல்திறன்’ பிரிவின் கீழ் அங்கீகாரம் பெற்ற ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலமும் இடம் பெற்றுள்ளது.
- ❖ குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை இந்த சிறந்த செயல்திறன் பிரிவின் கீழ் அங்கீகாரம் பெற்ற மற்ற மாநிலங்கள் ஆகும்.
- ❖ முதல் இரண்டு தரவரிசைகளில், தமிழ்நாடு மாநிலம் மிகவும் கடைநிலைப் பிரிவான ‘வளர்ந்து வரும் சூழல் அமைப்பு’ பிரிவில் இடம் பெற்றது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மூன்றாம் தரவரிசையில் 'முன்னணி' பிரிவில் அங்கீகரிக்கப்பட்டது.
- ❖ கிரீன்விரோ குளோபல் நிறுவனம் ஆனது, இந்த நிகழ்வில் ‘நிலைத்தன்மை வாகையர்’ பிரிவின் கீழ் 2023 ஆம் ஆண்டு தேசிய புத்தொழில் நிறுவனங்கள் விருதினைப் பெற்றது.
- ❖ தமிழ்நாட்டின் மற்றொரு நிறுவனங்கள் நிறுவனமான அட்சுயா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், 2023 ஆம் ஆண்டிற்கான தேசியப் புத்தொழில் நிறுவனங்கள் விருதுகளில் ஆண்டின் சிறந்த ஜெனிசிஸ் (முன்னணி அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்) புத்தாக்க விருதை வென்றது.

## AMRITH நடவடிக்கை – கேரளா




- ❖ கேரள மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் AMRITH நடவடிக்கையின் கீழான சோதனைகளைத் தொடங்கி உள்ளது.
- ❖ AMRITH என்பது முழு ஆரோக்கியத்திற்கான நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் எதிர்ப்பாற்றல் தடுப்பு நடவடிக்கை என்பதைக் குறிக்கிறது.
- ❖ இது மாநிலத்தில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் அதிகப்படியான பயன்பாட்டைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் மருந்து சீட்டின்றி செய்யப்படும் (OTC) விற்பனையைத் தடுப்பதன் மூலம் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாட்டை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கையை அத்துறை மேற்கொண்டு வருகிறது.
- ❖ நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் OTC விற்பனையைக் கண்டறிவதற்காக சில்லறை மருந்து விற்பனை கடைகளில் திடீர் சோதனைகளை நடத்துவதை நோக்கமாகக் கொண்டு AMRITH நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- ❖ மேலும் மருந்து விற்பனைக் கடைகளுக்கு எதிராக புகார் தெரிவிக்க 18004253182 என்ற இலவச எண் (டோல் ஃப்ரீ எண்) அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் இரவு வான்வெளிப் பூங்கா




- மகாராஷ்டிராவில் உள்ள பென்ச் புலிகள் வளங்காப்பகம் (PTR) ஆனது இந்தியாவின் முதல் இரவு வான்வெளிப் பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இரவு நேர வானத்தைப் பாதுகாப்பதற்கும், ஒளி மாசுபாட்டைத் தடுப்பதற்காகவும் ஆசியாவில் அமைக்கப்பட்ட ஐந்தாவது பூங்காவான இது வானியல் ஆர்வலர்களுக்கு ஏற்றதாக அமைகிறது.
- ஓர் இரவு வான் பாதுகாப்பு அமைப்பு என்பது செயற்கை ஒளி மாசுபாட்டைக் கட்டுப்படுத்துகின்ற, ஒரு பூங்கா அல்லது ஆய்வகத்தினைச் சுற்றியுள்ள பகுதியாகும்.
- இந்த இரவு வான்வெளி நடவடிக்கையின் முக்கிய நோக்கம் வானவியல் ஆய்வை நன்கு மேம்படுத்துவதாகும்.
- பென்ச் புலிகள் வளங்காப்பகம் அல்லது பென்ச் தேசியப் பூங்கா என்பது இந்தியாவின் முதன்மையான புலிகள் வளங்காப்பகங்களில் ஒன்றாகும்.
- மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரண்டு மாநிலங்களில் பரவி அமைந்த முதல் வளங்காப்பகமாகும்.

## மிக உயரமான அம்பேத்கர் சிலை



- ஆந்திரப் பிரதேச அரசானது, விஜயவாடாவில் உலகின் மிக உயரமான B.R. அம்பேத்கர் சிலையைத் திறந்து வைத்துள்ளது.
- பூமியில் இருந்து 206 அடி உயரத்தில் உள்ள இந்த 'சமூக நீதி சிலை' ஆனது உலகின் முதல் 50 உயரமான சிலைகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- 175 அடி உயரமுள்ள இரண்டாவது உயரமான அம்பேத்கர் சிலை அதன் அண்டை மாநிலமான தெலுங்கானாவில் அமைந்துள்ளது.

## எருமைச் சண்டை – அசாம்



KEEPING THE TRADITION ALIVE

A buffalo fight marks the Magh Bihu fest at Ahatguri

- **Traditional Moh-juj** (buffalo fights) is said to have been introduced by **Ahom King Rudra Singha**
- In 2014, the **SC** outlawed the the **bull-taming sport Jallikattu** and **bullock cart races** in Tamil Nadu and Maharashtra respectively
- A year later, **buffalo fights** and **bulbul fights** were banned by the Assam in 2015
- In 2023, the **SC** upheld the validity of laws passed by Tamil Nadu, Maharashtra and Karnataka to allow Jallikattu, **bullock-cart** races and **buffalo racing sport Kambala** in their respective regions
- Following this, the Assam cabinet allowed **buffalo fights** and **bulbul fights** and issued a strict **SOP** for that in December last year

- கடுமையான அரசாங்க வழிகாட்டுதலின் கீழ் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக, அசாமில் மக் பிஹு என்ற திருவிழாவின் போது பாரம்பரிய எருமைச் சண்டை ஏற்பாடு செய்யப் பட்டது.
- உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டில் அம்மாநில அரசால் இந்தச் சண்டை தடை செய்யப்பட்டது.
- எருமைச் சண்டை, யானை மற்றும் குருவிச் சண்டை ஆகியவை அஹோம் மன்னர் ருத்ர சிங்கா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அப்போதிருந்து, எருமைச் சண்டை அசாமியச் சமூகத்தின் ஓர் அங்கமாகவே இருந்து வருகிறது.

## 9வது பாக்கே பாகா இருவாட்சி திருவிழா


- இந்தத் திருவிழாவானது, வனவிலங்குப் பாதுகாப்பில் மிக கவனம் செலுத்துவதோடு, இருவாச்சி பறவைகளின் பாதுகாப்பிற்குக் குறிப்பிட்ட முக்கியத்துவம் அளிக்கிறது.
- இந்தப் பறவையின் நான்கு வகைகள்- தாடை பட்டை கொண்ட இருவாச்சி, மலை இருவாச்சி, ஓரியண்டல் கருப்பு வெள்ளை இருவாச்சி மற்றும் அழிந்து வரும் செம்பழுப்பு கழுத்து கொண்ட இருவாச்சி – ஆகியவை அருணாச்சலப் பிரதேசத்தின் பாக்கே புலிகள் வளங்காப்பகத்தில் (PTR) காணப்படுகின்றன.
- அருணாச்சலப் பிரதேசத்தின் மிகப் பெரிய பழங்குடியினக் குழுவான நிஷியின் இருப்பிடமாகவும் இப்பகுதி உள்ளது.
- பாக்கே புலிகள் வளங்காப்பகத்தில் இருவாச்சி பறவைகளைப் பாதுகாப்பதில் நிஷி சமூகத்தினர் ஆற்றியப் பங்கை அங்கீகரிப்பதே இந்தத் திருவிழாவின் நோக்கமாகும்.

## கழுகுகளின் உணவகம் – ஜார்க்கண்ட்



- கோடெர்மா மாவட்டத்தில் இந்த உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.
- கால்நடைகளில் குறிப்பிட்ட மருந்துப் பொருட்கள் அதிகமாகப் பயன்படுத்தப் படுவதால், இந்தப் பறவை இனங்களின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருவதைத் தடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோசாலைகள் (பசுக் காப்பகம்) மற்றும் நகராட்சிகளில் டைக்ளோஃபினாக் இல்லாத விலங்குகளின் சடலங்களை வழங்கச் செய்வதற்கான நெறிமுறை தயாரானவுடன் இந்த உணவகம் செயல்படத் தொடங்கும்.
- கோசாலைகள் மற்றும் நகராட்சிகளில் இருந்து வரும் கால்நடைகளின் சடலங்கள், 'கழுகுகளின் உணவகம்' என்ற வரையறுக்கப்பட்ட உணவளிக்கும் இடத்தில், (இறந்த விலங்குகளை உண்ணும்) பறவைகளுக்கு உணவாக வழங்கப்படும்.
- இந்தப் பறவைகளுக்கு உணவளிக்கும் இடமாக கருதப்படுவதால், திலையா நகர் பரிஷத்தின் கீழ் உள்ள குமோவில் கோடெர்மா 'கழுகுகளின் உணவகம்' நிறுவப்பட்டு உள்ளது.
- கோடெர்மாவில் சுமார் இருபது ஆண்டுகளாக கழுகுகள் காணப் படவில்லை.
- அவை 2019 ஆம் ஆண்டு முதல் இப்பகுதியில் மீண்டும் தென்பட்டன.

## புத்தொழில் நிறுவனங்களின் சூழலமைவு




- வளர்ந்து வரும் தொழில்முனைவோருக்கான புத்தொழில் நிறுவனங்களின் சூழலமைவுகளை உருவாக்குவதில் குஜராத், கேரளா மற்றும் கர்நாடகா சிறந்த செயல் திறன் கொண்ட மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.
- தமிழ்நாடு, இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களும் சிறந்த செயல்திறன் கொண்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டிற்கான மாநிலங்களின் புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசை ஆனது தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையினால் (DPIIT) தயாரிக்கப் பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையில் மொத்தம் 33 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் பங்கேற்றன.
- DPIIT அவற்றைச் சிறந்த செயல்திறன் கொண்டவைகள், முன்னணி செயல்திறன் கொண்டவைகள், முதன்மையானவை, ஈடுபாடுமிக்கவை மற்றும் வளர்ந்து வரும் புத்தொழில் நிறுவன சூழல் அமைப்புகள் என ஐந்து பிரிவுகளின் கீழ் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- வளர்ந்து வரும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக வேண்டி புத்தொழில் நிறுவனங்கள் சூழல் அமைப்பை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் அடிப்படையில் அவை தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

## மீளுருவாக்க சுற்றுலா மாதிரி

- கோவா மாநிலத்தின் சுற்றுலாத் துறையானது மீளுருவாக்க வகையிலான சுற்றுலாவிற்கான ஒரு புதிய மாதிரியை வெளியிட்டுள்ளது.

- இந்தப் புதுமையான அணுகுமுறையானது, நான்கு முக்கியத் தூண்களின் மூலம் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் ஆகியவற்றை ஆதரிப்பதன் மூலம் இந்திய சுற்றுலாத் துறையில் புரட்சியை ஏற்படுத்த முயல்கிறது.
- ஆன்மீகம், பூர்வீகம், நாகரீக மற்றும் கலாச்சார தேசியவாதம் மற்றும் முனைப்புமிக்க சுற்றுலா ஆகியவை அந்த 4 தூண்கள் ஆகும்.




## பூரி ஜெகநாதர் கோயிலின் பாரம்பரிய வழித்தடம்

- ஒடிசா 800 கோடி ரூபாய் மதிப்பிலான பாரம்பரிய (மரபுசார்) வழித்தடத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது பூரி நகரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஜெகநாதர் கோயிலைச் சுற்றியுள்ள யாத்ரீகர்களுக்கு மேம்பட்ட வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கோவிலை சுற்றி அமைந்த 75 மீட்டர் அகலம் வரையிலான பகுதியானது, பாரம்பரிய வழித்தடம் என அழைக்கப்படுகிறது.
- இது தற்போது ஸ்ரீ மந்திர் பரிக்ரம பிரகல்பா (SMPP) எனப் பெயரிடப்பட்டு ஒன்பது வெவ்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## மாநில ஸ்தாபன தினம் 2024

- மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா மாநிலங்கள் ஆனது ஜனவரி 21 ஆம் தேதியன்று தங்கள் ஸ்தாபன தினத்தைக் கொண்டாடின.
- 1972 ஆம் ஆண்டில், 1971 ஆம் ஆண்டு வடகிழக்கு பிராந்திய மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் இவை முழு அளவிலான மாநிலங்களாக மாறின.
- இதற்கு முன்னதாக, மேகாலயா அசாமின் ஒரு பகுதியாகவும், திரிபுரா மற்றும் மணிப்பூர் ஆகியவை சுதேச அரசுகளாகவும் இருந்தன.




## C4IR – ஹைதராபாத்

- தெலுங்கானா மாநிலத் தலைநகரில் நான்காவது தொழில் புரட்சிக்கான மையத்தை (C4IR) அமைக்க உலகப் பொருளாதார மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- அடுத்த ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் அந்த நகரில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ள உயிரி ஆசியா - 2025 நிகழ்வின் போது C4IR திறக்கப்படும்.
- மாநிலத்தில் சுகாதார நலனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மாநில சுகாதாரத் தொழில்நுட்பக் கட்டமைப்பினை வடிவமைப்பதில் இந்த மையத்தை உருவாக்குவது பெரிய நன்மையை வழங்கும்.

## கோலம் பழங்குடியினர்

- மத்திய அரசானது, ஜன் ஜாதி ஆதிவாசி நியாய் மகா அபியான் திட்டத்தின் கீழ், அழிந்து வரும் கோலம் பழங்குடியினருக்கு அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தி உள்ளது.
- அவர்கள் மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுவாக (PVTG) பட்டியலிடப் பட்டுள்ளனர்.
- உள்ளூர் ஆரம்பச் சுகாதார நிலையங்களை (PHCs) வலுப்படுத்துவதன் மூலமும் ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதன் மூலமும் கிராமங்களில் வசிக்கும் இந்த பழமையான பழங்குடியினக் குழுக்களின் உடல்நலம் மற்றும் கல்வியில் இது கவனம் செலுத்தும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், மண்டலத் தலைமையகத்தில் இருந்து இந்த கிராமங்களுக்கு சாலை இணைப்பு மேம்படுத்தப்படும்.
- உள்ளூர் சாலைகளை மேம்படுத்துதல், குடிநீர் வழங்குதல், மின்சாரம் அல்லது சூரிய ஆற்றல், மற்றும் LPG எரிவாயு அடுப்புகள் மற்றும் கொள்கலன்களை வழங்குதல் ஆகியவற்றிலும் இது கவனம் செலுத்துகிறது.
- கோலம்போலி, குல்மே மற்றும் கொல்மி என அழைக்கப்படும் கோலம் பழங்குடியினர்

மத்தியப் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் வாழ்கின்றனர்.

- ❖ இந்தப் பழங்குடியினக் குழுக்கள் பட்டியலிடப்பட்ட பழங்குடியினராகப் பட்டியலிடப் பட்டுள்ளனர் என்பதோடு இந்தக் குழுவினர் மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளிலும் வசிக்கின்றனர்.




## கொரிய இராணியுடன் அயோத்தி நகர் கொண்டுள்ள தொடர்பு




- ❖ சூரிரத்னா என்றழைக்கப்படும் இராணி ஹியோ, அயோத்தியின் போற்றுதலுக்குரிய இளவரசி ஆவார்.
- ❖ அவர் கொரியாவுக்குப் பயணம் செய்து மன்னர் சுரோவை மணந்ததாக வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன.
- ❖ இந்த நிகழ்வு கி.பி 48 ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாக நம்பப்படுவதோடு, தென் கொரியாவிலும் இந்தியாவிலும் இந்தத் தகவல் ஒப்புக் கொள்ளப்படுகிறது.
- ❖ கி.பி 42 ஆம் ஆண்டில் காரக் வம்சத்தை நிறுவிய மன்னர் சுரோ, இராணி ஹியோவின்

கணவர் ஆவார்.

- 2001 ஆம் ஆண்டில், உத்தரப் பிரதேச அரசானது, தென் கொரியாவில் உள்ள கிம்ஹே நகருடன் இணைந்து, அயோத்தியில் இராணி ஹியோ நினைவுப் பூங்காவை நிறுவியது.

## ஒடிசாவிற்கான கும்கி யானைகள்

- தென் மாநிலத்தின் வெற்றிகரமான திட்டத்தைக் கருத்தில் கொண்டு, ஒடிசா அரசானது தமிழ்நாட்டினைச் சேர்ந்த நான்கு கும்கி யானைகளையும், அவற்றிற்கான யானைப் பாகன்களையும் அனுப்புமாறு கோரியுள்ளது.
- ஒடிசாவில், இந்த நிதியாண்டில் (2023-24) மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையே 230 மோதல்கள் நடந்துள்ளன.
- இந்த மோதல்களில் 139 மனிதர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 108 பேர் காயம் அடைந்துள்ளனர்.
- கடந்த நிதியாண்டில் 257 மோதல்களில் 146 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 157 பேர் காயமடைந்தனர்.
- நடப்பு நிதியாண்டில் இன்னும் இரண்டு மாதங்கள் மீதம் உள்ளதால், யானைத் தாக்குதலால் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக இருக்கும்.
- காட்டு யானைகளை முறையாக வழி நடத்தவும், அவற்றைக் காட்டிற்குள் விரட்டவும் உதவும் வகையில் கும்கி யானைகளை மூலோபாய முறையில் பயன்படுத்தி, பயிர் மற்றும் மனித வாழ்விடங்களின் சேதங்கள் மற்றும் மனிதர்கள் & யானைகள் இடையேயான மோதலால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைக்கலாம்.
- இந்த யானைகளை வன ரோந்துப் பணி மற்றும் மீட்பு பணிகளுக்கும் ஈடுபடுத்தலாம்.

## நிதிஷ் குமார் - பீகார் முதல்வர்




- நிதீஷ் குமார் பீகார் மாநிலத்தின் முதலமைச்சராக ஒன்பதாவது முறையாகப் பதவி ஏற்றுள்ளார்.

- ஒரு தசாப்தத்தில் ஐந்தாவது முறையாக அந்தக் கட்சி கூட்டணி மாறியுள்ளது.
- 2000 ஆம் ஆண்டில் அவர் முதல் முறையாக அந்தமாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நிலையில் தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் முன்னதாகவே ஏழு நாட்களுக்குள் அவர் தனது பதவியினை ராஜினாமா செய்தார்.

## அருணாச்சலப் பிரதேசத் தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு- 2024

- அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து தனித்துவமிக்க பன்னிரண்டுத் தயாரிப்புகள் புவி சார் (GI) குறியீடுகளைப் பெற்றுள்ளன.
- அந்தத் தயாரிப்புகள் அபதானி, மோன்பா, ஆதி, கலோ, தை காம்டி மற்றும் நைஷி ஜவுளித் துறை, மோன்பா கைவினை காகிதம், சிங்போ ஃபலாப் (சிங்போ தேயிலை), ஆதி அபோங், டாவ் (மச்சீட்), அங்கன்யாட் சிறு தானியம் மற்றும் மருவா அப்போ (மருவா சிறு தானிய பானம்) ஆகியனவாகும்.
- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியானது இந்தப் புவிசார் குறியீட்டுப் பதிவு செயல்முறையை தீவிரமாக ஆதரித்துள்ளது.
- அம்மாநிலத்தில், தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியால் அங்கீகரிக்கப் பட்ட மொத்தம் 18 தயாரிப்புகள் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய இளையோர் விருது 2024

- மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிசாதி பாரத் என்பவரை தேசிய இளையோர் விருதிற்கு தேர்வு செய்துள்ளது.
- இந்த விருதானது இளையோர் மேம்பாட்டுத் துறையில் பணியாற்றும் தனிநபர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- ஜனவரி 12 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் 27வது தேசிய இளையோர் தினத்தின் போது இந்த விருது வழங்கப்பட உள்ளது.

## M. S. சுவாமிநாதன் விருது

- ஹரியானா வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் B.R. கம்போஜ் அவர்களுக்கு மதிப்புமிக்க M. S. சுவாமிநாதன் விருது வழங்கப்பட்டுள்ளது.
- வேளாண்மைத் துறையில் அறிவியலாளர் மற்றும் வேளாண் உதவித்துவ நிபுணராக அவர் ஆற்றிய பங்களிப்பிற்கான அங்கீகாரம் இதுவாகும்.
- மிகவும் மதிப்பு மிக்க இவ்விருது ஆனது 2004 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இந்தியாவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை உட்பட வேளாண்மையில் உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்திய மிகவும் புகழ்பெற்ற நபர்களின் வாழ்நாள் பங்களிப்புகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.

## NIAC திட்டத்தின் கீழ் பரிசு

- 2024 ஆம் ஆண்டு NIAC (நாசாவின் மேம்பட்ட புத்தாக்க கருத்தாக்கங்கள்) திட்டத்தின் முதல் கட்ட வெற்றியாளர்களை நாசா அறிவித்துள்ளது.
- இந்த திட்டமானது, எதிர்காலப் பயன்பாடு மற்றும் மிகவும் சாத்தியமான வணிக மயமாக்கலுக்கான ஆரம்ப நிலை தொழில்நுட்பக் கருத்தாக்க ஆய்வுகளுக்கு நிதி அளிப்பதன் மூலம் முன்னோடியான கருத்தாக்கங்களை ஊக்குவிக்கிறது.
- முதல் கட்டத்தில், அமெரிக்கா முழுவதும் உள்ள நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 13 கருத்தாக்கங்களுக்கு நாசா நிதி உதவி அளித்து வருகிறது.

## படைப்பாக்கமிக்க கலைகளுக்கான எம்மி விருதுகள்

- பராக் ஒபாமா தனது இரண்டாவது எம்மி விருதினை வென்றுள்ளார் என்ற நிலையில் ஜான் முலானி தனது மூன்றாவது படைப்பாக்கமிக்க கலைகளுக்கான எம்மி விருதுகளை வென்றுள்ளார்.
- ஒபாமா தனது இரண்டு நினைவுக் குறிப்புகளின் ஒலி வட்டுகளுக்கு நன்கு குரல் கொடுத்ததற்காக இரண்டு கிராமி விருதுகளைப் பெற்றுள்ளார்.
- HBO ஊடகத்தின் The Last of Us என்ற தொடர் எட்டு விருதுகளை வென்றுள்ளது.

- The Bear, Wednesday மற்றும் The White Lotus ஆகிய அனைத்தும் தலா நான்கு விருதுகளை வென்றுள்ளன.

## 81வது கோல்டன் குளோப் விருதுகள்

- கோல்டன் குளோப் விருதுகள் ஆனது அமெரிக்க மற்றும் சர்வதேச திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறையில் சிறந்து விளங்கும் திரைப்படங்களுக்கான விருதுகள் ஆகும்.
- முதல் கோல்டன் குளோப் விருது வழங்கும் விழாவானது 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது.
- பார்பி திரைப்படம் ஆனது அதிகபட்சமாக 9 பிரிவுகளிலும், ஒபன்ஹெய்மர் திரைப் படம் ஆனது 8 பிரிவுகளிலும் பரிந்துரைக்கப்பட்டது.
- ஒபன்ஹெய்மர் திரைப்படம் ஆனது சிறந்த இயக்குனர், சிறந்த ஆண் நடிகர், சிறந்த துணை நடிகர் மற்றும் சிறந்த திரைப்படம் பிரிவில் விருதுகளை வென்றது.
- பார்பி திரைப்படம் ஆனது திரைப்படத் துறை சார்ந்த மற்றும் அதிக வசூல் சாதனை மற்றும் சிறந்த அசல் பாடல் பிரிவில் விருதுகளை வென்றது.

## சவிதா கன்ஸ்வால்



- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், மறைந்த சவிதா கன்ஸ்வாலுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான நிலம் சார் சாகசங்கள் பிரிவில் டென்சிங் நோர்கே தேசிய சாகச வழங்கி (மறைவிற்குப் பின்) கௌரவித்தார்.
- 16 நாட்களுக்குள் எவரெஸ்ட் சிகரம் மற்றும் மகாலு சிகரம் இரண்டையும் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி என்ற வரலாற்றை சவிதா படைத்தார்.
- அவர் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 04 ஆம் தேதியன்று ஒரு பனிச்சரிவு விபத்தில் உயிரிழந்தார்.

## விங்ஸ் இந்தியா 2024

- 2024 ஆம் ஆண்டு விங்ஸ் இந்தியா விருது நிகழ்ச்சியில் பெங்களூரு மற்றும் டெல்லி விமான நிலையங்கள் ஆகிய இரண்டும் சிறந்த விமான நிலையங்களாக தேர்வு செய்யப் பட்டுள்ளன.
- ஸ்கைவேஸ் விமான சேவை நிறுவனமானது, மதிப்புமிக்க "சிறந்த சரக்கு விமானப் போக்குவரத்து சேவைகள் விருதை" பெற்றுள்ளது.

- விஸ்தாரா-டாடா SIA ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனம் ஆனது, இந்த ஆண்டின் சிறந்த விமான சேவைக்கான விருதைப் பெற்றுள்ளது.
- விங்ஸ் இந்தியா விருதுகள் ஆனது, விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமைகளை வெளிக் கொணரும் நிறுவனங்களுக்கான ஒரு சிறந்த அடையாளமாகும்.

## PM இராஷ்ட்ரிய பால் புரஸ்கார் விருது 2024

- பிரதான் மந்திரி இராஷ்ட்ரிய பால் புரஸ்கார் (PMRBP) விருதானது, மகத்தான திறன்கள் மற்றும் சிறந்த சாதனைகள் படைத்த குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.
- 5 முதல் 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஏழு பிரிவுகளில் அவர்களின் சிறந்த சாதனைகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.
- தேசிய அங்கீகாரத்திற்கு தகுதியான வீரம், கலை & கலாச்சாரம், சுற்றுச்சூழல், புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமூக சேவை மற்றும் விளையாட்டு ஆகிய 7 பிரிவுகளில் விருது வழங்கப்படுகிறது.

## பாரத ரத்னா - கர்பூரி தாகூர்

- பீகார் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் கர்பூரி தாகூர், நாட்டின் உயரியக் குடிமை விருதான பாரத ரத்னாவுக்கு (மரணத்திற்குப் பின்) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று அதற்காக சிறையிலும் அடைக்கப்பட்டார்.
- சுதந்திர இந்தியாவில், 1952 ஆம் ஆண்டில் அவர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- 1952 ஆம் ஆண்டில் அவர் முதன்முதலில் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்ட போது, ஆஸ்திரிய நாட்டிற்கான அதிகாரப்பூர்வ தூதுக்குழுவில் ஒருவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1977 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்ட அவர், 1984 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநிலச் சட்டசபை தேர்தலில் தோல்வியடைந்த போதும், 1988 ஆம் ஆண்டில் அவர் இறக்கும் வரை சட்டமன்ற உறுப்பினராகவே இருந்தார்.
- தாக்கூர் 1967 ஆம் ஆண்டு மார்ச் 05 முதல் 1968 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதி வரை பீகார் மாநில கல்வி அமைச்சராக இருந்தார்.
- அவர் சம்யுக்தா சோசலிஸ்ட் கட்சியின் மூலம் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாநிலத்தின் முதலமைச்சரானார், ஆனால் அவரது அரசாங்கம் ஆறு மாதங்களுக்குப் பிறகு வீழ்ச்சியடைந்தது.
- அவர் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மீண்டும் பதவிக்கு வந்தார், ஆனால் சுமார் இரண்டு ஆண்டுகளில் அவர் அதிகாரத்தை இழந்ததால் அவரது முழு பதவிக்காலத்தை முடிக்க முடியவில்லை.
- 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், பீகார் மாநில அரசாங்கம் முங்கேரி லால் என்ற ஆணையத்தினை நியமித்தது.

- 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியான அதன் அறிக்கையானது, 128 "பிற்படுத்தப்பட்ட" சமூகங்களை பட்டியலிட்ட நிலையில் அவற்றில் 94 சமூகங்கள் "மிகவும் பிற்படுத்தப் பட்ட பிரிவுகள்" என அடையாளம் காணப்பட்டது.
- தாகூர் அரசு ஆனது இந்த ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்தியது.
- 'கர்பூரி தாகூர் சூத்திரம்' ஆனது 26% இடஒதுக்கீட்டை வழங்கியது.
- இதில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 12% பங்கும், அவர்களில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு 8 சதவீதமும், பெண்களுக்கு 3 சதவீதமும், "உயர் சாதிப் பிரிவினைச்" சேர்ந்த ஏழைகளுக்கு 3 சதவீதமும் வழங்கப் பட்டது.
- இதன் காரணமாக அவரது அரசாங்கம் வீழ்ச்சியுற்றது என்பதோடு, இதனால் அவர் உயர் சாதியினரின் பெரும் எதிர்ப்பினை எதிர்கொள்ள நேர்ந்தது.

# விளையாட்டுச் செய்திகள்

## டேவிட் வார்னர் ஓய்வு

- வார்னர் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று ஒரு நாள் சர்வதேச (ODI) போட்டியிலிருந்தும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- 2009 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்கா அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இவர் அறிமுகமானார்.
- அவர் 161 ஒருநாள் போட்டிகளில் 6,932 ரன்களும், 111 டெஸ்ட் போட்டிகளில் 8,695 ரன்களும் குவித்துள்ளார்.
- அவர் டெஸ்ட் போட்டிகளின் வரலாற்றில் அதிகபட்ச ரன்களை குவித்த ஐந்தாவது ஆஸ்திரேலிய வீரர் ஆவார்.



## 9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள்

- 9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகளுக்கான முழக்கம், சின்னம் மற்றும் உருவச் சின்னங்கள் சமீபத்தில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.
- "Dream of Winter, Love among Asia " என்பது இந்தப் போட்டிகளுக்கான அதிகாரப்பூர்வ முழக்கம் ஆகும்.
- "பின்பின்" மற்றும் "நினி" எனப்படும் வசீகரமான இரண்டு புலிச் சின்னங்களை இந்தப் போட்டியின் உருவச் சின்னமாகவும், ஒரு குறுகிய பாதையில் வேகமாக பனிச் சறுக்கு செய்யும் உருவம், ஒரு இளஞ்சிவப்பு மலர் மற்றும் நடனமாட உபயோகிக்கப் பயன்படும் நாடாக்கள் ஆகியவை இணைந்து காணப்படும் ஒரு அதிகாரப்பூர்வச் சின்னமாகவும் வெளியிடப்பட்டது.

## டையூ கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் 2024

- பல் துறை விளையாட்டுப் போட்டிகளான முதலாம் கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் ஆனது (2024), டையூவில் உள்ள கோக்லா கடற்கரையில் நடைபெற்றது.
- 7 தங்கம் உட்பட 18 பதக்கங்களுடன் மத்தியப் பிரதேசம் சாம்பியனாக உருவெடுத்துள்ளது.
- மகாராஷ்டிரா 3 தங்கம் உட்பட 14 பதக்கங்களையும், தமிழ்நாடு, உத்தரகாண்ட் மற்றும் போட்டியை நடத்தும் தாத்ரா, நாகர் ஹவேலி, டையூ & டாமன் தலா 12 பதக்கங்களையும் வென்றன.
- அசாம் 5 தங்கங்களுடன் 8 பதக்கங்களைப் பெற்றது.

## FIFA கால்பந்து விருதுகள் 2023

- எர்லிங் ஹாலந்துடனான ஒரு சமநிலையை முறியடித்த பிறகு லியோனல் மெஸ்ஸி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சிறந்த ஆடவர் வீரர் விருதை வென்றுள்ளார்.
- சிறந்த வீராங்கனைக்கான விருதை ஸ்பெயின் நாட்டு வீராங்கனை அய்தானா போன்மதி என்பவர் வென்றுள்ளார்.
    - சிறந்த FIFA ஆடவர் கோல்கீப்பர்: எடர்சன்.
    - சிறந்த FIFA மகளிர் கோல்கீப்பர்: மேரி ஏர்ப்ஸ்
    - சிறந்த FIFA ஆடவர் பயிற்சியாளர்: பெப் கார்டியோலா
    - சிறந்த FIFA மகளிர் பயிற்சியாளர்: சரினா வீக்மேன்
    - FIFA புஸ்காஸ் விருது: கில்ஹெர்ம் மத்ருகா
    - FIFA நியாய முறை விளையாட்டு விருது: பிரேசில் தேசிய அணி
- பெப் கார்டியோலாவிற்கு சிறந்த ஆடவர் மேலாளர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டு உள்ளது.

## BCCI விருதுகள் 2024

- 2006-07 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட BCCI விருதுகள் மகத்தான கிரிக்கெட் சாதனைகளைப் படைத்த வீரர்களை கௌரவிக்கின்றன.

- 2022-23 ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியதற்காக அஸ்வின், திலீப் சர்தேசாய் விருதை வென்றுள்ளார்.
- அஸ்வின் தனது தொழில்முறை வாழ்க்கையில் இரண்டாவது முறையாக ஆண்டின் சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரருக்கான பாலி உம்ரிகர் விருதையும் வென்றுள்ளார்.
- 2019-20, 2022-23 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளில் முறையே முகமது ஷமி, சுப்மன் கில் மற்றும் பும்ரா சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்கான விருதுகளைப் பெற்றனர்.
- சிறந்த மகளிர் கிரிக்கெட் வீராங்கனைக்கான ஜக்மோகன் டால்மியா கோப்பையினை (உள்நாட்டு இளையோர் பிரிவு) காஷ்வீ கௌதம் வென்றார்.
- ரவி சாஸ்திரி மற்றும் ஃபரோக் எஞ்சினியர் ஆகியோருக்கு கர்னல் C.K.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.
- ஒருநாள் போட்டிகளில் அதிக ரன் எடுத்தவர்கள் விருது - மகளிர்: பூனம் ரௌத் (2019-20), மிதாலி ராஜ் (2020-21), ஹர்மன்பிரீத் கௌர் (2021-22), ஜெமிமா ரோட்ரிக்ஸ் (2022-23).
- சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீராங்கனைகள் விருது - மகளிர் 2019-20 ஆம் ஆண்டில் தீப்தி ஷர்மா, 2020-22 ஆம் ஆண்டில் ஸ்மிருதி மந்தனா மற்றும் 2022-2023 ஆம் ஆண்டில் தீப்தி ஷர்மா.




# முக்கிய தினங்கள்

## உலக குடும்ப தினம் – ஜனவரி 01

- இந்த நாள் நேர்மறை எண்ணத்தை ஊக்குவித்தல், ஒற்றுமையை மேம்படுத்துதல் மற்றும் உலக நாடுகளிடையே சமூகம் மற்றும் சகோதரத்துவ உணர்வை நன்கு மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் 1999 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "பன்முகத்தன்மையை ஏற்றல், குடும்பங்களை மிக வலுப்படுத்துதல்" என்பதாகும்.




## உலக பிரெய்லி தினம் - ஜனவரி 04

- இது கண் பார்வையற்ற மற்றும் பகுதியளவு பார்வை திறன் உடைய நபர்களுக்கான தகவல் தொடர்பு கருவியாக பிரெய்லி எழுத்து முறை விளங்கச் செய்வதன் பெரும் முக்கியத்துவத்தை கௌரவிக்கிறது.
- லூயிஸ் பிரெய்லி 1809 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் தேதியன்று பாரீஸ் நகருக்கு அருகிலுள்ள கூப்வ்ரே எனுமிடத்தில் பிறந்தார்.
- சார்லி பார்பியரின் இரவு நேர எழுதும் முறையை அடிப்படையாகக் கொண்டு அவர் ஒரு வாசிப்பு மற்றும் எழுதும் முறையை உருவாக்கிய நிலையில், அது இன்று பிரெய்லி என்று அழைக்கப்படுகிறது.
- பிரெய்லி என்பது ஆறு புள்ளிகளைப் பயன்படுத்தி அகரவரிசை மற்றும் எண் குறியீடுகளின் தொட்டுணரக் கூடிய வடிவம் ஆகும்.
- அவை ஒவ்வொரு எழுத்து மற்றும் எண்ணையும், இசை, கணிதம் மற்றும் அறிவியல் சின்னங்களையும் கூட குறிப்புறுத்தும்.


## ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் உருவாக்க தினம் - ஜனவரி 08

- ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) ஆனது, முதன்முதலில் 1912 ஆம் ஆண்டில் ஒரு தேசிய விடுதலை இயக்கமாக நிறுவப்பட்டது.
- இந்த நாளில், உலகம் முழுவதும் உள்ள அனைத்து ஆப்பிரிக்க மக்களும் தங்கள் உரிமைகளுக்காக ஒன்றுபட்டனர்.
- இந்த அமைப்பின் நோக்கம் ஆனது, அனைத்து கறுப்பின தென்னாப்பிரிக்கர்களையும் ஒன்றிணைத்து அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைய ஒன்றிணைந்து போராடச் செய்வதாகும்.
- 1994 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் ஜனநாயக அமைப்பிற்கு மாறியது முதல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தொடர்ந்து ஆட்சியில் உள்ளது.


## புவி சுழற்சி தினம் - ஜனவரி 08

- கி.மு. 470 ஆம் ஆண்டில், பூமி தனது அச்சில் சுழல்வதாக கிரேக்கர்கள் கூறினர்.

- 1851 ஆம் ஆண்டில், பிரெஞ்சு இயற்பியலாளர் லியோன் ஃபூக்கோல்ட், ஊசல் குண்டின் உதவியுடன் புவியின் சுழற்சியை செயல் விளக்கிக் காட்டினார்.
- இந்தியாவில் புதிய பாராளுமன்றக் கட்டிடம் உட்பட 11 இடங்களில் ஃபூக்கோல்ட் ஊசல் குண்டு அமைக்கப்பட்டுள்ளது.
- பூமியானது, சூரியனைச் சுற்றிய ஒரு சுழற்சியை முடிக்க 24 மணிநேரம் எடுக்கும்.
- பூமியின் விட்டம் வடக்குத் துருவம் முதல் தென் துருவம் வரை 12,714 கிலோமீட்டர்கள் (7,900 மைல்கள்) மற்றும் நிலநடுக்கோட்டு வழியான விட்டம் (7,926 மைல்கள்) 12,756 கிலோ மீட்டர்கள் (12,756 மைல்கள்) ஆகும்.





## போர் காரணமாக ஆதரவிழந்த குழந்தைகளுக்கான உலக தினம் - ஜனவரி 06




- ஆதரவற்ற குழந்தைகள் அனுபவிக்கும் மன அதிர்ச்சி நிலைகள் மற்றும் அவர்கள் சாதாரண வாழ்க்கையை நடத்துவதற்கு அடிக்கடி கடக்க வேண்டிய சமூக, உளவியல் மற்றும் உடல் ரீதியான தடைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ❖ இந்த நாள் பிரான்ஸ் நாட்டின் SOS Enfants en Detresses என்ற அமைப்பால் நிறுவப்பட்டது.
- ❖ யுனிசெஃப் அமைப்பின் ஒரு கருத்துப்படி, 30 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

## பிரவாசி பாரதிய திவாஸ் - ஜனவரி 09



**PIO VS OCI**

**A PERSON OF INDIAN ORIGIN (PIO)**

- Means a **foreign citizen** (except a national of Pakistan, Afghanistan Bangladesh, China, Iran, Bhutan, Sri Lanka and Nepal)
- **A foreign citizen whose one of the parents/ grandparents/ great grandparents** was **born** and a **permanent resident** of India
- Who is a **spouse** of a citizen of India or a PIO

**BENEFITS**

1. PIO card holders **do not require a visa to visit India** for a period of 15 years from the date of issue of the PIO card.
2. They are **exempted from registration at FRRO/ FRO** if their **stay does not exceeds 180 days**. In case if the stay exceeds 180 days, they shall have to register with FRRO/ FRO within the next 30 days
3. They **enjoy parity with NRIs in economic, financial** and **educational benefits**
4. All **future benefits** that would be **exempted to NRIs** would also be available to the **PIO card holders**

**OVERSEAS CITIZEN OF INDIA (OCI)**

A **foreign national**, who was **eligible** to **become citizen of India** on **26.01.1950** or was a citizen of India on or at anytime after **26.01.1950** or belonged to a territory that became part of India after **15.08.1947** is **eligible for registration as Overseas Citizen of India** (OCI). Minor children of such person are also eligible for OCI. However, if the applicant had ever been a citizen of Pakistan or Bangladesh, he/she will not be eligible for OCI.

**BENEFITS**

OCIs are **entitled to a multipurpose, multiple entry, lifelong visa** allowing them to visit India at any time, for any length of time and for any purpose

- **Exempted from police reporting** for any length of stay in the country
- **Have also been granted all rights in the economic, financial and education fields in parity with NRIs** except, the right to acquisition of agricultural or plantation properties

- ❖ பிரவாசி பாரதிய திவாஸ், வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- ❖ தனது தாயகத்திற்கும் அதன் புலம்பெயர் சமூகங்களுக்கும் இடையே வலுவான தொடர்பை மேம்படுத்தி, பல்வேறு துறைகளில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பு மற்றும் சாதனைகளை இந்த நாள் குறிக்கிறது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பொலிவுறு எதிர்காலத்தினை நன்கு இணைப்பது" என்பதாகும்.
- ❖ பிரவாசி பாரதிய திவாஸ் ஆனது, முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டது.
- ❖ 1915 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதியன்று, தென்னாப்பிரிக்காவிலிருந்து M.K. காந்தி இந்தியா திரும்பியதைக் குறிப்பதால் இந்த நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

## உலக இந்தி மொழி தினம் - ஜனவரி 10


- ❖ இந்த நாள் முதலில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- ❖ 1949 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் முதன்முறையாக இந்தி மொழி பேசப்பட்ட வரலாற்று நிகழ்வை நினைவு கூரும் வகையில் இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப் பட்டது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'இந்தி மொழி - பாரம்பரிய அறிவுப் புலன் மற்றும் செயற்கை நுண்ணறிவை இணைக்கிறது' என்பதாகும்.

## தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் – ஜனவரி 11 முதல் 17 வரை

- கவனக்குறைவாக அல்லது பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் முதன்முதலில் 1989 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சாலைப் பாதுகாப்பு நாயகர்களாக விளங்குதல்" என்பதாகும்.
- இந்தியாவில், போக்குவரத்து விபத்து மூலமாக தோராயமாக ஒவ்வொரு மூன்றரை நிமிடங்களுக்கு ஒரு நபர் உயிரிழக்கிறார்.
- இந்தியாவின் மிகச் சமீபத்தியச் சாலை விபத்துகள் தரவுகளின்படி, ஒவ்வொரு நாளும் சராசரியாக 1,264 சாலை விபத்துகள் மற்றும் 462 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

## தேசிய இளையோர் தினம் – ஜனவரி 12


- இந்தியா, சுவாமி விவேகானந்தர் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் தேசிய இளையோர் தினத்தைக் கொண்டாடுகிறது.
- இது 1984 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இந்த நாள் விவேகானந்தரின் போதனைகளைக் கௌரவிப்பதோடு, தேசத்தைக் கட்டி எழுப்புவதில் இளைஞர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- சுவாமி விவேகானந்தர் அவர்கள் 1863 ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதியன்று பிறந்தார்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு 'MYBharat-ViksitBharat@2047 - இளையோர்களால், இளையோர்களுக்காக' என்பதாகும்.




## கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் – ஜனவரி

- உலகளாவிய சுகாதார நலம் சார்ந்த நிகழ்வு ஆனது, ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் முழுவதும் அனுசரிக்கப் படுகிற நிலையில் இது உலகளவில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கற்றல். தடுத்தல். கண்டறிதல்" என்பது ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் உலகளவில் பதிவான கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்ப் பாதிப்புகள் ஆனது, 6,04,000 புதிய பாதிப்புகள் மற்றும் 3,42,000 உயிரிழப்புகள் என மதிப்பிடப் பட்டு உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், சுமார் 90% புதிய பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் பதிவாகியுள்ளன.




## தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் நிறுவன தினம் - ஜனவரி 19

- 1990 முதல் 2004 ஆம் ஆண்டு வரை அடுத்தடுத்து ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களால் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியன்று பேரிடர் மேலாண்மைச் சட்டம் இயற்றப் பட்டது.
- இந்தச் சட்டமானது தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தினை (NDMA) இயற்கைப் பேரிடர்களுக்கான உயர்நிலை அமைப்பாக உருவாக்கியது.
- இது தேசியப் பேரிடர் மீட்பு படையினை தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கீழ் இயங்கும் ஒரு சிறப்பு மீட்புப் படையாக உருவாக்கியது.

## கோக்போரோக் தினம் - ஜனவரி 19

- பழங்குடியின மொழியை அங்கீகரித்தல், ஊக்குவித்தல் மற்றும் பாதுகாப்பது இதன் நோக்கமாகும்.
- கோக்போரோக் மொழி ஆனது, திரிபுரா மாநிலத்தின் 19 பழங்குடியினச் சமூகங்களில் பெரும்பாலான சமூகங்களின் இணைப்பு மொழியாக செயல்படுகிறது.
- திரிபுரா, ரியாங், ஜமாத்தியா, நோட்டியா, கலாய், ரூபினி, முராசிங் மற்றும் உச்சோய் சமூகங்களைச் சேர்ந்த சுமார் 8,14,375 பேர் திரிபுரா மாநிலத்தில் கொக்போரோக் பேசுகிறார்கள்.
- இந்தப் பழங்குடியின மொழியானது, 1979 ஆம் ஆண்டில் மாநில அலுவல் மொழியாக அந்தஸ்து பெற்றது.
- இருப்பினும், பழங்குடியின மொழி இன்னும் அதற்கென சொந்த எழுத்து வடிவினைப் பெறவில்லை.

## பராக்ரம் திவாஸ் - ஜனவரி 23

- இந்தியாவின் தலைசிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவரான சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பிறந்தநாளை நினைவுகூரும் விதமாக இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த நாளானது, 'பராக்ரம் திவாஸ்' அல்லது தைரிய (துணிவு) நாளாகக் கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டு ஆனது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 127வது பிறந்தநாளைக் குறிக்கிறது.
- சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதியன்று ஒடிசாவின் கட்டாக்கில் பிறந்தார்.
- 1921 ஆம் ஆண்டு தான் இந்தியக் குடிமைப் பணியில் இருந்து பதவி விலகி இந்தியா திரும்பினார்.
- 1922 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி சுயராஜ்ஜியக் கட்சியை உருவாக்கினார்.
- 1923 ஆம் ஆண்டில், நேதாஜி அகில இந்திய இளையோர் காங்கிரஸ் குழுவின் தலைவராகவும், வங்காள மாநில காங்கிரஸ் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- 1942 ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டின் உதவியுடன் தென்கிழக்கு ஆசியாவில் இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கினார்.
- நேதாஜி அவர்கள், 1943 ஆம் ஆண்டில் அந்தமான் மற்றும் நிக்கோபாரில் சுதந்திர இந்தியா அல்லது ஆசாத் ஹிந்த் என்ற தற்காலிக அரசாங்கத்தை நிறுவினார்.




## சர்வதேச கல்வி தினம் - ஜனவரி 24


- 2018 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையானது ஜனவரி 24 ஆம் தேதியை சர்வதேச கல்வி தினமாக கொண்டாட முடிவு செய்தது.
- கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க விரும்பிய 59 நாடுகளால் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'நீடித்த அமைதிக்கான கல்வி கற்றல்' என்பதாகும்.

## தேசியப் பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24

- ❖ இந்நாள் நாட்டில் பாலினச் சமத்துவமின்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆனது, 2008 ஆம் ஆண்டில் தேசிய பெண் குழந்தைகள் தினத்தை நிறுவியது.
- ❖ நமது சமூகத்தில் நாளுக்கு நாள் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாட்டை இத்தினம் எடுத்துக்காட்டுகிறது.
- ❖ பேட்டி பச்சாவ், பேட்டி பதாவோ திட்டம் (பெண் குழந்தைகளைக் காத்தல், பெண் குழந்தைக்குக் கல்வி வழங்கல்) 2015 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.

## தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25


- ❖ இந்த நாள் ஆனது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று, இந்தியத் தேர்தல் ஆணையம் உருவானதை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த நாள் தேர்தலில் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு, குடி மக்களிடையே அது குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது.
- ❖ 2011 ஆம் ஆண்டில், இந்தியத் தேர்தல் ஆணையம் தேசிய வாக்காளர் தினத்தைக் கடைபிடிக்கத் தொடங்கியது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Nothing Like Voting, I Vote for Sure' என்பதாகும்.




## தேசியச் சுற்றுலா தினம் - ஜனவரி 25

- ❖ 1948 ஆம் ஆண்டில் முதன்முதலாக தேசியச் சுற்றுலா தினம் கொண்டாடப்பட்டது.
- ❖ நாடு முழுவதும் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதும், நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதும் இதன் நோக்கங்களாகும்.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நிலையான பயணங்கள், கால வரம்பற்ற நினைவுகள்" என்பதாகும்.

## சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26




- இந்த தேதியானது, உலக சுங்க அமைப்பு (WCO) நிறுவப்பட்டதை நினைவு கூருகிறது.
- சுமூகமான எல்லை கடந்த வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் சுங்கத்தின் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.
- உலக சுங்க அமைப்பு ஆனது முன்னதாக 1952 ஆம் ஆண்டில் சுங்க கூட்டுறவு சபை என அறியப்பட்டது.
- உலக சுங்க அமைப்பின் முதல் அமர்வானது, 17 உறுப்பினர் நாடுகளின் பங்கேற்புடன் 1953 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- தற்போது உலக வர்த்தகத்தில் சுமார் 98% பங்கினைக் கொண்டிருக்கும் 183 உறுப்பினர் நாடுகளை கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'சுங்கம் ஆனது பாரம்பரிய மற்றும் புதியப் பங்குதாரர்களை ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் ஈடுபடுத்துகிறது' என்பது ஆகும்.

## சர்வதேச தூய்மையான ஆற்றல் தினம் - ஜனவரி 26


- இந்த ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி முதல் சர்வதேச தூய்மையான ஆற்றல் தினம் கொண்டாடப் படுகிறது.
- அனைவருக்கும் பயனளிக்கும் தூய்மையான எரிசக்திக்கான நியாயமான மற்றும் உள்ளார்ந்த மாற்றத்திற்கான விழிப்புணர்வை பரப்பச் செய்வதையும், அதற்கான நடவடிக்கையை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தூய்மையான ஆற்றல் நுட்பத்தினை ஏற்பது பருவநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் ஒரு ஒருங்கிணைந்த அம்சமாகும்.
- உலகளாவிய தூய்மையான ஆற்றல் திரட்சி திறன் ஆனது இந்த ஆண்டு இறுதிக்குள் 4,500 GW என்ற அளவினை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் இன்று உலகளாவிய தூய்மையான எரிசக்தித் திறனில் சுமார் 90% பங்கினைக் கொண்டுள்ளன.

## சர்வதேச இன அழிப்பு நிகழ்வின் நினைவு தினம் - ஜனவரி 27

- ஜெர்மனி நாடானது இத்தினத்தினை 1996 ஆம் ஆண்டு முதல் கடைபிடித்து வருகிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த நாளை நியமித்தது.
- 1945 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதியன்று, சோவியத் ஒன்றியத்தின் படைகள் ஆனது ஆஷ்விட்ஸ்-பிர்கெனோவ் எனப்படும் நாஜி வதை மற்றும் அழிப்பு முகாமில் சிக்கியிருந்த நபர்களை விடுவித்தன.
- ஆஷ்விட்சில் சுமார் 1.1 மில்லியன் மக்கள் கொல்லப்பட்ட நிலையில், அவர்களில் மிக பெரும்பான்மையானோர் (சுமார் 90%) யூதர்கள் ஆவர்.

## உலக தொழுநோய் தினம் - ஜனவரி 28





- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று உலக தொழுநோய் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 1954 ஆம் ஆண்டில், பிரெஞ்சு பத்திரிகையாளர் ரெளல் ஃபோல்லேரோ இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்யவும், கிடைக்கக் கூடிய சிகிச்சை விருப்பத் தேர்வுகளை ஆராயவும் இந்த நாளை நிறுவினார்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'தொழுநோயை வென்று மீண்டு வருதல்' என்பதாகும்.

## இந்திய செய்தித்தாள் தினம் - ஜனவரி 29

- இந்தியா மற்றும் ஆசியாவின் முதல் அச்சிடப்பட்ட செய்தித்தாள் என்பது 'ஹிக்கி-இன் பெங்கால் கெஸட்' என்ற ஆங்கில வார இதழாகும்.
- இது 1780 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதியன்று ஓர் அயர்லாந்து நாட்டவரால் தொடங்கப் பட்டது.
- இந்த நாள் ஆனது நாளிதழ்களை மேம்படுத்துவதையும், செய்தித்தாளை எடுத்து ஒவ்வொரு நாளும் படிப்பதற்கு மக்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பெங்கால் கெஸட் பத்திரிக்கையின் நிறுவனர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி "இந்தியப் பத்திரிகைகளின் தந்தை" என்று கருதப்படுகிறார்.
- இந்தியாவில் தற்போதுள்ள மிகப் பழமையான செய்தித்தாள் ஆனது, 1822 ஆம் ஆண்டில் குஜராத்தி மொழியில் முதல் முறையாக வெளியிடப்பட்ட மும்பை சமாச்சார் (முன்னதாக பாம்பே சமாச்சார்) ஆகும்.
- இந்தியாவின் முதல் தமிழ் செய்தித்தாள் 1882 ஆம் ஆண்டில் G.சுப்ரமணிய ஐயர் அவர்களால் ஒரு வார இதழாகத் தொடங்கப்பட்ட சுதேசமித்ரன் ஆகும்.

## தியாகிகள் தினம் – ஜனவரி 30




- 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதியன்று, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்.
- டெல்லி பிர்லா பவனில் மகாத்மா காந்தியின் மாலைப் பிரார்த்தனையின் போது, அவரை நாதுராம் விநாயக் கோட்சே மூன்று முறை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தார்.
- 1949 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், கோட்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது.
- காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 02 ஆம் தேதியானது சர்வதேச அகிம்சை தினமாகக் கொண்டாடப் படுகிறது.

# இதரச் செய்திகள்

## லீப் ஆண்டு 2024


- 2024 ஆம் ஆண்டு ஒரு லீப் ஆண்டு (மிகு நாளாண்டு) ஆகும்.
- அதாவது இந்த ஆண்டில் 365 நாட்களுக்குப் பதிலாக 366 நாட்களும், பிப்ரவரி மாதத்தில் 28 தேதிக்குப் பதிலாக 29 நாட்களும் இருக்கும்.
- பொதுவாக நான்கு ஆண்டுகளுக்கு ஒரு லீப் ஆண்டு வரும்.
- கடைசியாக வந்த லீப் ஆண்டு 2020 ஆகும்.
- ஆனால் லீப் ஆண்டு எல்லா நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையும் வராது, எனவே சில ஆண்டுகள் அதற்கு விதிவிலக்காகும்.
- பூமி சூரியனை ஒரு முறை சுற்றி முடிக்க 365 நாட்கள், ஐந்து மணி நேரம், 48 நிமிடங்கள் மற்றும் 46 வினாடிகள் எடுத்துக் கொள்கிறது.
- இவ்வாறு, கி.மு. 46 ஆம் ஆண்டில் ரோம நாட்டு தலைவர் ஜூலியஸ் சீசரால் பணி அமர்த்தப்பட்ட அறிஞர்கள், ஓராண்டை 365 நாட்களாக முழுமையாக்கினர்.
- மீதமுள்ள ஆறு மணி நேரத்தை நான்கால் பெருக்கி 24 மணிநேரம் (ஒரு நாள்) ஆக்கி, ஒவ்வொரு நான்காவது ஆண்டிலும் சேர்த்தனர்.
- பின்னர், 400 என்ற எண்ணினால் வகுபடுகின்ற, 00 என்ற எண்ணுடன் முடிவடையும் ஆண்டுகள் லீப் ஆண்டுகள் என்று அழைக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.
- எனவே, 1900 மற்றும் 2100 ஆகியவை லீப் ஆண்டுகளாக கணக்கிடப்படாது, ஆனால் 2000 ஆம் ஆண்டு லீப் ஆண்டாக கருதப்படுகிறது.




## புதிய டைனோசர் இனங்கள்

- பிரேசிலில் அமனாசரஸ் நெஸ்பிட்டி என்று பெயரிடப்பட்ட சிலேசரரின் புதிய பேரினம் மற்றும் இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சுமார் 233 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது பிந்தைய ட்ரயாசிக் என்ற சகாப்தத்தின் கார்னிய யுகத்தின் போது, தற்போது பிரேசிலில் உள்ள பல பகுதிகளில் அமானசரஸ் நெஸ்பிட்டி இனம் காணப்பட்டது.
- இந்தப் பழங்கால உயிரினமான ட்ரயாசிக் டைனோசாரிஃபார்ம் ஊர்வனவற்றின் அழிந்து போன சிலேசவுரிடே என்ற குடும்பத்தின் ஒரு உறுப்பு இனமாக இருந்தது.

- அவை பொதுவாக டைனோசர் அல்லாத டைனோசரிஃபார்ம்களின் குழுவாகவும், டைனோசர்களின் சகோதரி (இணை) குழுவாகவும் கருதப்படுகிறது.




## சரியான நேரத்தில் செயல்படும் விமான நிலையங்களின் மதிப்பாய்வு 2023

The top performing global airports of 2023 were:

| Airport | On time ranking | On time departure | Total flights |
|---|---|---|---|
| Minneapolis-St. Paul International Airport (MSP) | 1 | 84.44% | 289,817 |
| Rajiv Gandhi International Airport (HYD) | 2 | 84.42% | 168,426 |
| Kempegowda International Airport (BLR) | 3 | 84.08% | 237,461 |
| El Dorado International Airport (BOG) | 4 | 84.01% | 292,486 |
| Salt Lake City International Airport (SLC) | 5 | 83.99% | 226,705 |

- ஹைதராபாத் மற்றும் பெங்களூரு விமான நிலையங்கள் இந்தப் பட்டியலில் உலக அளவில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்துள்ளன.
- 82 சதவீதத்திற்கும் மேலாக சரியான நேரத்தில் விமான வருகைச் சேவையுடன் இண்டிகோ நிறுவனம் ஆசிய பசிபிக் விமான நிறுவனங்களில் நான்காவது இடத்தில் உள்ளது.
- நடுத்தர விமான நிலையங்கள் பிரிவில் கொல்கத்தா விமான நிலையம் ஒன்பதாவது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய விமான நிலையங்களில் அமெரிக்காவின் மினியாபோலிஸில் உள்ள செயின்ட் பால் விமான நிலையம் முதலிடத்தைப் பிடித்துள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து பெங்களூரு மற்றும் ஹைதராபாத் விமான நிலையங்கள் இடம் பெற்று உள்ளன.
- கொலம்பியாவை சேர்ந்த ஏவியன்கா ஏர்லைன்ஸ் என்பது உலகளாவிய விமான நிறுவனங்களில் மிகவும் சரியான நேரத்தில் செயல்படும் விமானப் போக்குவரத்து நிறுவனங்களில் முதன்மையானது ஆகும்.

## பொதிகளுக்கு நெகிழி போன்ற படலங்கள்



- மும்பையின் இந்திய தொழில்நுட்பக் கழகம் ஆனது (IIT-B), பொதியாக்க துறைக்காக நெகிழி போன்ற படலங்களை உருவாக்கியுள்ளதோடு அவை சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தாத கூறுகளாக சிதைந்துவிடக் கூடியது.
- இது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் அங்கீகரிக்கப் பட்ட நச்சுத்தன்மையற்ற, உண்ணக் கூடியச் சர்க்கரை சார்ந்த அல்லது கொழுப்பு அடிப்படையிலான உயிரி பலபடி சேர்மங்களின் கலவையாகும்.
- இது ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்தில் சிதைந்து விடுபவை ஆகும்.
- உயர் அடர்த்தி பாலிஎதிலீன் (HDPE) என்பது தரமான சிதைவடையாத நெகிழிக் காப்புப் படலமாகும்.
- இது இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள பெரும்பாலான பொதியாக்க தொழில் துறைகளால், நுகர்வோர் பொருட்கள் மற்றும் உணவு பொதிகள் ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தப் படுகிறது.

## 10 ஆம் நூற்றாண்டு கடம்பர் கால கல்வெட்டு



- கி.பி 10 ஆம் நூற்றாண்டு கடம்பர்கள் காலத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும், கன்னடம் மற்றும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு ஆனது தெற்கு கோவாவில் உள்ள ககோடாவில் உள்ள மகாதேவா கோயிலில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- இது அதே காலகட்டத்தைச் சேர்ந்த முதலாம் ஜெயசிம்மனின் தலங்ரே கல்வெட்டின் இலக்கிய பாணியில் உள்ளது.
- கோவாவின் கடம்பர்கள் கல்யாணா சாளுக்கியர்களின் துணைப் பிரிவினர் ஆவர்.
- சாளுக்கியப் பேரரசர் இரண்டாம் தைலப்பா, இராஷ்டிரகூடர்களை வீழ்த்துவதில் உதவியதற்காக கடம்ப சாஸ்ததேவரை கோவாவின் மகாமண்டலேஸ்வரராக நியமித்தார்.
- கடம்ப சாஸ்ததேவர் கி.பி. 960 ஆம் ஆண்டில் சந்தவாரா நகரத்தை சிலஹாரர்களிடமிருந்து கைப்பற்றினார்.

## 16 ஆம் நூற்றாண்டு தெலுங்கு கல்வெட்டுகள்

- பலுட்லாவில் உள்ள நல்லமலா வனப்பகுதியில் உள்ள போலேரம்மா (உள்ளூர் கிராம தெய்வம்) கோவிலுக்கு அருகில் 16 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த இரண்டு தெலுங்கு கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.
- தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ள இவை அக்ஷய, ஸ்ரவண, சூ10 ஆகிய சுழற்சி ஆண்டுகளில் தேதியிடப் பட்டுள்ள கி.பி. 16 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த எழுத்துருக்களைக் கொண்டிருக்கின்றன.
- குராசால் பகுதியினைச் சேர்ந்த லிங்கபத்துவின் மகன் ஜங்கம், போலேரம்மா தேவிக்கு அர்ப்பணித்த படைப்புத் தூண்களை (உய்யல-கம்பலு) கட்டமைத்ததை இந்தக் கல்வெட்டுகளுள் ஒன்று குறிப்பிடுகிறது.
- மற்றொரு கல்வெட்டு (அதில் எழுத்துக்கள் தெளிவாக இல்லை), புலியுடன் சண்டையிடும் வீரனைக் குறிப்பது போல் தென்படுகிறது.



## தெலுங்கானாவில் பழங்கற்காலக் கருவிகள்

- தெலங்கானாவின் முலுகு மாவட்டத்தில் உள்ள குர்ரேவுலா மற்றும் பூபதிபுரம் கிராமங்களுக்கு இடையே அமைந்துள்ள ஓடையில் கற்கோடாரி மற்றும் கற்களால் ஆன ஆபரணம் உள்ளிட்ட பழங்கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இக்கருவி ஆரம்பகால கற்காலத்தைச் சேர்ந்தது என நிபுணர்கள் உறுதி செய்து உள்ளனர்.
- இது பழங்கற்காலம் அல்லது பழைய கற்காலம் அல்லது ஆரம்ப கற்காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

- கி.மு. 33 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தினைச் சேர்ந்த வகையில் இக்காலம் 10,000 ஆண்டுகள் நீடித்தது.



## மௌரி ஹாக்கா

- நியூசிலாந்து நாட்டின் இளம் பாராளுமன்ற உறுப்பினர் ஹனா- ரவ்ஹிதி மைபி கிளார்க்கே கவர்ச்சிகரமாக வயப்படுத்தும் வகையிலான தனது முதல் உரையை நிகழ்த்தினார்.
- அவர் தனது பூர்வீக அடையாளங்களைக் கௌரவிக்கும் வகையில் 'மௌரி ஹாக்கா' என்பதினை நிகழ்த்தி தனது முதல் உரையை ஆற்றினார்.
- 21 வயதான மௌரி சமூகத்தைச் சேர்ந்த ஹனா-ரவ்ஹிதி மைபி கிளார்க்கே, 170 ஆண்டுகளில் மிகவும் இளம் பாராளுமன்ற உறுப்பினராக வரலாறு படைத்தார்.
- மௌரி இனத்தவர் கிழக்கு பாலினேசியாவிலிருந்து குடியேறிய நியூசிலாந்தின் பூர்வீக பாலினேசிய மக்கள் ஆவர்.
- அவர்கள் 1320 மற்றும் 1350 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பல கட்டத்திலான படகுப் பயணங்களின் மூலமாக நியூசிலாந்தை வந்தடைந்தனர்.
- அவர்கள் நியூசிலாந்தில் உள்ள ஐரோப்பிய நியூசிலாந்தர்களுக்குப் பிறகு அங்குள்ள இரண்டாவது பெரிய இனக்குழு ஆவர்.
- மொத்த மக்கள்தொகையில் மூன்று சதவீதத்தைக் கொண்டுள்ள மொத்த மௌரி இனத்தவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினரால் மௌரி மொழி பேசப்படுகிறது.
- ஹாக்காவின் பாரம்பரிய மௌரி என்ற நிகழ்ச்சியானது, அந்த நாட்டின் அனைத்து நியூசிலாந்தர்களுக்குமான பெருமைக்குரிய நிகழ்வாகும்.



## சுண்ணாம்பு அடிப்படையிலான டிரைக்கோடெர்மா உயிரிப் பூச்சிக்கொல்லி

- கோழிக்கோட்டில் அமைந்துள்ள, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனமானது அளவில் சிறிய சுண்ணாம்பு அடிப்படையிலான டிரைக்கோடெர்மா கலப்பு என்ற பூஞ்சை உயிரி-கட்டுப்பாட்டுக் காரணியை உருவாக்கியுள்ளது.
- 'ட்ரைக்கோலைம்' என பெயரிடப்பட்ட இந்தக் கலப்பானது, ட்ரைக்கோடெர்மா மற்றும் சுண்ணாம்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, அதன் மூலம் இதன் பயன்பாட்டினை மேற்கொள்வதற்கு விவசாயிகளுக்கு உதவுகிறது.
- இது மண்ணில் பரவும் பல தாவர நோய்க்கிருமிகளை ஒடுக்குவதில் பயனுள்ளதாக இருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளதோடு, பயிர் உற்பத்தியில் வெற்றிகரமான உயிரி-பூச்சிக் கொல்லி மற்றும் உயிரி உரமாகவும் செயல்படுகிறது.
- ட்ரைக்கோலைம், அதிக காலம் தேவைப்படும் இருபடி செயல்முறையின் தேவையை நீக்குகிறது.
- இந்த சுண்ணாம்பு அடிப்படையிலான கலப்பானது, மண்ணின் அமிலத்தன்மையை நடுநிலையாக்குவதோடு, தாவர வளர்ச்சியை மேம்படுத்துகிறது மற்றும் மண்ணில் பரவும் நோய்க்கிருமிகளிடமிருந்துப் பயிர்களைப் பாதுகாக்கிறது.


## சைடர்சௌரா மரே - டைனோசரின் புதிய இனங்கள்

- அர்ஜென்டினாவில் உள்ள பழங்கால ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய இனம் மற்றும் ரெப்பாச்சிசவுரிட் சாரோபாட் டைனோசரின் புதிய இனம் மற்றும் வகையின் புதைபடிவ சிதிலங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- அவை 96 முதல் 93 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, பிற்காலக் கிரெட்டேசியஸ் சகாப்தத்தின் செனோமேனியன் காலத்தில், தற்போதைய அர்ஜென்டினா பகுதியில் காணப் பட்டன.
- இந்த இனத்திற்கு சைடர்சௌரா மரே என்று அறிவியல் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இந்தப் பண்டைய கால மிருகமானது 20 மீ நீளமும், 15 டன் எடையும் மற்றும் மிக நீண்ட வாலினையும் கொண்டதாக இருந்தது.



## 3000 ஆண்டுகள் பழமையான நகரம்

- அமேசான் மழைக்காடுகளின் செழிப்பான தாவரங்களால் மறைக்கப்பட்ட ஒரு பெரிய நகரம் ஈக்வடாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- உபனோ பள்ளத்தாக்கில் உள்ள பண்டைய நகரத்தில் உள்ள வீடுகள் மற்றும் அரங்கங்கள் சாலைகள் மற்றும் கால்வாய்களின் வலையமைப்பால் இணைக்கப் பட்டிருந்தன.
- இந்தப் பகுதி வளமான மண்ணை உருவாக்கிய ஒரு எரிமலையின் மலைமறைவு பகுதியில் உள்ளது.
- அமேசானில் நமக்குத் தெரிந்த மற்ற தளங்களை விட இது பழமையானது ஆகும்.
- இந்த நகரம் அமேசானில் முன்பு கண்டுபிடிக்கப்பட்ட பிற கொலம்பியனுக்கு முந்தையப் பகுதியை விட 3,000 முதல் 1,500 ஆண்டுகள் பழமையானது.
- அங்கு மக்கள் கிபி 1,000 ஆண்டுகள் வரை வாழ்ந்ததாகவும் அந்தக் கண்டுபிடிப்புகள் கூறுகின்றன.
- LiDAR எனப்படும் பிரபலத் தொலை உணர்வி முறையினைப் பயன்படுத்தி இந்த கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டது.
- இது தொலைவினை அளவிடுவதற்கு ஒளியைப் பயன்படுத்துகிறது என்பதோடு, மேலும் இது லேசர் (ஒளிக்கற்றை) ஊடறிதல் அல்லது முப்பரிமாண ஊடறிதல் என்றும் அழைக்கப் படுகிறது.



## 2024 ஆம் ஆண்டின் வலுவான நிறுவனம்

- ரிலையன்ஸ் நிறுவனத்தின் தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் பிரிவான ஜியோ, வலுவான இந்திய நிறுவனமாகத் தொடர்ந்து திகழ்கிறது.
- உலகின் வலிமையான நிறுவனங்களின் 2024 ஆம் ஆண்டு தரவரிசையில், ஜியோ நிறுவனம் 17வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் 23வது இடத்திலும், பாரத் ஸ்டேட் வங்கி 24வது இடத்திலும் உள்ளது.





## சோலிகாக்கள் மற்றும் எரவா பழங்குடியினரின் உணவுமுறை

- சோலிகாக்கள் மற்றும் எரவா ஆகியப் பழங்குடியினக் குழுக்கள் காவிரிப் படுகை மற்றும் தீபகற்ப இந்தியாவினை சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.
- நாட்டின் பழமையான பழங்குடியினச் சமூகங்களில் ஒன்றான சோலிகாக்கள், கர்நாடகாவின் பூர்வீகக் குடிமக்கள் என்பதோடு இவர்கள் பெரும்பாலும் சாமராஜநகர் மற்றும் மாண்டியா மாவட்டங்களில் வாழ்கின்றனர்.
- எரவா குழுவினர் கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் இருந்து கர்நாடக மாநிலத்திற்கு வந்து அம்மாநிலத்தின் குடகு மாவட்டத்தில் குடியேறினர்.
- இந்த சமூகத்தினரின் உணவு முறைகள் குறித்து சமீபத்தில் ஆய்வு செய்யும் வகையில் புதிய புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
- இது காடுகளில் இருந்து அவர்கள் பெறும் பொருட்களை உள்ளடக்கிய அவர்களின் உணவு முறை பற்றிய புதிய தகவல்களை அளிக்கிறது.
- இத்தகைய உணவுகள் சோலிகாக்களின் உணவு முறையில் 25 சதவீதமும், எரவாக்களின் உணவு முறையில் 30 சதவீதமும் உள்ளன.
- இன்றும், பல்லுயிர்ப்பெருக்கம் நிறைந்த மலைத்தொடர்களில் இருந்து தங்கள் உணவின் பெரும்பகுதியைப் பெறும் சோலிகா மக்களுக்கான உணவில் தேன் ஒரு முக்கியப் பகுதியாகும்.
- வெவ்வேறு நிலப்பரப்புகளில் வசிப்பதால் ஒவ்வொரு சமூகத்திற்குமென 10 முதல் 12 வரையிலான பிரத்தியேகமான வன உணவுத் தாவரங்கள் உள்ளன.

- மழைக்காலங்களில், தரிசு நிலங்களில் ஒரே இரவில் காளான்கள் முளைத்து வருவதால் எரவா குழுவினரின் உணவின் ஒரு பகுதியாக இது இடம் பெறுகிறது.

## சூர்ய திலகம்




- உயர் நிலை அரசு நிறுவனத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் (பெங்களூருவில் உள்ள இந்திய வானியற்பியல் கல்வி நிறுவனம்), சிறப்புக் கண்ணாடி மற்றும் ஆடி அடிப்படையிலான ஒரு கருவியை வடிவமைத்துள்ளனர்.
- ஒவ்வொரு இராம நவமி நாளிலும் நண்பகல் வேளையில், அயோத்தியின் 'அச்சல் ராம் லல்லா' சிலையின் நெற்றியில் நேரடியாக சூரிய ஒளி பட இது வழிவகை செய்யும்.
- இது அதிகாரப்பூர்வமாக 'சூர்ய திலக் செயல்முறை' என்று அழைக்கப்படுகிறது.
- முழுக் கோவிலும் கட்டமைக்கப்பட்டு நிறைவுறும் போது சூரிய திலகம் செயல் முறை என்பது முழுமையாகச் செயல்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★